ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்

முஹம்மத் முஸ்தபா அஸமி M.A. Ph.D

கலாநிதி முஹம்மத் முஸ்தபா அல்–அஸமி இந்தியாவின் தாருல்–உலூம் மத்ரஸாவிலும், எகிப்தின் அல்–அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலும் பயின்று ஆரம்ப கால ஹதீஸ் கலை பற்றிய தனது ஆய்வுகளுக்காக 1967–ம் ஆண்டு கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்து கலாநிதிப் பட்டத்தை ஈட்டிக் கொண்டார்.1973–ம் ஆண்டு முதல் மன்னர் ஸஊத் பல்கலைக்கழகத்து ஹதீஸ் துறைப் பேராசிரியராகப் பணி யாற்றியுள்ளார் அவர். ஆரம்ப கால ஹதீஸ் துறை குறித்து ஏராளமான நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ள பேராசிரியர் அஸமி, 'ஸுன்னா' குறித்த தமது ஆய்வுகளுக்காக 1980–ம் ஆண்டின் மன்னர் பைஸல் விருது அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

அன்னாரின் Studies in Early Hadith Literature, on Schacht's Origins of Muhammadan Jurisprudence எனும் இரு ஆய்வு நூல்களும் அறிஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

பேராசிரியர் அஸமி ஆக்கித் தந்துள்ள எலக்ட்ரோனிக் ஹதீஸ் களஞ்சியம் மிகப் பிரசித்தம் வாய்ந்தது. ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஸுனன் அன் நஸயீ, ஸுனன் அபூதாவூத், ஸுனன் அத் திர்மிதி, ஸுனன் இப்னு மாஜா, முஸ்னத் இப்னு ஹன்பல் ஆகிய ஹதீஸ் தொகுப்புகள னைத்தையும், அறபு மூல வாசகங்களுடன், உர்தூ, ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம், ப்ரென்ச், ஜெர்மன், ஸபானிஷ், மலே, புஷ்டூ, துர்க்கி மொழிபெயர்ப்புகளுடன் கம்ப்யூட்டர் மயப் படுத்தித் தந்துள்ளார்.

இமாம் (அபூ ஸகரிய்யா யஹ்யா இப்னு ஷரப்) அந்நவவி அவர்களின் ரியாளுஸ் ஸாலிஹீன் நபிமொழிக் கிரந்தத்தை இருபது மொழிகளில் வெளியாக்கும் பாரிய பணியில் தன்னைத் தற்போது முற்றாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் பேராசிரியர் அஸமி.

ஹதீஸ்
முறைமையும் கிரந்தங்களும்

முஹம்மத் முஸ்தபா அஸமி M.A., Ph.D

MUSLIM INSTITUTE FOR SOCIAL DEVELOPMENT
SRI-LANKA

STUDIES IN
HADITH METHODOLOGY
AND LITERATURE

by
MUHAMMAD MUSTAFA AZAMI M.A., Ph. D.

First Published by
AMERICAN TRUST PUBLICATIONS.
10900 W. WASHINGTON STREET,
INDIANAPOLIS, INDIANA 46231- USA

TR. AND © ABD.AL-JABBAR MUHAMMAD ZANEER-1989

ISBN 955-8202-00-2

Tamil Edition
Published by
MUSLIM INSTITUTE FOR SOCIAL DEVELOPMENT
23/3, MARKET ROAD, DHARGA TOWN, SRI LANKA.

Typeset by: Royal Computer Centre, Dharga Town.
Printed by : Colombo Picture Palace,
No. 104, Prince Street, Colombo-11

بسم الله الرحمن الرحيم

ஹதீஸ் முறைமை குறித்து அறபு மொழியில் எழுதப் பட்டுள்ள நூல்களும், மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளும் ஏராளம். இன்றைய தலைமுறையினருள் பெரும்பாலானோர் அறபு மொழி அறியாத காரணத்தால் அந்நூல்களிலிருந்து பயன் பெற முடியாதிருக்கின்றனர். அறபு மொழி பேசுபவர்கள் கூட அந்நூல் களில் கையாளப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் பல வழக்கில் இல்லாத காரணத்தால் அவற்றைப் பயன்படுத்த இயலாதிருக்கின் றனர். ஹதீஸ் கலை குறித்து ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு சில நூல்களும் வாசகர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவனவாகவே உள. ஆங்கிலத்தில், தரத்திலும் சிறப்பிலும் மிக்கதான ஒரே நூல் எனக் கொள்ளக் கூடியது பேராசிரியர் ஸுபைர் ஸித்தீகீ எழுதிய Hadith Literature எனும் நூலாகும். அதனை நான் சுமார் முப்பத் தேழு வருடங்களுக்கு முன்னர் வாசித்துள்ளேன். அந்த நூலும் இப் போது கிடைப்பதாயில்லை. எனவேதான் கல்லூரி மாணவர்களும், படித்த சாதாரண மக்களும் பயன்பெறுவதற்காக Studies in Hadith Methodology and Literature எனும் இந்த நூலை எழுதியுள்ளேன். தேவைக்கு மிஞ்சிய விவரங்களும், கடினமான மொழிநடையும் இயன்றவரை இதில் தவிர்க்கப்பட்டுள்ளன. இதைக் கவனமாக வாசிப்பதன் மூலம் கீழைத் தேயவியலாளராலும் ஏனைய பலராலும் அறியாமை காரணமாக அல்லது ஏதும் தேவை கருதி எழுப்பப்பட் டுள்ள ஏராளமான ஐயங்களுக்குத் தெளிவும் தீர்வும் கண்டு, ஹதீஸ் துறை குறித்த அடிப்படை அறிவினைப் பெற்றுக்கொள்ள இயலும் என்பது என் நம்பிக்கை.

இந்நூல் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதலாம் பாகத்தில் ஹதீஸ் முறைமை பற்றிய விவரங்களைத் தந்துள்ளேன். இரண்டாம் பாகத்தில் ஹதீஸ் தொகுப்புகளாயமைந்த கிரந்தங்கள் குறித்து எழுதியுள்ளேன். இதில் பிரதான ஆறு ஹதீஸ் கிரந்தங்களை அறிமுகம் செய்வதோடு ஹதீஸ் நூல்களது தொகுப்புகளின்

பல்வேறு கட்டங்களைப் பிரதி நிதித்துவம் செய்யும் முக்கியத்துவம் வாய்ந்த வேறு ஆறு நூல்கள் குறித்த விவரங்களையும் தந்துள்ளேன். ஆரம்ப ஹதீஸ் பதிவுகள் குறித்து மேலும் விவரங்கள் பெற விழை வோர் எனது Studies in Early Hadith Literature எனும் நூலைப் பார்க்கலாம். இஸ்னாத் பற்றிய பிரச்சினைகள் எனது On Schacht's Origins of Muhammedan Jurisprudence எனும் நூலில் ஆழமாக ஆரா யப்பட்டுள்ளன. ஹதீஸ் திறனாய்வு சம்பந்தமாக மேலும் அறிந்து கொள்ள ஆர்வமுள்ளோர் இமாம் முஸ்லிம் அவர்களின் கிதாப்-அல்-தம்யீஸ் எனும் நூலுக்கான எனது முகவுரையிலிருந்து பெரும் பயன் பெறலாம்.

கலாநிதி அல்-திகானீ அபூ கிதைரீயின் வற்புறுத்தலும் பலவந்தமுமே இந்நூல் உருப்பெற உந்துதலாயமைந்தன. என் சக பேராசிரியர்களான கலாநிதி M. S. அல் அஃவா, கலாநிதி ஜஅபர் ஷெய்க் இத்ரீஸ் ஆகியோர் நூலின் கையெழுத்துப் பிரதியை வாசித்துப் பயன் மிக்க ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினர். தட்டெழுத்துப் பிரதி செய்வதில் World Assembly of Muslim Youth ஐச் சேர்ந்த சகோதரர் அப்துர் ரஹ்மான் செய்த உதவி கள் அளப்பரியன. இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக.

தமிழ் மொழியில் இந்நூலின் முதல் பதிப்பு International Institute of Islamic Thought இன் அனுசரணையுடன் 1988-ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டது. அந்நிறுவனத்தின் அனுமதியோடு வெளியாவது இப்பதிப்பு.

ஜூன் 1999 — எம். எம். அஸமி

பாகம் 1 ஹதீஸ் முறைமை

1.	ஹதீஸ்: சொல்லும் பொருளும்	5
2.	நபிகளாரும் அன்னாரின் ஹதீஸ்களும்	22
3.	ஹதீஸ்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல்	34
4.	ஹதீஸ்களைப் பதிவு செய்தல்	52
5.	இஸ்னாத் முறை - அறிவிப்பாளர்களின் தொடர்	65
6.	ஹதீஸ் திறனாய்வு: வரலாறும் முறைமையும்	85
7.	அறிஞர்களின் தரப்படுத்தலும் ஹதீஸின் தரப்படுத்தலில் அதன் தாக்கமும்	106
8.	புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்களும் அவற்றை இனங்கண்டு தவிர்ப்பதற்கான வழிமுறைகளும்	126

பாகம் 2 ஹதீஸ் கிரந்தங்கள்

1.	ஆரம்ப கால ஹதீஸ் நூல்கள்	138
2.	இமாம் மாலிக் பின் அனஸ்	153
3.	இமாம் இப்னு ஹன்பல்	158
4.	இமாம் புஹாரி	164
5.	இமாம் முஸ்லிம்	175
6.	இமாம் நஸயீ	180
7.	இமாம் அபூதாவூத்	184
8.	இமாம் திர்மிதி	190
9.	இமாம் இப்னு மாஜா	193
10.	இமாம் தபரானீ	198
11.	இமாம் இப்னுல்-அஸீர்	202
12.	இமாம் அல்ஹைதமீ	206
13.	இமாம் ஜலாலுத்தீன் ஸுயூதி	208
14.	ஹதீஸ் சம்பந்தமான விஷயங்கள் பற்றிய நூல்கள்	212

பாகம் – 1

ஹதீஸ் முறைமை

அத்தியாயம் – 1

ஹதீஸ் : சொல்லும் பொருளும்

ஹதீஸ் எனும் அறபுச் சொல், பரஸ்பரம் தொடர்பு கொள்ளல், கதை, உரையாடல் எனப் பலவாறு பொருள்படும். அது சமயஞ் சார்ந்ததாகவோ, சமயஞ் சாராததாகவோ இருக்கலாம். வரலாற்று ரீதியானதாகவோ அண்மைக் காலத்ததாகவோ கூட இருக்கலாம்.

ஓர் அடைமொழியாக இச்சொல் பயன்படுத்தப்படும் வேளைகளிலெல்லாம் அது, 'புதியது' என்ற கருத்தைக் குறிக்கும். குர்ஆனில் இச்சொல் 23 இடங்களில் காணப்படுகின்றது. உதாரணங்கள் சில வருமாறு:

குர்ஆனில் ஹதீஸ் எனும் சொற்பிரயோகம்

அ) சமயம் சார்ந்த தொடர்புச் சாதனம்; செய்தி; குர்ஆன்

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

اَللّٰهُ نَزَّلَ اَحْسَنَ الْحَدِيْثِ كِتٰبًا

"ஹதீஸ்களில் (செய்திகளில்) மிக அழகானவற்றையே அல்லாஹ் படிப்படியாக இறக்கி ஒரு வேதமாக அருளினான்."
(குர்ஆன் 39 : 23)

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

فَذَرْنِيْ وَمَنْ يُّكَذِّبُ بِهٰذَا الْحَدِيْثِ ط

"என்னையும் இந்த ஹதீஸ்களை (செய்திகளை)ப் பொய் யாக்கும் இவர்களையும் விட்டு விடும்." (68 : 44)

இங்கு ஹதீஸ் எனக் குறிக்கப்படுவது குர்ஆன் என்பர் இப்னு கதீர் (தப்ஸீர் vii, 91)

ஆ) சமயச் சார்பற்ற அல்லது பொதுத் தன்மையவான கதைகள் அல்லது விஷயங்கள்

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

وَاِذَا رَاَيْتَ الَّذِيْنَ يَخُوْضُوْنَ فِيْٓ اٰيٰتِنَا فَاَعْرِضْ
عَنْهُمْ حَتّٰى يَخُوْضُوْا فِيْ حَدِيْثٍ غَيْرِهٖ ط

"(நபியே!) நம் வசனங்களைப் பற்றி (வீண்) விவாதங்களில் ஆழ்ந்திருப்போரை நீர் கண்டால், அவ்விடத்தை விட்டு விலகி அவர்களைப் புறக்கணித்து விடும், அவ்வேளை அவர்கள் அதனைத் தவிர்த்து வேறு ஹதீஸில் (விஷயங்களில்) ஈடுபாடு கொள்ளலாம்." (6 : 68)

இ) வரலாற்றுக் காதை

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

وَهَلْ اَتٰىكَ حَدِيْثُ مُوْسٰى ۘ

"(நபியே!) மூஸாவின் ஹதீஸ் (வரலாறு) உம்மிடம் வந்திருக் கின்றதா?" (20 : 9)

ஈ) சமகால கதை அல்லது உரையாடல்

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

وَإِذْ أَسَرَّ النَّبِيُّ إِلَىٰ بَعْضِ أَزْوَاجِهِ حَدِيثًا

"நமது நபி தன்னுடைய மனைவிகளில் ஒருவருடன் ஒரு ஹதீஸை (விஷயத்தை இரகசியமாக)க் கூறிய சமயத்தில்." *(66 : 3)*

இவ்வாறாகக் குர்ஆனில் இந்த சொற்பிரயோகமானது, ஒரு கதை, செய்தி, விஷயம் எனப் பல்வேறுபட்ட கருத்துக்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அதுவும் சமயஞ் சார்ந்ததாகவோ, சமயஞ் சாராததாகவோ, பண்டை நிகழ்ச்சியொன்றைக் குறிப்பதாகவோ, சம காலத்திய ஒன்றினைச் சுட்டுவதாகவோ கூட இருக்கலாம் என நாம் காண முடிகின்றது.

நபிகளார் வாக்குகளில் ஹதீஸ் எனும் சொற்பிரயோகம்

குர்ஆனில் கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலேயே நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் ஹதீஸ் எனும் சொல்லைப் பயன் படுத்தியுள்ளார்கள்.

அ) சமயச் சார்பான செய்திகள்

நபிகளார் கூறுகின்றார்கள்:

أحسن الحديث كتاب الله

"ஹதீஸ்களில் (செய்திகளில்) மிகவும் சிறந்தது அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேத நூலாகும்." *(புஹாரி-அதப் : 70)*

நபிகளார் மேலும் கூறுகின்றார்கள்:

يبلغه فرب مبلغ أحفظ له من سامع

غفر الله امرءا سمع منا حديثا فحفظه حتى

“என்னிடமிருந்து ஒரு ஹதீஸைச் செவிமடுத்து, அதனைப் பாதுகாத்து, பிறருக்கும் எத்தி வைக்கும் மனிதனில் அல்லாஹ் ஒரு செழிப்பை ஏற்படுத்தட்டும்.” *(ஹன்பல் 1 : 437)*

ஆ) சமயச் சார்பற்ற அல்லது பொதுவான உரையாடல் அல்லது காதை

நபிகளார் கூறுகின்றார்கள்:

من استمع الي حديث قوم وهم له كارهون

أو يفرون منه ، صب أذنه الآنك

“எந்த ஒரு மனிதன் பிறரது ஹதீஸ் (உரையாடல்)களை அவர்களது விருப்பமில்லாத வகையில் ஒட்டுக் கேட்க முனைந்து, அம்மக்கள் அம்மனிதரில் நின்றும் பிரிந்து சென்றுவிட எண்ணும்படி நடந்து கொள்கின்றாரோ, அம்மனிதரது செவிகளில் மறுமையில் கொதிக்கும் ஈயம் ஊற்றப்படும்.” *(புஹாரி-தப்-ஸீர் : 45)*

இ) வரலாற்றுச் சம்பவம் / நிகழ்வு

நபிகளார் கூறுகின்றார்கள்:

حدثوا عن بني اسرائيل

“பனூ இஸ்ராயீல்களிடமிருந்து நீங்கள் ஹதீஸ்களை (வரலாற்றுச் சம்பவங்கள், நிகழ்வுகள்) எத்தி வைப்பதில் உங்கள் மீது குற்றமில்லை.” *(புஹாரீ-அன்பியா : 50)*

ஈ) சமகாலக் காதை, இரகசியம் அல்லது உரையாடல்

நபிகளார் கூறுகின்றார்கள்:

اذا حدث الرجل الحديث ثم التفت فهي أمانة

"யாரேனும் ஒருவர் இன்னொருவரிடம் ஒரு ஹதீஸை (இரகசியத்தை)க் கூறி அவ்விடத்தை விட்டுப் பிரிந்து சென்று விடுவாராயின், அவர் கூறியவை நம்பிக்கைப் பொறுப்பாகும்." (திர்மிதி-பிர்ர்: 39).

இதுவரை காட்டப்பட்ட உதாரணங்களிலிருந்து ஹதீஸ் என்பது செய்தி, கதை, விஷயம் எனப் பலவாறு பொருள்படுவதைக் காணலாம்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நபிகளாரது கதைகளும், செய்திகளும், கூற்றுக்களும் வேறு எவ்விதமான காதைகள், செய்திகள், கூற்றுகளை விடவும் மகத்துவமானவையாக விளங்கின. எனவே ஹதீஸ் எனும் சொல்லானது நபிகளார் சம்பந்தப்பட்ட அல்லது நபிகளாரிடமிருந்து கிடைத்த விஷயங்களை மட்டும் உணர்த்துவதாகவே அமைந்தது.

முஹத்திதீன்களதும் சட்ட வல்லுனர்களதும் கருத்தில் ஹதீஸ் எனும் சொல்லும் அதன் பொருளும்

முஹத்திஸீன்களது பார்வையில், முஹம்மத் (ஸல்) அவர்கள் நபி என்ற நிலையில் நின்று வழிகாட்டுதல், சட்டவாக்கம் எனும் அடிப்படைகளில் சொன்னவைகள், செய்து காட்டியவைகள், மறைமுகமாகவேனும் அங்கீகாரம் அளித்தவைகள், அன்னாரின் குண நலன்கள், பண்புகள் பற்றிய விவரங்கள் என்பவற்றைக் குறிப்பதாக ஹதீஸ் எனும் சொற் பிரயோகம் விளங்குகின்றது.

இவ்வாறாக, ஹதீஸ் கிரந்தங்களாவன, நபிகளாரின் வாழ்வு பற்றிய விவரணங்கள், அன்னார் அங்கீகரித்தன என்பவற்றை உள்ளடக்கிய தொகுப்புகளாகும். என்றாலும்கூட, இச்சொல் காலப் போக்கில் பரந்துபட்ட கருத்தை வழங்குவதாகவும் அமைந்தது. அதாவது, நபிகளாரின் தோழர்கள், அவர்களின் பின்வந்தோர், ஆகியோரின் கூற்றுக்களையும் இது உள்ளடக்கிக் கொள்வதாக அமையலாயிற்று.

சிலபோது இதே கருத்தில் வேறு சொற்களும்கூடப் பயன் படுத்தப்பட்டுள்ளன. 'கபர்', 'அதர்' முதலியன அவை. பெரும் பாலான அறிஞர்கள், ஹதீஸ், கபர், அதர் ஆகிய மூன்று சொற்களை யும் ஒரு பொருள் தரும் பல சொற்கள் என்ற அடிப்படையில் பிரயோகித்து வந்துள்ளனர். எவ்வாறாயினும் சில அறிஞர்கள், குறிப்பாக குராஸான் பிரதேசத்தவர்கள் கபர், அதர் என்ற சொற் களை வேறுபடுத்திக் காண்பர். 'கபர்' என்ற சொல்லை ஹதீஸ் என்ற பொருளில் வழங்கிய அவர்கள், 'அதர்' என்பதனை நபிகளா ரின் தோழர்களது வாக்குகளும் முடிவுகளும் என்பனவற்றுக்காக மட்டும் பயன்படுத்தினர். எவ்வாறாயினும் மற்றுமொரு முக்கிய மான சொற்பிரயோகம் ஹதீஸ் என்பதினின்றும் சற்றே கருத்தில் வேறுபட்டாலும்கூட-மாற்றுச் சொல்லாக வழங்கி வந்தது. அது தான் ஸுன்னா. இச்சொல் பெற்றிருக்கும் முக்கியத்துவம் காரண மாக அதனைச் சிறிது விரிவாகக் காண்போம்.

ஸுன்னா– பொருளும், வழங்கும் முறைமையும்

அறபு மொழியியலாளரிடையே 'ஸுன்னா' எனும் சொல், வாழ்க்கை வழி, மார்க்கம், நியதி, முறைமை, ஒழுங்கு, வழக்கம் என்றெல்லாம் பொருள்படும்.

குர்ஆனில் 'ஸுன்னா' என்ற சொல்லும், அதன் பன்மை யான ஸுனன் என்ற சொல்லும் பதினாறு இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன. அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அது, நியம

னமான மார்க்கம், வாழ்க்கை முறைமை, பிரபஞ்ச நியதி என்ற அடிப் படையில் வழங்கியுள்ளது.

அறபு இலக்கியத்தில், குறிப்பாக ஆரம்ப காலத்தில் இயற்றப் பட்ட ஹதீஸ் - பிக்ஹ் நூல்களில் இது பல்வேறு கருத்துகளுடன் வழங்கி வருகின்றது. அவை வருமாறு:

–ஷரீஆ

–கடமையல்லாத; பர்ள் அல்லது வாஜிப் அல்லாத; நிலைபெற்ற மத ஒழுங்குகள்.

–சட்டவியலின் நான்கு மூலங்களுள் ஒன்றான ஸுன்னாவால் நிரூபிக்கப்பட்டது.

–தரீக்குத்தீன் (மார்க்க வழிமுறை)

–நபிகளார் முன்மாதிரியாகக் காட்டிச் சென்ற வழிமுறைகள்.

அபுல் பகாஅவின் கருத்துப்படி ஸுன்னா என்பது, நபிகளாரின் அல்லது அன்னாரின் தோழர்களது ஸுன்னாவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. என்றாலும் ஷாபிஈ கருத்தின்படி ஸுன்னா எனும் சொற்பிரயோகம் நபிகளாரின் ஸுன்னாவுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அறாபிய மொழியியல் வழக்கில், நாம் முன்னர் கண்டது போல, 'வாழ்க்கை முறைமை' முதலாய பல்வேறு கருத்துக்களை இது கொண்டுள்ளது. எனவே வல்ல அல்லாஹ், நபிகளாரைப் பின்பற்றி ஒழுகும்படியும், அன்னாரது வாழ்வுதனை ஒரு முன்னோடியாகக் கொண்டு நடக்கும் படியும் கட்டளை பிறப்பித்த போதிருந்து, 'நபிகளாரின் ஸுன்னா' என்ற வார்த்தைப் பிரயோகம் வழக்கில் வந்தது. நபிகளாரின் காலத்திலேயே வழக்கில் வந்து விட்ட இப்பிரயோகம் அன்னாராலேயே பயன்படுத்தப்பட்டமையையும் காணலாம்.

சிலபோது நபிகளாரின் ஸுன்னாவை மட்டும் குறித்து நிற்பதற்கு அறாபிய வழக்கில் குறிப்புப் பதமான 'அல்' சேர்க்கப் பட்டு அவை, 'அஸ் ஸுன்னா' என மொழியப்பட்டன. வெறுமனே ஸுன்னா என்ற பதம் பொதுவான வழக்கிலிருந்து காலப்போக்கில் அருகிச் சென்றது. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில், சட்ட வியல் நூல்களில் இச்சொற் பிரயோகம் முழுக்க முழுக்க நபிகளா ரின் வழி முறைகளுக்கு மட்டும் அல்லது அன்னாரின் முன்னுதார ணத்திலிருந்து பெறப்பட்ட வழிமுறைகளுக்கு மட்டுமெனப் பயன் படுத்தப்பட்டது.

ஸுன்னா என்பது வாழ்க்கை முறைமை; நபிகளாரின் ஸுன்னா என்பது நபிகளார் காட்டிச் சென்ற வாழ்க்கை முறைமை; ஹதீஸ் என்பது நபிகளாரின் வாழ்க்கை முறைமை பற்றிய பதிவுகள் என்ற காரணத்தினால், ஹதீஸ் - ஸுன்னா எனும் இரு சொற்களுக் கும் இடையில் காணப்பட்ட சிறு வித்தியாசத்தின் மத்தியிலும், அவையிரண்டும் மாற்றுச் சொற் பிரயோகங்களாகப் பயன்பட்டு வந்தன. ஏனெனில் ஒரு ஹதீஸ், எந்தவொரு ஸுன்னாவையும் உள்ள டக்காததாக இருக்கலாம். அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஸுன்னாக் களைக் கொண்டிருக்கலாம். எவ்வாறாயினும் கருத்துச் சிக்கல் களைத் தவிர்ப்பதற்காக, ஆரம்ப கால ஹதீஸ் வல்லுனர்களைப் போலவும், தற்போதைய அறிஞர்களைப் போலவும் நாமும் இவ்விரு சொற்களையும் மாற்றுச் சொற்பிரயோகமாகக் கொள்வோம்.

ஹதீஸ் தொகுப்புகள் நபிகளாரதும், சிலபோது அன்னாரது தோழர்களதும் விவரணங்கள் ஆயின், ஹதீஸ் கலை பற்றிய ஆராய்ச்சிகள் ஏன்? தவறிழைத்தல் மனித இயல்பு. நபிகளாரின் வாழ்வு முறைமை, வழி முறைகள் என்பனவற்றை அறிவிப்பதிலும் விவரிப்பதிலும், பதிவு செய்வதிலும் மிகவும் நேர்மையான அறிஞர்கள்கூட, சிற்சில தவறுகளை இழைத்துள்ளனர். அது ஒரு புறமிருக்க நேர்மையற்ற பலர் நபிகளாருடன் தாம் நெருங்கியோர் எனக் காட்டிக்கொள்வதற்காகப் பல பொய்களைச் சிருஷ்டித்துக் கூறியுள்ளமையையும் காணலாம். எனவேதான் நபிகளாரின்

ஒவ்வொரு வாக்கினையும் ஆய்ந்து மதிப்பிடவென ஹதீஸ் ஆய்வுக் கலை வளப்படுத்தப்பட்டது.

இவ்வாறான மிகச் சிரமமான ஆய்வு முறை அறிமுகமானது ஏன்? உலகில் ஏராளமான பெரும் ஆட்சியாளர்களும், தலைவர்களும் வாழ்ந்து மறைந்துள்ளனர். எனினும் அவர்களுடையன எனக் கருதப்படும் கூற்றுக்களிலும் வாக்குகளிலும் சரியானவை எவை, உண்மையானவை எவை? போலியானவை எவை? எனப் பிரித்து இனங்காணும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நபிகளாரின் ஸுன்னாவுக்கிருக்கும் மிகவும் உன்னதமான நிலையே இதற்குக் காரணமாகும். இவ்வாறான நுணுக்கமான ஆய்வுகளுக்குக் காலாக அமைந்ததுவும் அதுவே.

நபிகளாரின் அதிகாரம்

முஸ்லிம்கள் அனைவரும் குர்ஆனின் ஆணைகளை முற்று முழுதாக ஏற்று நடக்க வேண்டுமென்பதில் அறிஞர்கள் அனைவரும் ஒரே கருத்தினராயுள்ளனர். நபிகளாரின் அதிகாரத்தை மிகைத்திருப்பது குர்ஆன் மாத்திரமே. நபிகளாரின் அதிகாரமானது, சமூகத்தார் அன்னாரை அதிகாரம் படைத்த ஒரு மனிதர் என ஏற்றுக் கொண்டதனால் ஏற்பட்ட ஒன்றல்ல. அன்னாரது அதிகாரம் இறைவனாலேயே அருளப்பட்ட ஒன்று. தனது தூதுவரின் நிலைமையையும் தகைமையையும் பற்றி அல்லாஹ் கூறுகின்றவற்றைக் காண்போம்.

அ) குர்ஆன் விளக்கவுரையாளர்

நபிகளாரே அல்லாஹ்வால் நியமனம் பெற்ற, குர்ஆனின் விளக்கவுரையாளர் ஆவார். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்:

وَاَنْزَلْنَآ اِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ اِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ﴿٤٤﴾

“இந்தக் குர்ஆனை (நபியே!) நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதை நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும்.” (16 : 44)

தொழுகையை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். குர்ஆன் பல்வேறு வாசகங்களில் தொழுகையை நிலைநிறுத்தும்படி கட்டளையிடுகிறது. ஆனால் தொழுகைகளின் ஒழுங்குமுறைகள், அமைப்பு பற்றிய விவரங்களை அது தரவில்லை. தொழுகையின் ஒழுங்குமுறைகளைச் சொல்லாலும் செயலாலும் அறிவுறுத்த வேண்டிய பொறுப்பு நபியவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஆ) சட்ட மியற்றும் அதிகாரம்

எல்லாம் வல்ல அல்லாஹ், நபிகளாரின் சட்டமியற்றும் அதிகாரம் குறித்துக் கூறுகின்றான்.

وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ الْخَبٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِىْ كَانَتْ عَلَيْهِمْ ؕ

“(இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாபமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார். நல்லவைகளையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். அன்றி அவர்களுடைய பளுவை அவர்களை விட்டும் போக்கி அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் நீக்கி விடுவார்.” (7: 157)

இந்த வாசகத்திலிருந்து நபிகளாருக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தினை நாம் விளங்கிக் கொள்ளலாம். எனவே அன்னார் சமூகத்திற்குச் சட்டங்களை ஆக்கிக் கொடுக்கும் அதிகாரம் கொண்டவராயிருக்கின்றார்கள். நபிகளார் அறிமுகம் செய்து வைத்த சில அம்சங்கள், பின்னர் சமூகத்தில் வழங்கி வரும் ஒழுங்குகள் என்றே குர்ஆனால் ஏற்கப்பட்டன. உதாரணமாகத் தொழுகைக்கான அழைப்பாக விளங்கும் அதான் கூறுவதைக் குர்ஆன், 'தற்போது நிலவி வரும் வழக்கம்' (62:9) என்று மட்டுமே குறிக்கின்றது. இந்தக் குறிப்பு, நபிகளாரின் சட்டமியற்றும் அதிகாரத்தையும், அன்னாரின் நடவடிக்கைகள் அல்லாஹ்வின் அங்கீகாரம் பெற்றமையையும் உறுதி செய்கின்றது.

இ) முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு முன்மாதிரி

நபிகளாரின் வாழ்க்கை முறைகள் பற்றிக் குர்ஆன் கூறுகின்றது:

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ
كَانَ يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا ﴿٢١﴾

"உங்களில் யார் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்பி, அல்லாஹ்வை அதிகமாகத் துதி செய்கின்றாரோ அவர்களுக்கு இறைதூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரியுண்டு." *(33 : 21)*

அல்லாஹ்வின் தூதரைச் சமூகத்துக்கு ஓர் அழகிய முன்மாதிரி என நாம் கொள்வதாயின் எல்லா வகையிலும் அன்னாரது முன்மாதிரியை நாம் பின்பற்றியாக வேண்டும். ஏனெனில் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென்றே அல்லாஹ்வும் கட்டளையிட்டிருக்கின்றான்.

இம்மூன்று அடிப்படை அம்சங்களும் அல்லாஹ்வின் தூதரில் ஒன்றுபட்டு விளங்குவதனால் முஸ்லிம் சமூகத்தவர் அனைவரும் தமது எல்லாக் கருமங்களிலும், செயல்களிலும் நபிகளாரைப் பின்பற்றியொழுக வேண்டியது அவசியமாகும். இதனை, எல்லாம் வல்ல அல்லாஹ், விவாதத்துக்குரிய ஓர் அம்சமாக விட்டுவிடவில்லை. இது குறித்து எவ்வித விவாதமும் தேவையில்லாத வகையில் சந்தேகமற அல்லாஹ் விளக்கம் அளித்துள்ளான். நபிகளாரைப் பூரணமாகப் பின்பற்றியொழுகும் படி அல்லாஹ் விடுத்த கட்டளை மிகத் தெளிவான வசனங்களில் அமைந்துள்ளது.

ஈ) நபிகளாரைப் பூரணமாகப் பின்பற்றியொழுகல்

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَآ اَرْسَلْنَا مِنْ رَّسُوْلٍ اِلَّا لِيُطَاعَ بِاِذْنِ اللّٰهِ ۗ

"அல்லாஹ்வின் அனுமதியின் அடிப்படையில் மக்கள் கட்டுப்பட்டு நடப்பதற்காகவேயன்றி நாம் எந்தவொரு தூதரையும் அனுப்பிவைக்கவில்லை." (4 : 64)

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:

قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ ۚ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ
لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ ۝

"(நபியே! மேலும்) நீர் கூறும்: 'அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நீங்கள் வழிபடுங்கள். ஆனால் நீங்கள் கட்டுப்படாது புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரை நேசிப்பதில்லை." (3 : 32)

மேலும் கூறுகின்றான்:

وَأَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ ﴿١٣٢﴾

“அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் வழிப்படுங்கள்; (அதனால்) நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்கு ஆளாக்கப்படுவீர்கள்.” (3 : 132)

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ
وَأُولِي الْأَمْرِ مِنْكُمْ ۖ فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ
إِلَى اللَّهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ
الْآخِرِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا ﴿٥٩﴾

“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடவுங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும் உங்கள் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்களுக்கும் வழிபட்டு நடவுங்கள். (விசுவாசிகளே!) உங்களுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாயிருந்தால் (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஒப்புக் கொள்ளுங்கள்.) இதுதான் நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்.” (4 : 59)

இது குறித்து விவரக் குறிப்புகள் தேவைப்படாத அளவுக்கு ஏராளமான வாசகங்கள் குர்ஆனில் பரவலாகக் காணப்படுகின்றன.

இவ்வாசகங்களிலிருந்து அல்லாஹ்வின் கட்டளைகளும் நபிகளாரின் செயல்முறை முன்மாதிரிகளும் எல்லா முஸ்லிம்களை

யும் கட்டுப்படுத்துவன என்பது புலனாகும். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஒரே மாதிரி அடிபணிந்து ஒழுக வேண்டியது அவசியம். நபிகளாரின் பூரண வாழ்வு முஸ்லிம்கள் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகும். எனவே அதனை அவசியம் பின்பற்றல் கடன். நபிகளாரின் கட்டளைகளைச் செயற்படுத்துவதில் எந்த ஒரு முஸ்லிமும் சிறிதளவேனும் தயக்கம் காட்டக் கூடாது. பின்பற்றி நடப்பது என்பது இங்கு பூரண மனதுடன் அவற்றை ஏற்று நடத்தலாகும்; அரை மனதுடனான அடிபணிதல் அல்ல.

அல்லாஹ் கூறுகின்றான்:

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُوْنَ
حَتّٰى يُحَكِّمُوْكَ فِيْمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوْا فِيْٓ
اَنْفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوْا تَسْلِيْمًا ﴿٦٥﴾

"... உம் இறைவன் மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில், உம்மை நீதிபதியாக அங்கீகரித்து, நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனத்தில் எத்தகைய அதிருப்தியுமின்றி அங்கீகரித்து முற்றிலும் வழிபடாத வரையில், அவர்கள் உண்மை விசுவாசிகளாக மாட்டார்கள்." (4 : 65)

இந்த விவரங்களை முடிவுக்குக் கொண்டு வருமுன்னர், குர்ஆனிலிருந்து மேலும் ஒரு வாசகத்தைக் குறிப்பிடுவது அவசியம்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَآ اٰتٰىكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ ۚ وَمَا نَهٰىكُمْ عَنْهُ
فَانْتَهُوْا ۚ وَاتَّقُوا اللّٰهَ ۗ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ ۘ﴿٧﴾

"ஆகவே (நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனவிருப்பத்தோடு) எடுத்துக் கொள்ளுங்கள். அவர்

எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்" (59 : 7)[1]

இவை நபிகளாரின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் சில குர்ஆன் வாசகங்கள். அவையே, நபிகளாரின் முழு வாழ்வும், முடிவுகளும், தீர்ப்புகளும், நீதி முறைமையும், கட்டளைகளும், ஒவ்வொரு தனிப்பட்ட முஸ்லிம் சமூகம், முஸ்லிம் அரசு ஆகிய அனைத்தினதும், அனைத்துத் துறைகளிலும் பின்பற்றியொழுகப்பட வேண்டியன என்பதையும் உணர்த்துகின்றன.

நபிகளாரின் அதிகாரமானது, சமூகத்தவர்களால் ஏற்கப்பட்டமையாலோ, சில சட்ட வல்லுனர்கள் அல்லது அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டமையாலோ, சட்டக்கோவைகள் ஆக்கிய சிலரது அங்கீகாரம் பெற்றமையாலோ நிலைபெற்றதொன்றல்ல என்ற உண்மையும் இதன் மூலம் புலனாகும். இக்கருத்தினைக் குர்ஆன் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. எனவேதான் முஸ்லிம் சமூகமானது, நபிகளாரின் நபித்துவ காலமுதற்கொண்டு அன்னாரின் வாய்மொழிக் கட்டளைகள், செயன் முறைகள், வாழ்க்கை முறைமைக்கென அங்கீகாரம் பெற்றன அனைத்தையும், முன்னுதாரணங்களாக, அவசியம் பின்பற்ற வேண்டுவனவாகக் கொண்டு செயலாற்றி வந்துள்ளது.

நபிகளாரின் அனைத்துக் கருமங்களும் ஸுன்னாவினுள் இடம் பெற்றுள்ளன. இதுவே, இது காலவரையும், இனி வருங் காலங்களிலும் கூட இஸ்லாமிய சட்டங்களின் மூலாதாரங்களில் ஒன்றாக விளங்குவது. இதனை மிகைத்ததாக அமைவது குர்ஆன் மட்டுமே.

நபிகளாரின் ஸுன்னா

நாம் முன்னர் கூறியது போல 'ஸுன்னா' எனும் சொற் பிரயோகம் நபிகளாரின் ஸுன்னாவை மட்டும் குறிப்பிடுவதொன்றல்ல.

எனவே இச்சொற்பிரயோகம் நபியவர்களோடு மட்டும் மட்டுப் படுத்தப்பட்டதாக இல்லாமையை அவதானிக்கலாம். இது, நவீன கால அறிஞர்கள் மத்தியில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் வளரக் காரணமாக அமைந்துவிட்டது. சில நவீன அறிஞர்கள், நபிகளா ரின் முன்மாதிரிகளை 'ஸுன்னா' என முதன் முதல் வரைவிலக்க ணம் தந்தவர் இமாம் ஷாபிஈ என்பர். ஸுன்னா என்பதற்குரிய விரிவான வரைவிலக்கணம் அளிக்கப்படுமுன்னமேயே ஸுன்னா என்பது கோட்பாட்டு ரீதியாக வழங்கி வந்தது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருப்பின் இவ்வாறான கருத்துப் பிறழ்வுகள் ஏற்பட்டிரா.

உதாரணமாகக் கொள்வதாயின், நவீன அரசுகளில் சட்ட வாக்கம் பற்றிய அதிகாரங்கள் அனைத்தும் அவற்றின் அரசியல மைப்புச் சட்டக் கோவைகளின் அடிப்படையிலேயே அமைந்துள் ளன. சட்டவாக்கும் அதிகாரத்தையும் சட்டங்களைக் கொண்டு நடாத்தும் வரைவுகளையும் அரசியலமைப்புச் சட்டங்கள் அங்கீ கரித்த பின்னர், எவரும் தான் அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வரல்ல என உரிமை பாராட்டவோ, எதிர்ப்புத் தெரிவிக்கவோ முடி யாது. எனினும் இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி சட்டவாக்க வதிகாரங்கள் ஏதும் இருப்பின் அவற்றை அளிப்பது உன்னதமான தனியதிகாரம் படைத்தவனும் சர்வ வல்லமை படைத்தவனுமான அல்லாஹ்வேயன்றி, சட்ட வல்லுனரான யாருமல்ல.

குர்ஆன் எந்த ஒரு கட்டத்திலும் சட்டங்களின் மூலம் ஸுன்னா எனக் குறிக்கவில்லை. எனவே ஆரம்ப காலச் சட்ட வல்லுனர்கள் அதனை வரைவிலக்கணப்படுத்துவதில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். எவ்வாறாயினும் குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வின் தூதரைப் பின்பற்றி யொழுக வேண்டுமென்பதைக் கடமையாக்கி அன்னாரது முன் மாதிரியைக் கொண்டு நடாத்துவதை அவசியமானதாக்கி வைத்துள் ளது. எனவே ஆரம்பச் சட்ட வல்லுனர்கள் இச்சொல்லை, அல்லது சொற்பிரயோகத்தைப் பரந்ததொரு கருத்தில் பிரயோகித்து வந்துள்

ளார்கள் என்பதை ஏற்றாலும், அது எந்தவிதமான கருத்துச் சிக்கல்களையும் ஏற்படுத்தாது எனலாம். ஏனெனில் சட்டங்களின் மூலம், இந்தச் சொல்லோ சொற்பிரயோகமோ அல்ல. குர்ஆனிலிருந்து நேரடியாகவே தனது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட கோட்பாடே அது.

இக்கோட்பாடு அல்குர்ஆனின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமையையும், ஆரம்ப சட்ட வல்லுனர்களால் அது எவ்வித பிரச்சினையுமின்றி ஏற்கப்பட்டமையையும் இலகுவாகக் கண்டு கொள்ளலாம். எனவே நபிகளாரின் ஸுன்னாவானது, முஸ்லிம்கள் அனைவருக்குமே மிகவும் அவசியமானது. தனிப்பட்டவர்களாயினும், சமூகங்களாயினும், நாடுகளாயினும் சரியே- அவற்றைப் பின்பற்றியொழுகுவது கடமையாகும்.

நபிகளாரின் ஹதீஸ்கள், அன்னாரின் ஸுன்னாவினது சேகரிப்புக் களஞ்சியமாக விளங்குகின்றது. எனவே, முஸ்லிம் சமூகத்தினரிடையே அதன் பரம்பலுக்கான ஏற்பாடுகளை அன்னார் செய்து ஒழுங்குபடுத்தியிருப்பார்கள். இந்த விஷயத்தை நாம் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

1 இந்த வாசகம் யுத்தப் பொருட்களின் பங்கீடு பற்றி அருளப்பட்டதாயினும்கூட, நபிகளார் அறிவுறுத்தியது போல, எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்புடையது. பார்க்க: ஹன்பல் 1:415; இப்னு கதீர்: தப்ஸீர் -6:604. எனவே இது யுத்தப் பொருட்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுவது பொருத்தமற்றது. குர்ஆனின் பொதுவான தன்மையும் இதுவே. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அருளப்பட்ட ஒரு வாசகம் பொதுவாகப் பல சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தும் ஒரு வசனமாக அமைகின்றது.

அத்தியாயம் – 2

நபிகளாரும் அன்னாரின் ஹதீஸ்களும்

கற்பித்தல், கற்றல், பரம்பல்

தனிப்பட்டவர்களாயினும், சமூகத்தவர்களாயினும் முஸ்லிம்கள் அனைவருக்கும் நபிகளாரின் ஸுன்னாவினது சேகரிப்புக் களஞ்சியமாக விளங்கிய ஹதீஸ், அத்தியாவசியமான ஒரு தேவையைப் பூர்த்தி செய்தது. இந்த அத்தியாயத்தில், ஹதீஸ் கற்பித்தலோடு இணைந்த செயன்முறைகள், அதற்கெனப் பயன் படுத்தப்பட்ட வழிமுறைகள், அவற்றைக் கற்கவும், பேணிப் பாது காக்கவும் எடுக்கப்பட்ட முயற்சிகள், இப்பணிகளில் நபிகளாரின் தோழர்களுக்குத் துணைநின்ற காரணிகள் என்பன குறித்துப் பார்ப் போம்.

நபிகளார் ஹதீஸ் கற்பித்தமை

நபிகளார் தமது ஸுன்னாவை, அல்லது ஹதீஸ்களைக் கற்பிக்கப் பயன்படுத்திய முறைகளை மூன்று வகைப்படுத்தி நோக்க லாம்:

1. சொல்முறைக் கற்பிதம்.
2. எழுத்து முறைக் கற்பிதம் (நபிகளார் சொல்ல, எழுதுவோர் எழுதியவை)
3. செயன் முறைக் கற்பிதம்.

1. சொல் முறைக் கற்பிதம்:

தமது ஸுன்னாவைக் கற்பிக்கும் ஆசிரியராக நபிகளாரே விளங்கினார்கள்![1] மனனம் செய்தலையும் நினைவிலிறுத்திக் கொள்வதையும் இலகுபடுத்தி வைப்பதற்காக அன்னார் முக்கியமான அம்சங்களை மூன்று முறை மீட்டிக் கூறுவார்கள்.[2] தம் தோழர்களுக்குக் கற்பித்ததன் பின்னர், அவர்கள் கற்றுக் கொண்டவற்றை அன்னாரே செவிமடுத்துக் கேட்பார்கள்.[3] வெளிப் பிரதேசங்களிலிருந்து நபிகளாரைக் காணவரும் தூதுக்குழுவினர், பராமரிப்புக்காகவும், குர்ஆன், ஸுன்னா என்பன பற்றிய போதனைகள் அளிக்கப்படவுமென மதீனத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் கற்றுக் கொண்டன பற்றித் தெளிவு பெறவென நபிகளார் அவர்களிடம் வினாக்கள் விடுப்பார்கள்.[4]

2. எழுத்து முறைக் கற்பிதம்

நபிகளார் தமது காலத்திய அரசர்கள், ஆட்சியாளர்கள், குழுத் தலைவர்கள், முஸ்லிம் அதிகாரிகள் ஆகியோருக்கு எழுதிய கடிதங்கள் அனைத்தும் எழுத்து முறைக் கற்பிதத்துக்கு உட்படும். இவற்றில் சில கடிதங்கள் மிக நீண்டன. அவை சட்டவிவகாரங்கள், ஸகாத், வரி முறைகள், தொழுகை விளக்கங்கள் ஆகியன பற்றிய விவரங்களைக் கொண்டிருந்தன.[5] நபிகளாருக்காகத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக எழுதி வந்தோரின் தொகை குறைந்தது 45 ஆக இருந்தமை மூலம், நபிகளார் அனுப்பிய கடிதங்களின் தொகை, அவற்றை எழுத்துருவில் அமைக்கும் பணியின் அளவு என்பனவற்றை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.[6] இதே முறையிலான கற்பித்தலின் கீழ், நபிகளார் சொல்ல, அலீ இப்னு அபூதாலிப் முதலாய தோழர்கள் எழுதியமை; அப்துல்லாஹ் அம்ர்-இப்னுல் ஆஸ் அவர்கள் எழுதிய சில குறிப்புகள்; யெமனியரான அபூஷா என்பாருக்குத் தமது குத்பாவின் ஒரு பிரதியை அனுப்பி வைக்கும்படி நபிகளார் வேண்டிக் கொண்டமை ஆகியவற்றையும் குறிப்பிட்டுக் கூறலாம்.[7]

3. செயன் முறைக் கற்பிதம்

செயன் முறைக் கற்பிதத்தைப் பொறுத்தமட்டில், வுளுச் செய்தல், தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு முதலியவற்றோடு வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் பொறுத்த விவகாரங்களில் உன்னதமான நெறிமுறைகளை நபிகளார் தாமே வகுத்துக் காட்டியுள்ளார்கள். தமது நடவடிக்கைகளைத் தெளிவாகப் பின்பற்றி நடக்கும்படி அன்னார் அறிவுரை செய்தார்கள். 'நான் தொழுவது போலத் தொழுங்கள்' என்றனர் அன்னார்.[8] மேலும் அவர்கள் கூறினார்கள்: "ஹஜ்ஜின் ஒழுங்குகளை என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்."[9] பல சந்தர்ப்பங்களில் தம்மிடம் வினவப்பட்டவற்றுக்கு விடையளிக்கும்போது, கேள்வி கேட்டவரைத் தம்மோடு தங்கியிருந்து தமது செயன்முறைகளை அவதானித்துக் கற்றுக் கொள்ளும்படி பணித்தனர் நபிகளார்.[10]

ஸுன்னாவைப் பரப்புவதற்கென நபிகளார் கையாண்ட வழிமுறைகள்

1. கல்வி நிலையங்களை நிறுவல்

மதீனாவில் வந்து சேர்ந்த சிறிது காலத்தினுள்ளேயே நபிகளார் கல்வி நிலையங்களை நிறுவினார்கள்.[11] மதீனாவுக்கு வெளியேயுள்ள பிரதேசங்களுக்கு ஆசிரியர்களையும் பிரச்சாரகர்களையும் அனுப்பி வைத்தல், அன்னார் தொடர்ந்து செய்து வந்த ஒரு பணியாக இருந்தது. உதாரணமாக ஹிஜ்ரி 3-ம் ஆண்டு அதல், காரா குழுவினருக்கும் ஹிஜ்ரி 4ல் பீர் மஊனாவுக்கும், ஹிஜ்ரி 9-ல் நஜ்ரான், யெமன், ஹத்ரமவ்த் ஆகிய இடங்களுக்கும் பல குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

2. அறிவைப் பரப்புவது பற்றிய நபிகளாரின் அறிவுரைகள்

நபிகளார் கூறினார்கள்: 'ஒரேயொரு வசனமாயிருப்பினும் கூட என்னிடமிருந்து அதனைப் பிறருக்கு எத்தி வையுங்கள்'[12]

இதே வகையான அறிவுறுத்தலைத் தமது ஹஜ் உரையின் போதும் நபிகளார் விடுத்ததை அவதானிக்கலாம். 'இங்கு சமுகமளித்திருப்பவர்கள் இங்கு சமுகமளிக்காதோருக்கு இந்தச் செய்திகளை எத்தி வையுங்கள்.'[13] எனவே நபிகளாரின் முன்னிலையில் சமுகமளிக்காதிருந்தோர்க்கு, நபிகளாரின் நடைமுறைகள், வாக்குகள் என்பன பற்றித் தெளிவுறுத்துவதனைத் தோழர்கள் வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். மதீனாவுக்கு வரும் தூதுக்குழுவினர், தாம் திரும்பிச் சென்றதும் தமது மக்களுக்குக் கற்பிக்கும்படி பணிக்கப்பட்டனர். உதாரணமாக மதீனாவிலிருந்தும் திரும்பிச் செல்லும் போது மாலிக்-பின் அல்ஹுவைரித் அவ்வாறே கூறப் பெற்றார். நபிகளாரின் மறைவின் பின்னர்கூட அவர் தொடர்ந்தும் நீண்ட காலமாக அப்பணியினைச் செய்து வந்தார்.[14] இதே வகையான அறிவுறுத்தல்கள் ஏனைய குழுவினர்க்கும் அளிக்கப்பட்டன.[15] அப்துல்-கைஸ் குழுவினர் வந்த போது, அவர்கள் நபிகளாரிடம் தாம் கற்பிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து, அதன் மூலம் தாம் ஏனையோர்க்கும், தம்மைப் பின்பற்றுவோர்க்கும் அவற்றைக் கற்பிக்கலாம் எனக் கூறி நின்றனர்.[16]

3. ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் ஊக்கம் அளித்தல்

மக்களுக்குக் கற்பிக்கும்படி நபிகளார் அறிவுறுத்தியது மட்டுமல்ல; கற்பிப்போர்க்கும் கற்போர்க்கும்கூட உயர் வெகுமதிகள் கிட்டுவது பற்றியும் குறிப்பிட்டார்கள்.

கற்றலும், அறிவைத் தேடிச் செல்லலும் ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது என்றனர் நபிகளார். தான்

பெற்றுக் கொண்ட அறிவைப் பிறருக்கு மறைத்து வைத்தல் நரக வாய்ப்பை ஏற்படுத்தி வைக்கும் என எச்சரிக்கையும் விடுத்தனர். இதனைக் குர்ஆனும் சுட்டிக்காட்டியுள்ளது.[17]

அ) கற்போர்க்கான வெகுமதிகள்

நபிகளார் கூறினார்கள்: "யாரேனும் ஒருவர் அறிவைத் தேடியவராக ஒரு வழியில் செல்லக் கூடுமாயின், அல்லாஹ் சுவர்க்கத்தின் வழியை அவருக்கு இலகுவாக்கி வைப்பான். அறிவைத் தேடுபவருடனான உன்னத மகிழ்வின் காரணமாக வானவர்கள் தம் இறக்கைகளைப் பரத்திக் கொள்வார்கள். விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வாழும் ஜீவராசிகள் அனைத்தும், நீரினுள் வாழ்ந்து வரும் மீன்களும்கூட, அன்னவருக்காகப் பிழை பொறுக்கப் பிரார்த்திக்கின்றன."[18]

ஆ) கற்பிப்போர்க்கான வெகுமதிகள்

நபிகளார் கூறினார்கள்: "ஒரு மனிதன் இறக்கும் போது மூன்று விஷயங்களைத் தவிர்த்து அவனது செய்கைகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்து விடுகின்றன. அவை, தொடர்ந்து பயனளித்து வரும் தர்மம்; பிறருக்குத் தொடர்ந்தும் பயன் தந்து கொண்டிருக்கும் அறிவு; அவருக்காக நற்சந்ததி செய்யும் பிரார்த்தனை".[19]

நபிகளார் தமது ஸுன்னாவை முஸ்லிம் சமூகத்தார்க்குக் கற்பித்தமை, அவற்றை மக்களிடையே பரப்ப அன்னார் எடுத்த நடவடிக்கைகள், வெகுமதிகள் பற்றிய அறிவுரைகள் என்பன குறித்துப் பார்த்தோம். இனி, நபிகளாரின் தோழர்களும், சமூகத்தார்களும் இவற்றை எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள் எனக் காண்போம்.

தோழர்கள் நபிகளாரின் ஸுன்னாவை ஏற்ற முறை

சாதாரணமாகவே மனிதர்கள் தமது மதிப்பைக் கவர்ந்த ஒருவரது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து, அவரது சொல், செயல் என்பனவற்றை எப்போதும் நினைவில் கொள்ள முனைவது இயல்பு. இந்த அடிப்படையில் நோக்கும்போது முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சமூகத்தவர் மத்தியில், யாருமே பெற்றிருக்க முடியாத மிக உன்னதமான ஒரு ஸ்தானத்தைக் கொண்டிருந்தார்கள். மனித குலத்து நீண்ட கால வரலாற்றில் அன்னார் பெற்றிருந்த ஸ்தானத்தை வேறு எவருமே பெற முடியவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். நபிகளாரின் மிக நெருக்கமான தோழர் ஒருவர், அன்னாரின் மிகக் கொடிய ஒரு விரோதிக்குக் கூறியவற்றைக் கீழே தருகின்றேன்:

தமது தந்தையார் உமையா பின் கலாபின் மரணத்துக்குப் பழி வாங்கும் வகையில் கொன்றுபோடவென, நபிகளாரின் தோழரும் அவிசுவாசிகளால் ஏமாற்றப்பட்டுக் கைதியாகக் கொண்டு வரப்பட்டவருமான ஸைத்தை, ஸப்வான் பின் உமையா விலை கொடுத்து வாங்கினார். அவரை, ஸப்வான், தனது முன்னாள் அடிமையான நிஸ்தாஸ் என்பாருடன் அல்-தன்ஈம் என்ற இடத்துக்கு அனுப்பி வைத்தார். கொல்லவென ஹரம் பிரதேசத்தினின்றும் அவரை வெளியே கொண்டு வந்தனர். கொல்லப்படவென ஸைத் வெளியே கொண்டு வரப்பட்டபோது அங்கு குழுமியிருந்த குறைஷியருள் இருந்த அபூ ஸுப்யான் பின் ஹர்ப், ஸைதை நோக்கி, “இறைவன் பெயரால் நான் உம்மிடம் கேட்கின்றேன். ஓ ஸைத்! முஹம்மத் இப்போது உமது இடத்தில் இருந்து, நாம் உமக்குப் பதிலாக அவரது தலையைத் துண்டித்துவிட, நீர் உமது குடும்பத்தாருடன் இருப்பதை விரும்பமாட்டீரா?” என வினவினார். ஸைத் கூறினார்: “இறைவன் பெயரால் நிச்சயமாக, முஹம்மத் இப்போது என்னுடைய இடத்தில் இருப்பதையோ, அல்லது ஒரு முள் தைப்ப

தன் காரணமாக வாவது அவர் துயருற நான் என் குடும்பத்தாருடன் இருப்பதையோகூட நான் விரும்பமாட்டேன்." அபூஸுஃப்யான் பின்னைய காலங்களில் கூறுவார்: 'முஹம்மதின் தோழர்கள் அவரை நேசித்தது போல வேறு எந்த ஒரு மனிதனும் நேசிக்கப் பட்டதை நான் கண்டதில்லை'. நிஸ்தாஸ் (ஸைதைக்) கொன்றார். அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக.[20]

இவ்வாறாக, நபிகளார் தமது சமூகத்தில் மிகவும் உன்னத மான நேசத்தைப் பெற்றவர்களாக விளங்கினார்கள். லௌகீகத் தேட்டங்கள் பற்றிய அவா மிகவும் குன்றிய நிலையிலேயே இருந்த மையால், அறிவின் தேட்டத்துக்குப் பரந்த வாய்ப்பும் போதிய சந்தர்ப்பமும் கிட்டின. மேலாக அறபிகள் சிறந்த நினைவாற்றல் பொருந்தியவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தத்தமது குழுக்க ளின் கவிஞர்களதும், ஏனையோரதும் கவிதைகளின் வாசகங்களைத் தம் மனங்களில் இருத்தியவர்களாயிருந்தனர். இவ்வாறான காரணிகளின் பின்னணியில், நபிகளார் தமது ஸுன்னாவைப் பரப்ப எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை வைத்துப் பார்க்கும்போது, முஸ்லிம் சமூகத்தவர்க்கு ஸுன்னாவைக் கற்றுக் கொள்வது மிகவும் இலகுவான ஒரு கருமமாயிருந்தமை புலனாகும். என்றாலும்கூட இயல்பாகக் கிட்டிய இவ்வாறான வசதிகளுடன் அவர்கள் திருப்திப் பட்டு விடவில்லை. ஸுன்னாவைக் கற்கவும், பாதுகாக்கவும் அவர்கள் தம்மாலியன்ற அத்தனை வழிவகைகளையும் கையாண் டார்கள்.

ஹதீஸ் கற்றலில் தோழர்கள்

மூவகையான கற்கை முறைகளைத் தோழர்கள் பின்பற்றி னார்கள். நபிகளாரின் கற்பித முறைகளைப் பின்பற்றியனவாகவே இவை விளங்கின.

அ. நினைவிலிறுத்தல்.

ஆ. எழுத்தில் பதித்தல்.

இ. செயன் முறையில் செய்துவரல்.

அ. நினைவிலிறுத்தல் மூலம் கற்றல்

நபிகளாரின் ஒவ்வொரு வார்த்தையையும் தோழர்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்துச் செவிமடுத்து வந்தார்கள். அவர்கள் குர்ஆனையும் ஹதீஸையும் பெரும்பாலும் பள்ளி வாசலில் வைத்து, நபிகளாரிடமிருந்தே கற்று வந்தார்கள். நபிகளார் ஏதும் ஒரு காரணத்தால் வெளியேறிச் செல்வாராயின், தோழர்கள் தாம் கற்றவற்றை மீட்டு வரலாயினர். இந்த வழக்கத்தை முஆவியா சிறப்புற விவரித்துள்ளார்.[21] இதே வகையான ஆதாரத்தை அபூ அல்-தர்தாவின் கூற்றுக்களிலும் காணலாம்.[22] நபிகளா ருக்குப் பணி விடை செய்து வந்த அனஸ் இப்னு மாலிக் கூறுகின்றார்: "நபிகளாரோடு நாம் அமர்ந்து இருப்போம். சுமார் அறுபது பேர் இருப்பார்கள். நபிகளார் அவர்களுக்கு ஹதீஸ் கற்பிப்பார்கள். ஏதும் ஒரு காரணமாக அன்னார் வெளிச்செல்லும் வேளைகளில் எமக்குள்ளே நாம் அவற்றை மனனம் செய்வோம். நாங்கள் பள்ளி வாசலிலிருந்து வெளியேறும்போது அவை எமது உள்ளத்தில் நடப்பட்டது போல விளங்கும்".[23]

வேறு எவரையும் போலவே, நபிகளாரின் தோழர்களும் தத்தமது அன்றாடத் தேவைகள் பற்றிய பிரச்சினைகளைக் கொண்டிருந்தார்கள். அதனால் நபிகளாரின் அவையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைவருமே கலந்து கொள்ள முடியவில்லை. எனவே நபிகளாரின் போதனைகள் நடைபெறும் அவைகளில் சமுகமளிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காதோர் அங்கு சமுகமளித்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாயினர். இந்த ஒழுங்குமுறையை பராஅ-பின் ஆஸிப் எனும் நபித்தோழர் தெளிவுற விளக்கியுள்ளார்.[24] சில போது, தோழர்கள் மாறி மாறி நபிகளாரின் அவையில் கலந்து கொள்ளும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டனர். இவ்வாறான ஒரு முறையை உமர் இப்னுல் கத்தாப் கைக்கொண்டார்.[25]

இவ்வாறான வழக்கத்தினாலான ஒரு நிலையை நபித்தோழர் ஸுலைத்தின் அனுபவத்தில் காணலாம். அவருக்கு நபிகளார் ஒரு

காணியை வழங்கியிருந்தார்கள். அந்த நிலத்தில் வாழ்ந்து வந்த ஸுலைத் இடைக்கிடை மதீனா வந்து, தாம் இல்லாத வேளைகளில் கற்பிக்கப்பட்டவற்றைக் கற்று வந்தார். தோழர்கள், அவருக்கு, அண்மையில் அருளப்பட்ட குர்ஆன் வாசகங்களையும் வெவ்வேறு பிரச்சினைகளில் நபிகளார் அளித்த தீர்ப்புகளையும் கற்பிப்பார்கள். இந்த ஏற்பாடும் ஸுலைத்துக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. எனவே நபிகளாரிடம் சென்ற அவர், அன்னாரது சமூகத்தில் இருப்பதினின்றும் தாம் பெற்ற நிலம் தம்மைத் தடுத்து விடுவதனைச் சுட்டிக் காட்டி, அந்த நிலத்தை மீண்டும் நபிகளாரே பெற்றுக் கொள்ள வேண்டுமென வேண்டினார்.[26] இவ்வாறான சூழலில்தான் ஹதீஸ் கற்கும் வழக்கம் நிலவி வந்தது.

ஆ) எழுத்தில் பதித்து வைத்து ஹதீஸ் கற்றல்

தோழர்கள் எழுத்தில் பதித்து வைப்பதன் மூலம் ஹதீஸ் கற்றார்கள். நபிகளாரின் தோழர்களுள் குறிப்பிடத்தக்கதொரு தொகையினர் அன்னாரின் ஹதீஸ்களை எழுத்தில் பதித்து வைத்தார்கள்.[27]

இ) செயன் முறையில் கற்றல்

மனனம் செய்வதன் மூலம் அல்லது எழுத்தில் பதிப்பதன் மூலம் தாம் கற்ற ஹதீஸ்களைத் தோழர்கள் செயலுருப்படுத்தி வந்தமையை நாம் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தில் அறிவு என்பது வழக்கத்தில், செயலுருவில் கொண்டு வரப்படுவதற்காக உள்ளதேயன்றி அறிவின் தேட்டம் அறிவுக்காக மட்டுமல்ல என்ற உண்மையைத் தோழர்கள் நன்கறிந்திருந்தனர். குர்ஆனின் இரண்டாவது ஸூறாவைக் கற்பதற்கு இப்னு உமர் எட்டு வருட காலத்தைச் செலவிட வேண்டியிருந்தமையை மட்டும் கவனத்தில் கொள்ளுதல் போதுமானது.[28]

இது நபிகளாரின் காலத்தில் ஹதீஸ் கற்கப்பட்டுவந்த முறையின் அடிப்படை அம்சங்களாகும். அன்னாரின் மறைவின் பின்னரும், நபிகளார் அவர்கள் மத்தியில் இல்லையென்பது போக அதே முறைகளே தொடர்ந்தும் வழக்கில் இருந்து வரலாயின. எவ்வாறாயினும், நபிகளாரின் மறைவின் பின்னர் இருந்த நிலைமைகள் குறித்துச் சிறிது பார்ப்போம்.

நபித்தோழர்களின் காலத்தில் ஹதீஸ் கலை

ஹதீஸ்களை மீட்டலும் மனனம் செய்தலும்

நபிகளாரின் காலத்தில் போலவே, தோழர்களின் காலத்திலும் ஹதீஸ்களை மீட்டலும் மனனம் செய்தலும் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. அபூ ஹுரைரா இரவை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் உறக்கம், தொழுகை, நபிகளாரின் ஹதீஸ்களை மீட்டலும் மனனம் செய்தலும் என்பனவற்றுக்காகப் பயன்படுத்தி வந்தார்.

உமரும், அபூ மூஸா-அல்-அ அரீயும் இரவு முழுவதுமாக, விடியும் வரை ஹதீஸ் மனனம் செய்வதில் ஈடுபட்டு வந்தார்கள். இதே ஒழுங்குமுறையையே இப்னு அப்பாஸ், ஸைத்-பின்-அர்கம் ஆகியோரிடமும் காண முடிந்தது. ஸிரிய நகரான ஹிம்ஸ்ஸில் முஆவியாவும் இதே நிலையில் இருந்தமையை இப்னு புரைதா குறிப்பிடுகின்றார்.

மறுபுறம், அலீ-இப்னு அபூதாலிப், இப்னு மஸ்ஊத், இப்னு அப்பாஸ், அபூ ஸைத்-அல்-குத்ரீ முதலாய நபித்தோழர்கள் ஹதீஸ் மனனம் செய்வதில் ஊக்கங்காட்டும்படி ஏனைய தோழர்களுக்கு அறிவுறுத்தல் செய்து வந்தமையைக் காணலாம். எனவே முன்னைய ஒழுங்குமுறைகளே தோழர்களின் காலத்திலும் தொடரப்பட்டு வந்தமை தெளிவு. அவர்கள் குழுக்குழுவாக அல்லது தனியாக ஹதீஸ் மனனம் செய்வதில் ஈடுபட்டு வந்தார்கள்.[29]

குர்ஆன், ஸுன்னா ஆகியவற்றைக் கற்க உத்தியோக பூர்வமான ஆதரவு

இரண்டாவது கலீபா உமர், தமது ஆட்சிப் பிரதிநிதிகளுக்கு குர்ஆன், நபிகளாரின் ஸுன்னா ஆகியன பற்றிய கல்வியைப் பரப்பு வதனைக் கடமையாக விதித்தார்.[30] இதற்கென ஏராளமான போதகர் களையும் ஆசிரியர்களையும் அவர் பல்வேறு பிரதேசங்களுக்கும் அனுப்பி வைத்தார். நாடோடி அறபிகளிடம்கூட, குர்ஆன் பற்றிய அவர்களது அறிவைப் பரிசீலிக்கவென ஓர் ஆசிரியர் அனுப்பி வைக்கப்பட்டார்.[31]

உத்தியோக பூர்வமல்லாத நடவடிக்கைகள்

நபிகளாரின் ஹதீஸ் பற்றிய அறிவு பெற்றிருந்த தோழர்கள் அனைவரும் சந்தர்ப்பம் கிட்டிய வேளைகளிலெல்லாம், அல்லது தேவையேற்பட்ட போதெல்லாம் அவற்றைப் பரப்புவதில் தீவிர மாக உழைத்து வந்தார்கள். அவர்களை இரு சாரார்களாகப் பிரித்து நோக்கலாம்.

ஒரு சாரார், மக்களுக்குத் தேவையெனக் கண்டவிடத்து அறிவைப் புகட்டும் பணி செய்தோர். அறிவை மறைப்பதனால் விளையும் பாவம் குறித்து நன்கு அறிந்திருந்தமையால் அவர்கள் கற்பித்தலைக் கடமையாகக் கொண்டனர்.

மறு சாரார், ஹதீஸ் கற்பித்தலைத் தமது பணியாகக் கொண்டு அதற்கெனத் தமது காலத்தில் பெரும் பகுதியை ஒதுக்கி வந்தோர்.

இவ்விடத்தில் நாம் மேலும் சில புது விஷயங்களில் சிறிது கவனம் செலுத்த வேண்டும். நபிகளாரின் மறைவின் பின்னர், கால் நூற்றாண்டு காலத்துள் இஸ்லாம், ஆப்கானிஸ்தான், தற்போதைய சோவியத் சோஷலிஸ குடியரசுகளது ஒன்றியத்தின் சில பாகங்கள்,

ஈரான், ஸிரியா, ஈராக், எகிப்து, லிபியா ஆகிய பிரதேசங்களுக்கெல்லாம் சென்றடைந்தது. இவ்வாறான பரம்பலில் நபிகளாரின் தோழர்களே முன்னின்றுழைத்தார்கள். அதன் மூலம் நபிகளாரின் ஹதீஸ் பற்றிய அறிவும் அவர்களுடனேயே முஸ்லிம் உலக முழுவதும் சென்று சேர்ந்தது. இதன் மூலம் தெரியவரும் மற்றுமோர் உண்மை, ஸுன்னா பற்றிய அனைத்து அறிவும் மதீனாவில் மட்டும் தரித்து விடவில்லை என்பதாகும். தனியொரு தோழருக்குத் தெரிந் திருந்த ஒரு ஸுன்னா, அவருடனேயே ஈராக் அல்லது எகிப்து அல்லது வேறு ஒரு பிரதேசத்துக்குச் சென்றிருக்கலாம். தோழர் களும் தமது மறைவின் முன்னர் தாம் பெற்றிருந்த ஹதீஸ் பற்றிய அறிவினை அடுத்த சந்ததியினருக்குக் கொடுத்து அதன் ஒளி மங்காது பாதுகாக்கச் செய்தார்கள். அடுத்த தலைமுறைகளில் வந்தோரும் அப்பொறுப்பினை ஏற்பதற்காகக் கல்வியில் அக்கறை காட்ட வேண்டியவர்களாயிருந்தனர். எவ்வாறாயினும் கல்வித் தேட்டத்துக்கான சில சிறப்பான விதிகளை முஹத்திதீன்கள் முறை செய்து வைத்தார்கள். இவற்றை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

---

1) அல்-காதிப்-அல் பகீஹ் ii : 124. 2) புஹாரி-இல்ம்:30 3)புஹாரி-வுளு : 75. 4) ஹன்பல் iv : 206 5) ஹமீதுல்லா : அல்வதாயிக் அல்ஸியா ஸியா. 6) அல்-அஸமி-குத்தாப் அந் நபி : 25-112. 7) புஹாரி இல்ம் ; 39. 8) புஹாரி-அதான்:8. 9) முஸ்லிம்-ஹஜ் ; 310 10) முஸ்லிம் மஸாஜித் : 176 11) அஸமி-studies : 3-4. 12) புஹாரி-அன்பியா: 50 13) புஹாரி-இல்ம் :9 14) இப்னு ஸஅத்-vii : 1 : 29-30. 15) புஹாரி - இல்ம் : 25. 16) புஹாரி - மனாகிப் : 5. 17) குர்ஆன் 2 : 159, 174 18) ஹன்பல் v ; 196. 19) முஸ்லிம் - வாஸியா :14. 20) இப்னு-இஸ்ஹாக் : ஸீரத் ரஸூலுல்லாஹ் 21) அல்-ஹாகிம்-அல்-முஸ்தத்ரக்: 1-94. 22)இப்னு ஹன்பல்-முஸ்னத் vi ; 443 23) கதீப்-அல்ஜாமீ : 43. 24) இப்னு-ஹன்பல் இலால் : 966; அல்-ஹாகிம்-அல்-முஸ்தத்ரக் : i-127. 25) இப்னு-ஸஅத் : viii:136; புஹாரி இல்ம் : 27. 26) அபூ-உபைத்-அல்-அம்வால் : 272-3. 27)பார்க்க அஸமி studies : 34-80. 28) ஸூயூதி-துர்அல் மன்தூர் : 1-21 மேற்கோள் மாலிக்கின் முவத்தா. 29) பார்க்க அஸமி - studies : 184 30) இப்னு ஸஅத் iii, i, 201; 243, இப்னு-ஹன்பல்-முஸ்னத் 1:48. 31) இப்னு ஹஜர், அல் இஸாபா, அவ்ஸ்-பின்-காலித்-அல் தாயிஈ-332.

அத்தியாயம் – 3

ஹதீஸ்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல்

தஹம்முல்–அல்–இல்ம்

நபிகளார் தமது ஹதீஸ்களையும் ஸுன்னாவையும் கற்பித்த முறைகள் பற்றியும், தோழர்கள் அவற்றை ஏற்ற முறைகள் பற்றியும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். தோழர்கள், நபிகளாரின் நேரடி வாரிசுகளாக இருந்தமையால் அவர்கள் அன்னாரின் போதனைகளைப் பரப்பி வைப்பதில் விசேட வாய்ப்பும் வசதிகளும் கொண்டிருந்தது மட்டுமன்றி தாமே அதனை ஒரு கடமையாகவும் கருதிக் கருமமாற்றி வந்தனர். எவ்வாறாயினும், பின்னைய காலங்களில் ஹதீஸ் பற்றிய அறிவு முஸ்லிம் உலகம் முழுவதும் பரவிச் சென்றிருந்த நிலையில் அறிவின் தேட்டம் அல்லது ஹதீஸ் சேகரிப்பு என்பன மிகவும் நீண்ட பிரயாணங்களை வேண்டி நின்றன. எனவே கற்றல் சம்பந்தமாகப் புதிய முறைகளும் அறிமுகமாயின. அவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஆரம்ப காலத்தில் ஹதீஸ்களைக் கற்றல்

ஹதீஸ் கற்றலுக்காகப் பின்வரும் எட்டு வழிமுறைகள் கையாளப் பட்டன.

1. அஸ்ஸமாஉ- ஆசிரியர் மாணாக்கர்க்கு வாசித்தல்.
2. அர்ள் - மாணாக்கர் ஆசிரியர்க்கு வாசித்தல்.
3. இஜாஸா- எவரும் வாசிக்காமல், ஒரு ஹதீஸை அல்லது தொகுப்பைப் பிறருக்குக் கற்பிக்க அறிஞரொருவர் யாருக்கேனும் அங்கீகாரமளித்தல்.
4. முனாவலா- எழுத்தில் பதிக்கப்பட்ட தொகுப்பைப் பிறருக்குக் கற்பிக்கவென யாருக்கேனும் அளித்தல்.
5. கிதாபா- யாரேனும் ஒருவருக்காகத் தான் கேட்ட ஹதீஸ்களை எழுதுதல்.
6. இஃலாம்- சில குறிப்பிட்ட ஹதீஸ்களைக் கற்பிக்கத் தனக்கு அங்கீகாரம் கிட்டியுள்ளது என யாருக்கேனும் அறிவித்தல்.
7. வஸீயா- (மரண வேளை, பிரயாணம் என்ற நிலைகளில்) தனது தொகுப்புகளை யாருக்கேனும் பொறுப்பளித்தல்.
8. விஜாதா- யாரேனும் எழுதிவைத்த தொகுப்புகள் அல்லது சில ஹதீஸ்களைக் கண்டெடுத்தல். இன்றைய காலங்களில் நூலகங்கள் அல்லது வேறு நூல் சேகரிப்பு நிலையங்களில் கையெழுத்துப் பிரதிகளைத் தேடிப்பெறுவது போன்றது இது.

எவ்வாறாயினும் தோழர்களின் காலத்தில் முதலாவது முறை மட்டுமே பொதுவாக வழக்கில் இருந்தது. ஏனைய முறைகளின் பயன்பாடு குறிப்பிட்டுக் கூறமுடியாத அளவுக்குக் குன்றியிருந்தது. மாணவர்கள், எப்போதும் தமது ஆசிரியர்களுடனேயே இருந்து, பணிவிடைகள் செய்து, அவர்களிடமிருந்து கல்வி கற்று வந்தனர். ஆசிரியர் ஹதீஸ் ஒன்றினைக் கூறியவிடத்து, மாணவர்கள் அவற்றை எழுதிக் கொண்டனர்; அல்லது மனனம் செய்து கொண்டனர். இமாம் அஸ்-ஸுஹ்ரி கூறுவார்: "மக்கள் இப்னு உமருடன் அமர்ந்திருப்பர். எனினும் வெளியிலிருந்து யாரும் வந்து அவரிடம் வினாக்கள் விடுக்கும் வரை எவரும் அவரிடம் கேள்விகள் கேட்கமாட்டார்

கள். வேறு யாரும் வந்து கேள்விகள் கேட்கும் வரை நாங்கள் எவ்வித கேள்விகளும் கேட்காது இப்னுல்-முஸையப்புடன் அமர்ந்திருப் போம். விடுக்கப்படும் கேள்விகளின் காரணமாக அவர் ஹதீஸ்கள் கூறத் தூண்டப்படுவார்; அல்லது அவர் தானாகவே ஹதீஸ்கள் கூறு வார்." சிறிது காலம் கழிய முதலாம், இரண்டாம் வழிமுறைகள் கைக் கொள்ளப்பட்டன. முதலாம் முறையோ, இரண்டாம் முறையோ சிறந்தது என்பது குறித்து ஏராளமான கருத்துரைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன. சில அறிஞர்களின் கருத்தில் இரண்டு முறைகளும் சமமான பயன்கள் அளிப்பன. இமாம் தஹாவீ (மறைவு: ஹி 328) இரண்டு முறைகளும் ஒரே பயன் அளிக்கக் கூடியன என்ற கருத்தை விளக்கும் வகையில் நூலொன்றினை வெளியிட்டார்.

ஹதீஸ் பரம்பலின்போது பல்வேறு சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை, எவ்வெம் முறைகளில் ஹதீஸ் கற்கப் பட்டன என்பதை விளக்குவனவாயமைந்தன. இதை நாம் பின்னர் காண்போம். மேலே குறிப்பிட்ட முறைகளில் ஏதாவதொன்றின் மூலம் ஹதீஸ்களைப் பெற்றிராத ஒருவர் ஹதீஸ்களைப் பயன்படுத்த அங்கீகாரம் அளிக்கப்பட மாட்டார். எவ்வாறாயினும் முதல் ஏழு முறைகளே ஏற்கப்பட்டன. எட்டாவது முறை அறிஞர்களால் ஏற்கப்படவில்லை. இனி நாம் இம்முறைகளைச் சிறிது விளக்க மாகப் பார்ப்போம்.

1. ஸமாஅ – ஆசிரியர் மாணாக்கர்க்கு வாசித்தல்

இம்முறையானது பின்வரும் அம்சங்களைக் கொண்டது:

அ) வாய்மொழி மூலமானது.

ஆ) தொகுப்புகளிலிருந்து வாசித்தல்.

இ) கேள்வி - பதில்கள்.

ஈ) சொல்வதெழுதல்.

அ) வாய்மொழி மூலமானது

இம்முறை, ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதி முதல் வழக்கிழந்து போகத் தொடங்கியது. என்றாலும்கூட, மிக நீண்டகாலமாக இம்முறை சிற்சிறு அளவில் பயன்படுத்தப்பட்டது. வழக்கமாக மாணாக்கர் குறிப்பிட்ட ஓர் ஆசிரியருடன் மிக நீண்டகாலமாக நெருங்கியிருப்பர். தமது ஆசிரியரின் ஹதீஸ்கள் பற்றிய அறிவில் போதிய பாண்டித்யம் பெற்றுக் கொண்டனர் எனக் கருதுமளவு காலம் அவர்கள் அவ்வாறிருப்பர். சிலபோது குறித்த மாணவர், இன்னாருடைய 'ராவி' அல்லது 'ஸாஹிப்' என அழைக்கப்பட்டார். கற்பிக்கவென ஒழுங்குமுறையிலான கூட்டங்கள் தொடர்ந்து கிரமமாகக் கூட்டப்பட்டாலும் கூட, மூன்று அல்லது நான்கு ஹதீஸ்களே ஒரு பாடத்தில் கற்பிக்கப்பட்டன.

ஆ) தொகுப்புகளிலிருந்து வாசித்தல்

ஆசிரியர் தமது தொகுப்புகளின் உதவியுடனேயே மாணாக்கர்க்கு வாசிக்கும் முறை இது. இம்முறை பெரிதும் விரும்பப் பட்டது.

ஆசிரியர் மாணாக்கரது தொகுப்புகளிலிருந்து வாசிப்பது முண்டு. அது சிலவேளை ஆசிரியரது தொகுப்பின் பிரதியாக அல்லது ஆசிரியரது தொகுப்பிலிருந்து பெறப்பட்ட சில பகுதிகளாக இருக்கும். தமது ஹதீஸ்களை மனனம் செய்திராத ஆசிரியர்க்கு இவ்வாறான முறை பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாயமைந்தது. இம்முறையைக் கைக்கொள்ளும் போது சில மாணாக்கரும் அறிஞர்களும் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாளலாயினர். அவர்கள், ஆசிரியரது ஹதீஸ் பிரதிகளில் இடைச் செருகல்களாக ஹதீஸ்களை நுழைத்து அவற்றை வாசிக்கவென ஆசிரியரிடம் கொடுப்பர். இதன் மூலம் ஆசிரியரது அறிவுத் திறனும், நினைவாற்றலும் பரீட்சைக்குள்ளாயின. இடைச் செருகல்களை அடையாளம் கண்டு கொள்ள இயலாத ஆசிரியர்கள் நம்பத்தகுந்தவர்களல்லர் என மறுத்துரைக்கப்பட்டனர்.

இ) கேள்வி பதில்கள்

இம்முறையின் கீழ் ஹதீஸ்களின் சில பகுதிகளை மாணாக்கர் வாசிக்க, ஆசிரியர் முழுமையாக வாசிப்பார்.

ஈ) ஹதீஸ்களைச் சொல்வதெழுதல்

நபிகளார் சொல்லத் தோழர்கள் எழுதியது போக, தோழர்கள் தமது காலத்தில் மிகவும் அருமையாகவே சொல்வதெழுதலில் ஈடுபட்டார்கள். கிட்டியுள்ள ஆதாரங்களின்படி, வாதிலா-பின்-அஸ்கா (மறைவு: ஹி.83) எனும் நபித்தோழர்தான் முதன் முறையாக ஹதீஸ் சொல்வதெழுதலுக்கான வகுப்புகளை ஆரம்பித்தவர். இந்த முறை ஆரம்பத்தில் போதியளவு அங்கீகாரம் பெறவில்லை. ஏனெனில் இதன் மூலம், அதிக சிரமங்கள் ஏதும் இன்றி மிகக் குறுகிய காலத்தில் ஒரு மாணவர் பெருமளவு அறிவினைத் திரட்டிக் கொள்ள முடிந்தது. இம்முறையிலிருந்தும் பிறழ்ந்த வகையில் நடந்து சென்றவர் அஸ்-ஸுஹ்ரீ. முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஹதீஸ்களைச் சொல்வதெழுதலில் ஈடுபட்ட ஸுஹ்ரீ, தன் மரணம் வரை இதனைத் தொடர்ந்தார்.

சில அறிஞர்கள், சொல்வதெழுதும் வழக்கத்தை விரும்பாதவர்களாக, தமது ஹதீஸ்களை எழுத்தில் பதிக்க அனுமதியளிக்காதிருந் தார்கள். இன்னும் சிலர், தமது மாணாக்கர் எழுத்தில் பதித்துக் கொள்ளாத வரை ஹதீஸ்களைக் கூறாது விட்டார்கள். மாணவர்கள் மரத்தாலான பலகைகளில் எழுதிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஹதீஸ் கூறமறுத்த ஆசிரியர்களும் பலர். ஏனெனில் அவற்றிலிருந்தும் எழுதியவற்றை இலகுவாக அழித்துவிட முடிந்தது. இன்னும் சிலர் எழுத்தில் பதித்துப் பின்னர் மனனம் செய்த பின், எழுதியதை அழித்து விட்டார்கள். சிலர் முதலில் மனனம் செய்து பின்னர் எழுத்தில் பதித்துக் கொண்டார்கள். ஹதீஸ்களைக் கற்பிப்பதற்கான ஏனைய வழிமுறைகளை ஒப்பிடுமிடத்து, இவ்வாறான முறைகள் மிகவும் அரிதானவையாகவே காணப்பட்டன.

இரண்டாம் நூற்றாண்டு முதற்கொண்டு தொகுப்புகளிலிருந்து வாசிக்கும் சாதாரணமான முறையோடு, சொல்வதெழுதும் பழக்கமும் பரவலாக அமையலாயிற்று. சில வேளைகளில் இதற் கென ஒழுங்குபடுத்தப்பட்ட கிரமமான வகுப்புகளும் ஆரம்பித்து நடாத்தப்பட்டன.

சொல்வதெழுதும் வழக்கத்துக்கு இரு வழிமுறைகள் பயன் பட்டன. தொகுப்புகளிலிருந்து வாசிக்க, அல்லது நினைவிலிருந்து கூற, மாணாக்கர் எழுதிக் கொள்வர். நினைவில் இருந்து ஆசிரியர் கூற, மாணாக்கர் எழுதிக் கொள்ளும் வழக்கமே பொதுப்பட அமுலில் இருந்து வந்தது. என்றாலும் நினைவிலிருந்து கூறப்படும் ஹதீஸ்களை எழுதிக் கொள்ள மாணாக்கர் மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. பொதுப்பட இம்முறையே பெருமைக்கும் கௌரவத்துக்கும் உரிய முறையாக இருந்து வந்திருக்கலாம். நினைவாற்றலில் இயல்பாகவே ஏற்படக்கூடிய பலவீனங்கள் காரணமாக இம்முறை யில் பல தவறுகள் ஏற்படலாயின. ஆசிரியர்கள் தமது நினைவை வலுப்படுத்திக் கொள்ளவெனத் தமது தொகுப்புகளை மீட்க வேண்டியதாயிற்று. பல சந்தர்ப்பங்களில் தாம் போதியளவு உறுதி பெற்றிராத நிலைமைகளில் மாணாக்கர் எழுதவென ஆசிரியர் ஹதீஸ்களைக் கூற மறுத்துள்ளனர்.

முஸ்தம்லிகள்: சொல்வதெழுதும் முறையின் காரணமாக மாணாக்கர் தொகை பெருகிச் செல்லவே, முஸ்தம்லிகள் என அழைக்கப்பட்ட ஒரு புதிய சாரார் உருவாகலாயினர். இவர்கள் 'ஷெய்க்' அல்லது ஆசிரியர் கூறுவனவற்றை உரத்த குரலில் மீட்டுக் கூறுபவர்களாயிருந்தனர்.

எழுதுவதற்கென ஒருவரைத் தெரிதல் : எல்லா மாணவர் களுமே விரைவாக எழுதக் கூடியவர்களல்ல என்பதனால், சில போது வேகமாக எழுதக் கூடிய ஒருவர் ஹதீஸ்களை எழுதவெனத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தவறுகள் இழைக்கக் கூடுமாதலால், ஏனை யோர் அவர் எழுதுவதை அவதானித்து வந்தனர். பின்னர்

அவர்கள் எழுதப்பட்ட அத்தொகுப்புகளைப் பெற்றுக் கற்றனர் அல்லது அதன் உரிமையாளரின் முன்னிலையில் பிரதியெடுத்துக் கொண்டனர். இவ்வாறாக, ஹதீஸ் கல்வித்துறை சார்ந்தோர் மத்தியில் 'வர்ரா கூன்' எனும் எழுதுவினைஞர்கள் குழுவொன்று உருவாகலாயிற்று. இதன்மூலம் ஹதீஸ் தொகுப்புகள் பரிமாற்றங்களுக்குள்ளாகவும் தொடங்கின.

எழுதப்பட்ட பிரதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளல் :

தொகுப்புகளின் பிரதிகள் எடுக்கப்பட்ட பின்னர், அவற்றை மீளவும் பரீட்சித்துப் பார்ப்பதன் அவசியத்தை அறிஞர்கள் உணர்ந்திருந்தனர். எனவேதான் ஆசிரியர்கள் தம் மாணாக்கர்க்கு எப்போதும் பிரதிகளைப் பரீட்சிக்க வேண்டுமென அறிவுறுத்தி வந்ததுடன் தாமே அவ்வாறு பரீட்சிக்கத் துணை செய்யவும் முன்வந்தனர். மிக ஆரம்ப காலத்திருந்தே இம்முறை வழக்கிலிருந்தமையைக் காணலாம். உர்வா (ஹிஜ்ரி 22-93) தம் மகன் ஹிஷாமிடம், 'பிரதியெடுத்த பின்னர் மீளப் பரீட்சித்தீரா?' என வினவினார். 'இல்லை'யென்றார் ஹிஷாம். அப்போது உர்வா, 'உண்மையில் ஹிஷாம் எழுதவில்லையென்பதையே அது குறிக்கின்றது' என்றார்.

(கதீப் பக்தாதீ-கிபாயா 237)

பிரதியெடுத்த பின்னர், அல்லது சொல்வதெழுதிய பின்னர் மாணவர்கள் ஒருவருக்கொருவர் பிரதிகளைத் திருத்திக் கொள்வதில் தம்மிடையே உதவிக்கொண்டனர். அல்லது திருத்த வேலைகளைத் தமது ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் செய்தனர்.

எழுதிக் கொள்வதற்கெனப் பெரும்பாலும் மரப்பலகைகளே பயன்படுத்தப்பட்டன. சொல்வதெழுதவும் குறிப்புகள் எடுக்கவும் இவை பயன்படுத்தப்பட்டுப் பின்னர் ஒழுங்கான பிரதிகள் எடுக்கப்பட்டன. கால, பொருள் விரயங்கள் ஏற்படாத வகையில் சிலபோது சுருக்கெழுத்து முறைகளும் கையாளப்பட்டன.

2. அர்ள் – மாணக்கர் ஆசிரியர்க்கு வாசித்தல்

மற்றுமொரு முறை தொகுப்புகள் ஆசிரியர் முன்னிலையில் மாணவர்களினால் அல்லது 'காரீ' என வழங்கப்பட்ட ஒருவரால் வாசிக்கப்படுவதாகும். ஏனைய மாணவர்கள் தமது தொகுப்புகளை வாசிக்கப்பட்ட ஹதீஸ்களுடன் ஒப்பீடு செய்தனர். அல்லது வெறு மனே கூர்ந்து கேட்டு வந்தனர். பின்னர் அவர்கள் தொகுப்புகளி லிருந்து பிரதிகள் எடுத்துக் கொண்டனர். இந்த முறை 'அர்ள்' என வழங்கப்பட்டது.

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 'அர்ள்' முறையே பொதுவாக வழக்கிலிருந்து வந்துள்ளது. ஆசிரி யர்களின் கீழ் 'காதிப்' அல்லது 'வர்ராக்' எனும் எழுதுவினைஞர்கள் பலர் இருந்து வந்தமையால், ஆசிரியர்களே மாணவர்களுக்குப் பிரதிகள் கொடுக்க முடிந்தது. அல்லது மாணவர்கள் ஏற்கெனவே மூலத்தொகுப்பிலிருந்து அல்லது அம்மூலத்தொகுப்பிலிருந்து பெறப்பட்ட பிரதியொன்றிலிருந்து தமது சொந்தப் பிரதிகளை வைத்துக்கொள்ள முடிந்தது. பிரதி செய்யும் போது அவர்கள் வழக்கமாக ஒவ்வொரு ஹதீஸ் முடிவிலும் வட்ட வடிவக் குறியீடு ஒன்றினை இடுவர். மாணவர் குறிப்பிட்ட ஹதீஸை ஆசிரியர்க்கு வாசித்ததன் பின்னர் அவ்வட்டக் குறிக்குள் அல்லது பிறிதோரிடத் தில் ஓர் அடையாளம் இடுவார். இதன் மூலம் அந்த ஹதீஸ் ஆசிரிய ருக்கு வாசிக்கப்பட்டுவிட்டது என்பது புலனாகும். இம்முறை மிகவும் அவசிய மானதொன்றாயிருந்தது. ஏனெனில், ஒரு மாணவர் தொகுப்புகள் மூலம் ஹதீஸ்களைப் பெற்றிருந்தாலும்கூட பிறருக் குக் கற்பிக்கவோ, தனது சொந்தத் தொகுப்புகளுக்கோ அவற்றைப் பயன்படுத்தும் உரிமை, சரியான ஒழுங்குமுறையின்படி அவற்றைப் பெற்றிருந்தால் மட்டுமே கிட்டும். இம்முறையைப் பின்பற்றாத ஒருவர் ஹதீஸ்களைத் திருடியவராகக் கருதப்படலாம். அதாவது, 'ஸாரிக்-அல்ஹதீஸ்' அதன் கருத்து என்ன வென்றால், அத்தொகுப் பைத் தொகுக்க எடுத்துக் கொண்ட அம்சங்கள் உண்மையில் சரியானவையாயிருந்தாலும்கூட, முறையான வழியில் அவை

பெறப்படவில்லையென்பதாகும். இது நவீன காலப் பிரிவில் பதிப்புரிமைச் சட்டம் என வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒருவர் ஒரு நூலின் ஓர் இலட்சம் பிரதிகளைக்கூட விலை கொடுத்து வாங்கலாம். என்றாலும்கூட அந்நூலின் ஒரு சில பிரதிகளைக்கூட அவர், அனுமதியின்றி பிரசுரிக்க முடியாது.

ஆரம்ப கால அறிஞர்கள் தமக்கேயுரிய சில பதிப்புரிமைகளைக் கொண்டிருந்தார்கள். வெறுமனே ஒரு தொகுப்பை விலை கொடுத்துப் பெறுவதன் மூலம் எவரும் அந்நூற்பொருளை எடுத்தாள முடியாது. என்றாலும் சில அறிஞர்கள் சில கையெழுத்துப் பிரதிகளிலிருந்து பெற்றுக்கொண்ட விவரங்களைத் தமது தொகுப்பில் இணைத்து விட்டு, அது எந்தப் பகுதியிலிருந்து பெறப்பட்டது என்ற விவரங்களையும் கொடுத்தனர். என்றாலும் இவ்வாறான சேர்க்கைகள் பொதுப்பட ஏற்கப்படுவனவாக அமையவில்லை. ஏனெனில் அம்மூலப் பிரதி தவறுகளை உள்ளடக்கியதாக இருக்கலாம்; அல்லது பிரதியெடுத்தவர் தவறுகள் இழைத்திருக்கலாம்.

ஒரே ஹதீஸ் ஒரு முறைக்கும் மேலாக ஒரு மாணவரால் வாசிக்கப் பட்டவிடத்து அம்மாணவர் மேலதிக அடையாளங்கள் இடுவார். சில போது அறிஞர்கள் ஒரே தொகுப்பைப் பல முறை வாசிக்கலாயினர்.

3. இஜாஸா – அனுமதி

ஹதீஸ் சொற்பிரயோகத்தில், இஜாஸா என்பது ஒருவருக்கு ஒரு ஹதீஸை அல்லது தொகுப்பைப் பிறருக்குக் கற்பிக்க அங்கீகாரம் அளிக்கப் படுவதைக் குறிக்கும். இஜாஸாவில் பல்வேறு வகைகள் காணப்பட்டன. மூன்றாம் நூற்றாண்டு வரை இஜாஸா முறை பயன்படுத்தப்பட்டமை பற்றிய தெளிவு காணப்படவில்லை. பின்னைய காலங்களில் இது பரவலாக வழக்கிலிருந்தது. இதன் பயன் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவின.

சில சந்தர்ப்பங்களில் இந்த முறையானது ஹதீஸ் தொகுப்புக்கு ஒரு வகையில் பாதுகாப்பு அளிப்பதாகவும் இருந்தது. உதாரணமாக சைத், ஸஹீஹ் புஹாரியைக் கற்பிக்க அஹ்மதுக்கு அனுமதியளித்துள்ளார் எனக் கொள்வோம். இவ்வேளையில் அஹ்மத், தான் வாசிக்கவென அங்கீகாரம் பெற்றதும் சைதின் பெயர் பொறிக்கப் பட்டதுமான ஸஹீஹ் புஹாரி பிரதியொன்றைக் கொண்டிருக்க வேண்டும். இந்த முறையில் தொகுப்பின் உள்ளடக்கம் எவ்வித கலப்புகளுமில்லாது பாதுகாக்கப்பட முடிந்தது.

4. முனாவலா: மாணவர்க்கு நூலொன்றினைக் கையளித்தல்

மாணவர் ஒருவருக்கு கையெழுத்துப் பிரதியொன்றினை அளித்து அதனைப் பிறருக்குக் கற்பிக்க அனுமதியும் வழங்குவதாகும் இது. உதாரணமாக இமாம் ஸுஹ்ரீ (ஹி.51-124) தமது கையெழுத்துப் பிரதிகளை இமாம்களான தவ்ரீ, அவ்ஸாஈ, உபைதுல்லா பின் உமர் போன்ற பல அறிஞர்களுக்குக் கையளித்தார். அது முனாவலா என வழங்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் இது கூடியளவு வழக்கில் இருக்கவில்லை.

5. கிதாபா: வேறு ஒருவருக்காக ஹதீஸ் எழுதுதல்

பிறருக்குக் கற்பிக்கவென யாரேனும் ஒருவருக்காக ஹதீஸ்களைத் தொகுத்து எழுதுவது. நவீன காலத்து அஞ்சல் வழிக் கல்வி முறையைப் போன்றது இது. ஆரம்ப காலந்தொட்டே காணப்பட்ட இம்முறை பின்னைய காலங்களில் மிகப் பரவலாக வழங்கி வந்தது. முதல் கலீபாக்களின் கடிதங்களில் அறிஞர்கள் பலர் கற்பித்த ஹதீஸ்கள் பல உள்ளடக்கப்பட்டிருந்தன. இது போக, தோழர்கள் பலரும், பின்னைய காலங்களில் ஏராளமான அறிஞர்களும் ஹதீஸ்களை எழுதித் தமது மாணவர்களுக்கு அனுப்பி வைத்தனர். இப்னு-

அப்பாஸ், இப்னு-அபூ-முலய்கா, நஜ்தா ஆகியோருக்கு எழுதிய மையை உதாரணமாகக் கூறலாம்.

6. இஃலாம்: ஹதீஸ் கற்பிக்கக் கிட்டிய அங்கீகாரத்தை அறிவித்தல்

குறிப்பிட்ட ஒரு தொகுப்பைப் பிறருக்குக் கற்பிக்கத் தனக்கு ஓர் அறிஞர் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது என அறிவிப்புச் செய்வதே இம்முறையாகும். இம்முறையினால் ஹதீஸ் கற்பிக்கச் சில அறிஞர்கள் அங்கீகாரம் வழங்கினாலும் பெரும்பாலோர் இம்முறை யை மறுத்துரைத்துள்ளனர். இம்முறையில் அங்கீகாரம் பெற்ற ஒருவர் அங்கீகாரம் அளித்தவரது பெயரும், கற்பிக்கும் அனுமதி யளிக்கப்பட்ட சான்றிதழும் கொண்ட ஒரு பிரதியைக் கொண்டிருத் தல் வேண்டும். ஆரம்ப கால கட்டங்களில் இம்முறை வழங்கி வந்த மைக்குரிய சான்றுகளைக் கண்டு கொள்வது அரிது.

7. வஸீயா

தொகுப்புகளைக் கையளித்த ஒருவரது அங்கீகாரத்துடன் தொகுப்புகளைப் பெற்றுக் கொண்ட ஒருவர் கற்பித்தலே வஸீயா எனப்படும். இதற்கு உதாரணமாக அபூ கிலாபா (மறைவு: ஹி 104) தமது தொகுப்புகளை அய்யூப்-அல்-ஸக்தியானீக்கு அளித்தமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

8. விஜாதா

யாரேனும் ஒருவருடைய தொகுப்பை எவருடைய அங்கீகா ரமும் இன்றிப் பிறருக்குக் கற்பிக்கவெனப் பயன்படுத்துவது. ஹதீஸ் களைக் கற்பதற்கு, அங்கீகாரம் பெற்றதொரு முறையல்ல இது. முஹத்திஸீன்களின் முறைகளின்படி, ஒருவர் கொடுக்கக்கூடிய விவரம், இன்னாருடைய தொகுப்பிலிருந்து பெறப்பட்டதெனத்

தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். ஆரம்ப காலங்களிலிருந்தே இவ்வாறான தொகுப்புகள் வழக்கிலிருந்து வந்தன. ஸஅத்-இப்னு-உபாதாவின் தொகுப்பு இதற்கோர் உதாரணமாயமையும்.

ஹதீஸ் கல்வியின் போது பயன்படுத்தப்பட்ட சொற் பிரயோகங்கள்

முஹத்திஸீன்கள் ஹதீஸ்களைக் கற்கவெனப் பல்வேறு சொற் பிரயோகங்களைப் பயன்படுத்தினர். ஒவ்வோர் 'இஸ்னாத்' களும் பல பெயர்களைக் கொண்டிருந்தமை காரணமாக இச்சொற் பிரயோகங்களும் அடிக்கடி பயன்படுவனவாயின.

கால, பொருள் விரயம் கருதி, முஹத்திஸீன்கள் இவற்றைக் குறிக்க சுருக்கமான முறைகளைக் கையாண்டார்கள். சில போது சில சொற்களை இஸ்னாத்திலிருந்து தவிர்த்துக் கொள்ளவும் செய்தனர். அவை வருமாறு:

- ஹத்தஸனா: பொதுவாக 'ஸனா' அல்லது 'னா' என்று மட்டும் எழுதுவர்.

- அக்பரனா: பொதுவாக 'அனா' என்று மட்டும் எழுதுவர்: அரிதாகச் சிலபோது 'அரனா' என்றும் எழுதுவர்.

ஹத்தஸனா என்பது பொதுப்பட ஆசிரியரிடமிருந்து மாணாக்கர் கற்றுக் கொண்டமையை - முதலாம் முறையைக்-குறிப்பது.

அக்பரனா என்பது இரண்டாம் முறையில் கற்றமையைக் குறிப்பது. என்றாலும், சில அறிஞர்கள் இந்த இரண்டு சொற் பிரயோகங்களையும் ஒரே கருத்தில் பயன்படுத்தி வந்ததுமுண்டு.

அன்பஅனா: இது 'இஜாஸா'விலும் 'முனாவலா'விலும் பயன்படுத்தப்பட்டது. சிலபோது 'முனாவலா'வில் 'ஹத்தஸனா இஜாஸதன்' என்ற பிரயோகமும் காணப்படும்.

-ஸமிஅ: முதலாம் முறையில் கற்பதனை மட்டும் குறிப்பது.

-அன்: எல்லாக் கல்வி முறைகளிலும் பயன்படுத்துவது.

குறிப்பிட்ட எல்லாச் சொற்பிரயோகங்களும் சமமான பெறுமதி வாய்ந்தனவல்ல. ஸமிஃது, ஹத்தஸனா, ஹத்தஸனீ, அக்பரனா, அக் பரனீ என்பன உயர் தரத்தன. எனினும் இவற்றினுள் ளும் எது மிகவும் சிறந்த பிரயோகம் என்பது குறித்து அறிஞர்கள் பல்வேறுபட்ட கருத்துக்கள் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் 'அன்' எனும் பிரயோகம் பெறுமதி குறைந்தது.

பிரதிகள் எடுக்கும்போது இச்சொற்பிரயோகங்கள் மாற்றப் படக் கூடாது. ஹதீஸ்களைக் கூறியவர்களின் தொடரில் 'அன்' எனும் பிரயோகம், ஹதீஸ் கூறியவரும் கேட்டவரும் நேரடியாகச் சந்தித்தமை பற்றிய உறுதி அளிப்பதல்ல. அதனால் யாரும் 'தத்லீஸ்' முறையைக் கையாண்டார் எனக் காணப்பட்டால் சிலபோது குறிப்பிட்ட ஹதீஸ்கூட உறுதியானதல்ல எனக் கூறப்படலாம்.

வாசித்தமை பற்றிய சான்றிதழ்

மாணாக்கர் வகுப்புக்குச் சமுகமளித்த விவரங்கள் அடங்கிய ஒரு பதிவேடு வைக்கப்பட்டிருந்தது. ஒரு தொகுப்பு வாசித்து முடிவுற்றதும். ஆசிரியரால் அல்லது மேற்பார்வை செய்யும் ஓர் அறிஞரால் ஒரு குறிப்புரை வழங்கப்பட்டது. அக்குறிப்புரையில் மாணாக்கர் வகுப்புகளுக்குச் சமுகமளித்த விவரங்கள், முழுத் தொகுப்புரையையும் கற்றவர் கள், சில பகுதிகளை மட்டும் கற்றோர், எப்பகுதி கற்கப்பட்டது, கற்கத் தவறிய பகுதிகள் எவை, திகதிகள்,

இடங்கள் என்பன அனைத்தும் கொடுக்கப்பட்டன. வகுப்புகளுக்குச் சமுகமளித்த ஒருவர் ஐந்து வயதுக்குக் குறைந்தவராயிருப்பின் அவர், 'ஹாளிர்' (பிரசன்னமானார்) என்று மட்டும் குறிக்கப்பட்டார். அவர் ஐந்து வயதுடையவராகவோ அல்லது அதற்குக் கூடியவராகவோ இருப்பின் அவர் நிலையான மாணாக்கரெனக் கருதப்பட்டார். வகுப்புகள் முற்றுப்பெற்றதும், தொகுப்பின் இறுதியில் ஆசிரியரின் அல்லது மேற்பார்வை செய்யும் அறிஞரது ஒப்பம் இடப்பட்டிருக்கும். வாசித்து முடிக்கப்பட்ட தொகுதியில், இதன் மேல் எந்த ஒரு குறிப்பும் இடப்படக் கூடாது என்ற நியதியையும் இச்சான்றிதழ் கொண்டிருக்கும். முஹத்திஸீன்கள் இந்தச் சான்றிதழை 'தபாக்' எனக் குறிப்பர்.

ஹதீஸ் கல்வி இலவசமாகவே வழங்கப்பட்டது. ஒரு சில ஆசிரியர்களே ஊதியம் பெற்றார்கள். என்றாலும், அதற்காக அவர்கள் கண்டனத்துக்கு ஆளாக்கப்பட்டார்கள். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான உறவுகள் பெருமதிப்பும், கௌரவமும் கொண்டனவாயிருந்தன. சில மாணவர்கள் தம் ஆசிரியர்க்கு உதவிகளும், பணிவிடைகளும் செய்து வந்தனர். என்றாலும், ஆசிரியர்கள் பலர் இவ்வாறான பணிவிடைகளை ஏற்காது மறுத்துரைத்தனர். இவ்வாறான பணிவிடைகள் கற்பிப்பதற்குப் பிரதியாகக் கிட்டும் உபகாரங்களெனக் கொள்ளப்படலாம் என அவர்கள் அஞ்சினர்.

பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் தம் மாணாக்கர்க்கு நிதியுதவிகளும் செய்தனர். மாணாக்கர்க்கு இலவச உணவு வசதி செய்து கொடுப்பது சர்வசாதாரணமான ஓர் அம்சம். ஹதீஸ் கல்வியின் ஒரு முக்கியமான அம்சம் யாதெனில், ஹதீஸ் சேகரிப்புக்கென ஆசிரியரும் மாணாக்கரும் இடையறாது பிரயாணங்களில் ஈடுபட்டு வந்தமையாகும். மாணவ நடவடிக்கைகளில் பிரயாணம் செய்வது மிகவும் முக்கியமானதோர் அம்சமாயிருந்தது. இந்த அம்சம் குறித்து அல்-காதிப்-அல்பக்தாதீ தனியொரு நூலையே எழுதியுள்ளார்.

மாணவர்களின் வயது

முதலில் மாணவர்கள் குர்ஆனைக் கற்றார்கள். இது பெரும் பாலும் மனனம் செய்தலாகவே இருந்தது. ஏராளமான அறிஞர்கள், தமது புதிய மாணாக்கரது குர்ஆன் பற்றிய அறிவைப் பரிசீலித்துப் பார்ப்பவர்களாயிருந்தனர். மேலாக, மாணவர்கள் இஸ்லாமிய சட்ட வரைமுறைகள், வணக்க வழிபாட்டு ஒழுங்குகள், இலக்கணம் முதலியனவும் கற்பிக்கப்பட்டார்கள். பெரும்பாலும் அவர்கள் இருபதாவது வயதிலேயே முஹத்திஸீன்களின் அவையில் சேர்ந் தார்கள். நபித்தோழர்களின் காலத்தில் மாணாக்கர் ஹதீஸ்களைக் கற்கத் தொடங்கும்போது இருபது வயதினராகவே இருந்தார்கள்.

பதினைந்து வயதினராயிருந்த இப்னு உயைனாவே, தாம் கண்ட மிகவும் வயது குறைந்த மாணவராயிருந்தார் என்பர் இமாம் ஸுஹ்ரீ. கூபா பிரதேசத்து மக்கள், தம் சந்ததியார் இருபது வயதினரானவுடன் ஹதீஸ் கற்பதற்காக அனுப்பி விடுவர் என்பர் மூஸா-பின்-இஸ்ஹாக். இருபது வயதே ஹதீஸ் கல்வி ஆரம்பத்துக் கான வயது என்பர் அல்-தவ்ரீ, அபூ-அல்-அஹ்வாஸ் ஆகியோர். ஸிரியர்கள் முப்பதாவது வயதிலேயே எழுதத் தொடங்குவோரா யினர். பஸ்ரா வாசிகள் பத்தாவது வயதிலேயே ஹதீஸ் கல்வியை ஆரம்பித்தனர். அஹ்மத் இப்னு-ஹன்பல் தமது பதினாறாவது வயதில் ஹதீஸ் கல்வியை ஆரம்பித்தார். இவையனைத்தும் ஹதீஸ் கல்வி வட்டத்தில் காணக் கூடியனவாயிருந்த பொதுவான அவதா னங்களே அன்றி, அனைவரும் பின்பற்ற வேண்டுமென்ற நிலையான சட்டங்களல்ல; நியதிகளுமல்ல. எவ்வாறாயினும் பின்னைய காலங் களில் இது திட்டமிட்ட ஒரு முறையின் கீழ் பின்பற்றப்படவு மில்லை. அப்துர் ரஸ்ஸாக்கின் தொகுப்புகளை அல்-தபரீ பிறருக்குக் கற்பித்தார். அப்துர் ரஸ்ஸாக்கின் மறைவின் போது அவரது மாணவர் ஏழு வயதினராகவே இருந்தார். சிறுவர் ஒருவர், பசுவை யும் கழுதையையும் தனித்தனி அடையாளம் காண முடியுமாயின் ஹதீஸ் கல்வியைத் தொடங்கலாம் எனப் பொதுவாகக் கூறப் பட்டது. இக்காலவளவில் கல்வி புகட்டல் என்பது, நூற்பொருட்

கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, இஸ்னாத் வழிமுறையில் ஒரு தொகுப் பினைக் கற்பிப்பதாகும்.

இரண்டாம் நூற்றாண்டுக் காலப் பகுதியில், பெரும் வல்லு னர்களின் சில ஹதீஸ்களைக் கூட போதிய பலம் வாய்ந்தனவல்ல எனச் சில ஆசிரியர்கள் கருதினர். ஏனெனில் அவ்வல்லுனர்கள் குறிப்பிட்ட ஹதீஸ்களைக் கற்று எழுத்தில் வடித்தபோது குறைந்த வயதினராக இருந்துள்ளனர். உதாரணமாக அவ்ஸாயீயின் ஹதீஸ் களில் அம்ருல் பைரூதி திறமை வாய்ந்தவரல்ல எனக் கருதப்பட் டார். ஏனெனில் அவ்ஸாயீயிடமிருந்து அவற்றைக் கற்றவேளை அம்ர் இளம் வயதினராயிருந்தார். இவ்வாறான கண்டனங்களுக்கு இப்னுல்-மதீனீ, இப்னு-அபூ-ஷைபா, ஹிஷாம்-பின்-ஹஸ்ஸான் ஆகியோரும் உள்ளாயினர்.

எவ்வாறாயினும், பின்னைய காலங்களில் நிலைமை முற்றும் மாறிவிட்டது. மக்கள் தமது சின்னஞ்சிறு சிறார்களையும்கூட ஹதீஸ் வகுப்புகளுக்குக் கூட்டிச் செல்லலாயினர். இவ்வாறான வகுப்புகளுக்குச் சமுகமளிப்பதனால் அக்குழந்தையும் தன் பெயர் குறிக்கப்பட்ட ஒரு சான்றிதழைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய தாயிற்று. அக்குழந்தை ஐந்து வயதுக்குக் குறைந்ததாயிருப்பின் இச்சான்றிதழ், அக்குழந்தையும் வெறுமனே வகுப்புக்குச் சமுக மளித்தமையை உறுதிப்படுத்தியது. குழந்தை ஐந்து வயதுடைய தாகவோ அல்லது அதற்கு மேற்பட்டோ இருக்கக் கூடுமாயின் சான் றிதழில் (திபாக்) அக்குழந்தை இன்ன அறிஞர்களது இன்னின்ன தொகுப்புகளைக் கற்றதாகக் குறிக்கப்பட்டது.

ஐந்தே வயதுடைய ஒரு குழந்தை ஹதீஸ் கலையில் தேர்ச்சி யுடையவராயினார் எனச் சான்றிதழ் ஒன்றினை வழங்குவது ஒரு கேலிக் கூத்தாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் மேலோட்ட மாகத் தெரிவது போல, இது கேலியோ முட்டாள் தனமான செயலோ அல்ல.

ஐந்து வயதிலேயே ஹதீஸ் கல்வியில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்பட்ட இந்த மாணவர், பின்னைய காலங்களில் என்ன செய்யக்கூடியவராக இருந்தார் எனக் காண்போம். நூல்களை வாசித்தல் மாத்திரமே அவர் செய்யக்கூடியதாயிருந்தது. வாசிக்க மாத்திரமே அவர் அனுமதி பெற்றிருந்தார். ஹதீஸ்களை விளக் கவோ தெளிவுபடுத்தவோ அவருக்கு அனுமதி வழங்கப்படுவ தில்லை. ஆகவே அவரது அறிவு, ஹதீஸ் விளக்கம் செய்ய எவ்விதத் திலும் பயன்படமாட்டாது.

சான்றிதழின் முக்கியமானதொரு பணி, நூற்பொருளின் தூய்மையையும் அதிகாரபூர்வ நிலையையும் பாதுகாப்பதாய மைந்தது. தேர்ச்சி பெற்றவரின் பெயர், தனியொரு தாளில் அல்லது இதழில் கொடுக்கப்படவில்லை. நூலின் ஒரு பக்கத்தில் அல்லது இறுதி இதழிலேயே அது வழங்கப்பட்டது. மாணவர், பெரியவரா னதும் அதே நூலின் வேறு எந்த ஒரு பிரதியையும் வாசிக்க அவருக்கு அனுமதி கிடைப்பதில்லை. அவர் தமது மூல கையெழுத்துப் பிரதியிலிருந்து, அல்லது அவ்வேட்டிலிருந்து பெறப்பட்டுத் தமது பெயரும் பொறிக்கப்பட்டு, மீண்டும் பரிசீலிக்கப்பட்ட ஒரு பிரதியிலிருந்து மட்டுமே வாசிக்கலாம். இவ்வாறான முறைகளைக் கையாள்வதன் மூலம், நூற்பொருளின் தூய்மையைப் பாதுகாக்க முடிந்ததோடு, 'இஸ்னாத் ஆலி' (அதாவது நபிகளாருக்கும் வாசிப்பவருக்கும் இடையில் மிகவும் குறைந்த தொகையினரான அறிவிப்பாளர்களைக் கொண்டிருத்தல்) யையும் பேண முடிந்தது.

மாணவர்களின் தொகை

தாம் ஹதீஸ்களைப் பெற்றுக்கொண்ட நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகளை இமாம்களான அல்-தவ்ரீ, இப்னுல் முபாரக், அல்-ஸுஹ்ரீ ஆகியோர் தருவர். வாழ்க்கை வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்க்கும்போது, புகழ்பூத்த ஹதீஸ் கலை அறிஞர்களதும், ஆசிரியர்களதும், மாணவர்களதும் பெயர்

கள் மிக நீண்ட பட்டியல்களாக அமைந்துள்ளமையைக் காணலாம். உதாரணத்துக்காக நாம் ஒரேயோர் அறிஞரை மட்டும் எடுத்துக் கொள்வோம். அவர் இமாம் ஸுஹ்ரீ. இவரிடமிருந்து எத்தனை பேர் ஹதீஸ்கள் எழுதினார்கள்; எத்தனை பேர் இவரது ஹதீஸ் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தார்கள் என்பன போன்ற சரியான மதிப்பீடுகள் இன்னமும் இல்லை. எவ்வாறாயினும் அவரிடமிருந்து ஹதீஸ் எழுதி, தமது தொகுப்புகளை ஆக்கிக் கொண்டோரில் குறைந்தது ஐம்பது பேர் பற்றிய குறிப்புரைகளைத் தேடிப் பெற முடிந்தது. அறிவிப்பாளர்களது தொகைகளின் பெருக்கத்தின் காரணமாகத் தொகுப்புகளின் தொகையும் பெருகிச் செல்ல லாயிற்று. தொகுப்புகளின் தொகையும் அளவும் பெருகிச் செல்ல, அவற்றைக் கையாள்வது இலகுவான கருமமாக இருக்கவில்லை. எனவே குழப்பங்களையும் தெளிவின்மையையும் தவிர்க்க வேண்டு மாயின், திறமை வாய்ந்த அறிஞர்களது சிறந்த தொகுப்புகளிலிருந்து மட்டும் ஹதீஸ்களை எழுதிக் கொள்ளுமாறு ஷுஅபா அறிவுறுத் தல் செய்வார்.

தொகுப்புகளின் அளவு, ஹதீஸ்களின் தொகையிலும் தாக் கத்தை உண்டுபண்ணலாயிற்று. இதற்கு ஒரு துணைக் காரணியாக அமைந்தது, முஹத்திஸீன்கள் ஒவ்வோர் ‘இஸ்னாத்’தையும் ஒவ்வொரு ‘ஹதீஸ்’ எனக் கொண்டமையாகும். இதன் மூலம் நபிகளாரின் தனியொரு வாசகம் நூறு இஸ்னாத்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருப்பின், அவை, மொத்தம் நூறு ஹதீஸ்கள் எனக் கொள்ளப்பட்டன. இவ்வாறுதான் நபிகளாரின் சில ஆயிரம் ஹதீஸ்கள் சுமார் ஆறு இலட்சம் ஹதீஸ்களாகக் கொள்ளப்பட லாயின. இந்தக் காரணிகளும், முறைமைகளும் குறித்துத் தெளி வில்லாத காரணத்தினால் நவீன கால அறிஞர்கள்கூட ஏராளமான தவறான கருத்துக்களைத் தெரிவிக்கலாயினர்.

அத்தியாயம் – 4

ஹதீஸ்களைப் பதிவு செய்தல்

முன்னைய அத்தியாயத்தில் ஆரம்ப கால அறிஞர்கள் நபி களாரின் ஹதீஸ்களைக் கற்பிக்கவும், கற்கவும் பயன்படுத்திய முறைகள் பற்றிப் பார்த்தோம்.

கற்றலுக்கான எட்டு முறைகள் காட்டப்பட்டன.. அவற்றில் முதல் ஏழு முறைகள் மட்டுமே ஆரம்ப காலத்தில் ஏற்கப்பட்டன. எவ்வாறாயினும் இரண்டு முதல் எட்டு வரையான முறைகள் முற்றும் எழுத்து மூலமான தொகுப்புகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. மிகவும் பொதுவான வழக்கிலிருந்தவை முதல் இரண்டு முறைகள் மட்டுமே என்பதையும் நாம் நோக்கினோம். பல சந்தர்ப்பங்களில் முதலாவது முறையிலும், அதாவது ஆசிரியர் மாணாக்கர்க்கு வாசித்தலிலும் எழுத்துப் பிரதிகள் தேவைப்படுவன வாயின. இரண்டாவது முறையான, மாணாக்கர் ஆசிரியர்க்கு வாசித் தலானது முற்று முழுதும் எழுத்தில் வடிக்கப்பட்ட தொகுப்புகளி லேயே தங்கியிருந்தது.

எவ்வாறாயினும், பொதுப்பட ஹதீஸ்கள் அறிவிப்பானது, குறைந்தது முதல் நூறு வருட காலமளவாவது வாய்மொழி மூலமா கவே நிலவி வந்தது என்றே ஏற்கப்பட்டு வருகின்றது. பின்னர், கலீபா உமர்-பின்-அப்துல்-அஸீஸ் அவர்களின் ஆணையின் பேரில் இமாம் ஸுஹ்ரீ அவற்றைத் தொகுக்கலானார். ஸுஹ்ரீயின் தொகுப் பும் அழிவுற்றது என்பர் சில அறிஞர்கள். இவ்விரண்டு கருத்துகளும்,

ஆரம்பகால ஹதீஸ் வரலாறு, ஹதீஸ் இலக்கிய மரபுகள் ஆகியன பற்றிய தெளிவான அறிவின்மையால் தெரிவிக்கப்பட்டனவாகும். எனவே, ஹதீஸ்களைப் பதிவு செய்யும் முறை பற்றிய தெளிவு காண்பது அவசியம். அத்தோடு வெறுமனே பதிவுசெய்யப்பட்டு விடுவதனால் மாத்திரம் அவற்றின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதில்லை என்பதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக, இப்போது வழக்கில் இருந்து வரும் கிரேக்க பைபிள்களை எடுத்துக் கொள்வோம். இவற்றினிடையே சுமார் இரண்டு இலட்சம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில சிறியன. சில பாரதூரமானவை. வெறுமனே எழுத்தில் பதிக்கப்படுவதனால் ஒரு கிரந்தம் பூரணமாகப் பாதுகாக்கப்பட்டுவிடுவதில்லை என்பதை இது எமக்கு உணர்த்துகின்றது. மறுபுறம், எழுத்தில் பதிக்கப்படாமல்கூட நூற்பொருள் நன்கு பாதுகாக் கப்படலாம் என்பதையும் நாம் காணலாம். உதாரணமாக, உலகில் உள்ள எல்லா நூல்களுமே அழிவுற்றாலும் கூட, புனித குர்ஆன் நிச்சயம் பாதுகாப்பாக இருக்கும். ஏனெனில் லட்சோப லட்சம் முஸ்லிம்கள் அதனை முழுவதும் அல்லது சில பகுதிகளையாவது மனனம் செய்து வைத்துள்ளனர்.

நபிகளாரினதும், நபித்தோழர்களினதும் காலங்களில் ஹதீஸ்களை எழுத்துருவில் அமைத்தல்

நபிகளாரின் காலத்திலேயே சில தோழர்கள் ஹதீஸ்களை எழுதி யமையை நாம் அறிவோம். சிலபோது நபிகளார் சொல்ல, தோழர்கள் எழுதினார்கள். நிச்சயமாக, பின்னைய காலங்களில் ஹதீஸ்களை எழுதிய அறிஞர்களிலும் பார்க்க இவர்களது தொகை மிகக் குறைந்ததாகவே இருந்திருக்கும். இனி, ஹதீஸ்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு, அதில் அதிக காலத்தைச் செலவிட்ட நபித் தோழர்கள் சிலரது முயற்சிகள் குறித்து நாம் பார்ப்போம்.

எல்லா நபித்தோழர்களுமே தாம் அறிவிப்புச் செய்ய சமமான தொகை ஹதீஸ்களைத் தெரிந்து வைத்திருக்கவில்லை. பலரும்

அறிந்திருந்த ஹதீஸ்களின் தொகைகள் பெரிதும் வேறுபட்டன வாயிருந்தன. சிலர் ஆயிரத்துக்கும் அதிகமான ஹதீஸ்களை அறி விக்க, ஏராளமான தோழர்கள் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்க ளையே அறிவிப்புச் செய்தனர். மிகவும் அதிகமான தொகை ஹதீஸ் களை அறிவிப்புச் செய்த நபித்தோழர்கள் பின்வருவோர்:

முதலாமவர் அபூஹுரைரா.

பகீ-பின்-மகலத்தின் கருத்தில் அபூஹுரைரா 5374 ஹதீஸ் களை அறிவித்துள்ளார். உண்மையில் இது அவர் அறிவிப்புச் செய்த ஹதீஸ்களின் தொகையல்ல; ஹதீஸ்களை அறிவிப்புச் செய்த 'இஸ்னாத்'களின் தொகையாகும். மிகவும் அண்மைய ஆராய்ச்சி கள் மூலம் அபூஹுரைரா அறிவிப்புச் செய்த ஹதீஸ்களின் தொகை 1236 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. அவரிடம் எழுத்து வடிவிலான ஹதீஸ் தொகுப்புகள் இருந்தன எனவும் கருதப்படுகிறது. குறைந்தது ஒன்பது மாணவர்கள் அபூஹுரைராவிடமிருந்து ஹதீஸ்களை எழுதினர்.

அடுத்து வருபவர் இப்னு உமர். பகீயின் கருத்தில் இவர் 2630 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்துள்ளார். இவரிடம் எழுத்துருவில் அமைந்த ஒரு தொகுப்பு இருந்தமை பற்றிய ஆதாரங்கள் உள. குறைந்தது எட்டு மாணவர்கள் இவரிடமிருந்து ஹதீஸ் எழுதியுள்ள னர்.

நபிகளாருக்குப் பத்து வருட காலமாகப் பணிவிடை செய்து வந்த அனஸ்-இப்னு-மாலிக் 2286 ஹதீஸ்களை அறிவித்துள்ளார். இவரிடமிருந்து குறைந்தது 16 பேர் ஹதீஸ்களைக் கேட்டு எழுத்தில் பதித்தனர். இவர்களில் சிலர் நம்பகமானவர்களல்லர்.

உம்முல் முஃமினீன் ஆயிஷா (ரழி) அறிவிப்புச் செய்த ஹதீஸ்கள் 2210. குறைந்தது மூவர் இவரிடமிருந்து ஹதீஸ்களைக்

கேட்டு எழுத்தில் பதித்தனர். தோழர்களுள் மிகவும் உன்னதமான ஓர் அறிஞராக விளங்கிய உர்வா அவர்களுள் ஒருவர்.

இப்னு அப்பாஸ் 1660 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தார். குறைந்தது ஒன்பது மாணவர்கள் இவரிடமிருந்து ஹதீஸ்களைக் கேட்டு எழுதினர்.

ஜாபிர்-இப்னு-அப்துல்லாஹ் 1540 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தார். குறைந்தது பதினான்கு மாணவர்கள் இவரிடமிருந்து எழுதினர்.

அபூ-ஸஈத் அல்குத்ரீ 1170 ஹதீஸ்களை அறிவித்தார். ஹதீஸ் களை எழுத்தில் பதிப்பதனைக் கண்டித்துக் கூறியவர் இவர். என்றா லும் கதீப்பின் கருத்தில் இவரே சில ஹதீஸ்களை எழுதியுள்ளார்.

748 ஹதீஸ்களை அறிவித்தார் இப்னு-மஸ்ஊத். இவரிடமி ருந்து ஹதீஸ்களைக் கேட்டு எழுதிய மாணவர்கள் குறித்து எவ்வித விவரமும் காணக்கிடைக்கவில்லையென்றாலும், இவரது ஹதீஸ் தொகுப்பொன்றினை இவரது மகனிடம் காண முடிந்தது.

அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்-ஆஸ் 700 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தார். நபிகளாரின் காலத்திலேயே ஹதீஸ்கள் எழுதி வந்த இவர், தனது தொகுப்புகளை 'அஸ்ஸஹீபா அஸ்ஸாதிகா' என நாமமிட்டிருந்தார். குறைந்தது ஏழு மாணவர்கள் இவரிடமி ருந்து ஹதீஸ் கற்றனர்.

இரண்டாவது கலீபா உமர் இப்னுல் கத்தாப் 537 ஹதீஸ் களை அறிவித்தார். தனது உத்தியோகபூர்வ மடல்களில் ஹதீஸ் களை மேற்கோள் காட்டுவார் இவர். இவ்வாறாகப் பல ஹதீஸ்கள் இவரால் எழுத்தில் பதிக்கப்படலாயின.

536 ஹதீஸ்களை அறிவித்தார் நான்காவது கலீபா அலி-இப்னு அபூதாலிப். குறைந்தது எட்டு மாணவர்கள் இவரிடமிருந்து ஹதீஸ்கள் எழுதினர்.

அபூமூஸா அல் அஷ்அரீ 360 ஹதீஸ்களை அறிவித்தார். இவரது ஹதீஸ்கள் சில இப்னு அப்பாஸிடம் காணக்கிட்டின.

அல்-பராஅ-பின்-ஆஸிப் 305 ஹதீஸ்களை அறிவித்தார். இவர் பிறர் எழுதிக் கொள்ளவென ஹதீஸ் சொல்வார்.

இத்துடன் இதனை நாம் நிறுத்திக் கொள்வோம். ஏனெனில் எமது பிரச்சினையை அணுக இந்த விளக்கங்கள் போதுமானவை யாகும். மேற்கண்ட விவரங்கள் மூலம் நபிகளாரின் எல்லா ஹதீஸ் களும் உட்படுத்தப்படாவிடினும்கூட, பெரும்பாலான ஹதீஸ்கள் தோழர்களது காலத்தில் எழுத்துருவில் அமைந்தன எனலாம்.

ஹதீஸ்களை எழுத்தில் பதிப்பது குறித்த சில தவறான கருத்துகள்

நபிகளாரின் ஹதீஸ்கள் எழுத்தில் பதிக்கப்பட்டமை குறித்து நான் எழுதியுள்ளவை சரியாயின், மிகவும் பின்னைய காலங் களிலேயே இவை தொகுப்புக்குள்ளாயின என்ற பொதுவான அபிப் பிராயம் நிலவுவது எப்படி?

இதற்குப் பின்வரும் நியாயங்களே காரணம் என நான் கருது கிறேன்.

1. தத்வீன், தஸ்னீப், கிதாபா ஆகிய சொற்களுக்கு வித்தியாச மான கருத்துக்கள் கொள்ளப்பட்டமை. பதிவுகள் என்ற கருத்திலேயே அவை பயன்படுத்தப்பட்டன.

2. ஹத்தஸனா, அக்பரனா, அன் முதலிய சொற்பிரயோகங் கள் வாய்மொழி மூலமான அறிவிப்புகளில் மட்டுமே பயன்பட்டன என்ற பொதுவான ஓர் அபிப்பிராயம்.

3. அறபிகள் அபார நினைவாற்றல் கொண்டிருந்தனர் என்ற அபிப்பிராயமும், அதனால் அவர்கள் எதையும் எழுதி வைத்திருக்க வேண்டிய தேவையிருக்கவில்லை என்ற கருத்தும்.

4. ஹதீஸ்களை எழுத்தில் பதிக்கக் கூடாது என்ற நபிகளாரின் ஹதீஸ்.

5. ஹதீஸ்களைப் பதிவு செய்தல் பற்றிய ஆரம்பகால அறிஞர் களின் கூற்றுகள் தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டமை.

இவற்றுள் நான்காம், ஐந்தாம் அம்சங்கள் சிறிது ஆராயப் பட வேண்டியன.

ஹதீஸ் எழுதுவது தடை செய்யப்பட்டது பற்றிய ஹதீஸ்

அல்கதீப்-அல்-பக்தாதீ தனது தக்யீத்-அல்-இல்ம் எனும் நூலில் ஹதீஸ் பதிவு செய்தல் பற்றித் தீர ஆராய்ந்து நபிகளார் அதனை அனுமதித்தார்களா இல்லையா என்பதை விளக்குகிறார்.

நூலின் முதலாம் பகுதி ஹதீஸ் எழுதுவது தடை என்ற பிரஸ் தாபத்தை மேற்கொள்கின்றது. இப்பகுதியின் முதல் அத்தியாயம், குர்ஆன் தவிர்ந்த மற்றெதனையும் எழுத்தில் பதிவுசெய்தல் கூடாது என, அபூ ஸஈத்-அல்-குத்ரி, அபூஹுரைரா, ஸைத்-பின் தாபித் ஆகியோர் அறிவிப்புச் செய்த நபிகளாரின் ஹதீஸைக் குறித்துக் காட்டுகின்றது.

இதே பகுதியில், அபூ-ஸஈத்-அல் குத்ரீயின் அறிவிப்பிலான ஒரு ஹதீஸ் குறிக்கப்பட்டுள்ளது. இது இரண்டு அறிவிப்புக்களில் இடம் பெற்றுள்ளது. ஒன்று, அப்துர் ரஹ்மான்-பின்-ஸைத் அறி விப்புச் செய்தது. இவர் மிகவும் பலவீனமானதோர் அறிவிப்பாளர்

என்பதில் ஹதீஸ் கலை நிபுணர்கள் அனைவரும் உடன்பாடு காண்கின்றனர். ஹதீஸ்களைத் திரிபு படுத்திக் கூறியவர் இவர் எனக் குற்றம் சாட்டுவர் அல்-ஹாகிம், அபூ நுஐம் ஆகியோர். இப்னு ஹிப்பானின் வார்த்தைகளில், "இவர் தான் அறியாத ஹதீஸ்களைத் திருப்பிக் கூறுவார். இடையில் தொடர்பு அறுந்த இஸ்னாத்களுக்குத் தானே இடைச்செருகலான இஸ்னாத்களைப் புகுத்துவார்; எனவே அவர் கைவிடப்பட வேண்டியவர்." ஆக, அப்துர் ரஹ்மான் மூலம் அபூ ஸஈத்-அல்-குத்ரீ அறிவிப்புச் செய்த ஹதீஸ் பலவீனமானது; ஏற்கப்பட முடியாதது.

இதே அப்துர்-ரஹ்மான்-பின்-ஸைத் அபூ ஹுரைராவிடமிருந்து பெறப்பட்ட ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையிலும் இடம் பெறுகின்றார். ஆகவே அந்த ஹதீஸும் ஏற்கப்பட முடியாததொன்று.

மூன்றாம் தோழர் ஸைத்-பின்-தாபித். அவரது ஹதீஸ் முர்ஸல் ஆனது. ஸைதிடமிருந்து இதனை அறிவிப்புச் செய்தார் அல்முத்தலிப் பின்-அப்துல்லாஹ். இவர் ஸைதிடம் கற்றவரல்ல. எனவே அறிவிப்புத் தொடரில் ஓர் இடைவெளி ஏற்படுகின்றது. இவ்விடைவெளியை யாரேனும் நிரப்பியிருக்கக்கூடும் எனக் கொள்வோம். என்றாலும் அவ்வாறு செய்பவரது நேர்மை பரிசீலனைக்குட்படாததொன்று. எனவே இந்த ஹதீஸும் ஏற்கப்பட முடியாதது. மேலும் ஸைத்தின் ஹதீஸ் இரு வேறு வாசகங்களைக் கொண்டிருக்கின்றது. இரண்டிலும் எழுத்தில் பதிக்கப்படுவதனை இரு வேறு காரணங்களினால் இவர் மறுத்துரைக்கின்றார். ஒன்று-அது நபிகளாரால் மறுத்துரைக்கப்பட்டுள்ளமை. மற்றையது-எழுத்தில் பதிக்கப்படுவன எழுதுபவரின் சுய அபிப்பிராயங்கள் என்பது. ஆக, நபிகளாரின் ஹதீஸ்களை எழுத்துருப்படுத்துவதனையே அவர் முற்று முழுதாக மறுத்துரைக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதாக இவ்வாசகம் அமையவில்லை.

இவ்விடயம் சம்பந்தமாக அபூ ஸஈத்-அல்-குத்ரீ அறிவிப்புச் செய்த ஹதீஸ்களில் ஒன்றுதான் பலம் வாய்ந்தது; நம்பிக்கை

யானது-ஸஹீஹான ஹதீஸ். அதன்படி, "என்னிடமிருந்து குர்ஆன் தவிர்ந்த வேறெதனையும் எவரும் எழுத வேண்டாம். குர்ஆன் தவிர்த்து என்னிடமிருந்து வேறு எதனையும் எழுதியவர்கள் அவற்றை அழித்து விடவும்." அபூ-ஸஈத்-அல்-குத்ரீ அறிவிப்புச் செய்த இந்த ஹதீஸ் அறிஞர்களினால் பல்வேறு விமர்சனங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. அல் புஹாரியும் ஏனைய சிலரும் இந்தக் கருத்து உண்மையில் அபூ ஸஈத்துடையதே; தவறுதலாக இது நபிகளாரின் வாசகமாக எடுத்தாளப்பட்டுள்ளது என்பர். எவ்வாறா யினும் இந்த வாசகமானது, குர்ஆன் எழுதப்பட்டுள்ள அதே பக்கத்தில் வேறு வாசகங்கள் ஏதும் எழுதுவதனைத் தடை செய்தமையையே குறிக்கின்றது. ஏனெனில், சிலபோது குர்ஆன் வாசகங்களுடன் அல்லது வரிகளின் இடையில் எழுதப்படக்கூடிய எதுவும் குர்ஆன் வாசகங்களாகவே கொள்ளப்பட்டு விடலாம் என்ற அச்சம் நிலவி வந்தது. இவ்வாசகம், குர்ஆன் அருளப்பட்டு வந்த வேளை, அதாவது குர்ஆன் பூரணத்துவப்படுத்தப்பட்டிராத நிலையில் கூறப்பட்டது என்பதனை நினைவில் இறுத்திக் கொள்ள வேண்டும். அது தவிர, ஹதீஸ் எழுதுவதனைத் தடை செய்யத்தக்க காரணம் ஏதும் இருக்கவில்லை.

நபிகளாரே நூற்றுக்கணக்கான கடிதங்களை அனுப்பியிருந்தார்கள். சில மிக நீண்டன; தொழுகையின் ஒழுங்கு முறைகளையெல்லாம் கூடத் தெளிவுபடுத்துவனவாயிருந்தன. குர்ஆன் விடுத்துள்ள ஆணை, நபிகளாரின் செயன்முறைகளும் நடவடிக்கைகளும் முழு சமூகத்தாராலும் பின்பற்றப்பட வேண்டும் என்பது. நிதி சம்பந்தப்பட்ட விவகாரங்கள் எழுத்தில் பதிக்கப்பட வேண்டுமெனக் குர்ஆனே கட்டளையிட்டுள்ளது. எனவே சில அறிஞர்கள் தத்தமது சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பினும் கூட, பொதுப்பட ஹதீஸ்களைப் பதிவு செய்வதனைத் தடை செய்யும் நியதிகள் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. மேலும் நபிகளாரின் தோழர்களிலேயே பலர் ஹதீஸ்களை எழுதி வைத்தமையை நாம் காண்கின்றோம். ஹதீஸ் பதிவு செய்வதனைத் தடை செய்யும் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தவர்களும் அவர்களுள் உளர். இவற்றை

யெல்லாம் மனதில் கொண்டு காணும்போது, உண்மையில் நபி களார் ஹதீஸ் எழுதுவதைத் தடை செய்தமை, குர்ஆன் வாசகங் களும் குர்ஆனல்லாத வாசகங்களும் ஒரே தாளில் எழுதப்படுவது தவறான பல கருத்துகளுக்கு வழிவகுக்கும் என்பதனாலாகும் என்ற முடிவுக்கு வரலாம்.

மற்றுமொரு கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது- 'ஆரம்ப காலத்தில் ஹதீஸ் எழுதுதல் தடை செய்யப்பட்டதற்குக் காரணம் அனைவரது கவனமும் குர்ஆன் மீது மட்டுமே செலுத்தப்பட்டு அது பாதுகாக்கப்பட வேண்டுமென்பதாகும். பின்னர் குர்ஆன் கவனிப் பாரற்று விடப்பட மாட்டாது என்ற நிலை தெளிவானதன் பின்னர் முன்னைய ஆணை மாற்றப்பட்டு, மக்கள் ஹதீஸ்களை எழுதிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்' என்பதாகும் அது.

ஆரம்ப கால அறிஞர்களது கூற்றுகள் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டமை

தாம் ஹதீஸ்களை எழுதி வந்தாலும்கூட, ஹதீஸ் எழுத்தில் பதிக்கப்படுவதனை விரும்பாத அறிஞர்கள் பலர் இருந்தனர். அவர் கள் அதற்குக் கூறிய காரணங்கள் நபிகளாரின் போதனைகளோடு சம்பந்தப்பட்டனவல்ல. பல சந்தர்ப்பங்களில் காரணங்கள் கூறப்பட வில்லை. காரணங்கள் முழுமையாகக் கொடுக்கப்பட்ட வேளை களில் அவை தகுந்த முறையில் ஆராயப்படாது ஹதீஸ்களை எழுத் தில் வடிப்பதற்கு எதிரானவையாகக் கருத்துக் கொள்ளப்பட்டன.

சில உதாரணங்கள் வருமாறு:

(i) இப்றாஹீம் -அல்-நகாஈ ஹதீஸ்களை எழுத்தில் வடிப்ப தற்கு எதிரானவர் என்று கூறப்பட்டது. அதற்கு அவர் கற்பித்த காரணம்- "எழுதுபவர்கள் அனைவரும் தாம் எழுதியவற்றிலேயே தங்கிவிடுகின்றார்கள்." சில ஆரம்ப கால அறிஞர்களது கருத்தில் புத்தகங்கள் அறிவைப் பாதுகாப்பதற்குரிய சிறந்த களஞ்சியங்களா

கக் கருதப்படவில்லை. அறிவைப் பாதுகாக்கும் சிறந்த களஞ்சியமா வது நினைவாகும். மனதில் பதிந்த எதனையும் எவ்விடத்தும் எச்சந் தர்ப்பத்தும் பயன்படுத்தலாம். நாடோடி அறபி ஒருவர் கூறுவார்: “உங்கள் நினைவில் உள்ள ஒரு சொல், உங்களது நூலிலுள்ள பத்துச் சொற்களை விடச் சிறந்தது.”

(ii) எழுத்தில் வடிப்பதற்கு எதிரானவர்களுள் அமீர்-அல்-ஷஅபியும் குறிக்கப்படுகின்றார். அவரது கூற்றினைச் சற்றே கூர்ந்து கவனித்தால் அவர் ஹதீஸ்களை எழுத்தில் வடிப்பதற்கு எதிரான வரல்லர் என்பது புலனாகும். இவ்விடயம் குறித்து அவரது இரண்டு கூற்றுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் அவர் கூறுகின்றார்: “நான் வெள்ளை நிறத் தாளில் கறுப்பு நிற மை கொண்டு எழுதியது மில்லை; எவரையும் ஒரு ஹதீஸை எனக்கு இரண்டாம் முறை கூறச் சொன்னதுமில்லை.” தனது நினைவாற்றலின் மகிமையை எடுத்துக் காட்டுவதே இக்கூற்றின் அடிப்படை நோக்கு. எவரும் எந்த ஒரு ஹதீஸையும் அமீர்-அல்-ஷஅபிக்கு இரண்டாம் முறை கூற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. நினைவிலி றுத்திக் கொள்ள ஒரு முறை கேட்டாலே போதும். ஹதீஸ் எழுதுவதற்கும் இக்கூற்றுக் கும் எவ்வித சம்பந்தமுமில்லை. மற்றுமொரு கூற்றில், அவர் தனது மாணவர்களுக்குத் தான் கூறும் அனைத்தையும் எழுத்தில் பதித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றார். அவர்களிடம் காகிதம் இல்லாவிடின் சுவர்களிலாவது எழுதிக் கொள்ளும்படி கூறுகின் றார் அமீர்.

நிச்சயமாக, ஹதீஸ்களை எழுதி வைப்பதனை விரும்பாத சில அறிஞர்கள் காணப்படவே செய்தனர். என்றாலும்கூட, இவ்வா றான நோக்குக்குச் சமய ரீதியிலான காரணங்கள் ஏதும் இருக்க வில்லை.

முதலாம் நூற்றாண்டின் இறுதியிலும், இரண்டாம் நூற் றாண்டின் ஆரம்ப கட்டத்திலும் இருந்த மிகப் புகழ் பெற்ற அறிஞர் ஸுஹ்ரீ. இவர் தனது ஆசிரியர்களிடமிருந்து கற்ற அனைத்தை யுமே எழுத்தில் பதித்து வைத்திருந்தார். என்றாலும்கூட, அவர்

தானே கற்பிக்கத் தொடங்கியதும், ஹதீஸ்களைச் சொல்வதெழுதும் முறையில் பயிற்றுவிக்க மறுத்து விட்டார். அவரது மறுப்பு கலீபா ஹிஷாம், அவரை வற்புறுத்தி இணங்கச் செய்யும் வரையில் தொடர்ந்தது. இதற்குக் காரணம் என்ன? இதனை விளங்கிக் கொள்ள ஸுஹ்ரீயின் சொந்தக் கூற்றொன்றையும், ஸுஹ்ரீயின் மாணவர்களுள் ஒருவரான மாலிக்-பின்-அனஸின் ஒரு கூற்றையும் நோக்குவது சாலச் சிறந்தது.

மாலிக்கின் மாணவர் ஒருவர், அல்முவத்தாவை நாற்பதே நாட்களில் மாலிக்குக்கு வாசித்து முடித்தார். அவ்வேளை மாலிக் "நான் நாற்பது வருடங்களாகத் தேடிப் பெற்ற அறிவை நீர் நாற்பது நாட்களிலேயே பெற்றுக் கொள்கின்றீர். இதில் எவ்வளவுதான் நீர் விளங்கிக் கொள்வீர்!" எனக் கூறினார். 'நீர் இதற்கு எந்தளவுதான் மதிப்பளிப்பீரோ' எனக் கூற அவர் விழைந்திருக்கலாம். ஒரு முறை அல்-ஷஅபி ஒரு ஹதீஸை அறிவிப்புச் செய்தார். பின்னர் தன் மாண வரிடம் "நீர் எவ்வித சிரமமுமின்றி மிகவும் இலகுவாக இதனைப் பெற்றுக் கொள்கின்றீர். இல்லையேல் இதைவிடக் குறைந்த ஒன்றுக்காக ஒருவர் ஈராக்கிலிருந்து மதீனாவுக்குப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது" எனக் கூறினார்.

உண்மையில் அக்காலவளவில் ஆசிரியர்களைப் பேச வைப்பதற்கும் மிக்க சிரமத்துக்குள்ளாக வேண்டியிருந்தது. மாணவர்கள் ஆசிரியர்களுடன் இருந்து அவர்கள் பேசிய போது அவற்றை எழுதிக் கொண்டார்கள் அல்லது மனனம் செய்து கொண்டார்கள். இமாம் ஸுஹ்ரீ கூறுவார்: "மக்கள் இப்னு உமருடன் அமர்ந்திருப் பார்கள். எனினும் வெளியிலிருந்து எவரும் வந்து கேள்விகள் கேட்கும் வரை அவையிலுள்ள எவரும் கேள்வி களேதும் கேட்க மாட்டார்கள். வினாக்களேதும் விடுக்காமல் நாம் இப்னுல்-முஸையபுடன் அமர்ந்திருப்போம். யாரேனும் வந்து கேள்விகள் கேட்டால், அதன் மூலம் அவர் எங்களுக்கு ஹதீஸ் கற்பிப்பார்; அல்லது தானாகவே அவர் போதனை செய்வார்" எனவே, தனது சொந்தத் தேவைகளுக்காக இமாம் ஸுஹ்ரீ ஹதீஸ்

களை எழுதி வைத்திருந்தாலும் கூட, அவற்றைப் பகிரங்கப்படுத்த அவர் விரும்பவில்லை. கற்க விரும்புவோர் சிரமப்பட்டுக் கற்க வேண்டும்; புத்தக வடிவில் அல்லது சொல்வதெழுதும் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட அறிவு கொடுக்கப்படக் கூடாது.

ஹதீஸ்களை எழுத்தில் பதிப்பது பற்றிய கருத்துக்களை நாம் இறுதியாக நோக்கும் போது, நபிகளாரின் அறிவுரையின் பேரில் இது தடுக்கப்பட்டது என்பதற்குரிய ஆதாரங்கள் எவற்றையும் காண முடியவில்லை. இது பற்றிய கருத்துக்கள் அனைத்தும் தனிப் பட்ட காரணங்களினால் எழுந்தவையே. எவ்வாறாயினும் அதே ஆசிரியர்களே ஹதீஸ்களை எழுத்தில் வடித்தமையையும் காண லாம். அண்மைய ஆராய்ச்சிகள், நபிக ளாரின் தோழர்களது காலத் திலேயே அன்னாரின் ஹதீஸ்கள் அனைத்தும் எழுத்துருப் பெற்று விட்டன எனக் காட்டுகின்றன. இது முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை நீடித்தது.

ஹதீஸ்களைப் பாதுகாக்கும் நோக்குடன் எழுத்தில் பதித்து வைக்கும் எண்ணம் இருந்திருப்பின் நிச்சயமாக நபிகளாரின் ஹதீஸ் கள் அவ்வாறே பாதுகாக்கப்பட்டிருக்கும். என்றாலும், முன்னைய அத்தியாயத்தில் நாம் கண்டது போன்ற மிகவும் சிறப்பான கல்வி முறைகளின் காரணமாக இத்தொகுப்புகளை எவரும் நேரடியாக அணுக முனைவது முறையற்ற ஒரு செயலாகவே கருதப்பட்டது. ஏற்கப்பட்ட ஆசிரியர்களினால் சான்று வழங்கப்பட்ட அறிஞர்கள் அல்லது நிபுணர்கள் மூலமே அவற்றை அணுக முடிந்தது. இந்த அறிஞர்கள் அல்லது நிபுணர்கள், தாமே சொல்ல வந்த விஷயத்தின் ஓர் அங்கமாக அமைந்து, அதினின்றும் பிரித்துக் காண முடியாத வர்களாக ஆயினர். வேறு வகையில் கூறுவதானால் செய்தியின் மூலாதாரங்களும், செய்தியின் ஒரு முக்கிய அங்கமாக அமைய லாயின. அவையின்றி செய்திக்கு எவ்வித மதிப்பும் இல்லையென்றா யிற்று.

ஹதீஸ் கல்வியில் இச்செய்தியின் மூலாதாரமானது அறிவிப் பாளர்களின் தொகுப்பாகும். அதுவே இஸ்னாத் என வழங்கியது. அடுத்த அத்தியாயத்தில் நாம் 'இஸ்னாத்' பற்றிய தெளிவினைப் பெறமுயல்வோம்.

அத்தியாயம் – 5

இஸ்னாத் முறை-
அறிவிப்பாளர்களின் தொடர்

ஒவ்வொரு ஹதீஸும் இரண்டு அங்கங்களைக் கொண்டிருப்பன. புஹாரியிலிருந்து ஒரு ஹதீஸை மேற்கோளாகக் கொள்வோம்.

புஹாரி கூறினார்-: ஸுலைமான் அபூ--அர்-ராபீ அறிவித்தார்: இஸ்மாயீல்-பின்-ஜாபர் கூறினார்: தனது தந்தையார் மூலமாக நாபி-பின்-மாலிக் கூறினார்: அபூ ஹுரைரா கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நயவஞ்சகனுக்குரிய அடையாளங்கள் மூன்று: பேசினால் பொய்யுரைப்பான்; வாக்குறுதியளித்தால் மாறுசெய்வான், நம்பிக்கைப் பொறுப்புகளுக்கு மோசடி செய்வான்."

இந்த ஹதீஸ், அறிவிப்பாளர்களது பெயர்கள் பலவற்றைத் தொடராகவும், பின்னர் ஹதீஸ் பொருளையும் அறிவிக்கின்றது.

முதல் பகுதி 'இஸ்னாத்' எனவும், ஹதீஸ் பொருள் அல்லது நபிகளாரின் வாக்கு 'மத்ன்' எனவும் வழங்குகின்றன. இஸ்னாத் என்பது ஒன்றில் ஒன்று தங்கியிருத்தல் எனப் பொருள்படும். நபிகளாரின் வாக்குகள் பற்றிய அறிவினைப் பெற நாம் அறிவிப்பாளர்களில் தங்கியிருத்தலின் காரணமாக அறிவிப்பாளர்களின் தொடர் இஸ்னாத் என வழங்கப்படுகின்றது. அதன் பன்மை அஸானீத். சிலபோது 'இஸ்னாத்' என்பதற்குப் பதிலாக 'தரீக்'

எனும் பதம் பயன்படுத்தப்பட்டது. சிலபோது 'வஜ்ஹ்' எனும் பதமும் இதே தேவைக்காகப் பயன்படலாயிற்று.

இஸ்னாத்களின் ஆரம்பம்

இஸ்லாத்துக்கு முன்னைய கால இலக்கியங்களில் எவ்வித முக்கியத்துவமும் பெறாமலேயே சர்வ சாதாரணமாக இஸ்னாத் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்துக்கு முன்னைய காலக் கவிதைகள் சில, பின்னைய தலைமுறையினர்க்கு வழங்கப்படவும் இஸ்னாத் முறை பயன்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஹதீஸ் இலக்கியத்திலேயே இஸ்னாத் முறையின் முக்கியத்துவம் உச்ச நிலையடைந்து, மார்க்கக் கிரந்தங்களின் ஓர் அங்கமாக அமையுமளவு உயர்ந்தது. ஸுன்னாக்களின் சேகரிப்புக் களஞ்சியமாக அமைந்த ஹதீஸ் இலக்கியத்தின் தொகுப்புகளில் இஸ்னாத் பூரணமாகவும், சிலபோது அளவுக்கு மிஞ்சிய வகையிலும்கூட பயன்படுத்தப்பட்டுள்ளது. நபிகளாரின் ஸுன்னா, இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் ஒன்றாக அமைந்தமை காரணமாக இந்த ஹதீஸ் தொகுப்புகள் அனைத்தும் மிகவும் கவனமாகக் கையாளப்படுவது இயல்பு. ஆக, இஸ்னாத் முறையின் அறிமுகத்தோடு, இஸ்னாத்களையும், ஹதீஸ்களையும் பரிசீலனைக்குள்ளாக்கும் ஒரு முறை ஆரம்பமானது. இந்த ஆய்வு முறை, 'இல்ம்-அல்- ஜர்ஹ்-வ-அல்- தஃதீல்' என வழங்கியது.

நபிகளாரின் காலத்தில்கூட ஹதீஸ்களை ஒருவருக்கொருவர் அறிவிப்புச் செய்யும் வழக்கம் தோழர்கள் மத்தியில் இருந்து வந்தமையை நான் ஏற்கெனவே விளக்கியுள்ளேன். சில நபித்தோழர்கள் நபிகளார் கூறியவற்றையும் செய்தவற்றையும் ஒருவருக்கொருவர் அறிவிப்புச் செய்து கொள்ளவென, நபிகளாரின் சமூகத்தில் மாறி மாறி இருந்து கொள்வது போன்ற, விசேஷ ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தியிருந்தமை பற்றியும் ஏற்கனவே நோக்கினோம்.

இயல்பாகவே ஒருவருக்கொருவர் அறிவிப்புச் செய்யும் போது, 'நபிகளார் இன்னின்னவற்றைச் செய்தார்கள்', 'நபிகளார்

இன்னின்ன சொன்னார்கள்' முதலிய வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி இருப்பர். இரண்டாமவராக இருந்து அறிவினைப் பெற்றுக்கொண்டவர், மூன்றாமவர் ஒருவருக்கு அறிவிப்புச் செய்யும்போது, தான் அதனைப் பெற்றுக்கொண்ட முறையையும் அந்நிகழ்வு சம்பந்தமான முழு விவரங்களையும் அளித்திருப்பார். ஹதீஸ் தொகுப்புகளில் இது சம்பந்தமாக ஏராளமான உதாரணங்களைக் கண்டு கொள்ளலாம். ஒன்றை மட்டும் காண்போம்: "திமாம்-இப்னு-தஅலபா நபிகளாரிடம் வந்து கூறினார்: முஹம்மதே! உமது தூதுவர் எம்மிடம் வந்து எமக்குக் கூறினார்...."

நபிகளாரின் ஸுன்னாவைப் பரப்புவதற்கு ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட இம்முறைகள் 'இஸ்னாத்'தின் அறிமுகத்துக்கு அத்திவாரமாக அமையலாயின. இதுவே இம்முறையின் ஆரம்ப கட்டமாகும். இதனை விளங்கிக் கொள்ள இப்னு-ஸீரினின் ஒரு கூற்று துணையாக அமைகின்றது. அவர்கள் இஸ்னாத் குறித்து எதுவும் கேட்கவில்லை; எனினும் தத்தமக்குள் போராட்டங்கள்-பித்னா-தொடங்கிய வேளையில் அவர்கள் கூறினார்கள்: 'இவற்றை அறிவிப்புச் செய்தவர்கள் யார் என எமக்குக் கூறுங்கள்.' அஹ்லுஸ்-ஸுன்னாவைச் சார்ந்தவர்களது ஹதீஸ் கள் ஏற்கப்பட்டன. புதியன புகுத்தியோர் கூறிய ஹதீஸ்கள் நிராகரிக்கப்பட்டன.

இதிலிருந்து, பித்னாக்கள் ஆரம்பமாவதற்கு முன்னமேயே இஸ்னாத் வழக்கிலிருந்து வந்தமையை உணரலாம். என்றாலும் அது கால வரை அதனைப் பயன்படுத்துவதில் அவர்கள் தீவிர ஆர்வம் காட்டவில்லை. சிலவேளை சிலர் அதனைப் பயன்படுத்தினார்கள்; ஏனையோர் அதில் கவனயீனமாக இருந்தார்கள். தத்தமக்குள் யுத்தங்கள் மூளத் தொடங்கிய பின்னர் மக்கள் ஹதீஸ்களைக் கேட்டபோது அவற்றை அறிவிப்போர் எவ்வாறு அவற்றைப் பெற்றனர் என்பதனை வினவவும் அதனை ஆராய்ந்து பார்க்கவும் தொடங்கினர். முதலாம் நூற்றாண்டு இறுதியாகும் நிலையில் இஸ்னாத் ஆய்வு முறை நன்கு வளர்ந்து விட்டது. கதாதா விரிவுரை நிகழ்த்தும் போது, அவரது நேரடி அறிவிப்புகளையும் இரண்டாம் தொடர்

அறிவிப்புகளையும் பிரித்தறிந்து கொள்ளவென ஷுஅபா, கதாதா வின் உதடுகளை அவதானித்தவராயிருப்பார். ஹிஜ்ரி முதல் நூற்றாண்டின் போது இஸ்னாத்களைக் கேட்பதிலும் ஆராய்வதிலு மான ஏராளமான உதாரணங்களைக் காண முடிந்தது.

இஸ்னாத்களின் பெருக்கம்

இஸ்னாத்களின் பொதுவான ஒரு பண்பு காலஞ் செல்லச் செல்ல அறிவிப்பாளர்களின் தொகையும் பெருகிச் செல்வதாகும். சிலவேளை நபிகளாரின் தோழர் ஒருவரால் பெற்றுக் கொள்ளப் பட்ட ஒரு ஹதீஸ், அடுத்த தலைமுறையினரில் பத்து மாணவர் களைச் சென்றடையும். அடுத்து வரும் அவர்களது மாணவர்களுள் பல்வேறு நாடுகளையும், பிரதேசங்களையும் சேர்ந்த இருபது அல்லது முப்பது பேரளவினர் இதனைப் பெறக்கூடும்.

இஸ்னாத்கள் பெருகி வந்த முறையைக் காட்டச் சில உதார ணங்களைப் பார்ப்போம்:

உதாரணம் (1):

“அபூ ஹுரைரா அறிவித்தார்: அல்லாஹ்வின் தூதர் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவரும் நித்திரையிலிருந்து எழுந்ததும் மூன்று முறை கழுவினா லன்றி தம் கரங்களைப் பாத்திரம் எதனிலும் உட்படுத்தாமலிருக்கட் டும். ஏனெனில் நித்திரையிலிருக்கும் போது தம் கரம் எங்கிருந்த தென அவர் அறியார்.”

அபூ ஹுரைராவின் மாணவர்களுள் குறைந்தது 13 பேர் இந்த ஹதீஸை அவரிடமிருந்து அறிவிப்புச் செய்தனர். இந்தப் 13 பேரில்,

8பேர் மதீனா வாசிகள்.

ஒருவர் கூபாவாசி.

இருவர் பஸ்ரா வாசிகள்.

ஒருவர் யெமன் தேசத்தவர்.

ஒருவர் ஸிரியாவைச் சேர்ந்தவர்.

அபூ ஹுரைராவின் மாணவர்களிடமிருந்து பெற்று இந்த ஹதீஸை அறிவிப்புச் செய்த அறிஞர்கள் 16 பேர். இவர்களுள்,

6 பேர் மதீனா வாசிகள்

4 பேர் பஸ்ரா வாசிகள்

2 பேர் கூபா (இராக்) வாசிகள்

ஒருவர் மக்காவாசி

ஒருவர் யெமனீ

ஒருவர் குராஸானீ

ஒருவர்-ஹிம்ஸ் (ஸிரியா) வாசி

இந்த ஹதீஸைப் பதிவு செய்த அறிஞர்கள் வரையிலான இஸ்னாத்தை அடுத்த பக்கத்தில் இணைத்துள்ளேன். (இஸ்னாத்-I)

மற்றுமோர் உதாரணத்தைப் பார்ப்போம்:

حدثنا عبد العزيز بن المختار قال حدثنا سهيل
بن أبي صالح عن أبيه عن أبي هريرة أن النبي
صلى الله عليه وسلم قال : انما الامام ليؤتم
به اذا كبر فكبروا ، واذا ركع فاركعوا واذا قال
سمع الله لمن حمده فقولوا اللهم ربنا
لك الحمد ، واذا سجد فاسجدوا ولا تسجدوا حتى يسجد
واذا رفع فارفعوا ولا ترفعوا حتى يرفع ، واذا صلى
قاعدا فصلوا قعودا أجمعون.

*அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அபூஹு*ரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "இமாமைப் பின்தொடார்ந்து நடக்க வேண்டும். அவர் தக்பீர் கூறும்போது நீங்களும் கூறுங்கள். அவர் ருகூஉ செய்யும் போது நீங்களும் ருகூஉ செய்யுங்கள். அவர் 'ஸமி அல்லாஹு* லிமன் ஹமிதா' (அல்லாஹ் தன்னைப் -புகழ் பவரைச் செவிமடுக்கின்றான்) எனக் கூறும்போது, 'அல்லாஹு*ம்ம ரப்பனா லகல் ஹம்து' (ஓ அல்லாஹ்! எமது எஜமானே! உனக்கே -புகழனைத்தும்) எனக் கூறுங்கள். அவர் சுஜூ*து செய்யும்போது நீங்களும் சுஜூ*து செய்யுங்கள். அவர் சுஜூ*து செய்யாத வரையில் நீங்களும் சுஜூ*து செய்ய வேண்டாம். அவர் தன் சிரசை உயர்த் தும் போது -நீங்களும் -சிரசை உயர்த்துங்கள். அவர் தனது தலையை உயர்த்தும் வரை நீங்கள் உயர்த்த வேண்டாம். அவர் அமர்ந்திருந்து தொழுவாராயின் -நீங்களனைவரும் அமர்ந்திருந்து தொழுங்கள்."

இந்த ஹதீஸ் மூன்றாம் தலைமுறையினருள் 26 பேரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் நபிகளாரின் தோழர்களிடமிருந்தே அறிவிப்பினைப் பெற்றுள்ளார்கள். இதே வாசகத்தை அல்லது இதே கருத்தினைக் கொண்ட வாசகங்களைப் பத்து வெவ்வேறு இடங்களிலிருந்து பெற முடிகின்றது. (மதீனா, மக்கா, எகிப்து, பஸ்ரா, ஹிம்ஸ், யெமன், கூபா, ஸிரியா, வாஸித், தாயிப்). இந்த இருபத்தாறு பேரில் மூவர் ஒன்றுக்கு மேற்பட்டவர் களிடமிருந்து இந்த அறிவிப்பினைப் பெற்றிருந்தனர்.

கிடைத்துள்ள ஆதாரங்களின்படி இந்த ஹதீஸ் குறைந்தது நபித்தோழர்கள் பத்துப்பேரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் களுள் ஏழு பேர் மூலமான அறிவிப்பாளர் வரிசையைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்களில் மூவர் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து -மதீனா, ஸிரியா, ஈராக் ஆகிய இடங்களிலிருந்து வந்தனர்.

நபித்தோழர்களுள் ஒருவரான அபூ ஹு*ரைரா மூலமான அறிவிப்பாளர் வரிசையை மட்டும் பார்ப்போம். தலைமுறை தலை முறையாக அறிவிப்பாளர் வரிசை வளர்ந்து சென்ற விதம், எவ்வாறு



அல்லாஹ்வின் தூதர்

பல்வேறுபட்ட பிரதேசங்களில் இந்த ஹதீஸ் வழங்கி வந்தது போன்ற விவரங்களை அறிந்து கொள்ள இது துணை செய்கின்றது. அபூ ஹுரைராவிடமிருந்து குறைந்தது 7 மாணவர்கள் இந்த ஹதீஸைப் பெற்றிருந்தனர். அவர்களில் நால்வர் மதீனாவையும், இருவர் எகிப்தையும், ஒருவர் யெமனையும் சார்ந்தோர். இவர்களிடமிருந்து குறைந்தது பன்னிரண்டு பேர் இந்த ஹதீஸைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுள் மதீனா வாசிகள் ஐவர். இருவர் மக்கா வாசிகள். ஸிரியா, கூபா, தாயிப், எகிப்து, யெமன் ஆகிய பிரதேசங்களிலிருந்து ஒவ்வொருவர். இதற்கான இஸ்னாத் அடுத்த பக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. (இஸ்னாத் II)

இதோ மேலும் ஓர் உதாரணம்:

அல்லாஹ் கூறியதை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மொழிந்ததாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சர்வ வல்லமை படைத்த அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: ஆதமுடைய மக்கள் ஒவ்வொருவரதும் செயல்களுக்கான கூலிகள் அவரவருக்காகவே இருக்கும். எந்த ஒரு நன்மையான காரியத்துக்கும் பத்து மடங்கு நன்மை அளிக்கப்படும். ஆனால் நோன்பு எனக்காக மட்டும்-நோற்கப்படுவதனால் அதற்கான கூலியை நானே கொடுப்பேன். எனக்காகவே ஒருவர் தனது உணவைத் தவிர்க்கின்றார். எனக்காகவே ஒருவர் பானங்களைத் தவிர்க்கின்றார். எனக்காகவே ஒருவர் தனது சுகங்களைத் தவிர்க்கின்றார். உங்களில் எவரும் நோன்பு வைத்திருக்கும் நிலையில் தமது சுய இச்சைகளுக்காளாவதோ, தகாத வார்த்தைகள் பேசுவதோ கூடாது. எவரும் நோன்பாளியை மனம் நோகப் பேசக் கூடுமாயின், நான் நோன்பு வைத்துள்ளேன் என அவர் கூற வேண்டும். நோன்பு வைப்போர்க்கு மகிழ்வூட்டும் தருணங்கள் இரண்டு: நோன்பை விடும்போது ஒன்று; மற்றது தனது எஜமானனைச் சந்திக்கும் நாளின்போது. நோன்பாளியின் வாயினின்றெழும் மணமானது அல்லாஹ்வுக்கு கஸ்தூரி மணத்தைவிட மேலானதாயிருக்கும்."

இஸ்னாத் II

இந்த நீளமான ஹதீஸ் பல்வேறு அறிஞர்களால் பகுதி பகுதியாக அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. அஹ்மத் இப்னு-ஹன்பல் குறைந்தது 24 முறை இதனைக் குறித்துள்ளார். இதனை அஃமாஷ் (மறைவு-148) இப்னு ஜுரைஜ் (ம-150) இப்றாஹீம்-பின்-தஹ்மான் (ம-168) ஆகியோரின் தொகுப்புகளிலும் காண முடிகின்றது. இவர்கள் அபூ ஹுரைராவின் மாணவர்களிடமிருந்து அறிவிப்பினைப் பெற்றோர். இதனை ஷியா, ஸைதீ, இபாழி தொகுப்புகளிலும் காணலாம்.

நாம் எமது உரையாடலை அபூ ஹுரைராவிடமிருந்து மூன்றாம் தலைமுறை அறிவிப்பாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்வோமாயின், அதாவது, ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் முற்பாதி வரையும் காண்போமாயின் பின்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன: இதில் மூன்றாம் தலைமுறை அறிவிப்பாளர்கள் 22 பேர் உள்ளனர். மதீனா வாசிகள் நால்வர்; பஸ்ராவிலிருந்து ஐவர்; கூபா வாசிகள் நால்வர்; மக்கா, வாஸித், ஹிஜாஸ், குராஸான் ஆகிய இடங்களிலிருந்து ஒவ்வொருவர். இவர்கள் தமக்கு அறிவிப்புச் செய்தவர்களாக அபூ ஹுரைராவின் மாணவர்கள் பதினொரு பேரைச் சுட்டுகின்றனர். அம்மாணவர்களது பிரதேசங்கள் மதீனா, பஸ்ரா, கூபா ஆகியன.

மேலும் ஆழமாகச் செல்லாது, இந்த ஹதீஸுக்கு நான் ஓர் இஸ்னாத்தை அமைக்கின்றேன். இதன் மூலம் இஸ்லாமிய உலகம் முழுவதும் எத்துணை இலகுவாக ஹதீஸ் பற்றிய அறிவு பரவ வழியேற்பட்டது என்பதனையும், எவ்வாறெல்லாம் ஒவ்வொரு தலைமுறையினரிலும் அறிவிப்பாளர்களின் தொகை பெருகிச் சென்றது என்பதனையும் காண முடியும். பார்க்க இஸ்னாத் (III)

அட்டவணை பரந்து செல்லச்செல்ல, அறிவிப்பாளர்கள் தொகை பெருகி, பிரதேசங்களும் வித்தியாசப்பட்டுச் செல்வதனை அவதானிக்கலாம். இவ்வாறமைந்த இஸ்னாத்களின் பெருக்கமும், ஹதீஸ்களின் பரம்பலும், அறிஞர்கள் தவறிழைத்திருப்பின் அவற்றைக் கண்டு கொள்ளவும், இடைச்செருகல்கள் இருந்தால் அவற்றை

அடையாளம் கண்டு பிடிக்கவும் துணையாக அமைந்தன. இது ஆரம்ப காலத்திருந்தே இஸ்னாத் முறை வழங்கி வந்தமையையும் இவ்வளவு பரந்த அளவில் போலி இஸ்னாத்களை உருவாக்குவதன் சாத்தியமற்ற தன்மையையும் காட்டித் தரும்.

அடுத்த ஒரு சுவையான அம்சம், எல்லா மதீனா, பஸ்ரா, கூபாவாசிகளும் ஒருவரிடமிருந்து கற்றவர்களல்லர். பஸ்ராவாசி களில் மூவர், தமக்கு அறிவிப்புச் செய்தவராக ஒரு பஸ்ராவாசியைக் குறிப்பர். ஏனைய இருவரும் தமக்கு அறிவிப்புச் செய்தவர்களாக இரு வேறு மதீனா வாசிகளைக் குறிப்பர்.

இஸ்னாத்களிலிருந்து தெரியக் கூடிய மற்றுமோர் அம்சம், பெரும்பாலான ஹதீஸ்களின் இஸ்னாத்கள் எந்தளவு கவனமாகப் பேணப்பட்டுள்ளன, அறிஞர்களது கூற்றுக்களை ஆய்ந்து காண இவை எத்துணை பயன்படும், தவறுகளைத் தவிர்த்துக்கொள்ள அவை எவ்வளவு தூரம் பயன்பட்டன, எந்தளவு பயன்படுத்தலாம் என்பவற்றைக் காட்டுவதாகும்.

எல்லா ஹதீஸ்களுமே இத்துணை பரந்த அளவில் அறி விப்புச் செய்யப்பட்டதும் இல்லை. எமக்குக் கிட்டியுள்ள ஆதாரங் களின்படி சில ஹதீஸ்கள் மூன்று அல்லது நான்கு தலைமுறைகள் அளவில் தனியொருவரிடமிருந்து தனியொருவருக்காக அறிவிப்புச் செய்யப்பட்டு வந்துள்ளமையையும் காணலாம்.

இதோ ஓர் உதாரணம்:

وقال أبو هريرة ، قال النبي صلى الله عليه وسلم

" اذا صليت الجمعة فصل بعدها أربعا "

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நீங்கள் ஜும்ஆ தொழும் வேளைகளில், தொழுகையின் பின்னர் நான்கு ரக்அத்துகள்


அல்லாஹ்வின் தூதர்

தொழவும்." இதற்கான அறிவிப்பாளர் வரிசையைக் காண பார்க்க இஸ்னாத் IV.

இஸ்னாத்களின் பரம்பல் பற்றிய தெளிவான ஒரு விளக்கம் இப்போது உளது. இந்த அட்டவணைகள் இஸ்னாத் முறையின் மீது பூரண நம்பிக்கையை ஏற்படுத்தவும், நபிகளாரின் காலத்திருந்தே அது வழங்கி வந்தமையை உறுதிப்படுத்தவும் ஆதரவு தருவனவாக அமைந்துள்ளன. நவீன காலத்திய வெகுசனத் தொடர்புச் சாதன வசதிகளேதுமற்ற அன்றைய கால கட்டத்தில் பரந்தளவில் பொய்களைப் புனைந்துரைப்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது.

இஸ்னாத் IV



முன்னைய அத்தியாயத்தில், ஆரம்பகால அறிஞர்கள் வலுவான, வலுவற்ற ஹதீஸ்களைப் பிரித்த்றியக் கையாண்ட வழி வகைகளையும், அறிவிப்பாளர் வரிசைகளைப் பரீட்சித்துப் பார்க்க அவர்கள் கையாண்ட நுணுக்கமான முறைகளையும், பூரண நம்பிக்கையற்ற மூலங்களிலிருந்து பெறப்பட்ட ஹதீஸ்களைத் தவிர்க்க அவர்கள் மேற்கொண்ட நடைமுறைகளையும் நான் விவரித்துள்ளேன். பல நூற்றாண்டுகளாக நடந்து வந்த இம்முறைகளின் பயனாக, இஸ்னாத் முறைமையையும், ஹதீஸ் துறை சார்ந்த அறிஞர்களது முறைமைகளையும் சரியானவை எனவும் வலுவானவை எனவும் ஏற்கலாம்.

ஹதீஸ்களை வகைப்படுத்துவதில் இஸ்னாத் முறைமையின் தாக்கம்

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு முற்பாதியின் ஏராளமான ஹதீஸ்களது ஒரு பொதுப் பண்பாயமைந்தது, பல்வேறு மாகாணங் களையும் நாடுகளையும் சேர்ந்த அறிவிப்பாளர்களின் தொகை பெருகிச் சென்றமையாகும் என்பதனை இந்த அட்டவணைகளி லிருந்து காண முடிகின்றது. எவ்வாறாயினும் இஸ்னாத்களின் பெருக்கத்தில் எல்லா ஹதீஸ்களும் ஒரே வகையான பண்பினைக் கொண்டிருக்கவில்லை. சில ஹதீஸ்கள் பல தோழர்களாலும், பின்னர் வந்த பலராலும் அறிவிக்கப்பட்டுள்ளன. பார்க்க அட்ட வணைகள் I, II, III, V. ஏனைய சில ஹதீஸ்களைத் தனியொரு தோழர், தனியொருவருக்கு அறிவிக்க அதனைத் தனியொரு மாணவர் பெற்றுக் கொண்டுள்ளமையையும் காணலாம். பார்க்க இஸ்னாத் IV, VI.

ஆகவே, ஹதீஸ்கள், அறிவிப்பாளர்களின் தொகையைப் பொறுத்து வகைப்படுத்தப்படலாயின. இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் நாம் கீழ்வரும் சொற்பிரயோகங்களைக் கவனத் தில் கொள்ள வேண்டும்.

அ) முதவாதிர். ஆ) ஆஹாத்

அ) முதவாதிர்: அனைவரும் இணைந்து ஒரு பொய்யைச் சிருஷ்டித்துக் கூறுவது சாத்தியமற்றது என்றளவுக்கமைந்த எண்ணிக்கை கொண்ட ஒரு தொகையினர் அறிவிப்புச் செய்த ஓர் அறிவிப்பாகும். இந்த நியதியானது, அறிவிக்கப்படும் ஹதீஸின் ஆரம்பத்திலிருந்து இறுதி அறிவிப்பாளரின் அறிவிப்பு வரை தொடர்ந்திருக்க வேண்டும்.

முஸ்லிம் அறிஞர்களின் கருத்துப்படி தவாத்துர் முறையில் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்கள், அதாவது நேரடியான, கலப்பில்லாத,


இஸ்னாத் V



இஸ்னாத் VI

அறிவிப்புகள் தீர்க்கமான, திட்டவட்டமான அறிவைப் புகட்டுவன வாக அமையும். எவ்வாறாயினும், முதவாதிரான ஹதீஸுக்கு அவசி யமான அறிவிப்பாளர்களின் தொகை குறித்துக் கருத்து வேறுபாடு கள் காணப்படுகின்றன. நான்கு அறிவிப்பாளர் முதல் பல நூற்றுக் கணக்கான அறிவிப்பாளர்கள் என்றளவுக்கு இவ்வபிப்பிராய பேதங்கள் உள.

எனது கருத்தைப் பொறுத்தமட்டில், ஒரு ஹதீஸ் சில தோழர்களால் அறிவிக்கப்பட்டதெனக் கொள்வோம். உதாரண மாக, நால்வர் என வைத்துக் கொள்வோம். அவர்களுள் ஒவ்வொரு வரும் முஸ்லிம் உலகில் பரந்திருக்கும் பல மாணவர்களைக் கொண் டிருக்கலாம். காலப்போக்கில் அறிவிப்பாளர் தொகை பெருகிச் செல்ல, அவர்களது பிரதேசங்களும் பல்வேறுபட்டுச் செல்லலாம். இந்நிலைமையிலும், ஆரம்பத்திருந்த அந்த நான்கு பேர், குறிப்பாக ஆரம்ப கால அறிஞர்களது தகைமைகள் குறித்த அறிவு படைத் தோர்க்கு, நிச்சயிக்கப்பட்ட முறையில் அறிவினைப் புகட்டலாம்.

முதவாதிர் இரண்டு பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(1) சொல்லளவில் முதவாதிர் (2) கருத்தளவில் முதவாதிர்.

ஒரு சில ஹதீஸ்களே சொல்லளவிலான முதவாதிர் என வழங்கி வருகின்றன. எல்லா அறிவிப்பாளர்களும் ஒரே சொல் அல்லது வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியுள்ளனர். எவ்வாறாயினும் கருத்தளவிலான ஹதீஸ்கள் தொகை மிக அதிகமானது.

(ஆ) ஆஹாத்: முதவாதிர் ஹதீஸ்களுக்கான அறிவிப்பாளர் தொகையை அடையாத அறிவிப்பாளர் தொகையைக் கொண்ட ஹதீஸ்களே இவை. இது பல்வேறு கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள் ளது. இக்கிளைப் பிரிவுகளுள் அறிஞர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். எனி

னும் பெரும்பாலான அறிஞர்கள் உடன்பாடு காணும் ஒவ்வொரு வரைவிலக்கணத்தை மட்டும் நான் காட்டுகின்றேன்.

1) அல் மஷ்ஹூர் : (பிரபலமானது) ஒவ்வொரு கட்டத்திலும் மூவர் அல்லது முதவாதிரின் தொகையை எட்டாத அதற்கு மேற்பட்ட தொகையினரால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்.

2) அல்-அஸீஸ்: ஒவ்வொரு தலைமுறையிலும் குறைந்தது இரு அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்பட்டது.

3) அல்-கரீப்: ஓர் இஸ்னாத் நபித்தோழரின் பின்னர் தன் தொடர் முழுவதிலும் தனியோர் அறிவிப்பாளரைக் கொண்டிருந்தால், அல்லது ஏதும் ஒரு கட்டத்தில் தனியொருவரை மட்டும் தொடரில் கொண்டி ருந்தால் அது கரீப் எனப்பட்டது.

4) அல்-பர்த் : இது இரு உப கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள் ளது.

அ) பர்த்-முத்லக் : ஒரு குறிப்பிட்ட ஹதீஸ் குறிப்பிட்ட ஒருவ ரால் மட்டும் அறிவிக்கப்பட்டது.

ஆ) பர்த்-நிஸ்பீ: இது பல கருத்துக்கள் கொண்டது.

i குறிப்பிட்ட அறிவிப்பாளர் தவிர வேறு எந்த ஒரு நம்பிக் கையான அறிவிப்பாளரும் அறிவிக்காத ஒன்று. அல்லது ஏனையோர் அறிவித்துள்ளார்கள்; ஆனால் அவர்கள் நம்பிக்கையானவர்களல்லர்.

ii குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்களால் மட்டும் அறிவிக்கப்பட்டுள்ளன; ஏனைய பிரதேசங் களைச் சேர்ந்த எவரும் இதனை அறிவிக்கவில்லை.

5) மர்பூ : இடையில் எங்கேனும் தொடர் முறிவுற்றிருந்தாலும் இஸ்னாத் தொடர் நபிகளார் வரை செல்கின்றது.

6) முஸ்னத் : இஸ்னாத்தில் முறிவுகளேதுமின்றி நபிகளார் வரை செல்வது.

7) முத்தஸில் : ஹதீஸின் இஸ்னாத்தில் முறிவுகளில்லை.

8) மவ்கூப் : ஹதீஸின் இஸ்னாத் நபித்தோழர் ஒருவரை மட்டும் சென்றடைவது.

9) மக்தூ : ஹதீஸ் நபித்தோழர்களை அடுத்து வந்த ஒருவரை மட்டும் சென்றடைவது.

10) முர்ஸல் : நபித்தோழர்களின் பின் வந்த ஒருவர், நபித் தோழரைத் தவிர்த்து நேரடியாக நபிகளாரிடமிருந்து கூறுவது.

11) முஅல்லக்: ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர் ஒருவரிடமிருந்து அல்லது தொகுப்பிலிருந்து அறிவிப்பாளர் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோர் தவிர்க்கப்பட்டுள்ளமை.

12) முன்கத்இ: நடுவில் ஓர் இடத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தனியோர் அறிவிப்பாளர் தொடர் முறிவுற்றிருத்தல்.

13) முஃழல் : ஓர் இடத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இரண்டு அறிவிப்பாளர் தொடர் முறிவுற்றிருத்தல்.

14) முஅன்அன்: இஸ்னாத்தில் அறிவிப்புச் செய்யும்போது 'அன்' என்ற பதப் பிரயோகம் செய்யப்பட்டிருத்தல். இது, குறிப்பிட்ட ஹதீஸ் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையைத் தெளிவுறுத்திக் காட்டுதலல்ல.

15) முஸல்ஸல்: ஒரு ஹதீஸைப் பொறுத்தமட்டில் எல்லா அறிவிப்பாளர்களும் ஒரே அமைப்பைப் பெற்றிருத்தல்.

உதாரணமாக, அனைவரும் ஒரே வகையான பதப் பிரயோ கம் (ஸமிஃது) செய்தல், அல்லது அனைவருமே ஒரு குறிப்பிட்ட

பிரதேசத்தைச் சார்ந்திருத்தல். அல்லது அனைவருமே ஒரு குறிப் பிட்ட தொழிலைச் செய்தல். அல்லது அனைவருமே ஒரு ஹதீஸை அறிவிக்கும்போது ஒரே வகையான செயலில் ஈடுபடு தல். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட ஹதீஸை அறிவிப்புச் செய்யும்போது எல்லா அறிவிப்பாளர்களும் புன்னகை செய்த னர்; ஏனெனில் அதனைக் கூறும்போது நபிகளார் புன்னகை புரிந்துள்ளார்கள்.

அல்ஹதீஸ் – அல்–குத்ஸீ

சில ஹதீஸ்கள் "அல்லாஹ்த்தஆலா கூறுகின்றான்" என்ற தொடரையும் இணைத்து நபிகளாரால் கூறப்பட்டன. இந்த ஹதீஸ்கள் ஹதீஸ் குத்ஸீ என வழங்குவன. இந்த ஹதீஸ்களின் கருத்து நபிகளாருக்கு அருள் செய்யப்பட, நபிகளார் தமது சொந்த வசனங்கள் மூலம் அதனைத் தெளிவுறுத்தலானார்கள். அல்லாஹ் வின் வசனங்களால் மட்டும் உருவா னது புனித குர்ஆன். அவற்றைப் பெற்று, மக்களுக்கு அவற்றைக் கற்பித்து, விளக்கி, அதன் ஆணை களைப் பின்பற்றி நடக்கும்படி வேண்டுவது நபிகளாரின் கடமை யாக அமைந்தது. எவ்வாறாயினும் குத்ஸீ என அழைக்கப்படாத ஏனைய ஹதீஸ்கள் முற்றும் அல்லாஹ்வின் உந்துதல் இன்றியே உருவானவை எனக் கூறமுடியாது. நபிகளார் ஒருபோதும் அல்லாஹ்வின் வழிகாட்டுதல் இன்றி இருந்தவர்களல்லர். நபிகளா ரின் இஜ்திஹாதா கூட அல்லாஹ்வின் அங்கீகாரம் பெற்றன. அவற்றில் விளக்கம் குன்றிய கட்டங்கள் அல்லாஹ்வால் திருத்தி யமைக்கப்பட்டன. ஆகவே ஹதீஸ்க்ளில் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினை ஒரு வகையில் குத்ஸீயெனவே கொள்ளலாகும். நபிகளாரின் இஜ்திஹாதாவிலிருந்து இவற்றைப் பிரித்துக் காண்பது சிரமம். எனவே நாம் அவற்றை வெறுமனே ஹதீஸ் எனக் குறிப் போம். ஏனெனில் அவை நபிகளாரின் இஜ்திஹாதா மூலமானவை யாக இருக்கலாம்.

ஹதீஸ் குத்ஸிக்கான ஓர் உதாரணம்:

அபூதர் கூறினார் : அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: பெருமையும் புகழும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான்: "என் அடியார்களே! நான் அடக்கு முறையை எனக்குத் தடை செய்யப்பட்டதாக்கியுள்ளேன். உங்களுக்கும் அதனைத் தடை செய்யப்பட்டதாக்கியுள்ளேன். எனவே நீங்கள் ஒருவர் மீதொருவர் அடக்கு முறையைக் கைக்கொள்ளாதிருப்பீர்களாக! எனது அடியார்களே! என்னால் நேர்வழி காட்டப்படாதவர்கள் அனைவரும் தவறிழைக்கக் கூடியவர்களாயிருப்பர். எனவே என்னிடமிருந்து நேர்வழியை வேண்டி நில்லுங்கள். நான் உங்களை நேர்வழியில் செலுத்துவேன். ஓ என் அடியார்களே! என்னால் உணவளிக்கப்படுபவர்கள் தவிர்ந்த நீங்கள் அனைவரும் தேவைகள் மிகுந்தவர்களாகவே இருப்பீர்கள். எனவே என்னிடமிருந்து உணவை யாசியுங்கள். நான் அதனை உங்களுக்குத் தரச் சித்தமாயிருக்கிறேன். ஓ என் அடியார்களே! என்னிடமிருந்து ஆடைகள் பெற்றோர் தவிர மற்ற அனைவரும் நிர்வாணமாகவே இருக்கின்றீர்கள். எனவே என்னிடமிருந்து ஆடைகளை வேண்டுங்கள். நான் உங்களை ஆடைகள் அணிந்தவர்களாய்ச் செய்யலாம். ஓ என் அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் தவறுகள் இழைத்தவர்களாயிருக்கின்றீர்கள். நான் உங்கள் பாவங்களை மன்னிக்கத் தயாராயிருக்கின்றேன். எனவே என்னிடம் மன்னிப்புக் கேளுங்கள். நான் உங்களை மன்னிக்கக் கூடுமாயிருக்கும். ஓ என் அடியார்களே! நீங்கள் எனக்குத் தீங்கிழைக்கவோ, நன்மைகள் செய்யவோ இயலாது. ஓ என் அடியார்களே! உங்கள் வரிசையில் இருக்கும் ஆக முந்தியவரும், ஆகப் பிந்தியவரும் அதாவது உங்களது முழு மனித சமூகமும் இணைந்து, ஜின்களையும் சேர்த்துக் கொண்டு நீங்கள் அனைவரும் ஒருவரே போன்று இணைந்து இறையுணர்வு கொண்டோராயிருந்தாலும்கூட, நீங்கள் எனது சக்திக்கு எதனையும் சேர்த்தவர்களாக மாட்டீர்கள். ஓ என் அடியார்களே! உங்களில் ஆக முந்தியவரும், ஆகப் பிந்தியவரும் உங்களது முழு மனித சமூகமும் இணைந்து ஜின்களையும் சேர்த்துக் கொண்டு, தனியொரு

மனிதனின் இதயமே போலத் தீங்கு இழைப்பதில் ஒன்றுபட்டிருந்தாலும்கூட, எனது சக்திக்கு எவ்வித பாதகமும் இழைத்தவர்களாக மாட்டீர்கள். ஓ என் அடியார்களே! உங்களில் ஆக முந்தியவரும் ஆகக் கடைசியானவரும், உங்களது முழு மனித சமூகமும் இணைந்து ஜின்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு வெளியில் நின்றவர்களாக என்னிடம் யாசித்து, ஒவ்வொருவருக்கும் நான் அவரவர்கள் வேண்டுவனவற்றைக் கொடுத்தாலும், சமுத்திரத்தில் ஓர் ஊசியை நுழைத்து எடுப்பதனால் அதற்கேற்படக்கூடிய நஷ்டத்தினும் பார்க்க எவ்வித நஷ்டமும் எனக்கேற்படுவதில்லை. ஓ என் அடியார்களே! நான் பதிவு செய்து வைத்திருக்கும் உங்கள் செயல்களனைத்துக்குமான கூலியை, நிச்சயம் நான் உங்களுக்குத் தருவேன். அதனால் நன்மையே பெறுவோர் அல்லாஹ்வைப் போற்றுவார்களாக! அதனைப் பெறாதோர் தன்னைத் தான் குறை கூறுவதேயன்றி வேறு எவரையும் குறைகூறாதீர்கள்."

இஸ்னாத்களின் பல்வேறு நியதிகளை அனுசரித்துப் பகுக்கப்பட்ட ஹதீஸ்களின் பிரிவுகள் இவையாகும். இதற்கும் மேலாக, இவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு வகைப் பிரிவினையும் உளது. அடிப்படையில் ஹதீஸ் களின் ஏற்பையும் ஏற்காமையையும் காட்டுவது இது. இவ்வாறான பகுப்பு முறையின் அறிமுகம் எழ, முஹத்திஸீன்கள் மேற்கொண்ட திறனாய்வே காரணமாகும். அடுத்து வரும் அத்தியாயங்களில் ஹதீஸ் திறனாய்வின் வரலாறு, முறைமை என்பன பற்றியும், பின்னர் அவற்றின் பகுப்பு, வகைப் படுத்தல் என்பன பற்றியும் காண்போம்.

அத்தியாயம் – 6

ஹதீஸ் திறனாய்வு வரலாறும் முறைமையும்

நபிகளாரின் ஹதீஸ் பற்றிய பிரச்சினைகளனைத்துமே ஸுன்னா பெறக் கூடிய முக்கியத்துவம் குறித்த கோட்பாட்டோடு இணைந்தனவாகும் எனக் கண்டோம். அதாவது, எல்லாக் காலங் களுக்கும் பொருந்தக் கூடியதான இஸ்லாமிய சட்ட விதிமுறை களின் இரண்டாம் மூலாதாரமாக இது அமைந்துள்ளது; கால, இட பேதங்களனைத்தையும் கடந்து எல்லா முஸ்லிம்களும் பின்பற்றி யொழுக வேண்டியதொரு முன்மாதிரியினை நபிகளாரின் வாழ்வு கொண்டுள்ளது என்பனவாகும். இதன் காரணமாக, நபிகளாரின் காலத்திலேயே நபித்தோழர்கள் ஸுன்னா பற்றிய அறிவினைப் பரப்பத் தொடங்கினார்கள். அவ்வாறு இயங்கும்படி நபிகளாரே தம் தோழர்களுக்கு அறிவுறுத்தினார்கள். எவ்வாறாயினும், தாம் தவறுகள் இழைக்கவில்லை என்ற உறுதியிருந்தாலும்கூட, எல்லோ ருமே ஹதீஸ் பரம்பலில் ஈடுபட அனுமதியளிக்கப்படவில்லை. நபிகளார் மக்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள்: “நான் கூறியதாக, ஒரு பொய்யை யார் வேண்டுமென்றே இட்டுக் கட்டுகின்றாரோ அவர் நரகில் தனக்குரிய இடத்தைப் பெற்றுக்கொள்ளட்டும்!”

மற்றொரு ஹதீஸில் நபிகளார் கூறினார்கள்: “நான் கூறாதவற்றைக் கூறியதாக எவரும் புனைந்து கூறுவாராயின் அவர் தனது இடம் நரக நெருப்பில் நிச்சயிக்கப்பட்டுள்ளதென்பதை உணர்ந்து கொள்வாராக!” இவ்வாறான எச்சரிக்கைகள் நபிகளா

ரின் தோழர்கள் மத்தியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. ஏராளமான தோழர்கள், தமது நினைவாற்றலின் மீது உறுதியில் லாத சந்தர்ப்பங்களில் ஹதீஸ் பரப்புவதில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். இந்த வகையில் அனஸ்-பின்-மாலிக், ஸுபைர்-பின்-அல்அவ்வா, ஸுஹைப், ஸைத்-பின்-அர்கம், அப்துல்லாஹ்-இப்னு-உமர் ஆகியோரின் உதாரணங்களைக் காட்டலாம்.

நபிகளாரின் தரப்பிலிருந்து உரைப்பனவற்றின் மீது உறுதி யும், பிறழ்வு இன்மையும் குறித்துக் கவனமாக இருக்கும்படி சில நபித் தோழர்கள் ஏனைய தோழர்களை எச்சரித்து வந்தமையும் தெளிவு.

ஹதீஸ் பரம்பலில் புனைந்து கூறலும் தவறுகளிழைத்தலும்

அறிஞர்கள், சிறப்பாக ஆரம்பகால அறிஞர்கள் ஹதீஸ் களைப் பிறருக்குக் கூறும்போது அல்லது எழுதும்போது மிகவும் கவனமாகச் செயல்பட்டார்கள். ஆனாலும், எல்லா அறிஞர்களும் அறிந்தது போல, மிகவும் தூய்மையான மனதுடன் செயல்படுபவர் கள் கூடச் சந்தர்ப்ப வசமாகத் தவறுகளிழைத்து விடுவது இயல்பு.

நபிகளாரின் ஸுன்னா, முஸ்லிம் சமூகத்தவருக்கு என் றைக்கு மானதொரு முன்மாதிரியாயிருப்பதன் காரணமாக, அது எந்தவகையிலும் கலப்புற அல்லது திரிபுபடுத்தப்பட சமூகத்தார் அனுமதிக்க மாட்டார்கள். எனவே இழைக்கப்படக்கூடிய தவறு களைக் களைந்து கொள்ள, தீவிரமான முறையிலான திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுவது அவசியமாயிற்று. பின்வரும் சம்பவங்கள் இப்பிரச்சினைக்குச் சிறிது விளக்க மளிக்கும்.

இரண்டாம் நூற்றாண்டின் மிகப் பெரும் அறிஞர்களுள் ஒருவரான யஹ்யா-பின்-ஸஈத் அல் கத்தான் மரணவேளை அண்மியவராக இருந்தார். அவர் தன்னைச் சுகவீனத்தின் போது

பராமரித்து வந்த ஒருவரிடம் "பஸ்ராவின் மக்கள் என்னைக் குறித்து என்ன கூறுகின்றார்கள்?" என வினவினார். அவர் கூறினார்: "அவர்கள் உங்களை மிகவும் புகழ்ந்து கூறுகின்றார்கள். என்றாலும், அறிஞர்களைக் கண்டித்துக் கூறும் உங்களது தீவிரம் குறித்துத் தான் உங்களை அஞ்சுகிறார்கள்." அப்போது யஹ்யா பதிலிறுத்தார்: "நான் கூறுவதைக் கேளும். மறுமையில் எவரும் என்னை எதிர்த்து நிற்கலாம். என்றாலும் அல்லாஹ்வின் தூதர் மட்டும், 'என்னைத் தொடர்புபடுத்திக் கூறப்பட்ட ஒரு ஹதீஸை நீர் கேட்டீர். அது உண்மையானதல்ல என உமது மனம் உமக்கு உணர்த்தியது. என்றாலும் நீர் அதனைக் கண்டனம் செய்யாது விட்டீர்' எனக் கூறாதிருக்க வேண்டும்."

இவ்வாறான நோக்குடன் தான் ஹதீஸ் திறனாய்வுகள் கொண்டு நடாத்தப்பட்டன. அச்சமோ, ஆதரவோ இன்றி நிகழ்த்தப் பட்டன இவை. தந்தை மகனையும், மகன் தந்தையையும் சகோதரர் தன் சகோதரரையும், நண்பர்கள் தம்மை மிக நெருங்கியோரையும் எவ்வித அச்சமுமின்றி, அல்லாஹ்வை மட்டுமே அஞ்சியவர் களாகக் கண்டித்துக் கூறியுள்ள மையைப் பரவலாகக் கண்டு கொள் ளலாம். தந்தை, சகோதரன், மக்கள் ஆகியோர் மீது காட்டப்படும் அன்பும் மரியாதையும் மிகவும் குன்றிவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டில் இவ்வாறானதொரு நடவடிக்கையின் பாரதூரத்தை விளங்கிக் கொள்வது கடினம். ஆரம்பகால வரலாற்றினை, அக்கா லத்திய சமூக உறவுகளின் நெருங்கிய பிணைப்பினை குடும்பத்தி லிருந்தும் குடும்ப கௌரவத்திலிருந்தும் பிரிந்து வாழ்வதென்ப தனை எண்ணியும் பார்க்க முடியாதிருந்த நிலையை அறிந்தவர்கள், எத்தனை உறுதியுடன் முஹத்திஸீன்கள் செயல்பட்டு வந்தார்கள் என்பதனை உணர்ந்து கொள்வர்.

நமது அன்றாட வாழ்க்கை அனுபவங்களில் சாதாரணமாக மக்கள் தமது நண்பர்களை உயர்த்தியும் பகைவர்களைத் தாழ்த்தியும் மதிப்பிடுவது வழக்கம். இவ்வாறான மானிட இயல்புகள் முஹத்தி ஸீன்கள் செய்த தரப்படுத்தலைப் பாதித்திருக்குமா? இருக்கலாம்.

ஏனெனில் இது சாதாரண மனித பலவீனம் முஹத்திஸீன்களும் மனிதர்களே. அவர்கள் அனைவருமே தெளிந்த சிந்தனையுடன் செயல்படுவதில் மிகவும் கவனமாகக் கடமையாற்றியுள்ளார்கள். எனினும், சாதாரண மனித சுபாவங்களும் ஹதீஸ்களின் தரப்படுத்தலில் தம் செல்வாக்குகளைப் பதித்துள்ளமையை ஊன்றிக் கவனிக்குமிடத்து மிகவும் அரிதாகவென்றாலும் கண்டு கொள்ள முடிகின்றது. அறிஞர்கள் பலர் இவ்விடயத்தை மிகவும் ஆழமாக ஆராய்ந்துள்ளார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து இவையனைத்தும் விதிவிலக்கான சிறிய அம்சங்களாகவே உள.

ஹதீஸ் விமர்சனம் – நக்த்–அல்– ஹதீஸ்

அறபு இலக்கியத்தில் 'நக்த்' என்ற சொல் விமர்சனம் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப ஹதீஸ் துறை அறிஞர்கள் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். மொழியினதும் கவிதையினதும் தவறுகளைப் பொறுக்கியெடுப்பதற்கும், போலி நாணயங்களிலிருந்து உண்மையான நாணயங்களைப் பிரித்தெடுப்பதற்கும் இச்சொல் பயன்பட்டுள்ளமையை அறபு இலக்கியத்தில் கண்டு கொள்ளலாம்.

குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றில் இந்தச் சொல்லை, விமர்சனம் என்ற கருத்தில் பயன்படுத்தியுள்ளமையைக் காண இயலவில்லை. இதனால் ஹதீஸ் இலக்கியத் துறையில் திறனாய்வு செய்யும் முறை மிகவும் பிந்திய காலத்தில் தோற்றம் பெற்றதா என்ற எண்ணம் எழுகின்றது. மாறாக, குர்ஆன், தம்யீஸ் என்ற சொல்லினை இக்கருத்தில் பயன்படுத்துகின்றது. அதாவது 'ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தெடுப்பது' என்பதாகும்.

மூன்றாம் நூற்றாண்டின் பேரறிஞர்களுள் ஒருவரான இமாம் முஸ்லிம் தனது நூல் ஒன்றுக்கு 'அல்-தம்யீஸ்' என்று பெயரிட்டார்கள். இந்நூலின் கருப்பொருள், ஹதீஸ் திறனாய்வின் முறைமையாகும். சில ஹதீஸ் அறிஞர்கள் நக்த் என்ற சொல்லையே

பயன்படுத்தினார்கள். எனினும் இச்சொல் போதிய வழக்குப் பெற வில்லை. அவர்கள் ஹதீஸ் திறனாய்வுக் கலையை 'அல்-ஜர்ஹ்-வ-அல்தஅதீல்' (ஹதீஸ்களில் சரியானவற்றை உறுதிப்படுத்தி அல்லாத னவற்றைப் பிரித்தறியும் அறிவு) எனப் பெயரிட்டனர்.

திறனாய்வின் ஆரம்பம்

திறனாய்வு பற்றிய முனைவு, எது சரி, எது பிழை என்பத னைப் பிரித்தறிந்து கொள்வதற்கானது எனக் கொள்வோமாயின், அது, நபிகளாரின் காலத்திலிருந்தே ஆரம்பமானதெனக் கூறலாம். எனினும் அன்றைய கால கட்டத்தில் இது வெறுமனே நபிகளாரி டம் நேரடியாகச் சென்று, அவர்கள் கூறியதெனக் கூறப்பட்டன வற்றை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதாக அமைந்தது. உண்மையில் அக்கால கட்டத்தில், குர்ஆனில் இப்றாஹீம் அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் குறித்துக் கூறப்பட்டது போல, முஸ்லிம் களின் இதயங்கள் உறுதிபெறச் செய்யப்பட்ட அத்திவாரங்களை வலுப்படுத்தும் முயற்சிகளே நடந்து வந்தன. திமாம்-பின்-தஅலபா ஒரு முறை நபிகளாரிடம் வந்து "ஓ அல்லாஹ்வின் தூதரே! உமது தூதர் எம்மிடம் வந்து ..... விஷயங்களைக் கூறினார்" என்றார். நபிகளார் கூறினார்கள் "அவர் உண்மையே கூறினார்."

இவ்வாறாகத் தெளிவு பெறும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டமையை, அலீ, உபை-இப்னு-கஅப், அப்துல்லாஹ்-பின் அம்ர், உமர், இப்னு மஸ்ஊத்தின் மனைவி ஸைனப் முதலி யோர் மூலம் காண முடிகின்றது. இவற்றின் அடிப்படையில் ஹதீஸ் பற்றிய தெளிவு பெறுவது அல்லது திறனாய்வு செய்வது மிகவும் ஆரம்ப நிலையில் நபிகளாரின் காலத்திலேயே தோற்றம் பெற்ற தெனலாம். நபிகளாரிடமே சென்று தெளிவு பெறும் இவ்வழக்கம் இயல்பாகவே நபிகளாரின் மறைவுடன் முடிவு பெற்றது. எனினும், நபிகளார் காட்டிய வழியைப் பின்பற்றிச் செல்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும், சமூகத்துக்கும், அரசுக்கும் கடமையாக அமைந்தது. எனவே நபிகளாரின் கூற்றுகளாக உரைக்கப்படுவனவற்றில்

அவர்கள் மிகவும் கவனமாகவும், அவ்வாறான கூற்றுகளை நன்கு ஆராய்ந்து காண்பதில் பேணுதலாகவும் இருந்தனர்.

இத்துறையில் முன்னோடியாக விளங்கியவர் முதலாவது கலீபா அபூபக்ர்-அஸ்-ஸித்தீக் ஆவார். அடுத்து வந்தோர் உமர், அலீ ஆகியோர். இவ்வாரம்ப காலத்தில் ஆயிஷா, இப்னு உமர் உட்பட நபித்தோழர்கள் பலர் ஹதீஸ் திறனாய்வை மேற்கொண்டனர்.

இஸ்லாத்தின் பரம்பலுடன் நபிகளாரின் ஹதீஸ்களும் பரம்பலாயின. இஸ்லாமியப் படையெடுப்புகளில் தலைமை தாங்கியோராக, அல்லது சாதாரண வீரர்களாக ஏராளமான நபித்தோழர்கள் பங்குபற்றினர். இரவின் அமைதியில் நல்லடியார்களாக நின்று தொழுபவர்களாக, எவ்வேளையிலும் நல்லாசிரியர்களாக இருந்த அவர்கள், ஸுன்னா பற்றிய அறிவை எப்போதும் பரப்பி வந்தார்கள். ஹதீஸ் பரம்பலின் மற்றுமொரு முக்கிய காரணி, குர்ஆன், ஸுன்னா என்பனவற்றைப் பரப்புவதில் தீவிர அக்கறை கொண்டிருந்த உமர் அவர்கள், அவற்றில் பாண்டித்யம் பெற்றி ருந்த ஏராளமானோரை இஸ்லாமிய உலகின் பல்வேறு திக்குகளுக்கும் அனுப்பி வைத்தமையாகும். பஸ்ராவுக்கு மாத்திரம் பத்து நிபுணர்களை அவர் அனுப்பியிருந்தார்.

தவறிழைத்தல் மனித இயல்பு. இஸ்லாமிய உலகின் பல்வேறு பிரதேசங்களுக்கும் ஹதீஸ் பரவத் தொடங்கவே அவற்றில் தவறுகள் இழைக்கப்படக்கூடிய சாத்தியங்களும் எழலாயின. எனவே திறனாய்வின் அவசியம் உணரப்படலாயது.

இது இவ்வாறிருக்க, இஸ்லாமிய உலகில் ஹதீஸ் பரவத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் முஸ்லிம் சமூகத்தார் பாரிய சில பிரச்சினைகளை எதிர் நோக்கலாயினர். நபிகளாரின் மறைவின் பின் கால் நூற்றாண்டுக் காலத்துள் மாபெரும் பிரச்சினையொன்று தோற்றம் பெற்றது. நான் குறிப்பிடுவது, உஸ்மான் (ரலி) அவர்களது கொலையையும், அலீக்கும் முஆவியாவுக்கும் இடையிலான

போராட்டத்தின் காரணமாக முஸ்லிம்களிடையே எழுந்த பெரும் பிரிவினைகளையுமாம். அப்போது தான் முதன் முதலாக அரசியல் அடிப்படையில் ஒவ்வொரு சாராரையும் புகழ்ந்தோ, இகழ்ந்தோ ஹதீஸ்களைப் புனைந்து கூறும் முயற்சி தொடங்கியது. இவற்றில் நிச்சயமாக அலீயோ, முஆவியாவோ, நபித் தோழர்களோ பங்கு கொள்ளவில்லை என்பது தெளிவு. என்றாலும், பிரச்சினைகள் தோன்றிய இடங்களில் தம் சொந்த நலன் கருதிச் செயல்படும் சாரார் பலர் தோற்றுவதும், அவர்கள் தம்மையே முஸ்லிம்களுள் சிறந்தவர்களாக சித்திரித்துக் கொள்ள முனைவதும் சர்வ சாதா ரணம்.

இக்கட்டத்தில் ஹதீஸ் கற்கும் துறையில் கட்டுப்பாடுகள் பல அறிமுகமாயின. நாம் ஏற்கெனவே இஸ்னாத் குறித்த இப்னு ஸீரீனின் கூற்றினைக் கண்டுள்ளோம். திறனாய்வு சம்பந்தமாகப் பிராந்தியக் கல்வி நிலையங்கள் எழலாயின. சுருக்கமும் விளக்கமும் கருதி அப்போதைய இரண்டு முக்கிய நிலையங்கள் குறித்து மட்டும் நாம் பார்ப்போம். ஒன்று மதீனாவை மையமாகக் கொண்டது. மற்றது ஈராக்கை மையமாகக் கொண்டது.

நபிகளாரின் காலத்திலேயே ஹதீஸ் திறனாய்வு ஆரம்ப மாயிற்று என நாம் கண்டோம். அன்னாரின் மறைவின் பின்னர் அபூபக்கர், உமர், அலீ, இப்னு உமர், ஆயிஷா முதலிய நபித்தோழர் கள் இதனைத் தொடர்ந்தனர். இப்னு-ஹிப்பானின் கருத்துப்படி உமர், அலீ ஆகியோரின் பின்னர், தோழர்களைத் தொடர்ந்தோரின் காலம் வந்தது. இப்னுல்-முஸய்யிப் (ம.93), அல்காஸிம்-பின்-முஹம்மத்-பின்-அபூபக்கர் (ம.106), ஸாலிம்-பின்-அப்துல்லாஹ்-பின்-உமர் (ம.106), அலீ-பின்-ஹுஸைன்-பின்-அலீ (ம.93), அபூ ஸலாமா-பின்-அப்துர் ரஹ்மான் (ம.94), அப்துல்லாஹ்-பின்-அப்துல்லாஹ்-பின்-உத்பா, காரிஜா-பின்-ஸைத்-பின்-தாபித் (ம.100) உர்வா-பின்-அல்- ஸுபைர் (ம94) அபூபக்கர்-பின்-அப்துர் ரஹ்மான் -பின்-அல் ஹாரித் (ம.94), ஸுலைமான்-பின் யஸார் (ம.100) ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் அனைவருமே ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டினைச் சார்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சம். சிலர் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலத்திலும் வாழ்ந்துள்ளனர். இவ்வறிஞர்களிடமிருந்து கற்றுப் பேரறிஞர்களாக மதீனாப் பிரதே சத்தில் உருவாகியோர் மூவர். ஸுஹ்ரீ, யஹ்யா-பின்-ஸஈத், ஹிஷாம்-பின்-உர்வா ஆகியோர். இம்மூவருள்ளும் மிக்க சிறப்புக்குரியவர் ஸுஹ்ரீ (ம. 124).

ஈராக்கிலும் முதல் நூற்றாண்டின் போது ஹதீஸ் திறனாய் வாளர்கள் தீவிரமாக உழைத்து வந்தனர். அவர்களுள் சிறப்பிடம் பெறுவோர் ஸஈத்-பின்-ஜுபைர், அல்-ஷஅபீ, தாவூஸ், அல்-ஹஸன்-அல்-பஸ்ரீ (ம.110) இப்னு-ஸீரீன் (ம.110) ஆகியோர். இவர்களுள்ளும் சிலர் இரண்டாம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுக் காலத்திலும் வாழ்ந்துள்ளனராயினும் பொதுப்பட அனைவருமே ஹிஜ்ரி முத லாம் நூற்றாண்டினைச் சார்ந்தோரே. இவர்களின் பின்னர், இரண் டாம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்த காலத்தோரான அய்யூப்-அல்-ஸக்தியானீ, இப்னு-அவ்ன் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர்.

இவர்களின் பின்னர் ஹதீஸ் திறனாய்வு புதியதொரு கட்டத்தை அடைந்தது. ஹதீஸ், ஸுன்னா ஆகியவற்றின் சேகரிப்புக் கென பிரயாணங்கள் மேற்கொள்வது நபிகளாரின் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. பின்னர், நபித்தோழர்கள் பலரும், அவர் களைத் தொடர்ந்து வந்தோர் பலரும் இதே நோக்கத்துக்காக ஏராள மான பிரயாணங்களை மேற்கொண்டனர். இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டின் அறிஞர்களோ முன்னரெப்போதுமில்லாத வகை யில் பரந்த அளவிலான பிரயாணங்களை மேற்கொள்வதைக் காண முடிந்தது. அக்காலத்திய நிலைமையைச் சம காலத்தவரான யஹ்யா-பின்-மாஇன் (ம.233) கூறுகின்றார்:

“தமது வாழ்வில் எப்போதுமே முதிர்ச்சி பெறாத மக்கள் நான்கு வகைப்படுவர். அவர்களுள் ஒரு சாரார் ஹதீஸ் சேகரிப்புக் காக எவ்வித பிரயாணமும் மேற்கொள்ளாமல் தமது நகரிலேயே இருந்து ஹதீஸ் எழுதுவோர்.”

எனவே, இரண்டாம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து சில நூற்றாண்டுளாக ஹதீஸ் கற்கும் மாணவர் ஒருவர், ஹதீஸ் சேகரிப்புக்காக நீண்ட பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாக அமைந்தது. ஆரம்பகால அறிஞர்கள் தமது சொந்தப் பிரதேசத்திலிருந்த அறிஞர்களிடமிருந்தே ஹதீஸ் கற்று வந்ததனால் திறனாய்வும் அவ்வப்பிரதேசத்தை மட்டுமே சார்ந்தனவாயிருந்தன. பின்னர் முஸ்லிம் உலகம் பூராவும் மக்கள் ஆயிரக்கணக்கான ஷெய்க்குகளிடம் ஹதீஸ் கற்கத் தொடங்கவே, திறனாய்வு குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது, பொதுப்பட எல்லா அறிஞர்களையும், ஹதீஸ் சேகரிப்புகளையும் உள்ளடக்குவதாயிற்று.

இவ்வாறான நடவடிக்கைகள் பரந்த அளவில் நடைபெறத் தொடங்கவே, புதிய பல கல்வி நிலையங்கள் உருப்பெறலாயின. நாம் மீண்டும், இரண்டாம் நூற்றாண்டின் திறனாய்வாளருள் மிக்க பிரசித்தம் பெற்றோரைக் காண்போம்.

கூபாவின் ஸுஃப்யான்-அஸ்ஸவ்ரீ (97 - 161)
மதீனாவின் மாலிக்-பின்-அனஸ் (93 - 179)
வாஸித்தின் ஷுஃஅபா (83 - 100)
பெய்ருத்தின் அல்-அவ்ஸாஈ (88 - 158)
பஸ்ராவின் ஹம்மாத்-பின்-ஸலாமா (ம. 167)
எகிப்தின் அல்-லயித்-பின்-ஸஅத் (ம. 175)
பஸ்ராவின் ஹம்மாத்-பின்-ஸைத் (ம. 179)
மக்காவின் இப்னு-உயைனா (107 - 198)
மார்வ்வின் அப்துல்லாஹ்-பின்-அல் முபாரக் (118 - 181)
பஸ்ராவின் யஹ்யா -பின்-ஸஈத் அல் கத்தான் (ம. 198)
கூபாவின் வகீ-பின்-அல்-ஜர்ராஹ் (ம. 196)
பஸ்ராவின் அப்துர்-ரஹ்மான்-பின்-மஹ்தீ (ம. 198)
எகிப்தின் அஷ்ஷாபிஈ (ம.204)

இவர்களுள்ளும் மிக்க சிறப்பிடம் பெறுவோர் ஷுஅபா, யஹ்யா-பின்- ஸஈத், இப்னு மஹ்தீ ஆகியோர். இத்துறையில் யஹ்யா-அல் கத்தானின் ஆசிரியராக விளங்கியவர் ஷுஅபா.

மேற்கண்ட ஆசிரியர்கள், திறனாய்வுத் துறையில் ஏராள மான புகழ் பெற்ற அறிஞர்களை உருவாக்கினர். அவர்களுள்ளும் பிரசித்தம் பெற்றோர்:

பக்தாதின் யஹ்யா-பின்-மாஇன் (ம.233)
பஸ்ராவின் அலீ-பின்-அல் மதீனீ (ம.234)
பக்தாதின் இப்னு ஹன்பல் (ம.241)
வாஸித்தின் அபூ பக்ர்-பின்-அபூ ஷைபா (ம.235)
மார்வ்வின் இஸ்ஹாக்-பின்-ராஹவை (ம.238)
பஸ்ராவின் உபைதுல்லாஹ்-பின்-உமர் அல்கவாரீரி (ம.235)
பக்தாதின் ஸுஹைர்-பின்-ஹர்ப் (ம.234)

இவர்களுள்ளும் முதல் மூவரும் பெரும் புலமை பெற்றி ருந்தனர். அவர்களது சிறப்பு வாய்ந்த மாணாக்கர் பின்வருவோர்:
அத்துஹலீ,
அத்தாரிமீ,
அல்-புஹாரீ,
அபூ-ஸுரஆஹ்-அர்ராஸீ,
அபூ-ஹாதிம்-அர்ராஸீ,
முஸ்லிம் பின் அல்- ஹஜ்ஜாஜ் அல்-நைஷாபூரீ
அஹ்மத்-பின்-ஷுஐப்.

இத்துடன் நாம் நிறுத்திக் கொள்வோம். ஏனெனில் இதுவே ஹதீஸ் அறிவுத் துறையில் மிக உன்னத காலமாயிருந்தது.

ஹதீஸ் திறனாய்வின் முறைமை

ஹதீஸ்களின் கருப்பொருளைப் பொறுத்தமட்டில் பலவழி முறைகள் கையாளப்பட்டன. என்றாலும் இவை அனைத்தையும் பரந்த ஒரு தலைப்பின் கீழே 'ஒப்பீடு' அல்லது 'ஒன்றையொன்றி லிருந்து வித்தியாசம் காண்பது' என வகுத்துக் கொள்ளலாம். தொடர்புபட்ட எல்லா ஆவணங்களையும் சேகரித்து, அதாவது தொடர்புபட்ட எல்லா ஹதீஸ்களையும் சேகரித்து மிகக் கவனமாக ஒன்றையொன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அறிஞர்களின் கூர்மையை அவதானித்தலாகும் இது. தோழர்களைத் தொடர்ந்து வந்தோரில் ஒருவரான அய்யூப்-அல்-ஸக்தியானீ (68-131) கூறுவார்: "உமது ஆசிரியரின் தவறுகளை நீர் கண்டு கொள்ள வேண்டுமாயின் ஏனையோருடனும் நீர் அமர வேண்டும்."

மற்றோர் அறிஞரான இப்னுல்-முபாரக் (118-181) கூறுவார்: "அதிகார பூர்வமான ஒரு கூற்றைத் தேர்ந்து கொள்ளப் பல அறிஞர்களது கூற்றுகளை ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு நோக்க வேண்டும்." ஹதீஸ்களின் தரப்படுத்தல் பெரும்பாலும் இம்முறையிலேயே செய்யப்பட்டது. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இம்முறை பயன்பட்டமையைக் காணலாகும்.

ஒப்பீடு செய்வதற்குப் பல வழிமுறைகள் கையாளப்பட்டன. பின்வருவன அவற்றுள் சில:

(i) ஒரே ஆசிரியரின் கீழ் கற்ற பல மாணவர்கள் ஹதீஸ்களை ஒப்பீடு செய்தல்.

(ii) ஒரே ஆசிரியர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியவற்றை ஒப்பீடு செய்தல்.

(iii) நினைவாற்றல் மூலமான சேகரிப்பையும் எழுத்தில் பதிக்கப்பட்ட சேகரிப்பையும் ஒப்பீடு செய்தல்.

(iv) ஹதீஸையும், அதனுடன் தொடர்புபட்ட குர்ஆன் வாசகங்களையும் ஒப்பீடு செய்தல்.

இம்முறைகளின் பயன்பாடு சம்பந்தமான சில உதாரணங் களைக் காண்போம்.

ஒரே ஆசிரியரின் கீழ் கற்ற பல மாணவர்களின் ஹதீஸ்களை ஒப்பீடு செய்வதன் மூலமான திறனாய்வு

இம்முறையின் பூரண பயன்பாடு சம்பந்தமான தெளிவி னைப் பெற்றுக்கொள்ள, மூன்றாம் நூற்றாண்டின் அறிஞரான இப்னு-மாஇன் (ம.233) அவர்களுடன் தொடங்குவோம். பேரறிஞ ரான ஹம்மாத்-பின்-ஸலாமாவின் தொகுப்புகளை வாசிக்கவென, ஹம்மாதின் மாணவர்களுள் ஒருவரான அப்பான் என்பாரைக் காணவென இப்னு-மாஇன் சென்றார். இவர் இத்தொகுப்புகளை ஹம்மாதின் வேறு மாணவர்கள் எவர் முன்னிலையிலாவது வாசித்துள்ளாரா என அப்பான் வினவினார். அப்போது இப்னு மாஇன் கூறினார்: "நான் உங்களிடம் வருமுன்னர் ஹம்மாதின் மாணவர்கள் பதினேழு பேருக்கு இவற்றை வாசித்துள்ளேன்." அப்பான் கூறினார்: "அல்லாஹ்வின் பேரால், நான் இந்தத் தொகுப்புகளை உமக்கு வாசிக்கமாட்டேன்." பதிலாக, சில திர்ஹம் களைச் செலவழிப்பதன் மூலம் பஸ்ராவை அடைந்து அங்குள்ள ஹம்மாதின் மாணவர்களுக்குத் தான் வாசிப்பதாக மாஇன் கூறினார். பஸ்ராவையடைந்த அவர் ஹம்மாதின் மாணவரான மூஸா-பின்-இஸ்மாயீலிடம் சென்றார். மூஸா வினவினார்: "நீர் வேறு யாருக்கும் இத்தொகுப்புகளை வாசித்ததில்லையா?" அவர் கூறினார்: "நான் ஹம்மாதின் மாணவர்கள் பதினேழு பேருக்கு இவற்றை முழுமையாக வாசித்துள்ளேன். நீங்கள் பதினெட்டா வது மாணவர்." அத்துணை முறைகள் வாசிப்பதன் மூலம் அவர் என்ன செய்யப் போகின்றார் என அறிய விழைந்தார் மூஸா. இப்னு-

மாஇன் கூறினார்: "ஹம்மாத்-பின்-ஸலாமா சில தவறுகளை இழைத்தார். அவரது மாணவர்கள் மேலும் சில தவறுகளை இணைத்துக் கொண்டனர். எனவே நான் ஹம்மாத் இழைத்த தவறு களையும், அவரது மாணவர்கள் இழைத்த தவறுகளையும் பிரித்துக் காண முனைகின்றேன். ஹம்மாதின் மாணவர்கள் அனைவரும் ஒரே தவறை இழைப்பதை நான் காணின் அத்தவற்றின் மூலகர்த்தா ஹம்மாத் ஆவார். மாறாக ஹம்மாதின் மாணவர்களுள் பலர் ஒன்றைக் கூற, சிலர் அதற்கு மாறாகச் செல்வாராயின் குறிப்பிட்ட மாணவரே அத்தவறுக்குப் பொறுப்பாவார். இவ்வகையில் நான் ஹம்மாதின் தவறுகளையும், அவரது மாணவர்கள் விட்ட தவறுகளையும் பிரித்துக் காண்கின்றேன்."

மேலும் தொடருமுன் இந்த முறை பற்றிய சில குறிப்பு களைக் காண்பது நலம். இம்முறையின் மூலம், இப்னு மாஇன், ஹம்மாத் இழைத்த தவறுகளைக் கண்டு கொள்வது மாத்திரமல்ல, ஹம்மாதின் மாணவர்களையும் தரப்படுத்தி, அவர்களது கூர்மை யையும் மதிப்பிட முடிந்தது. இதுவே, ஹதீஸ் அறிவிப்பாளர்கள் மதிப்பிடப்பட்டு, அவர்களைப் பல்வேறு தரங்களில் அமைத்து வைக்கும் முறைக்கான மதிப்பீட்டின் அடிப்படை அம்சமாக விளங்கியது. இத்தகு முறையை அறிமுகம் செய்தவர் இப்னு-மாஇன் அல்ல. இதனை முதன் முதல் பயன்படுத்தியவரும் அவரல்ல. இம்முறை வழக்கில் கொண்டு வரப்பட்டமையை முதலாம் கலீபா அபூபக்ரின் காலத்திலேயே காண முடிந்தது. என்றாலும் பரீட்சைக் குள்ளான ஆவணங்களின் தொகையில் பெரும் வித்தியாசம் காணப் பட்டது; பரீட்சிக்கும் முறையில் வித்தியாசங்கள் காணப்பட வில்லை. தொகையில் காணப்பட்ட வித்தியாசத்துக்குக் காரணம் ஹதீஸ்கள் காலப்போக்கில் பரந்த அடிப்படையில் பல்வேறு பிரதேசங்களிலும் பரவிச் சென்றமையாகும்.

இதோ மிக ஆரம்ப காலத்திலிருந்து சில உதாரணங்கள்:

அபூபக்ரும் ஹதீஸ் ஒப்பீடும்

ஒரு முதிய மாது அபூபக்ர் அவர்களிடம் சென்று, தனது பேரன் விட்டுச் சென்ற சொத்திலிருந்து தனக்குக் கிட்டவேண்டிய பங்கு குறித்து வினவினார். அதற்கு அபூபக்ர், "உமக்குக் கிட்ட வேண்டிய பங்கு குறித்து அல்லாஹ்வின் கிரந்தத்தில் நான் எதனையும் காணவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் அல்லாஹ்வின் தூதரும் இது குறித்து எதுவும் கூறியமையையும், நான் அறிய மாட்டேன்" என்றார். பின்னர் அபூபக்ர் தோழர்களிடம் இது குறித்து வினவினார். நபிகளார் பாட்டிக்கு ஆறில் ஒரு பங்கு நியமனம் செய்துள்ளதாக முகீரா கூறினார். அப்போது "உம்மோடு யாரும் இருக்கின்றார்களா?" (அதாவது, அவர் கூறியமையை உறுதிப்படுத்த வேறு எவரேனும் உளரா?) என அபூபக்ர் வினவினார். அவ்வேளை முஹம்மத் பின்-மஸ்லமா அல்-அன்ஸாரீ எழுந்து முன்னர் முகீரா-பின்-ஷு'அபா கூறியவாறே தானும் கூறினார். இவற்றைச் செவிமடுத்த பின்னர் அபூபக்ர் அம்முதிய மாதுக்கு ஆறில் ஒரு பங்கு அளித்தார். இச்சம்பவம் குறித்துப் பேசும் போது, நான்காம் நூற்றாண்டின் பேரறிஞரான அல்-ஹாகிம், நபிகளாரின் ஹதீஸை ஏற்பதில் மிகவும் கவனத்துடன் முதன் முதல் செயல்பட்டவர் அபூபக்ர் என்று கூறுகின்றார். அவர் ஒரு ஸுன்னாவைக் கேட்ட பொழுது, முதலாமவர் கூற்றிலிருந்து அதனை ஏற்றுவிடவில்லை. மற்றும் ஒருவரைக் கொண்டு அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் ஏற்றார்.

உமரும் ஒப்பீடும்

இரண்டாம் கலீபா உமர், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டு முறையைக் கையாண்டுள்ளமையை நாம் காணலாம்.

அபூ மூஸா-அல்-அஷ்அரீ உமரைக் காணவெனச் சென்றார். உமரின் வீட்டு வாசலில் நின்று அவர் மும்முறை ஸலாம் கூறினார். பதில் கிட்டாது விடவே அவர் திரும்பிச் செல்லலானார்.

அப்போது உமர், அவரை அழைத்து, அபூ மூஸாவை வீட்டினுள் நுழையாது தடுத்ததென்ன என வினவினார். அபூ மூஸா கூறினார்: "அல்லாஹ்வின் தூதர் கூற நான் கேட்டேன்: உங்களில் ஒருவர் மும் முறை அனுமதி கேட்டு அது கிட்டாவிடின் அங்கிருந்து சென்று விடவேண்டும்." உமர், அவரிடம், நபிகளாரின் கூற்றை உறுதிப் படுத்தும் படியும் அவ்வாறு செய்யாவிடின் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினார். பின்னர் தனக்குச் சாட்சியாக அபூமூஸா ஒருவரைக் கூட்டி வந்தார். உமர், அபூ-மூஸா -அல் அஷ்அரீயிடம், அவரது கூற்றைத் தான் ஏற்பதில் சந்தேகம் கொள்ள வில்லையென்றும், நபிகளாரின் ஸுன்னாவை அறிவிப்புச் செய்வதில் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாகச் செயல்பட வேண் டும் என்பதை உறுதிப்படுத்தவே தான் அவ்வாறு கூறியதாகவும் கூறினார்.

அபூஹுரைராவும் ஒப்பீடும்

நபிகளாரிடமிருந்து அபூஹுரைரா ஒரு ஹதீஸை அறிவிப் புச் செய்தார்: "மரணமுற்ற ஒருவருக்கான தொழுகை நிறைவேற்றப் படும் வரை அந்த ஜனாஸாவோடு இருப்பவருக்குரிய நன்மை ஒரு கீராத் ஆகும். மரணமுற்றவர் அடக்கம் செய்யப்படும் வரை காத்தி ருப்பவருக்குரிய நன்மை இரண்டு கீராத் ஆகும்." அப்துல்லாஹ்-இப்னு-உமர், அபூ ஹுரைராவிடம், அவர் நபிகளார் தரப்பிலிருந்து கூறுவன குறித்துக் கவனமாக இருக்கும்படி கூறினார். உடன் அபூ ஹுரைரா இப்னு உமரின் கையைப் பிடித்து நேரே ஆயிஷாவிடம் கூட்டிச் சென்றார். ஆயிஷா, அபூ ஹுரைராவின் அறிவிப்பை உறுதி செய்தார். "நாம் ஏராளமான கராரீத்களை இழந்து விட்டோம்" என்று பின்னைய காலங்களில் இப்னு-உமர் கூறலானார்.

நபித்தோழர்களின் பின்னர் தொடர்ந்து வந்தோர் இதே முறையைக் கையாண்டனர். இவ்வடிப்படையில் இப்னு-அபூ-முலைகா, அல்-ஸுஹ்ரீ, ஷுஅபா ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இமாம்-அல்-புஹாரியின் மாணவர் முஸ்லிம். அவரிடமிருந்து ஓர் உதாரணம்: இப்னு-அப்பாஸ் தனது மாமியார் மைமூனாவின் இல்லத்தில் ஓர் இரவைக் கழித்தார். அவரது கூற்றுப்படி, சிறிது நேரம் கழிய, நபிகளார் எழுந்து, வுளுச் செய்து, தொழ ஆரம்பித்தார்கள். இப்னு அப்பாஸும் அவ்வாறே செய்தார். வுளுச் செய்த பின் அவர் தொழுவதற்காக நபிகளாரின் இடது புறமாக வந்து நின்றார். அவ்வேளை நபிகளார், இடது புறத்தை விட்டு அவர் வலது புறமாக வந்து நிற்கச் செய்தார்கள். இந்தச் சம்பவத்தை இப்னு அப்பாஸிடமிருந்து குரைப் மூலம் பெற்று யஸீத்-பின்-அபூ ஸினாத் கூறும்போது இப்னு அப்பாஸ் முதலில் வலப்புறம் நின்றதாகவும் பின்னர் நபிகளார் அவரை இடப்புறம் நிற்கச் செய்தார்களெனவும் அறிவிப்புச் செய்தார். பின்னைய அறிவிப்பில் காணப்பட்ட தவறை விளக்க இமாம் முஸ்லிம் கையாண்ட முறை வருமாறு:

முதலில் குரைப்பின் மாணவர்களும் யஸீதின் உடன் கற்றோருமான அனைவரதும் அறிவிப்புகள் சேகரிக்கப்பட்டன. அவர்கள் அனைவரும், இப்னு அப்பாஸ் முதலில் நபிகளாரின் இடது புறமாக நின்றமையில் ஒன்றுபட்டிருந்தனர். அடுத்த படித்தரமாக இப்னு அப்பாஸின் மாணவர்களும், குரைப்பின் உடன் கற்றோருமான அனைவரதும் அறிவிப்புகளைச் சேகரித்தார் முஸ்லிம். அனைவருமே இப்னு-அப்பாஸ் முதலில் நபிகளாரின் இடது புறமாக நிற்க, பின்னர் வலது புறம் நிற்கச் செய்யப்பட்டார் என்பதில் ஒன்றுபட்டிருந்தனர். பின்னர் அவர் நபிகளாரோடு தனித்து நின்று தொழுதிருந்த தோழர்கள் அனைவரதும் அறிவிப்புகளைச் சேகரித்தார். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நபிகளாரை இணைந்து தொழும் தனியொருவர் அன்னாருக்கு வலப் புறமாக நிற்றலே சரியான முறை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே யஸீத் -பின்-அபூ ஸினாத் செய்த அறிவிப்பில் தவறிழைக்கப்பட்டமை உறுதி பெற்றது.

கால இடைவெளியின் பின்னான ஒப்பீடு

ஒரு முறை ஆயிஷா தன் மருமகன் உர்வாவிடம், நபிகளாரிடமிருந்து அப்துல்லாஹ்-பின்-அம்ர் ஏராளமாகக் கற்றிருப்பதாகவும், அவரிடம் சென்று ஹதீஸ் கேட்டு வரும்படியும் கூறினார். உர்வா, அப்துல்லாஹ்வைச் சந்தித்து, நபிகளாரின் ஹதீஸ் குறித்துக் கேட்டார். அவர் கற்றுக் கொண்ட ஹதீஸ்களில் ஒன்று, உலகிலிருந்து எவ்வாறு அறிவு எடுக்கப்பட்டுவிடும் என்பது பற்றியது. உர்வா ஆயிஷாவிடம் திரும்பி வந்த வேளை, தான் கற்றவற்றை ஒப்பிக்கலானார். அறிவு பற்றிய அக்குறிப்பிட்ட ஹதீஸ் குறித்து ஆயிஷா திருப்திப்பட்டவராக இல்லை. ஒரு வருட காலமளவு கழிந்து விட்டது. ஆயிஷா உர்வாவிடம் கூறினார்: "அப்துல்லாஹ் பின் அம்ர் மீண்டும் வந்திருக்கின்றார். அவரிடம் சென்று நபிகளாரின் ஹதீஸ் குறித்துக் கேளும். பின்னர், அறிவு குறித்தும், உலகிலிருந்து அது எடுக்கப்பட்டு விடுவது குறித்ததுமான ஹதீஸ் பற்றி வினவும்." உர்வா சென்று ஆயிஷா கூறியவாறே ஹதீஸ் குறித்துக் கேட்டார். ஆயிஷாவிடம் திரும்பி வந்த உர்வா, மீண்டும் அதே ஹதீஸை முன்னர் கூறியவாறே அப்துல்லாஹ் கூறியதாக அறிவித்தார். அப்போது ஆயிஷா கூறினார் "அவர் கூறியது சரியென்றே நான் நினைக்கின்றேன்; ஏனெனில் அவர் அதற்கு எதனையும் சேர்க்கவில்லை; அதனைச் சுருக்கவும் இல்லை."

எழுத்தில் பதியப்பட்ட ஹதீஸ்களோடு நினைவிலிருந்து கூறும் ஹதீஸ்களின் ஒப்பீடு

முஹம்மத்-பின்-முஸ்லிம், அல்-பத்ல்-பின்-அப்பாத் ஆகிய இருவரும் அபூ ஸுரைஹிடம் ஹதீஸ் கற்று வந்தார்கள். முஹம்மத் ஒரு ஹதீஸைக் கூற அதனை அல்-பத்ல் ஏற்காது, வேறொரு வகையில் அதனைக் கூறலானார். இருவரும் வாதாடத் தொடங்கிப் பின்னர், அபூ ஸுரைஹிடம் சென்று யார் கூறுவது சரியென வினவினார்கள். அபூ ஸுரைஹ் ஹதீஸ் தொகுப்பொன்றினை எடுத்து

அதில் குறிப்பிட்ட ஹதீஸைச் சுட்டிக் காட்டியதன் மூலம் முஹம்மத்-பின்-முஸ்லிம் கூறியது தவறு என்பது தெளிவாகியது.

ருகூஉக்குச் செல்லும்போது கைகளை உயர்த்துவது சம்பந்தமான நபிமொழியானது சுப்யான் என்பவர் இப்னு-மஸ்ஊத்திடமிருந்து பெற்று அறிவிக்கும் ஒரு ரிவாயத்தாகும். அதில் ஒரு வசனம் பிரச்சினையைக் கிளறுவதாக அமைந்தது. யஹ்யா-பின்-ஆதம், தான் அப்துல்லாஹ்-பின்-இத்ரீஸின் தொகுப்பினைப் பார்த்ததாகவும், பிரச்சினைக்குரிய அவ்வசனத்தைக் கண்டுகொள்ள முடியவில்லையென்றும் கூறினார். “இது குறித்து இமாம் புஹாரி கூறினார்: “இது சரி, ஏனெனில் அறிஞர்களைப் பொறுத்த அளவில் ஒரு தொகுப்பு கூடிய அதிகாரம் வாய்ந்ததாக அமைகின்றது. உதாரணமாக, சிலபோது ஒரு மனிதர் ஒரு ஹதீஸைக் கூறிப் பின்னர் தொகுப்புகளை நாடிச் செல்வார். அறிவிப்புகள் சம்பந்தமாக முரண்பாடுகள் எழக்கூடுமாயின் தொகுப்பிலுள்ள வாசகமே ஆதார பூர்வமானதாக ஏற்கப்படும்.”

அப்துர் ரஹ்மான்-பின்-உமர் ஒரு ஹதீஸை அபூஹுரைராவை மூலமாகக் கொண்டு அறிவிப்புச் செய்தார். இது ளுஹர் தொழுகையோடு சம்பந்தப்பட்டது. அபூ ஸுரைஹ் இந்த அறிவிப்பு தவறானது என்றார். இவர் மேற்கோள் காட்டிய ஹதீஸ் அபூ ஸஊத் மூலம் பெறப்பட்டது. அப்துர்-ரஹ்மான்-பின்-உமர் இந்த விஷயத்தை மறந்து விடவில்லை. சொந்த ஊர் திரும்பியதும் தனது தொகுப்புகளை ஆராய்ந்து பார்த்த அவர், தான் தவறிழைத்து விட்டிருந்தமையை உணர்ந்து கொண்டார். உடன் தனது தவறை ஏற்று அபூ ஸுரைஹுக்குக் கடிதம் எழுதியதோடு தனது மாணவர்களிடமிருந்து கற்ற இன்னின்னாருக்கெல்லாம் இந்தத் தவறு குறித்துச் சுட்டிக் காட்டும்படியும் வேண்டிய அப்துர் ரஹ்மான் கூறினார்: “அல்லாஹ் எனக்குத் தக்க நன்மையை அளிப்பான்; நரகில் துயருறுவதை விட அவமானப்படுவது மேல்.”

குர்ஆன் வாசகங்களுடன் ஹதீஸ் ஒப்பீடு

விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு பராமரிப்புப் பணம் சம்பந்தமாக பாத்திமா-பின்த்-கைஸ் கூறிய ஹதீஸை நிராகரிப்பதில் உமர் (ரலி) இம்முறையைக் கையாண்டுள்ளார். இதே முறையைப் பல சந்தர்ப்பங்களில் ஆயிஷா நாயகியும் கையாண்டுள்ளார்.

ஹதீஸ் திறனாய்வில் அறிவு பூர்வமான அணுகல்

இஸ்னாத் அல்லது அறிவிப்பாளர் தொடர் மூலமான ஹதீஸ் திறனாய்வு குறித்துப் பார்த்தோம். என்றாலும், இவ்வாறான திறனாய்வில் காரண காரிய அணுகுமுறை அல்லது அறிவு பூர்வமான அணுகல் பயன் படுத்தப்பட்டதா?

ஹதீஸ் திறனாய்வில் ஒவ்வொரு கட்டத்திலும் காரணகாரிய அணுகுமுறை பயன்படுத்தப்பட்டு வந்தது. என்றாலும், அடிப்படையில் இவ்வாறான அணுகுமுறைக்கும் சில எல்லைகள் உண்டு. அறிவு பூர்வ சிந்தையானது நபிகளாரின் ஹதீஸை ஏற்க அல்லது ஏற்காது விட பெரு மளவு துணை செய்வதாயில்லை. ஹதீஸ் தொகுப்புகளின் பெரும்பாலான அம்சங்களில் வெறும் காரணகாரியத் தொடர் சிந்தைக்கு எவ்வித இடமும் இல்லை. உதாரணமாக, ஹதீஸ் கிரந்தங்களில் நபிகளார் வலது புறமாகச் சாய்ந்து உறங்குவார்கள் எனவும், உறங்குமுன்னர் சில பிரார்த்தனைகள் செய்வர் எனவும், உறக்கத்திலிருந்து எழுந்ததும் குறிப்பிட்ட சில பிரார்த்தனைகள் புரிவர் எனவும் அறிய முடிகின்றது. நீர் அருந்தும் வேளைகளில் நபிகளார் நீர் அருந்தும் பாத்திரத்தை வலது கரத்தால் ஏந்தி மூன்று மிடர்களில் அருந்துவார்கள் என்றும் காணலாம். இக்கூற்றுகளனைத்தையும் நாம் அறிவுபூர்வமாக நோக்குவதாயின், ஒரு மனிதர் அண்ணாந்து பார்த்தவராக, வலது புறம் சாய்ந்தவராக அல்லது

இடப்புறம் சாய்ந்தவராக உறங்கலாம். எல்லா முறைகளும் இயலு மானவையே. நாம் நமது அறிவு பூர்வமான சிந்தையைப் பிரயோ கித்து ஒரு முறையானது இயலுமானதென்றும், பிறிதொரு முறை இயலாததென்றும் கூறுதல் முடியாது. இவ்வாறே பிரார்த்தனைகள், நீர் அருந்தும் முறை என்பன குறித்தும் காணலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் 'அக்ல்' (பகுத்தறிவு) மூலம் உறுதிப்படுத்தவோ, மறுத்துரைக்கவோ முடியாது. சரியான அல்லது தவறான முறை எனக் கூறுவது, நம்பிக்கையான நேரடி சாட்சிகள் அல்லது அறிவிப்பாளர்கள் மூலமே. இவ்வாறு நேர்மை யான, நம்பிக்கையான அறிவிப்பாளர்களைத் தேர்ந்து கொள்வதில் அறிவுபூர்வ சிந்தை எமக்குத் துணை செய்கின்றது. இவ்வாறான துணையானது, அறிவிப்பு 'அக்ல்'க்கு (பகுத்தறிவுக்கு) முரண்படாத வரை மட்டுமே வலுப்பெற்றிருக்கும். ஆரம்பத்திருந்தே ஹதீஸ் துறையில் 'அக்ல்' தனக்கெனச் சிறப்பிடம் பெற்றிருந்தது. அல்-முஅல்லிமீ- அல்-யமானீயின் கருத்துப்படி, ஹதீஸின் ஒவ்வொரு கட்டத்திலும் 'அக்ல்' பிரயோகிக்கப்பட்டு வந்தது. ஹதீஸ் கற்றல், கற்பித்தல், அறிவிப்பாளர்களை மதிப்பீடு செய்தல், ஹதீஸின் ஆதார வலுவை மதிப்பிடுதல், முதலாக ஒவ்வொரு கட்டத்திலும் அக்ல் பிரயோகிக்கப்பட்டது.

இப்னு-அபீ-ஹாதிம் அல்ராஸீ கூறுவார்: "ஒரு தீனாரின் உண்மைத் தன்மையை மற்றொரு தீனாருடன் ஒப்பீடு செய்து பார்ப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது தனக்குரிய நிறத்திலும் தூய்மையிலும் அது வேறுபட்டி ருப்பின் அது போலியான தென்பது தெளிவாகும். இவ்வாறே வைரம் மற்றொன்றுடன் ஒப்பீடு செய்வதன் மூலமே பரீட்சிக்கப் படும். பிரகாசத்திலும் கடினத்திலும் அது வேறுபடின் வெறும் கண் ணாடியாகவே அது கணிக்கப்படும். ஒரு ஹதீஸின் வலுவான தன்மை நம்பிக்கையான அறிவிப்பாளர்கள் மூலம் அது கிட்டு வதைப் பொறுத்திருக்கும். அத்தோடு ஹதீஸ் வாசகம்கூட நபித்துவ வாசகமாகக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்."

அல்-காதிப்-அல்-பக்தாதீ கூறுவார் : "எல்லா வாசகங்களும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்குவன: அவற்றில் ஒன்று தவறானது எனக் கொள்ளப்படும் வாசகம், இதற்குக் காரணம், 'அக்ல்' அதனை ஏற்காது விடுவதாகும்."

ஹதீஸ் திறனாய்வு சம்பந்தமான அடிப்படை விளக்கங் களை இயன்றளவு கலைச் சொற்களைத் தவிர்த்து முன்வைத்துள் ளோம். இது உண்மையில் ஒரு மேலோட்டமான நோக்கேயன்றி வேறல்ல. என்றாலும் சாதாரண ஒரு வாசகருக்கு ஹதீஸ் திறனாய்வு சம்பந்தமாகச் சிறிதளவேனும் தெரிந்து கொள்ள இது துணை செய்திருக்குமெனக் கருதுகின்றோம். இத்திறனாய்வு முறையின் பயனாகக் கிட்டியன என்னவென அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

அத்தியாயம் – 7

அறிஞர்களின் தரப்படுத்தலும் ஹதீஸின் தரப்படுத்தலில் அதன் தாக்கமும்

நாம் மேலே நோக்கிய ஹதீஸ் திறனாய்வு முறையானது ஒரு குறிப்பிட்ட அறிவிப்பாளரது ஹதீஸ் எத்துணை தூரம் வலுவுள்ள தாய் அமைந்தது என்பதனை அறிந்து கொள்ளவும், அதன் மூலம் அவரது ஹதீஸ் துறை சாதனைகளை மதிப்பிட்டு அவரைத் தரப் படுத்திக்கொள்ளவும் துணை செய்தது. எவ்வாறாயினும் அறிவிப்பா ளர்கள் எவ்வளவு கூர்மையானவர்களாக இருந்தாலும் அவர்களது அறிவிப்புகளை ஏற்றுக் கொள்ள இந்த முறைகளை மட்டும் துணை செய்வனவாகக் கொள்ள முஹத்திஸீன்கள் தயாராயில்லை. அதற்கு மேலும் சில கட்டுப்பாடுகளும், தேவைகளும் விதிக்கப்பட்டன.

ஒரு ஹதீஸை ஏற்றுக்கொள்ள, அறிவிக்கப்பட்ட செய்தி உண்மையாயிருத்தல் மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. மேலாக, அறிவிப்பாளர் 'அத்ல்' ஆக நல்லொழுக்கம் பூண்டவராக வும் இருத்தல் வேண்டும். வேறு வகையில் கூறுவதானால் அவரது நடத்தை, இஸ்லாமிய அடிப்படையில் ஏற்கக்கூடியதாக இருத்தல் அவசியம்.

இரண்டாம் நூற்றாண்டு அறிஞர்களுள் ஒருவரான இப்னு முபாரக் (118-181)கின் கண்ணோட்டத்தில், அறிவிப்பாளர்,

ஜமாஅத்தோடு தொழுபவராக,

நபீத் அருந்தாதவராக (நீண்ட காலத்துக்கு வைத்திருந்து அருந்தினால் மயக்கந் தரும் பழரசம்- நபீத்)

பொய்யுரைக்காதவராக,

சிந்தையில் எவ்வித கலக்கமும் இல்லாதவராக இருப்பார். ஒருவர் எத்துணை பேரறிஞராக இருந்தாலும் அவரது ஒழுக்க நெறிகள் சந்தேகத்துக்குரியனவாக அமையக்கூடுமாயின் அவரால் அறிவிப்புச் செய்யப்பட்ட ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்பட மாட் டாது. அல்லாஹ்வும் அவனது தூதரும் சான்று பகர்ந்த, நல்லொ ழுக்கம் பூண்டவர்களாக இருந்த நபித்தோழர்கள் தவிர்ந்த ஏனை யோர், அவர்களது அறிவிப்புகள் ஏற்கப்படவேண்டுமாயின் தமது ஒழுக்க நெறிகள் பற்றிய சான்றினைக் கொண்டிருக்க வேண்டியவர் களாகின்றார்கள். பெரும்பாலானவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது ஒழுக்க நெறிகள் பற்றிய சான்றினைப் பெற, அவர்களது சமகாலத்தவர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கின்றமை இயல்பு. இச்சம காலத்தோர் சிலபோது அறிவிப்பாளர்க்கு ஆதர வாக அல்லது எதிராக இருந்து வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. அவற் றின் செல்வாக்கும் அவர்களது கருத்துகளில் பதிந்துள்ளமையை அவதானிக்கலாம். இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து தெளிவு பெற அறிஞர்களிடையே ஏராளமான கலந்துரையாடல்கள் நிகழ்ந்து, சில பொதுவான நியதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சில அறிவிப்புகளைப் பொறுத்தமட்டில், வரலாற்று அம்சங்களின் ஒப்பீடு, ஆவணங்களின் பரிசீலனை, எழுத்தில் பதியும்போது பயன் பட்ட கடதாசி, மை என்பன பற்றிய பரிசீலனைகள் மூலம் பொய் யுரைகளையும் புனையுரைகளையும் கண்டு கொள்ள முடிந்தது. முஹத்திஸீன்கள் இவ்வாறான அறிவியல் முறைகளைக் கைக் கொண்டு தம் பரிசீலனைகளை நடத்தியிருந்தாலும்கூட, அவை மட்டும் போதுமானவையாக மாட்டா. ஏனெனில் ஓர் அறிஞரின் சீரிய ஒழுக்க நெறியை மதிப்பிட்டுக்கொள்ள இவை துணை செய்யப் போவதில்லை. எவ்வாறாயினும் இந்த இரு அம்சங்களும், அதாவது, நல்லொழுக்க நெறி (அத்ல்) சரியான, நுணுக்கமான

அறிவிப்பு என்பன இரண்டும் இணைந்து காணப்படும் ஒருவர் 'ஸிகா' (நம்பிக்கையானவர்) என அழைக்கப்படுவார். இவர்களது அறிவிப்புகள் பொதுவாக முஹத்திஸீன்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டன.

ஒழுக்க நெறிகள் ஏற்கப்படக் கூடிய நிலையில், அறிவிப்புத் திறன் மிக்க உயர் தரத்திலில்லாத ஓர் அறிஞரின் அறிவிப்புகள் இரண்டாம் தரத்தனவாகக் கொள்ளப்பட்டு அவர் சதூக் (உண்மை யானவர்) எனக் கருதப்பட்டார். தன்னிலும் அறிவிப்புத்திறன் மிகக் கூடியவரான ஒருவரது அறிவிப்புடன் முரண்பட்டால் ஒழிய, அவரது அறிவிப்பு உண்மையானதென ஏற்கப்படும். அடுத்த தரத்தில் உள்ளவர், ஒழுக்க நெறியில் ஏற்புடையவராயிருந்தாலும் இலக்கிய ஆளுமை குன்றியவராகவும், தவறுகள் இழைப்பவராகவும் இருப்பார். அவர் ஸதூக் யஹிம் என அழைக்கப்பட்டார். ஒழுக்க நெறி பிறழ்ந்தவராயிருப்பின் அறிவிப்பாளர் எவ்வளவு தான் சிறந்ததோர் அறிஞராயிருப்பினும்கூட அவரது அறிவிப்பு ஏற்கப் படமாட்டாது.

எனவே ஏற்கப்படக்கூடிய அறிவிப்புகளைச் செய்யும் ஒருவர் இரு வகையிலும் திருப்தி காணப்பட வேண்டியவராயிருப் பார். ஒன்று ஒழுக்க நெறி பிறழாமை; மற்றது-அறிவிப்புத்திறன். அறிவிப்புத் திறனில் காணப்படக்கூடிய சிறு குறைபாடுகளுக்குத் தீர்வுகாண முடிந்தது; ஒழுக்க நெறியிலான பிறழ்வு கொண்டோரோ எவ்வகையிலும் ஏற்கப்படாதோராயிருந்தனர்.

உதாரணமாக, ஒரு ஹதீஸை அறிவிப்புச் செய்யும்போது பல தவறுகளை இழைக்கும் ஒருவர், பலவீனமுற்றவர் எனக் கருதப் பட்டார். அவர் ஒரு ஹதீஸை அறிவித்து, அந்த அறிவிப்பு வேறு எவராலும் உறுதி செய்யப்படாவிடின் அந்த ஹதீஸ் ஏற்கப்பட மாட்டாது. ஏனெனில் அந்த அறிவிப்பு தவறுகள் இழைக்கப்பட்ட தொன்றாக இருக்கலாம் என்ற ஐயம் ஏற்கெனவே இருந்துள்ளது. என்றாலும் அறிவிப்புத்திறன் குன்றிய, பலவீனமானவர் எனக்

கருதப்பட்ட வேறு ஒருவர் குறிப்பிட்ட அந்த அறிவிப்பின் செய்தி யையும் நோக்கையும் இயைந்த வகையில் ஒரு ஹதீஸை அறிவிப்புச் செய்வாராயின், அவ்வேளை அந்த ஹதீஸ் ஏற்கப்படும். எவ்வாறா யினும் அது தரத்தைப் பொறுத்தமட்டில் குன்றிய நிலையிலேயே வைக்கப்படும்- ஒரு மாணவன் வெறுமனே 'D' தரம் பெற்றுச் சித்தி பெறுவது போல.

அறிஞர்களின் அறிவிப்புகளில் ஏற்கப்பட்டனவற்றையும் நிராகரிக்கப்பட்டனவற்றையும் தரப்படுத்தி அமைக்கவும் ஒரு முறைமை கையாளப்பட்டது. பின்னைய கால அறிஞர்கள் தரப் படுத்தலினை மிக்க தெளிவான ஒழுங்கு முறையில் அமைத்தார்கள். ஆரம்ப கால அறிஞர்கள் நான்கு தரங்களையே அமைத்திருக்க, பின்னைய கால அறிஞர்கள் ஆறு தரங்களை அறிமுகம் செய்தனர். பின்னைய காலத்தின் தலைசிறந்த ஹதீஸ் வல்லுனர்களில் ஒருவ ரான இப்னு ஹஜர் (773-852) எனும் அறிஞரின் தரப்படுத்தல் கீழே தரப்படுகின்றது. அவர் பன்னிரண்டு தரங்களைக் கொண்டிருந்தார்.

1. ஸஹாபா- நபிகளாரின் தோழர்கள்.
2. திகாதுன் தப்துன்- மிகவும் சிறந்த அறிஞர்கள் எனக்கொள் ளப்பட்டோர். இவர்கள் திகாதுன்-தப்துன் அல்லது அவ்தா துன்னாஸ் மிகவும் உண்மையான, உறுதியான அறிவிப்புச் செய்பவர்கள்.
3. திகதுன் (நம்பிக்கையான), முத்கினுன் (சரியான) அறிவிப்புச் செய்பவர்கள். இவர்கள் மேலதிக விதந்துரைகள் இல்லாமல் ஏற்கப்பட்டவர்கள்.
4. மூன்றாம் தரத்தினின்றும் சற்றே குறைந்தவர்களான ஸதூக் (உண்மையானவர்கள்) என்ற தரத்தோர்.
5. நான்காம் தரத்தினின்றும் சற்றே குறைந்த ஸதூக் யஹிம் என்ற தரத்தோர். (உண்மையான; சில போது தவறுகள் இழைக்கக் கூடியோர்)

6. சிறிய அளவே அறிவிப்புச் செய்யும் ஒருவர். அவர் பொய் உரைப்பவர் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. அவர் கூர்மையான அறிவுபடைத்தவர் எனக் கூறுவதற்கும் தக்க சான்றுகள் இல்லை. அவர் மக்பூல் (ஏற்கப்படக்கூடியவர்) எனப்பட்டார். இவரது அறிவிப்புகளை வேறோர் அறிஞரும் உறுதி செய்வாராயின் இவர் 'லய்யின்' எனப்பட்டார்.

7. ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஓர் அறிவிப்பாளர். என்றாலும் இவரது அறிவிப்புகள் உறுதியானவை என அறிஞர்கள் தீர்ப்பு வழங்கவில்லை. இவ்வாறானோர், மஜ்ஹூல்-அல்-ஹால் எனப்பட்டனர். அதாவது, அவரின் நேர்மை பரீட்சைக்குள்ளாக்கப்படவில்லை என்பதாகும். வேறு ஒரு வகையில் கூறுவதானால், வெளிப்படையாக அவரது நேர்மை விளங்கினாலும், அவர் நம்பிக்கைக்குரியவர் தானா என்பது குறித்து ஆதாரம் இல்லாத நிலை.

8. எந்த ஓர் அறிஞராலும் அங்கீகாரம் பெற்றிராதவரும், சில அறிஞர்களால் எதிர்க்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டவருமான ஒருவர். இவர் லயீப் (பலவீனமானவர்) என அழைக்கப்பட்டார்.

9. ஹதீஸ் வட்டத்தில் அறியப்படாதவராக. ஒரேயோர் அறிஞரால் மட்டும் மேற்கோள் காட்டப்பட்டவராக, வேறு அறிஞர்கள் எவராலும் அங்கீகாரம் அளிக்கப்படாதவரான ஒருவர் மஜ்ஹூல் (அறியப்படாதவர்) என வழங்கப்பட்டார்.

10. எந்த ஓர் அறிஞராலும் அங்கீகாரம் பெற்றிராத, பல அறிஞர்களால் தக்க காரணங்கூறி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட, பல தவறுகள் இழைத்த, நேர்மையின் அங்கீகாரம் பெற்ற தரங்களை எட்டாத, அறிவு குன்றிய, ஒருவர் 'பாஸிக்'எனப்பட்டார்.

11. பொய்யுரைகளைப் புனைந்து கூறுபவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவர்; இவர் முத்தஹம்-பில்-காதிப் எனப்பட்டார்.

12. பொய்யர் என அழைக்கப்பட்டவர். இவர் கத்தாப் எனப்பட்டார் (அல்லது வத்தா-புனைந்துரைப்பவர்-எனப்பட்டார்.)

இவ்வாறான தரப் பாகுபாடுகள் பின்னைய கால அறிஞர் களாலேயே பின்பற்றப்பட்டு வந்தன. ஒவ்வொரு தரத்துக்கும் பல்வேறு அறிஞர்கள் வெவ்வேறு நாமங்களைச் சூட்டியிருந்தனர். இவற்றின் விளக்கங்களை அறபு நூல்களில் கண்டு கொள்ளலாம். மேலாக, சில ஆரம்ப கால அறிஞர்களது பதப் பிரயோகங்களின் கருத்துக்களிலும் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. எனவே, ஆரம்ப கால அறிஞர்களது பதப்பிரயோகங்களைக் கையாள்வதி லும், குறிப்பிட்ட ஓர் அறிஞரால் எந்தத் தரத்துக்கு எவ்வாறான பதங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதை அறிந்து கொள்வதிலும் ஹதீஸ் மாணவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உதாரண மாக, சில பல்கலைக்கழகங்கள், தமது விரிவுரையாளர்கள் குறித்துப் பின்வரும் தரங்களைக் கொண்டிருக்கும்: விரிவுரையாளர்; துணைப் பேராசிரியர்; பேராசிரியர். வேறு பல்கலைக்கழகங்களில் அதே கல்வித் தேவைகளுக்கும் தகைமைகளுக்கும் மேல் வரும் தரங் களைப் பிரயோகிப்பர்: துணைப் பேராசிரியர்; இணைப் பேராசி ரியர்; பேராசிரியர்.

இந்தப் பல்கலைக்கழகங்கள் பேராசிரியர் என்ற தரத்துக் கான பதப் பிரயோகம் குறித்து ஒன்றுபட்ட கருத்துக் கொண்டிருப் பினும், துணைப் போராசிரியர் என்ற பதப்பிரயோகம் குறித்து மாறு பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஆரம்ப கால அறிஞர் களது பதப் பிரயோகங்களைப் பொறுத்தமட்டில் இதே மாதிரியான நிலைமையே காணப்படுகின்றது. அவர்கள் பாவித்த பதங்களும், அவை பிரயோகிக்கப்பட்ட தரங்களும் மாறுபடுவனவாயிருந்தன. எனவே, மாணவர்கள் இவ்வாறான வித்தியாசங்களைச் சரிவர உணர்ந்து கொள்ளாதிருப்பின் அவர்கள் பாரிய பல தவறுகள் இழைக்கக்கூடும்.

ஆரம்ப கால அறிஞர்களது ஒழுக்க நெறிகள், அறிவிப்புத் திறன் என்பன கொண்டு திறனாய்வாளர்கள் எவ்வாறு அவர்களைத் தரப்படுத்திக்கொள்ள முடிந்தது என விவரித்து, அவர்கள் பன்னி ரண்டு தரத்தோராக இப்னு-ஹஜரால் வகைப்படுத்தப்பட்டமை

குறித்தும் விளக்கம் பெற்றோம். இவ்வாறான தரப்படுத்தல், ஹதீஸ் களிலும் பல்வேறு தரங்களை ஏற்படுத்தி வைத்தது.

ஹதீஸ்களின் தரப்படுத்தல்

ஹதீஸ் இரண்டு தரங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

ஏற்கப்பட்டவை (மக்பூல்)

நிராகரிக்கப்பட்டவை (மர்தூத்)

மக்பூல் என்ற தரத்திலுள்ள ஹதீஸ்கள் இரு பிரிவாக அமையும்:

ஸஹீஹ் (ஆதார பூர்வமானவை)

ஹஸன் (ஒப்புக்கொள்ளக் கூடியவை)

இவையிரண்டும் இவ்விரண்டு துணைப் பிரிவினவாக அமைக் கப்பட்டுள்ளன:

தன்னளவிலேயே ஆதாரபூர்வமானவை (ஸஹீஹ்-லி-தாதிஹி)

வெளியாதாரங்கள் இருக்கும் காரணத்தால் ஆதாரபூர்வ மானவையாக அமைந்தவை (ஸஹீஹ்-லி-கைரிஹி)

தன்னளவில் ஒப்புக் கொள்ளக் கூடியன (ஹஸன்-லி-தாதிஹி)

வெளியாதாரங்கள் காரணமாக ஒப்புக்கொள்ளக் கூடியன. (ஹஸன்-லி-கைரிஹீ)

உண்மையில் இக்கடைசித் தரமானது, பலவீனமான ஹதீஸ் களைக் கொண்டதாயிருக்கும். இதில் கூறப்படும் விஷயம், அல்லது அதில் ஆராயப்பட்டுள்ள பிரச்சினையானது, வேறு ஹதீஸ்களில் பிரஸ்தாபிக்கப் பெற்று, அதன் மூலமாகவே, பலவீன நிலையிலுள்ள இந்த ஹதீஸ் ஆதாரம் பெற்றுக் கொள்கின்றது.

நிராகரிக்கப்பட்டனவான ஹதீஸ்களும் இரண்டு பிரிவு களைக் கொண்டன:

முழுமையாகவே நிராகரிப்புக்குள்ளானவை;

சில புறக்காரணிகளின் நிமித்தம் சிலபோது ஏற்கப்படும் நிலையிலுள்ளவை.

எவ்வாறாயினும் நிராகரிக்கப்பட்டனவான ஹதீஸ்கள் பல பெயர்கள் கொண்டுள்ளன. அவை குறித்துப் பின்னர் விரிவாகக் காண்போம்.

ஸஹீஹான ஹதீஸுக்கான நியதிகள்

இவற்றின் அறிவிப்புகள் அனைத்தும் பின்வரும் மூன்று தரங்களிலும் அடங்கியனவாக இருக்க வேண்டும்.

1. அறிவிப்பாளர் தொடர் (இஸ்னாத்) பூரணமாகப் பேணப்பட் டிருத்தல். அதாவது மூல அறிவிப்பாளர் வரை, தொடரில் எவ் விதத் துண்டிப்பும் இல்லாதிருத்தல் அவசியம்.

2. தனிமைப்படுத்தப்பட்டதாக இருத்தல் கூடாது (ஷாத்). அதாவது குறிப்பிட்ட ஹதீஸ், ஏனைய பல அறிஞர்களது அறிவிப்புகளுடன் முரண்படாததாக இருத்தல். அத்தோடு பிரஸ்தாப ஹதீஸ், குறிப்பிட்ட அறிவிப்பாளரைவிடத் தகுதி கூடிய ஓர் அறிவிப்பாளரோடு முரண்படாததாக இருத்தல் அவசியம்.

3. மறைவான பலவீனங்கள் இல்லாதிருத்தல் வேண்டும்.

உதாரணமாக, நம்பிக்கையான ஓர் அறிஞர், குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் நபிகளாரின் நேரடி வாக்காகுமென அறிவிக்கின்றார். மறு புறம், அறிஞர்களுள் பெரும்பாலோர், இந்த ஹதீஸின் மூல அறிவிப் பாளராக நபித்தோழர் ஒருவரையே குறிக்கின்றனர். இவ்விடத்தில்

குறிப்பிட்ட வாசகத்தைத் தவறுதலாக, நபிகளாரின் வாக்காக அவ்வறிஞர் குறித்துள்ளமை புலனாகும். என்றாலும், நாம் அந்த ஹதீஸை மிகத் தெளிவாக ஆராயாது, தனி அறிவிப்பாளர் தொடர் ஒன்றினை மட்டுமே அவதானித்தால் அது, அறிவிப்பாளர் தம் தரங்கள் கொண்டும், ஏனைய நியதிகள் பூரணப்படுத்தப்பட்டி ருப்பது கொண்டும், சரியான ஒன்றாகவே விளங்கும். இதனை நான் மறைவான பலவீனம் (இல்லா-காதிஹா) எனக் குறிப்பிட்டுள்ளேன். அதாவது பலவீனங்கள் முற்றிலும் கவனத்தில் கொள்ளப்பட வில்லையென்பதாகும். அதனைப் பின்வருமாறு கூறலாம்.

தொழில் விண்ணப்பதாரர் ஒருவரின் உடல்நிலை சம்பந்த மான ஒரு சான்றிதழை வேண்டி நிற்பது எல்லாப் பொதுச் சேவை நிறுவனங்களதும் வழக்கம். சிலவேளை ஒரு விண்ணப்பதாரி, பலமிக்க ஒருவராக, கடமைகளை நிறைவேற்றக்கூடிய ஒருவராகத் தோற்றுவார். எனினும் உடல் பரிசோதனை அவரை அத்தொழிலுக் குத் தகுதியற்றவராக்கி விடுகின்றது. மறுபுறம், ஏனைய சில விண்ணப்பதாரிகள் வெளிப்படையாகவே உடலமைப்பில் சில குறைபாடுகள் உடையோராகத் தோற்றினும், சுகாதாரப் பரிசோத னையில் அத்தொழிலுக்குத் தகுதியானவர்களாகக் கொள்ளப்படு வர். ஏனெனில் வெளிப்படையான அக்குறைபாடுகள், குறிப்பிட்ட அக்கடமையைச் செய்ய அவர்களுக்குக் குந்தகம் விளைப்பனவாக இல்லை. இதே நிலைமை ஹதீஸ் சுகவீனம் (இலல்-அல்-ஹதீஸ்) பொறுத்தமட்டிலும் உண்மையானது. சில சந்தர்ப்பங்களில் அது ஹதீஸின் ஆதாரபூர்வ நிலையைக்கூட பாதிக்கும். (இல்லா-அல்-காதிஹா). வேறு சந்தர்ப்பங்களில் அவ்வாறு ஏற்படுவதில்லை.

ஹதீஸ்–ஹஸன்–லி தாதிஹீ

ஹதீஸ் ஸஹீஹுக்குக் கூறப்பட்ட மேற்கண்ட நியதிகள் அனைத்தும் ஹதீஸ் ஹஸன் லி தாதிஹீக்கும் பூரணமாக இருத்தல் வேண்டும். என்றாலும் யாரேனும் ஓர் அறிவிப்பாளர், அல்லது அறிவிப்பாளர் தொடரிலுள்ள அனைவரும் தர அடிப்படையில்

நான்காம் தரத்தில் (ஸதூக்) அல்லது சமமான நாம பிரயோகம் கொண்ட தரத்தில் இருப்பார்கள்.

ஹதீஸ் ஹஸன் லி கைரிஹீ

குறிப்பிட்ட ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் ஐந்தாம் அல்லது ஆறாம் தரத்தைச் சார்ந்தவராக இருந்து அக்குறிப்பிட்ட ஹதீஸ், அமைப்பில் அல்லது நோக்கில் ஒத்ததான வேறொரு ஹதீஸினால் ஆதரிக்கப்பட்டிருக்கக் கூடுமாயின், அந்த ஹதீஸ், ஹஸன்-லி-கைரிஹீ என வழங்கும். என்றாலும், நினைவில் இருத்திக் கொள்ள வேண்டிய ஓர் அம்சம் என்னவென்றால், அறிவிப்பாளர் வரிசை யான இஸ்னாத் பத்து அறிவிப்பாளரைக் கொண்டிருக்க, அதில் ஒன்பது பேர் இரண்டாம் தரத்தைச் சேர்ந்தோராக, ஒரேயொருவர் எட்டாம் தரத்தவராயிருப்பின் அந்த ஹதீஸ் நிராகரிப்புக்குள் ளாகும். பொதுவான ஏற்பு, மிகவும் பலவீனமான அறிவிப்பாளர் பற்றிய பரிசீலனையைப் பொறுத்ததாகவே இருக்கும். எனவே பலவீனமான ஓர் அறிவிப்பாளர் காரணமாக ஹதீஸே பலவீனமான தாகி விடும். அறிவிப்பாளர்களுள் ஒருவர் பொய்யர் எனக் கொள் ளப்பட்டு ஏனைய அனைவரும் நம்பிக்கையாளர்களாக (திகாஹ்) இருந்து, குறிப்பிட்ட ஹதீஸ் ஏனைய இஸ்னாத்கள் மூலம் அறியப் பட்டிராதிருப்பின் அது 'மௌழூ' (போலியான) ஹதீஸ் எனக் கொள்ளப்படும். ஏனைய இஸ்னாத்கள் மூலம் அது ஏற்புக்குரியது எனத் தெளிவாகியிருந்தாலும் கூட, இக்குறிப்பிட்ட ஹதீஸ், மவ்தூ-பி-ஹாதா-அல்-இஸ்னாத் (தொடர் காரணமாகப் புனைந்து ரைக்கப்பட்டது) என்றே வழங்கப்படும்.

ஹதீஸ்களின் தரப்படுத்தலைப் பொறுத்து, ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தவர்கள் அனைவரதும் வாழ்க்கை வரலாற்றினை அறிஞர்கள் தெளிவுற ஆராய்ந்துள்ளார்கள் என்பது தெளிவு. பின்னர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு ஹதீஸை, அதே ஹதீஸை அறிவித்த ஏனைய அறிஞர்களது அறிவிப்புகளுடன் ஒப்பீடு செய்து

உறுதி செய்யப்பட்டமையை அல்லது முரண்பட்டுள்ளமையை ஆராய்ந்து அதன் பின்னரே தம் தீர்ப்புகளை வழங்கி வந்தனர்.

இவ்வாறான தெளிவான ஆய்வு முறையின் காரணமாக ஒவ்வோர் அறிஞர் குறித்தும் மிகவும் தெளிவான விவரங்களைச் சேகரித்துக் கொள்ள முடிந்தது. அவர் அறிவிப்புச் செய்த ஹதீஸ்கள் எத்தனை? எத்தனை அறிவிப்புகளைப் பொறுத்தமட்டில் ஏனைய அறிவிப்பாளர்கள் அவற்றை உறுதி செய்தனர்; எத்தனை பேர் முரண்பட்டனர்? எத்தனை ஹதீஸ்களை வேறு எவரும் இல்லாது இவர் மட்டுமே அறிவிப்புச் செய்தார்? என்பன போன்ற விவரங்கள் அனைத்தும் கிடைத்தன.

நம்பிக்கையாளர் (திகாஹ்) எனத் தரப்படுத்தப்பட்ட ஓர் அறிவிப்பாளர் தானாகவே சில அறிவிப்புகளைச் செய்துள்ளார் எனக் கொள்வோம். இது அவர் அறிவிப்புச் செய்துள்ள மொத்த ஹதீஸ்களின் தொகையைப் பொறுத்தமட்டில் மிகக் குறைவான தொன்றாகவிருப்பின் அவை ஸஹீஹ் கரீப் (ஆதாரபூர்வமான ஆனால் புதுமையானவை) எனக் கொள்ளப்பட்டன. எனினும் அறிவிப்பாளர் நான்காம் தரத்தவராக அல்லது அதற்கும் குறைந்த தரத்தவராக இருப்பாராயின் அப்போது அது 'மத்ரூக்' என வழங்கும். ஓர் அறிவிப்பாளர் ஏனையோருடன் இஸ்னாத்தில் அல்லது வாசகத்தில் இயையாத வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல ஹதீஸ்களை அறிவித்திருப்பின் அவர் 'மத்ரூக்' என வழங்கப்படுவார். அதன் மூலம் அவரது அறிவிப்புகள் ஏற்கப்படா என்பதோடு, ஏனைய அறிஞர்களது அறிவிப்புகளைப் பரிசீலனை செய்யவும் அவரது அறிவிப்புகள் பயன்படுத்தப்படமாட்டா.

பின்னைய காலங்களில் பொய்யர் ஒருவர் பல ஹதீஸ்களைத் தானே புனைந்துரைத்து, அவற்றை உண்மையானவை என நிரூபிக்கும் வகையில் இஸ்னாத்களையும் சரிவர அமைத்து இஸ்னாத்களை மட்டுமே பரிசீலிக்கும் முஹத்திஸீன்கள் மத்தியில் அவற்றை உலவ விட்டிருக்கக் கூடுமே என்ற எண்ணம் எழுவது

இயல்பு. என்றாலும், அறிவிப்பாளர் பற்றிய விவரங்களைப் பரிசீலிப் பதோடு அவர்கள் அந்த ஹதீஸ்களை எந்த ஓர் அறிஞரிடமிருந்து பெற்றனர் எனக் கூறினரோ அதே அறிஞரின் ஏனைய மாணவர் களும் அவற்றை அறிவிப்புச் செய்துள்ளனரா என்பதையும் ஆராய் வர் என்பது இப்போது தெளிவாகியிருக்கும். அதன் மூலம் இந்த அறிவிப்பாளர் தவிர்ந்த ஏனையோரால் இந்த ஹதீஸ் அறியப் பட்டிருக்கவில்லை என்பது தெரியவர, குறிப்பிட்ட அந்த அறிவிப் பாளர் பொய்யர் என இனங்காட்டப்படுவார்.

உண்மையில் முஹத்திஸீன்கள் கையாண்ட ஒழுங்கு முறைகள் மிக்க யதார்த்தமானவை. எமது தனிப்பட்ட அனுபவங் களையே பார்ப்போம். எம்முடன் பல வருட காலத் தொடர்பு கொண்டுள்ள ஒருவர்; ஒரு போதும் தவறுகளையே இழைக்காதவர். அவரது கூற்றொன்றினை மறுத்துரைக்க எவ்வித ஆதாரமும் இல்லாத நிலையில் எவ்வித ஆதாரமும் இல்லாமலேயே அவரது கூற்றினை நாம் ஏற்றுக்கொள்வோம். எனவே, நீண்ட காலப் பரீட் சையின் பின்னர், நூற்றுக்கணக்கான ஹதீஸ்களைத் தவறுகளேது மில்லாத வகையில் அறிவிப்புச் செய்து, நம்பிக்கையானவர் என அங்கீகாரம் பெற்று, எப்போதும் உண்மையே மொழிந்தவராய் இருக்கும் ஒருவர், தனது கூற்றுக்குச் சார்பான ஆதாரங்கள் கொண் டிராத நிலையிலும்கூட, அவர் கூறியது தவறு என ஐயமற நிரூபிக் கப்படாத நிலையில் அவரது கூற்றை நாம் ஏற்கவே செய்வோம்.

நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்

எந்த ஒரு ஹதீஸும் ஏற்கப்படுவதற்கான நியதிகள் அனைத் தையும் நான் தெளிவுற விளக்கியுள்ளேன். இந்நியதிகளுள் எதையே னும் பூரணப்படுத்தாத எந்த ஒரு ஹதீஸும் நிராகரிப்புக்குள் ளாகியது. எவ்வாறாயினும் நிராகரிப்புக்கான காரணங்களை நாம் மூவகைப்படுத்திக் காணலாம்.

1. அறிவிப்பாளரின் குறைபாடு.
2. இஸ்னாத்தில் ஏற்படும் முறிவு.
3. சந்தர்ப்பவசமான காரணங்களினால் ஏற்படும் பலவீனம்.

1. அறிவிப்பாளரின் குறைபாடு காரணமான நிராகரிப்பு

நான் முன்னர் காட்டியவாறு, இப்னு ஹஜரின் தரப்படுத்தலின் படி எந்த ஓர் அறிவிப்பாளரும் ஆறாம் தரத்தவராக அல்லது அதிலும் குறைந்தவராக இருப்பின் அது ஹதீஸைப் பலவீனப் படுத்தும். எவ்வவாறாயினும் இப்பலவீனம் ஒரே மாதிரியானதாக இராது. உதாரணமாக, பன்னிரண்டாம் தரத்தினரான ஒருவர் செய்துள்ள அறிவிப்பு மட்டுமே பொய்யுரை (மௌழூ) ஆகக் கருதப் படும். பதினொராம் தரத்தவராயின் அவ்வறிவிப்பு 'பாதில்' எனப் படும். அறிவிப்பாளர் பத்தாம் தரத்தவராயின் அவ்வறிவிப்பு 'முன்கர்' எனப்படும். இம்மூன்று தரங்களையும் சார்ந்த அறிவிப்பாளரும், அவர்களது அறிவிப்புகளும் ஏனைய அறிவிப்புகளைச் சரி காணப் பயன்படா. என்றாலும் ஓர் அறிவிப்பாளர் ஆறு முதல் எட்டு வரையான தரங்களுக்குட்பட்ட ஒரு தரத்தவராயிருப்பின் அவரது ஹதீஸ் பலவீனமானதாயிருக்கும். ஆனாலும் தனது தரத்தவரேயான அல்லது உயர்தரத்தவரான மற்றுமோர் அறிவிப்பாளரின் அறிவிப்பு இவரது அறிவிப்புடன் இயைந்து செல்லக் கூடுமாயின் இப்பலவீனமான ஹதீஸ் ஹஸன்-லி-கைரிஹீ எனக் கொள்ளப் படும்.

2. இஸ்னாத்தில் ஏற்படும் முறிவு காரணமான நிராகரிப்பு

இவ்வகைப்படுத்தலில் முர்ஸல், முன்கத்இ, முஃதல் என்பன இணைக்கப்படக் கூடியன. சிலபோது மவ்கூப், மக்தூ என்பனவும் குறிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த ஹதீஸ்கள் நபிகளாரைத் தவிர்ந்த ஏனையோரையே மூலமாகக் கொண்டிருப்பதால் அவை விதிகளாகக் கொள்ளப்பட வேண்டியதில்லை.

முஅன்அன் என்பதும் இப்பிரிவில் சிலபோது அடங்கும். இப்பதப் பிரயோகத்தைப் பயன்படுத்தும் அறிவிப்பாளர் தத்லீஸுக் குப் பிரசித்தமானவராயிருப்பின் அவ்வாறு நிகழும். இச்சந்தர்ப்பத் தில் இது முறிவுற்ற இஸ்னாத் ஆகக் கொள்ளப்படும். ஆனால் அறிவிப்பாளர் தத்லீஸ் செய்பவரல்லாத ஒருவராயிருந்தார் எனக் கொள்வோம். அவர் யாரிடமிருந்து அந்த ஹதீஸைப் பெற்றுக் கூறு கின்றாரோ அவரிடம் அதனைக் கற்றிருக்கக் கூடும். அக்குறிப்பிட்ட ஹதீஸை இவர் அவரிடமிருந்து கற்றாரோ என்பது தெரியவில்லை. அவர் கற்றார் என்பதற்குரிய தெளிவான ஆதாரங்களும் இல்லை. இருவரும் ஒரே நகரில் ஒரே காலத்தில் வாழ்ந்து வந்தனராயின் அவர் அதனை அவரிடமிருந்து கற்றிருக்கக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வா றான நிலையில் அது முறிவுறாத இஸ்னாத் ஆகக் கொள்ளப்படும்.

'தத்லீஸ்' என்பது விற்பனவுக்குள்ள ஒரு பொருளின் குறை பாடுகளை விற்பவர் மறைத்து வைத்தலாகும். இச்சொல் 'தலஸ்' எனும் சொல்லின் அடியாகப் பிறந்தது. அதாவது ஒளியையும் இருளையும் கலத்தல். ஹதீஸ் துறையைப் பொறுத்தமட்டில், ஓர் அறிவிப்பாளர் ஒரு ஹதீஸை ஓர் அறிஞரிடமிருந்து பெற்றுக் கூறு கின்றார் எனக் கொள் வோம். உண்மையில் அந்த அறிஞரிடமிருந்து இவர் நேரடியாக அதனைக் கற்கவில்லை. அவரிடமிருந்து நேரடி யாகக் கற்ற ஒருவர் கூறியதை அவ்வாறே கூறுகின்றார். எனவே அவர், தனக்கு அடுத்த அறிவிப்பாளரைக் குறிக்காமல், அவரிலும் உயர்ந்த ஓர் அறிவிப்பாளாரைக் கொண்டு, வெளிப்படையான அல்லது மறைமுகமான கற்றலைக் குறிக்கப் பயன்படும் சொற் பிரயோகம் கொண்டு அறிவிப்புச் செய்கின்றார். அல்லது, ஒருவர் எந்த ஒரு துறையில் பிரசித்தம் பெற்றுள்ளாரோ அதைப் பிரஸ்தா பிக்காமல், பிரசித்தம் பெற்றிராத ஓர் அறிஞரின் பெயரைப் பிரஸ் தாபித்துக் கூறுவதும் இதில் அடங்கும்.

இப்னு உயைனா (107-198) அஸ்ஸுஹ்ரீயின், புகழ் பெற்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு மாணவர். அவர் ஒரு முறை, 'கால அல்-ஸுஹ்ரீ' (அஸ்ஸுஹ்ரீ கூறினார்) எனத் தொடங்கி ஒரு

ஹதீஸை அறிவிப்புச் செய்தார். மாணவர்கள் அவரைத் தடுத்து, குறிப்பிட்ட அந்த ஹதீஸை அவர், அஸ்ஸுஹ்ரீயிடமிருந்து கேட்டாரா என வினவினர். மீண்டும் அவர் அதே வசனத்தை மீட்டுக் கூறினார். மாணவர்கள் மீண்டும் அவரை இடைநிறுத்தி அதே வினாவை விடுத்தனர். அப்போது அவர் கூறினார்: "நான் இந்த ஹதீஸை அப்துர் ரஸ்ஸாக் (127-207)கிடமிருந்து கேட்டேன். அவர் மாஅமர் (96-153) ரிடமிருந்து கேட்டார். அவர் அஸ் ஸுஹ்ரீயிடமிருந்து அதனைக் கற்றார்." இப்னு-உயைனா, அஸ்ஸுஹ்ரீ யின் பிரசித்தி வாய்ந்த ஒரு மாணவர் என்பதால், அவர் 'கால' (கூறினார்) என்ற பதத்தைப் பிரயோகித்துள்ளார். இது நேரடியாக ஒருவரிடமிருந்து கேட்பதற்குப் பயன்படுத்தப்படலாம். வேறொருவர் மூலமாகக் கேட்டமைக்கும் பயன்படுத்தப்படலாம். நவீன காலத்தில் இது, ஜனாதிபதி இன்னின்ன விஷயங்களைக் கூறினார் எனக் கூறுவதை ஒத்தது. அவர் கூறியவற்றைப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியன மூலமாகவன்றி நேரடியாகக் கேட்கக் கூடிய வாய்ப்புகளில்லாவிடினும் நாம், 'ஜனாதிபதி கூறினார்' என்றே கூறுகின்றோம். நேரடியாகக் கேட்டமைக்கும் இதைப் பயன்படுத்தலாம். எனவே இவ்வாறான மயக்கம் தரக்கூடிய பதப் பிரயோகம் செய்யும் ஒருவர் 'முதல்லிஸ்' எனப்பட்டார். இவ்வாறான தவறுகள் இழைத்தோர் பற்றி மட்டுமே பல நூல்கள் எழுதப் பட்டுள்ளன. ஆழமான ஆராய்ச்சிகள் மூலம் அறிஞர்கள் பலரும் தரப்படுத்தப்பட்டனர். இவர்கள் அல்-அலாஇயினால் ஐந்து வகையினராகத் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

I. மிகவும் அரிதாகவே தத்லீஸ் பிரயோகம் செய்து, உண்மையில் இவ்வகைப்படுத்தலுக்குட்படுத்தப்படக் கூடாதவர்கள். யஹ்யா-இப்னு ஸஈத்-அல்-அன்ஸாரி முதலியோர்.

II. சிறு அளவில் தத்லீஸ் முறையைச் செயல்படுத்தியோர். என்றாலும் அவர்களது அறிவிப்புகளை, மிகச் சிறந்த அறிஞர்கள் முதலாய பல்வேறு காரணங்களினிமித்தம் ஆரம்பகால அறிஞர்கள் ஏற்றுக் கொண்டனர். முன்னைய அறிவிப்பாளர்

ஒருவரைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் தாம் பெறக்கூடிய பொறுப்பின் பளுவை உணர்ந்தவர்கள் அவர்கள். அல்லது அவர்கள் அறிவிப்புச் செய்த பூரண தொகையைப் பொறுத்த மட்டில் தத்லீஸ் அறிவிப்புகள் மிகச் சிறிய தொகையின. அல்லது அவர்கள் தவிர்த்து விட்டவை மிகவும் நம்பிக்கைக் குரியவர்களான அறிஞர்களது நாமங்களே.

III. அடுத்த தரத்தவர்கள், தமது நேரடி அறிவிப்பாளரைக் குறிப் பிட்டுக் கூறும்வரை இவர்களது எந்த ஒரு ஹதீஸும் ஏற்கப்படவில்லை.

IV. தத்லீஸ் என்ற பண்பு காணப்படுவதனால் பலங்குன்றிய, அறியப்படாத அறிவிப்பாளரைக்கூடத் தவிர்த்துக் கொண் டோர். அவர்கள் தாம் நேரடியாகக் கற்றுக்கொண்டமை பற்றி வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடுமாயின் மட்டும் அவர்களது அறிவிப்பாளர் வரிசை முறிவுறாதது எனக் கொள்ளப்பட்டது.

V. தம்மளவிலேயே பலவீனமான அறிவிப்பாளர்களாக இருந்த தோடு தத்லீஸைச் செயல்படுத்தியோர்.

மூன்றாம் நான்காம் பகுதியினர் தாம் குறிப்பிட்ட ஹதீஸ் களை இன்னாரிடமிருந்து நேரடியாகக் கற்றோம் என வெளிப்படை யாகக் கூறாதுவிடின் அவர்களது அறிவிப்புகள் ஏற்கப்படமாட்டா. ஐந்தாம் பகுதியினரது அறிவிப்புகள் நிராகரிக்கப்பட்டன. முதலாம் இரண்டாம் பகுதியினரது அறிவிப்புகளைப் பொறுத்தமட்டில், அவர்களது சொற்பிரயோகங்கள் நேரடியாகக் கற்றமையைக் குறிக்காவிடினும்கூட, இதனை மறுத்துக்கூற, ஐயங்களற்ற ஆதாரங் களேதும் கிட்டாத நிலையில், அவை முறிவுறாத தொடராகக் கொள்ளப்படும். ஆனாலும், ஓர் அறிவிப்பாளர் தான் சில ஹதீஸ் களைக் குறிப்பிட்ட ஒருவரிடம் நேரடியாகக் கேட்டறிந்ததாகப் பொய்யுரைத்து, அவர் கண்டுபிடிக்கப்படுவாராயின் அவர் ஒரு

பொய்யரெனப் பிரகடனப்படுத்தப்படுவார். மட்டுமல்ல, அவர் அறிவிப்புச் செய்த எல்லா ஹதீஸ்களுமே நிராகரிக்கப்பட்டுவிடும்.

3. சந்தர்ப்பவசமான காரணங்களினால் ஏற்படும் பலவீனம்

இதன் கீழ் மூவகையின காணப்படுகின்றன. மக்லூப், முழ்தரப், முஅல்லல் ஹதீஸ் என்பன அவை.

அ) மக்லூப் என்பது தலைகீழ் எனப் பொருள்படும். இது இரு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. அறிவிப்பாளரைக் குறிக்கும்போது, அதன் சரியான அறிவிப்பாளரைக் குறிப்பிடாது பெயர்களை மாற்றிக் கூறுவது. இப்னு உமரிடமிருந்து பெற்று, இப்னு தீனார் அறிவிப்புச் செய்த ஹதீஸ்களை அறிவிப்புச் செய்வது புகழ் மிக்கதொரு கருமம் எனக் கொள்வோம். ஒருவர் இப்னு தீனாரின் பெயரைத் தவிர்த்து, அவரது சம காலத்தவர் ஒருவரது பெயரை இடையில் சேர்த்து விடுகின்றார். இதன் மூலமான இஸ்னாத் வரிசையில் வேறு எவரும் இந்த ஹதீஸை அறிவிப்புச் செய்யமாட்டார் எனக் கொண்டு, அதன் மூலம் வேறு எவரும் அறியாத ஓர் இஸ்னாத் மூலம் தான் அந்த ஹதீஸை அறிந்துள்ளார் எனப் பெருமை பாராட்ட முடிந்தது. இதனால் மக்கள் இக்குறிப்பிட்ட ஹதீஸை இவரிடமிருந்தே கற்க வேண்டியேற்படும். வேண்டுமென்றே இவ்வாறான செயல் புரிவோர், 'ஸாரீக்-அல் ஹதீஸ்' (ஹதீஸ் திருடர்கள்) என வழங்கப்பட்டனர்.
2. பெயர்களில் அல்லது வாசகத்தில் ஒழுங்கு முறையை மாற்றியமைத்துக் கூறுதல் : உதாரணம்: கஅப்-பின்-முர்ரா என்பதை முர்ரா-பின்-கஅப் என்று மாற்றுதல்.

ஆ) முழ்தரப் என்பது அறிவிப்புச் செய்பவரில் காணப்படும் முரண்பாடுகள் ஆகும். இதில் ஓர் அறிவிப்புக்குப் பதிலாக மற்ற அறிவிப்பினை ஏற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்படுகின்றது. ஏனெனில் அறிவிப்பாளர் இருவருமே சம அந்தஸ்தினை உடைய வர்களாய் உள்ளனர். இம்முரண்பாடு சிலபோது இஸ்னாத்தில், சிலபோது ஹதீஸ் உள்ளடக்கத்தில், சிலபோது இரண்டிலும் காணப்படுகின்றது. ஆனாலும் இரு அறிவிப்புகளிலும் ஒன்றைவிட மற்றொன்றை ஏற்கக்கூடிய நிலை இருக்குமாயின் அதனை அர்ரா ஜிஹ் என அழைப்பர். உதாரணமாக ஸுஹ்ரீயின் நம்பிக்கைக்குரிய மாணாக்கர் இருவர் ஒரு ஹதீஸ் குறித்து முரண்பட்டவர்களா யுள்ளனர் எனக்கொள்வோம். என்றாலும் அவ்விருவரில் ஒருவர் ஸுஹ்ரீயின் கீழ் நீண்ட காலமாகக் கற்றிருக்க, மற்றவர் ஒரு குறுகிய காலமே கற்றுள்ளார். இந்நிலையில் முன்னவரின் கூற்றே ஸுஹ்ரீ யின் சரியான வாசகம் எனக் கொள்ளப்படும்.

முழ்தரப் பற்றிய ஓர் உதாரணம்: தொழுது கொண்டிருக்கும் ஒரு மனிதரின் முன்னால் நடந்து செல்வது பாவமாகும். எனவே தொழுது கொண்டிருக்கும்போது ஸுத்ராவாக ஏதேனும் ஒரு பொருளை முன்னால் இட்டுக் கொள்வது நல்லது. அதன் மூலம் மக்கள் தம் வழியில் நடந்து செல்லக் கூடும். எனினும் ஒரு ஹதீஸின் படி முன்னால் இட ஏதும் இல்லாதுவிடின் குறைந்தது ஒரு கோடா வது இடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்குரிய இஸ்னாத்களில் சில வருமாறு:

(i) பிஷ்ர்-இஸ்மாயீல்-அபூ-அம்ர்-பின்-முஹம்மத்-பின் ஹுரைத்-அவரது பாட்டனார்-அபூஹுரைரா - நபிகளார்.

(ii) ஸவ்ரீ-இஸ்மாயீல்-அபூ அம்ர்-பின்-ஹுரைத்-அவரது தந்தை யார்- அபூஹுரைரா-நபிகளார்.

(iii) ஹுமைத்-இஸ்மாயில்-அபூ அம்ர்-பின்-முஹம்மத்-பின்-அம்ர்-அவரது பாட்டனார் - ஹுரைத் - பின் - ஸாலிம்-அபூ ஹுரைரா.

(iv) வுஹைப்-இஸ்மாயீல்-அபூ அம்ர்-பின்-ஹுரைத்- பாட்டனார்.

(v) இப்னு ஜுரைஜ்-இஸ்மாயீல்-ஹுரைத்-பின்-அம்மார் பாட்டனார் ஹுரைத்-பின்-ஸுலைமான்.

(vi) இப்னு உயைனா-இஸ்மாயீல்-அபூ முஹம்மத்-பின்-அம்ர் பின்-ஹுரைத்-பாட்டனார்.

(இ) அல்ஹதீஸ் அல்முஅல்: பலம் குன்றிய ஹதீஸ். சாதாரணமாக வெளிப்படையாக எவ்விதக் குறைபாடுமற்றுத் தோற்றமளிப்பது. ஆனாலும் மறைமுகமான குறைபாடுகள் கொண்டது. இக்குறை பாடு பொதுவாக இஸ்னாத்திலேயே காணப்படும். முர்ஸல் ஆன ஹதீஸ் சில போது முத்தஸில் ஹதீஸாக அறிவிக்கப்படுவது முண்டு. அல்லது உண்மையில் நபித்தோழர் ஒருவரின் கூற்று, நபிகளாரின் கூற்றாக அறிவிக்கப்படுவதுமுண்டு.

இவ்வாறான குறைபாடு, சில வேளைகளில் வாசகத்திலேயே ஏற்படுவதுண்டு. உதாரணமாக இரண்டு வெவ்வேறு ஹதீஸ்களின் வாசகம் கலந்து விடுகின்றமை; அல்லது ஓர் அறிஞர் பிரதியெடுக் கும் போது தவறிழைத்து விடுதல்; அல்லது பிரதியெடுக்கும்போது ஒரு வரியைத் தவற விட்டு விடுதல்; அல்-ஹகீம் இவ்வாறான குறை பாடுகளைப் பத்து வகையாக வகுத்துள்ளார். இவ்விடயம் குறித்து ஏராளமான நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மிகவும் பெரிய நூலாக விளங்குவது, இன்னமும் கையெழுத்துப் பிரதி வடிவத்தி லேயே உள்ள, தாரகுத்னீயின் 'அல்-இலால்' என்பதாகும்.

இதுவரை நாம் குறைபாடுகள் கொண்ட, பலவீனமுற்றன வாக விளங்கும் ஹதீஸ்கள் குறித்துக் கண்டோம். இவற்றில் மிகவும் மோசமானவை, பொய்யுரைகளாக அமைந்தவையாம். உண்மையில் அவை, நபிகளாரின் வாக்குகளாகவே அறிமுகம் செய்யப்பட்டன. எனவே நாம், இவ்வாறான பொய்மையான ஹதீஸ்கள் குறித்துத் தனியோர் அதிகாரத்தில் காண்போம்.

அத்தியாயம் – 8

புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்களும் அவற்றை இனங்கண்டு தவிர்ப்பதற்கான வழிமுறைகளும்

பெறுமதி வாய்ந்த ஆபரணங்கள், நகைகள், கலைப் பொருட்கள் முதலியவற்றை ஒத்த போலிகளை உருவாக்கும் முயற்சியில் ஏராளமானோர் ஈடுபட்டுள்ளமை சர்வ சாதாரணமாகத் தெரிந்த ஒரு விஷயம். முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில், குர் ஆனுக்கு அடுத்து நபிகளாரின் ஸுன்னாவைப் போலப் பெறுமதி வாய்ந்தது வேறு எதுவும் இல்லை. எனவே, வெவ்வேறு காரணங் களுக்காக, வெவ்வேறு நோக்கங்களுடன் பல்வேறு மக்கள் போலி யான ஹதீஸ்களைப் புனைந்துரைக்கத் தொடங்கினர். சிலர் தீவிர வெறிகொண்டோர். சிலர் தமது நாடுகளை இஸ்லாத்தின் முன்னால் இழந்திருந்திருந்தனர். மேலும் பலர் கல்வியறிவில்லாதோராக இருந்தனர். நன்நோக்குடன் செயற்பட்ட முஸ்லிம்கள் பலரும் இவர் களுள் இருந்தனர்.

நபிகளாரின் வாக்குகளாகப் பொய்களைப் புனைந்துரைக் கும் கைங்கர்யத்தை இரு வகையாக வகுத்துக் கொள்ளலாம்.

(i) *வேண்டுமென்றே பொய்களைப் புனைந்து கூறுதல்: இது ஹதீஸ் மவ்தூ என வழங்கப்பட்டு வருகின்றது.*

(ii) ஆழ்ந்த கவனம் செலுத்திய பின்னரும், அல்லது கவன யீனத்தின் காரணமாக, தவறுதலாக ஹதீஸ்களென போலி யானவற்றை ஏற்றுக் கொள்ளல். இது ஹதீஸ் பாதில் என வழங்கியது.

இவ்விரு வகை நிலைமைகளிலும் முடிவு ஒன்றே. அதாவது, தவறான வாக்குகள் நபிகளாரின் மீது ஏற்றிக் கூறப்படுகின்றன. எனவே ஹதீஸ் தொகுப்புகள் ஆக்க முனைந்த அறிஞர்கள், இவ் விரண்டு பிரிவையும் ஒன்றாகவே கொண்டனர். எனவே இவை யிரண்டுக்கும் அவர்கள் தனித்தனித் தொகுப்புகள் அமைக்க வில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்கள் மவ்தூ, பாதில் ஆகியவற்றில், இப்புனைந்துரைகள் எதில் அடங்கும் எனப் பிரித்துக் காட்டாமலேயே விட்டுவிட்டனர். இவ்வாறான பிரிபாடுகள் பற்றிய தெளிவினை அவர்கள் அளித்திருந்தால் அது மிக்க பயனளித்தி ருக்கும்.

வேண்டுமென்றே ஹதீஸ்களைப் புனைந்து கூறுதல்

இப்பெரும் பாவத்தைப் புரிந்தவர்கள் பல தரத்தோர். அவர் களை நான்கு பெரும் குழுவினராகப் பிரித்துக் காணலாம்.

(அ) ஒரு வகுப்பார் இஸ்லாத்தை நேரடியாக எதிர்க்க முடி யாதவர்களாயிருந்து அறிவுப் போர்வையினுள் புகுந்து கொண்டு பாதகங்கள் விளைத்த 'ஸிந்தீக்'குகள். ஸிந்தீக்கு களில் முகீரா-பின் ஸஅத்-அல்கூபி, துரோகமிழைத்தமைக் காகக் கழுவேற்றப்பட்ட முஹம்மத்-பின்-ஸஈத் அ -ஷாமீ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள், தம்மைத் தாமே அறிஞர்கள் போன்று சித்தரித்துக் காட்டி, மக்கள் மனங்களில் ஐயங்களைக் கிளப்பிவிடும் வகையில் ஹதீஸ்களைப் புனைந்து கூறலாயினர். கழுவேற்றப்பட்ட முஹம்மத் -பின்-

> *ஸஈத்-அஷ்ஷாமீ, நபிகளாரிடமிருந்து அனஸ் மூலம் ஹுமைத் பெற்றுக் கூறியதாகக் கூறினார்: "நானே நபிமார் களுக்கு இறுதி முத்திரையாயிருப்பேன்; எனக்குப் பின்னர் நபிமார்கள் தோன்ற மாட்டார்கள்-அல்லாஹ் நாடினால் ஒழிய." இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணான வகையில் தானும் நபித்துவ உரிமை கோரும் நிலைமைக்கு மக்கள் மனங் களைப் பண்படுத்தியெடுக்கும் வகையில் "அல்லாஹ் நாடி னால் ஒழிய" என்ற விதிவிலக்கினை இணைத்துக் கொண் டார் அஷ்-ஷாமீ.*

எவ்வாறாயினும் ஒரு முக்கிய விஷயம் கவனத்தில் கொள் ளப்பட வேண்டும். தாம் ஒரு ஹதீஸை அல்லது இத்தனை ஹதீஸ் களைப் புனைந்து கூறியதாகத் தாமே கூறிய பலர் காணப்படு கின்றனர். இவை ஆதாரங்களோ, விளக்கங்களோ இன்றியே கூறப் பட்டன. சில சந்தர்ப்பங்களில் தாம் இழைத்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுமுன்னர் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர். மற்றும் சில சந்தர்ப்பங்களில் குற்றத்தை ஏற்றுக் கொண்ட இவர்கள், தாம் இத்தனை ஹதீஸ்களைப் புனைந்துரைத்துள்ளதாகவும், அதற்குக் குற்றப்பரிகாரமாகச் செய்யக்கூடியது என்னவெனத் தாம் அறிய வில்லையென்றும் கூறியுள்ளனர். இவ்வாறான கூற்றுக்களை எழுத்தில் வடிக்கும்போது, ஆரம்ப கால அறிஞர்கள் விவரங்கள் எவற்றையும் கொடுக்காமலேயே விட்டுள்ளனர். எனது கருத்தில், இவ்வாறான கூற்றுக்கள் மட்டும் போதுமானதன்று. ஒருவர் தான் இழைத்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் அவரை ஒரு பொய்யர் எனக் கொள்வதோடு நாம் திருப்தி கண்டு கொள்வோம். உண்மையில் நபிகளாரின் ஸுன்னா மீதான நம்பிக்கையைத் தகர்க்க முடியாது போன ஒருவர் தனது இறுதி ஆயுதமாக இப்படியான ஒரு கைங்கர்யத்தைக் கடைப்பிடித்திருக்கலாம். நபிகளாரின் ஹதீஸ் குறித்து ஒருவர் பொய்யுரைக்கக் கூடுமாயின், அவர் பாவமன்னிப்புக் கோரிய பின்னரும்கூட, அவரது அறிவிப்புகள் எவையும் ஏற்கப்பட மாட்டா என்பதில் ஹதீஸ் அறிஞர்கள் அனைவரும் ஒரே கருத்தின ராகவே உள்ளனர். எனவே ஹதீஸ் ஏதும் புனைந்துரைக்கப்பட்ட

மையைத் தீர்மானம் செய்ய நாம் பொய்யர் ஒருவரின் கூற்றில் தங்கியிருக்க முடியாது.

(ஆ) பலவீன இதயம் கொண்ட சிலர், உள்ளத்தில் தூய்மையான எண்ணத்துடனேயே ஹதீஸ்களைப் புனைந்துரைத்தமையையும் காண முடிந்தது. அபூ இஸ்மாவிடம் விடுக்கப்பட்ட ஒரு வினா குறித்து அபூ-உமாரா அல்-மர்வஸீ கூறுவார்: "குர்ஆனின் ஒவ்வொரு ஸூராவினதும் மகத்துவம் பற்றி, இப்னு அப்பாஸிடம் இருந்து, இக்ரிமா மூலமான ஹதீஸை நீர் எங்கிருந்து பெற்றுக்கொண்டீர்? இக்ரிமாவின் மாணவர்களிடம் கூட அவை இல்லையே!" இங்கு, அறிஞர்கள் ஹதீஸ்களில் காணப்படும் தவறுகள், குறைபாடுகள் சம்பந்தமாகக் குறுக்குப் பரிசீலனைகள் செய்து வந்தமையையும் அவதானித்துக் கொள்ளலாம். அபூ இஸ்மா பதிலளித்தார்: "மக்கள் குர்ஆனிலிருந்தும் தம் கவனத்தைத் திருப்பிக் கொண்டார்கள்; அபூ ஹனீபாவின் பிக்ஹ், முஹம்மத்-இப்னு இஸ்ஹாக்கின் மகாஸீ ஆகியவற்றிலேயே ஆர்வம் கொள்ளலாயினர். இந்நிலையில் மறுமையின் பயன் கருதி இந்த ஹதீஸ்களை நான் புனைந்து கூறினேன்."

(இ) சந்தைகளில் அல்லது பள்ளிவாசல்களில் நின்று கொண்டு கதைகள் சொல்லிப் பிழைப்பு நடத்துபவர்கள் நபிகளாரின் மீது ஹதீஸ்களைப் புனைந்து கூறினர்.

ஆட்சியாளர்களிடமிருந்து நலன்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு ஹதீஸ்களைப் புனைந்து கூறும் விடயம் குறித்தும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்விஷயத்தில் ஒரே உதாரணத்தையே அறிஞர்கள் பலரும் மீண்டும் மீண்டும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

(ஈ) மதச் சார்பினராய் இருந்த சிலர் சட்டவியலில் அல்லது சமயவியலில் தத்தமது பிரிவினர்க்குச் சார்பாக அல்லது

அரசியல் காரணங்களுக்காக அல்லது இன, பிரதேச அடிப் படையில், அல்லது குறிப்பிட்ட ஒரு சாரார்க்குச் சார்பாக, அல்லது தத்தம் சுய நலன் கருதி பொய்யுரைகள் கூறியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வேண்டுமென்றே புனைந்து ஹதீஸ் கள் கூறியவர்களாவர்.

உள்நோக்கம் ஏதும் இன்றிப் புனைந்து கூறுதல்

வாசகத்தில் எதனையும் புனைந்து கூறாது விட்டாலும் தவறுகள் இழைத்தோர் பலர் உளர்.

1. நன்கு அறியப்பட்டிருந்த ஒரு ஹதீஸை எடுத்து, புதுமையை மட்டும் காரணமாகக் கொண்டு, அந்த ஹதீஸுக்கு ஒரு புதிய இஸ்னாத்தை அறிமுகம் செய்தல். அறிவின் தேட்டத்துக் காகப் பிறர் தம்மையே நாடி வரவேண்டும் என்பது இதன் நோக்கமாக இருந்தது.

2. அறிவிப்பு வரிசைகளில் தவறுகள் இழைத்தோர். உதாரண மாக, இஸ்னாத் ஆனது நபிகளாரின் தோழர், அல்லது தோழரைத் தொடர்ந் தோருடன் முடிவடைய, இவர்கள் வாசகத்தை நபிகளார் வரை எடுத்துச் செல்பவர்களாயிருந் தனர். உண்மையில் அவ்வாறான வாசகங்கள் நபித்தோழர் களுடையனவாக அல்லது தோழர்களைத் தொடர்ந்தோரு டையனவாகவே விளங்கின.

ஒவ்வொரு ஹதீஸும் வாசகம் ஒன்றினையும், இஸ்னாத் ஒன்றி னையும் கொண்டிருப்பதையும், ஒவ்வோர் இஸ்னாத்தும் பல பெயர்களைக் கொண்டு சாதாரணமாக நபிகளாரிலேயே முடிவ டைவதையும் விளங்கிக் கொள்வோமாயின், இஸ்னாத் வரிசையில் ஒரு படி முன்னால் முடிவடையும் வேளையில் இவ்வாறான தவறு கள் இலகுவாக எழலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

3. பக்தி பூர்வமாகயிருந்தோர் பலர், ஹதீஸ் கல்விக்கு மிக அவசியமாக இருந்த கவனத்தையும் காலத்தையும் அளிக்காது, 'இபாதா'வில் மட்டுமே கூடிய கவனம் செலுத்தியதன் காரணமாக, ஹதீஸ்களை அறிவிப்புச் செய்வதில் ஏராளமான தவறுகள் இழைத்தனர். இரண்டாம் நூற்றாண்டு அறிஞர், யஹ்யா-பின்-ஸஈத்-அல்-கத்தான் கூறுவார்: "நன்மையே புரிவோர் எனப் பெயர் பெற்றிருந்தோரை விடவும் அதிகமான தவறிழைப்போர் எவரையும் நான் காணவில்லை." இதிலிருந்து விளங்கும் மற்றுமொரு விஷயம் என்னவென்றால், இபாதா, பக்தி பூர்வத்தோற்றம் என்பனவற்றால் தமது கருத்துக்கள் பாதிப்புறாத அளவுக்கு நல்லறிவு படைத்தவர்களாக முஹத்திஸீன்கள் இருந்துள்ளனர் என்பதாகும்.

4. சில 'ஷெய்க்'குகளிடம் ஹதீஸ் கற்ற அறிஞர்கள் சிலர், பின்னர் அதே ஷெய்க்குகள் அறிவிப்புச் செய்த வேறு பல ஹதீஸ்களைத் தாம் தவற விட்டுள்ளமை பற்றி அறியவரும் சந்தர்ப்பங்களில் இழைத்த தவறுகள். தாம் நேரடியாகக் கற்றுக்கொண்டவற்றுடன் திருப்தி காணாதோராக, அல்லது தாம் நேரடியாகக் கற்றவற்றையும், வேறு மூலங்கள் வழியாகப் பெற்றுக் கொண்டவற்றையும் பிரித்து வித்தியாசம் காட்டாதவர்களாக அனைத்தையுமே தாம் நேரடியாகக் கற்றுக் கொண்டவை போல் காட்டி அறிவிப்புச் செய்தமை.

5. தரமான அறிஞர்களிடம் நூல்களைக் கற்றாலும் தாம் கற்றவற்றை எழுத்தில் வடித்து வைக்காதோர். அவர்கள் வயது முதிர்ந்து சென்ற போது, மாணவர்கள் ஹதீஸ் கேட்க, அவர்களது அறிவீனமும் தாம் அறிஞர்கள் போலத் தோற்றமளிக்க எடுத்துக்கொண்ட முனைவு காரணமாகவும் அவர்கள் தாம் கற்ற நூற்களின் பிரதிகளது உதவியுடன் ஹதீஸ் கற்பிக்கலாயினர். ஆனால் இப்பிரதிகளில், இவர்களுக்கிருக்க வேண்டிய அங்கீகார முத்திரை அல்லது அத்தாட்சியுரை காணப்படுவதில்லை. நான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவ்வாறான

தவறுகள் பரவலாக இருந்துள்ளது போலத் தோற்றுகின்றது. ஒரு நூலிலிருந்து, உதாரணமாக புஹாரியின் ஸஹீஹிலிருந்து ஆசிரியரின் நாமம் வரை அறிவிப்பாளர் வரிசை செல்லும் நூலொன்றிலிருந்து தவிர வேறு எந்த ஒரு நூலிலிருந்தும் ஹதீஸ் கற்பிக்கப்படுதலை அறிஞர்கள் அங்கீகரித்ததில்லை யென்பதும் கவனிக்கத்தக்கதோர் அம்சம். அத்தோடு குறிப் பிட்ட ஒரு மாணவர், குறிப்பிட்ட ஒரு நூலை ஒரு ஷெய்க்கி டம் கற்றார் என்ற ஓர் அத்தாட்சிக் குறிப்பினை அந்நூல் கொண்டிருக்க வேண்டும். அல்லது குறிப்பிட்ட ஒரு நூலிலி ருந்து அறிவிப்புச் செய்ய ஷெய்க் அங்கீகாரம் அளித்திருப் பதற்குரிய அத்தாட்சி இருக்க வேண்டும். ஏனென்றால் ஒரே நூலின் இரு வேறு பிரதிகளிடையில் வித்தியாசங்கள் காணப் படலாம்.

மற்றுமொரு சாமான்யமான கருத்தும் உளது. அதாவது புஹாரியின் ஸஹீஹ் போன்ற மிக்க பிரசித்தம் வாய்ந்ததும் பிரதிகள் பரவலாகக் கிடைக்கக் கூடியதுமான ஒரு நூல், கற்றமைக்குரிய அத்தாட்சிச் சான்றிதழ் கொண்டில்லையென்றாலும், கைவசமுள்ள பிரதியானது, தான் கற்ற நூலினையே ஒத்திருக்கின்றதென ஓர் அறிஞர் கருதுவாராயின் அதிலிருந்தும் கற்பிக்கலாகும். எவ்வாறாயி னும் ஆரம்பகால அறிஞர்கள் இவ்வாறான கருத்தை ஏற்றுக் கொள் ளவில்லை. இதுபோன்ற சிலவேளைகளில் குறிப்பிட்ட அறிஞரைப் பொய்யர் என அவர்கள் சுட்டிய சந்தர்ப்பங்களுமுண்டு.

6. *ஹதீஸ் கற்பித்தலுக்குத் தேவையான சில அடிப்படை அம்சங் களான அபார நினைவாற்றல், சிந்தைத் தெளிவு என்பன குன்றியவர்களாக அல்லது சரியான ஒரு நூலினைக் கைவசம் பெற்றில்லாதவர்களாக இருந்த சிலர் கற்பித்தமை. அவ் வேளைகளில், தாம் கற்பிக்காத ஹதீஸ்களை மாணாக்கர் வந்து ஒப்புவிக்க, அது பற்றிய பூரண அறிவு இல்லாமலேயே இவர்கள் அவற்றை உறுதி செய்வார்கள். மாணவர்கள், தமது ஆசிரியர்களது அறிவினைப் பரிசீலிக்கவென இம்முறையைக்*

கையாண்டு பார்ப்பதும் உண்டு. தமது உபாயங்களுக்கு அகப் படாதவாறு, சிந்தனைத் தெளிவு கொண்டவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என மாணாக்கர் உறுதி செய்து கொள்ளக் கூடுமாயின், அதன் பின்னரே அவர்களிடம் கற்க லாயினர்.

7. ஹதீஸ்கள் தேடி அதிகளவில் பிரயாணம் செய்தவர்களாக வும், முஹத்திஸீன்களாக ஏற்கப்பட்டவர்களாகவும் இருந்தும் தமது நூல்களை இழந்து விட்டவர்கள். பின்னர் அவர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது தம்முடையதல்லாத பிற பிரதிகளைப் பயன்படுத்தினர். ஒரே நூலின் இரு வேறு பிரதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட இடமுண்டு என்பதனை அவர்கள் மனத்தில் கொள்ளவில்லை. அல்லது அவர்கள் தமது திறன்குன்றிய நினைவிலிருந்தும் கற்பிக்கலாயினர். இந்நிலையில் அவர்கள் தமது சமயோசித புத்தி (தக்மீன்)யிலும் சிலபோது தங்கியிருக்கலானார்கள். அவர்களது நூலின் தரத்தைப் பொறுத்ததாகவே அவர்களது கற்பித்தல் திறனும் இருந்தது என்பதில் ஐயமில்லை.

புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்களை இனங்காணும் வழிமுறைகள்

தமது வாழ்க்கையின் பெரும்பாகத்தை நபிகளாரின் ஹதீஸ் கற்றலிலேயே செலவிட்டு வந்த அறிஞர்கள் பலர், தவறுகளை உடன் கண்டு கொள்ளக்கூடிய அளவுக்குப் போதிய ஞானமும் பரிச்சயமும் பெற்றிருந்தார்கள். அவர்களது உதாரணம் எதைப் போன்றதெனின், பல ஆண்டுகளாகத் தமக்கு மிகவும் நெருங்கிய ஒரு நண்பனுடனேயே இணை பிரியாது வாழ்ந்து வந்த ஒருவர், இன்ன வாசகம் தனது நண்பருடையது, இன்ன வாசகம் அவருடையதன்று என உடன் கூறக் கூடியவரின் நிலைக்கு ஒப்பானது. அதுபோலவே, இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டு திறனாய்வு செய்யும் ஒருவரை எடுத்துக் கொள்வோம். அவர் நீண்ட காலமாக ஒரு

கவிஞன் குறித்து ஆராய்ந்து, அக்கவிஞனின் ஆற்றல், திறன், ஞானம் என்பவற்றையெல்லாம் நன்கறிந்துள்ளார். நிச்சயமாக அவர் அக்கவிஞனுடையதல்லாத கவிதையொன்றை உடன் அடையாளம் கண்டு கொள்வார். எவ்வாறாயினும் முஹத்திஸீன்கள் முற்றும் தமது சொந்த அனுபவங்களிலேயே தங்கியிருக்கவில்லை. ஏனெனில் சிலவேளை, அது தன்னுணர்வினாலான திறனாய்வாகவும் கொள்ளப்படலாகும். சுருங்கக் கூறின், எந்த ஒரு ஹதீஸும் நம்பிக்கைக்குரியவரல்லாத ஒருவரால் அறிவிக்கப்பட்டிருப்பின், அல்லது ஒரு பொய்யரோ பொய்யுரைக்கக் கூடியவரோ அறிவிப்பாளர் வரிசையில் காணப்படக்கூடுமாயின் அந்த ஹதீஸ் புனைந்துரைக்கப் பட்டதெனக் கொள்ளப்பட்டது. என்றாலும், இஸ்னாத் பற்றித் தீவிரமாக ஆராயாமலேயே, ஹதீஸ்களில் தூய்மையானவை, புனைந் துரைக்கப்பட்டவை எனப் பகுத்துக் கண்டுகொள்ள அறிஞர்கள் சில வழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். இப்னுல்-கையிம் விவரித்துள்ள முறையின் சாராம்சம் வருமாறு:

- நபிகளார் கூறியிருக்க முடியாதளவு மிகைப்படுத்தப்பட்ட ஒரு வாசகத்தைக் குறிப்பிட்ட ஒரு ஹதீஸ் கொண்டிருத்தல். உதாரணமாக நபிகளார் மீது ஏற்றிக் கூறப்பட்டுள்ள ஒரு பொய்யான ஹதீஸைப் பார்ப்போம்: "லாஇலாஹ இல்லல்லாஹ் என ஒரு முறை கூறும் போது இறைவன் அந்த வசனத்திலிருந்து ஆயிரம் நாவுகள் கொண்ட ஒரு பறவையைச் சிருஷ்டிக்கின்றான்."

- பரீட்சைக்குள்ளாகி நிராகரிப்புறுவது.

- பொது அறிவுக்கு முரண்பட்டிருப்பது.

- நன்கு அறியப்பட்ட ஒரு ஸுன்னாவுக்கு முரண்படுவது.

-ஆயிரக்கணக்கான தோழர்களின் முன்னால் கூறப்பட்டதொன்றென அறிவிக்கப்பட்டும் அனைவரும் மறைத்துவிட்ட ஓர் அறிவிப்பு.

- நபிகளாரின் ஏனைய வாசகங்களுடன் எவ்விதப் பொருத் தப்பாடும் இல்லாத ஓர் அறிவிப்பு.

- ஞானவான்களது அல்லது மருத்துவவியலாளரது கூற்றுப் போல் தோன்றுவது.

-குர்ஆனின் தெளிவான, வெளிப்படையான கூற்றுடன் முரண்படுவது.

-பூரணத்துவமில்லாத ஓர் அறிவிப்பு.

இவ்வாறான பொது விதிகளுடன், தவறுகளைக் கண்டு கொள்ளவென இஸ்னாத் முறையும் பூரணமாகப் பிரயோகிக்கப் பட்டது.

அறிவிப்பாளர்கள் அனைவர் குறித்தும் ஹதீஸ் அறிஞர்கள் நல்ல அறிவு பெற்றிருந்தனர். அவர்கள் எத்தனை ஹதீஸ்களை அறிவித்துள்ளனர்; அவற்றுள் முழு முஸ்லிம் உலகிலும், பிற அறிவிப்பாளராலும் உறுதி செய்யப்பட்டன இத்தனை; அவ்வாறு உறுதி செய்யப்படாதன இத்தனை என்றெல்லாம் அவர்களிடையே பூரணமான தெளிவு இருந்தது. அதற்கு 'லா யுதாபஉ' என்ற வாசகத்தை அவர்கள் பயன்படுத்தினர்.

ஹதீஸ் நன்கு அறியப்பட்டதொன்றாகவும், உத்தரவாத முள்ளதாகவும் இருந்தாலும், அறிவிப்பாளர் வரிசையில் ஒருவர் சரியான ஒழுங்கு முறையின் கீழ் அதனைப் பெற்றிருக்கவில்லை என அறிஞர்கள் சந்தேகிக்கக் கூடுமாயின் எழுத்துக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாயினர். எழுத்தில் பதிவு செய்யப்பட்டமை புதிதாக நிகழ்ந்ததோ அன்றி பழைய பதிவோ என்றும் பரீட்சிக்கப்பட்டது.

இவை இஸ்னாத் முறையைப் பிரயோகிக்குமுன்னர் அல்லது இஸ்னாத் முறைக்குப் பதிலாக அறிஞர்கள் கையாண்ட பரீட்சை முறைகளாகும்.

புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் தொடர்பான நூல்கள்

ஆரம்ப கால அறிஞர்கள் வெறுமனே புனைந்துரைக்கப் பட்ட ஹதீஸ்களைத் தொகுப்பதில் மட்டும் கவனம் செலுத்த வில்லை. அவர்கள் அவ்வாறான ஹதீஸ்களை, வாழ்க்கை வரலாற்று, சரித்திர நூல்களிலும் குறித்து வைத்தனர். இந்நோக்கத்துக்காக வென்றே தனது முழு நூலையும் ஒதுக்கிய முதலாமவர் ஹுஸைன்-பின்-இப்றாஹீம்-அல்-ஜவ்ஸகானீ (ம.543) என்றே தெரிகின்றது. பின்னைய காலங்களில் இவ்விடயம் சம்பந்தமாக ஏராளமான நூல்கள் தொகுக்கப்பட்டன. சாதாரண ஹதீஸ் மாணவர்க்கு மிகவும் பயன்படக்கூடியது ஷவ்கானீயின் 'அல்-பவாயித்-அல்-மஜ்மூஆ-பி-அல்-அஹாதீஸ்-அல்-மௌழூஆ', இதனை பதிப்பித் துள்ளார் முஆல்லிமீ யமானீ.

பாகம் – 2

ஹதீஸ் கிரந்தங்கள்

அத்தியாயம் – 1

ஆரம்ப கால ஹதீஸ் நூல்கள்- அவற்றிற்கு நிகழ்ந்ததென்ன?

பரந்த, ஆழமான ஆராய்ச்சிகளின் முடிவாக, இஸ்லாத்துக்கு முன்னைய காலத்திய அறபியக் கவிதைகள் சிலவும், பெரியார்களின் உரைகள் சிலவும் எழுத்தில் பதிக்கப்பட்டிருந்தமையைக் காண முடிந்தது. என்றாலும்கூட, அறபு இலக்கியமானது புனித குர்ஆனிலேயே ஆரம்பம் பெறுகின்றது என நாம் கொள்வதில் தவறுகளேதுமில்லை. அறபு மொழியின் முதல் நூல் இதுவே.

ஹதீஸ் நூல்களைப் பொறுத்தவரையில், ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டிலேயே நூற்றுக்கணக்கான ஹதீஸ் கையேடுகள் புழக்கத்தில் இருந்தமையை கலாநிதிப் பட்டத்துக்கான எனது ஆராய்ச்சியாக அமைந்த Studies in Early Hadith Literature எனும் ஆய்வுரையில் தெளிவாக நிறுவியுள்ளேன். இரண்டாம் நூற்றாண்டையும் சேர்த்துக் காணும்போது புழக்கத்திலிருந்த ஹதீஸ் நூல்களின் தொகை அளவிட முடியாததாக இருந்தமை புலனாகின்றது. மிக்க ஆரம்ப ஆய்வுகளின்படிகூட அவை பல ஆயிரக் கணக்கானவையாக உள.

நூல்களின் இயல்பு

முதலாம் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்திலும் உருவான நூல்கள் அல்லது கையேடுகளைப் பொதுப்பட இரு வகைப்படுத்திக் காணலாம்.

(I) வெறுமனே நபிகளாரின் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டன; இதில் எந்த ஒழுங்குமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(II) நபிகளாரின் ஹதீஸ்களோடு ஆரம்ப கலீபாக்கள் நபித் தோழர்கள், தொடர்ந்து வந்தோர் ஆகியோரின் தீர்ப்புகள், முடிவுகள் என்பனவும் கலந்தன. இவையும் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டனவல்ல. வெறுமனே தொகுப்புகளாக மட்டுமே அமைந்தன.

என்றாலும் ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து தனியொரு கருப்பொருளில் அமைந்த கருத்துக்களை மட்டும் கொண்ட நூல்கள் உருப்பெறத் தொடங்கின. நபிகளாரின் எழுது வினைஞராகவும், பிரசித்தம் வாய்ந்த தோழராகவும் இருந்த ஸைத்-பின்-தாபித் (மறைவு- ஹிஜ்ரி 45)தின் அனந்தரச் சொத்துக்களின் பங்கீடு (வாரிசுரிமைப் பங்கீடு) பற்றிய நூல் இங்கு குறிப்பிடத் தக்கது. பின்னர் நீதித்துறைப் பிரச்சினைகள், திருமணம், விவாக ரத்து, நஷ்டஈடு முதலியன பற்றிய தனி நூல்கள் அறிஞர்களால் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறாக, ஒழுங்குபடுத்தப் பட்ட தொகுப்புகள் காணப்பட்ட அக்காலங்களிலும் நபிகளாரின் ஹதீஸ்களும், அறிஞர்களதும் வல்லுனர்களதும் நீதித்துறை முடிவுகளும் கலந்தே காணப்பட்டன. அக்கால கட்டத்தில் ஒவ்வொரு நூலும் தனியொரு பொருள் குறித்ததாகவே அமைந்தது.

இரண்டாம் நூற்றாண்டின் போக்கு சற்றே மாற்றம் பெற்றது. எல்லா வகையான சட்டப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நூல்களும் எழலாயின. இமாம் மாலிக்கின் அல்முவத்தா இக்காலப் பிரிவைச் சார்ந்தது. மனித வாழ்வு, தொழுகை, ஸகாத், ஹஜ், திருமணம், விவாகரத்து, விவசாயம், வர்த்தகம் முதலாய பல்வேறு துறைகளையும் சார்ந்த சட்டரீதியான அத்தியாயங்களைக் கொண்ட இது, நபிகளாரின் ஹதீஸ்களை மட்டுமன்றி, நபித்தோழர்களதும் தொடர்ந்து வந்தோரதும் அபிப்பிராயங்களையும் உள்ளடக்கியதாய் அமைந்தது.

இரண்டாம் நூற்றாண்டின் போது புழக்கத்தில் இருந்த ஆயிரக்கணக்கான ஹதீஸ் நூல்கள் அத்தியாய ஒழுங்குகளின் கீழ் அமைக்கப் பெறவில்லை என நாம் கருதுவது தப்பாகாது. அத்தியாய ஒழுங்குமுறைகளுக்கமையத் தொகுக்கப்பட்ட ஒரு சில நூல்கள் நபிகளாரின் ஹதீஸ்களோடு நபித்தோழர்களதும் தொடர்ந்து வந்தோரதும் முடிவுகள், அபிப்பிராயங்கள் என்பனவற்றையும் கூடத் தம்முள் கொண்டனவாயிருந்தன. எவ்வாறாயினும் இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலக்கிய முறைகள் மாற்றமுற்று, சில ஒழுங்குமுறைகளின் கீழ் நபிகளாரின் ஹதீஸ்களை மட்டுமே கொண்ட நூல்கள் எழலாயின. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் வெளிவந்த பெரும்பாலான நூல்களில் நபிகளாரின் ஹதீஸ்கள் மட்டுமே காணப்பட்டன. இக்காலத்திலும்கூட ஒரு சில நூல்கள் இரண்டாம் நூற்றாண்டின் மரபுகளையொட்டித் தொகுக்கப்பட்டன. அப்துர் ரஸ்ஸாக், இப்னு-அபூ-ஷைபா (ம.235) ஆகிய இருவரதும் முஸன்னப், இப்னு-அல்-முன்திர் (ம.319) தொகுத்த அல்-அவ்ஸாத் என்பன குறிப்பிடத்தக்கன. எவ்வாறாயினும் முஹத்திஸீன்கள் தொகுத்தளித்த நூல்களுள் ஏராளமானவை நபிகளாரின் ஹதீஸ்களை மட்டுமே கொண்டிருந்தன. வெவ்வேறு அடிப்படைகளில் தொகுக்கப்பட்ட இவை, முஸ்னத், ஜாமிஇ, ஸஹீஹ், ஸுனன், முஸ்தஹ்ரஜ், முஃஜம் எனப் பல பெயர்களில் வழங்கின.

ஹதீஸ்கள் மட்டுமே தொகுக்கப்பட்டமை ஒரு புறமிருக்க, நபிகளாரின் ஹதீஸ்களோடு சம்பந்தப்பட்ட வேறு பல விஷயங்கள் குறித்த நூல்களும் உருவாகலாயின. ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு நூல் குறித்தும், ஹதீஸ்களோடு சம்பந்தப்பட்ட துறைகள் குறித்து எழுந்த நூல்களின் விவரக்கோவையொன்றினையும் பின்னர் காண்போம்.

ஆரம்ப காலத்திய பெரும்பாலான நூல்கள் அழிந்துபட்டன; காணாமற்போயின; அல்லது ஹதீஸ் பேரிலக்கியங்களுள் சங்கமமாகிச் சென்றுள்ளன என்பதில் ஐயமில்லை. ஆக, அவற்றைத் தனியாகக் கண்டு கொள்வது சிரமசாத்தியமானது. என்றாலும்

அக்காலத்திய இலக்கிய மரபு முறைகளை நாம் சரிவர அறிந்து கொள்வோமாயின் இன்னமும்கூட ஏராளமான ஆரம்ப கால நூல் களை நாம் கண்டு கொள்ளலாம் அல்லது மீளப்படைக்கலாம். நிச்சயமாக, அவற்றின் உருவமைப்பு குறித்து நாம் முற்றிலும் திருப்திகாண முடியாவிடினும்கூட ஆதி அறிஞர்களது மூல ஹதீஸ் உட்பொருளைக் கண்டு தெளியலாம். எனவே அக்காலத்திய இலக்கிய மரபு முறையைச் சற்றே காண வேண்டியது அவசியம்.

அதற்கு முன்னர் நாம் ஒரு விஷயத்தை நினைவுகூர்வது நன்று. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளின் போது பல்லாயிரக் கணக்கான ஹதீஸ் நூல்கள் வழங்கி வந்தன என நான் முன்னர் குறிப் பிட்டுள்ளேன். இப்பரந்த ஹதீஸ் இலக்கியங்களுள் மிகச் சிறிய அளவே பின்னைய காலங்களில் கிட்டியுள்ளமையால் ஒன்றில் நான் குறிப்பிட்டது பிழையாக இருக்க வேண்டும்; அல்லது ஒரு காலத்தில் இருந்த இந்த நூல்கள் பின்னைய காலங்களில் அழிந்து போயிருக்க வேண்டும். பின்னைய கருத்தை நாம் ஏற்பது, முஸ்லிம் அறிஞர்கள் நபிகளாரின் ஹதீஸ் குறித்து கவனயீனமாக இருந்துள்ளார்கள் எனச் சுட்டுவதாகவும் முடியும். அவ்வறிஞர்கள் ஹதீஸ் இலக்கியம் குறித்து அத்துணை கவனயீனமாக இருந்து அவை அழிந்து போகும் படி விட்டு விட்டார்கள் எனக் கொள்ளலாமா?

உண்மையில் நான் கொண்டுள்ள கருத்து சரியானதும் தெளி வானதும் ஆகும். இந்த நூல்கள் அழிக்கப்படவுமில்லை. மறைந்து போகவுமில்லை. பின்னைய கால ஆசிரியர்களது பெரு நூல்களுள் சங்கமமாகி விட்டன. கலைக்களஞ்சிய வடிவமைப்பில் நூல்கள் உருப்பெறத் தொடங்கியதும் ஆரம்ப கால நூல்களையோ, கையேடு களையோ தொடர்ந்தும் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இவ்வகையிலேயே ஆதி நூல்கள் படிப்படியாக மறையலாயின. இந்த விவகாரத்தை விளங்கிக் கொள்ளவும் எனது கருத்தை உறுதி செய்யவும் ஆரம்ப காலத்திய மேற்கோள் காட்டும் முறையை அறிந்து கொள்வது அவசியம். எனவே நாம் அதனைச் சற்றுக் காண்போம்.

ஹதீஸ் இலக்கியத்தில் மேற்கோள் காட்டும் முறை

எமக்குக் கிட்டியுள்ள ஹதீஸ் கிரந்தங்கள் பெரிதும் மூன் றாம் நூற்றாண்டினைச் சார்ந்தனவாகவே அமைந்துள்ளன. இந்த நூல்களை இயற்றியோர்க்கும் நபிகளார்க்கும் இடையில் சுமார் இரண்டு நூற்றாண்டுக்கால இடைவெளியொன்று காணப்படு கின்றது. இந்நீண்ட இடைவெளியின்போது கற்றறிந்தோர் வட்டத் தில் இலக்கிய நேர்மையின் தரம் எந்தளவில் இருந்தது? நவீன காலத்து ஆய்வாளர்கள்கூட மிகைக்க முடியாத தரத்திலான மேற் கோள், ஆதாரங்காட்டும் முறையொன்றினை அவர்கள் வகுத்திருந்த மையைக் காண வியப்பே ஏற்படுகின்றது.

ஆதாரங்காட்டுவதிலும், மேற்கோள் காட்டுவதிலும் தற் போது வழக்கத்திலுள்ள முறைகள் வருமாறு:

-சொல்லுக்குச் சொல் எவ்வித மாற்றமுமில்லாது பிரதி யெடுத்து அவற்றை இருபுறத்தும் மேற்கோள் குறிக்குள் அமைத்துக் கொடுத்தல்.

-சொல்லுக்குச் சொல் மேற்கோள் காட்டினாலும் தேவைப் படும் விஷயங்களை மேலதிகமாகச் சதுர அடைப்புக்குறிக் குள் இட்டுச் சேர்த்துக் கொள்ளுதல்.

-மாற்றங்களேதுமின்றி மேற்கோள் காட்டினாலும் தேவை யற்ற விவரங்களை மூன்று புள்ளியடையாளங்கள் இடுவதன் மூலம் தவிர்த்து விடுதல்.-

-தனது சொந்த வசனங்களிலேயே மேற்கோள் காட்டுதல்

இந்த முறைகள் அனைத்திலுமே, தான் மேற்கோள் காட்டும் ஆசிரியர்களை அல்லது நூல்களைக் குறிப்பிடுவது வழக்கம். ஆசிரியர்களையும் நூல்களையும் சேர்த்துக் காட்டுவதும் உண்டு.

முஹத்திஸீன்கள் மேற்கோள் காட்டிய முறைகள்

முஹத்திஸீன்களின் ஆக்கங்களில் இதே மாதிரியான மேற்கோள் முறைகளை நாம் காண முடிகின்றது. சில உதாரணங்களைக் காண்போம்.

முதலாம் முறை

மாலிக், முவத்தாவில் அறிவித்துள்ள ஒரு ஹதீஸ் கீழ்வருமாறு:

....அபூ-வாகித்-அல்-லய்தீயிடமிருந்து ஆகில்-இப்னு-அபூ-தாலிப்பின் மவ்லாவான அபூ முர்ராவிடமிருந்து இஸ்ஹாக்-பின்-அப்துல்லா-பின்-அபூ தல்ஹாவிடமிருந்து மாலிக்...

இதே ஹதீஸ் இதே சொற்களுடன் புஹாரியால் எடுத்தாளப் பட்டுள்ளது. (இல்ம் 8, ஹதீஸ் இலக்கம் 66). அறிவிப்பாளர் வரிசையில் மட்டும் இஸ்மாயீல் என்பார் சேர்க்கப்பட்டுள்ளார். மாலிக்கிடமிருந்து இதனைப் பெற்று அறிவித்தவர் இஸ்மாயீல்.

இதே ஹதீஸை மாலிக்கிடமிருந்து பெற்ற, குதைபா-பின்-ஸஈத் அறிவிப்புச் செய்ததாக, அதே சொற்பிரயோகங்களுடன் முஸ்லிம் எடுத்துக் காட்டுகின்றார் (ஸஹீஹ் முஸ்லிம்-ஸலாம் :26)

இதே ஹதீஸை மாலிக்கிடமிருந்து பெற்று திர்மிதி அதே சொற் களோடு அறிவிக்கின்றார். (ஸுனன் இஸ்திஃதான்-29)

இந்த ஹதீஸை இப்னு ஹன்பல் பலமுறை அறிவிக்கின்றார். ஏனைய ஆசிரியர்களும் அறிவித்துள்ளனர். சொல்லுக்குச் சொல்

மேற்கோள் காட்டப்பட்டதற்கான ஓர் உதாரணமாக நான் இதனைக் காட்டினாலும்கூட, மேற்கோள் காட்டப்படும் போது மூலநூல் குறிப்பிடப்படாமை நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய தோர் அம்சம். இந்த ஹதீஸ் யாரிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பட்டது என்பது மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. என்றாலும் ஒருவருக்கொருவர் இந்த ஹதீஸ் அறிவிக்கப்படுவதில் தொகுப்பு கள் பயன்பட்டுள்ளமை, கூறித் தெரிய வேண்டியதொன்றல்ல.

ஓர் ஆசிரியரிடமிருந்து பல அறிஞர்கள் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்கின்றார்கள். அவர்களது சொல்லாட்சிகள் பெரிதும் ஒத்தனவாக உள. ஆக, அறிவிப்புச் செய்யும்போது ஒரு நூல் பயன்பட்டுள்ளது எனவும், நினைவாற்றல் மட்டுமே அதன் அடிப்படையாக அமையவில்லை எனவும் நாம் கொள்ளலாம்.

ஸுஹ்ரீ (51-125) நபிகளாரின் வாழ்வு பற்றிய ஒரு நூலைத் தொகுத்தார். அது பின்னைய காலத்து நூலாசிரியர்களது ஆக்கங் களுள் சங்கமமாகி தனியொரு நூல் என்ற நிலை இல்லாதுபோய் விட்டது. இவ்வாறான ஒரு கருத்துக் குறித்து நவீன ஆய்வாளர்கள் பலர் ஐயங் கொண்டிருந்தனர். அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுப் பிரசுரமான மூன்றாம் நூற்றாண்டு ஹதீஸ் தொகுப்புகள் சில வெளிவந்தபோது சுமார் 200 பக்கங்கள் அளவிலான ஸுஹ்ரீயின் முழு ஆக்கமும் நூலுருப் பெற்றமை தெரிய வந்தது. அதன் தொகுப் பாசிரியர் கூட அது ஸுஹ்ரீயின் ஆக்கம் என்பதனை அறிந்திருக்க வில்லை. ஆய்வொன்றின் முடிவாக ஸுஹ்ரீயின் பல மாணவர்கள் இந்நூலின் பல பகுதிகளை அறிவிப்புச் செய்துள்ளமை கண்டு கொள்ளப்பட்டது. ஸுஹ்ரீயின் பின்னர் 150 ஆண்டுக் காலம் கழித்து மரணித்த ஆசிரியர்களே இதனைப் பதிவு செய்திருந்தும் அவர்களது சொல்லாட்சிகள் பெரிதும் ஒத்தனவாக உள. ஒரு நூலிலிருந்து பெறப்பட்டிராவிடின் நிச்சயமாக இவ்வொற்றுமை யைக் காண முடியாதிருந்திருக்கும்.

இரண்டாம் முறை

சொல்லுக்குச் சொல் மேற்கோள் காட்டினாலும் தேவைப் படும் விஷயங்களை மேலதிகமாக சதுர அடைப்புக்குறிக்குள் இட்டுச் சேர்த்துக் கொள்ளல்.

ஹதீஸ்களுக்குச் செவிமடுத்து அவற்றைப் பிரதிபண்ணி வைத்துக் கொண்டோருள் ஏராளமானோர் தமது சொந்த நூல் களைக் கொண்டிருக்கலாயினர். சில சொற்களைப் போதிய விளக்க முள்ளனவாகச் செய்ய அல்லது தமது சொந்த அபிப்பிராயங்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் குறித்துக் கொள்ளத் தத்தமது நூல் களிலேயே மேலதிக விவரங்களைச் சேர்த்துக் கொள்ளும் பூரண உரிமையை மாணவர்கள் கொண்டிருந்தனர். மேலதிகமாகக் கொடுக்கப்படும் எந்த விவரமும் முற்றிலும் மாறான ஓர் இஸ்னாத் தை அல்லது புதிய விஷயங்களை இணைத்தவரது நாமத்தைக் கொண்டிருக்கும். ஆகையால் ஹதீஸ் தன் வடிவத்தை இழந்து போகு மென்ற அச்சம் இருக்கவில்லை.

இவ்வாறாக மேலதிக விவரங்களைச் சேர்த்துக் கொண்ட மைக்கான உதாரணங்களைப் பொதுப்பட எல்லா நூல்களிலும் காணலாம். ஸஹீஹ் முஸ்லிம் கிரந்தத்திலிருந்து பெறப்பட்ட ஓர் உதாரணத்தைக் காண்போம்:

“. . . வேறோர் அறிவிப்பாளர் வரிசையுடன் இது போன்ற தொரு ஹதீஸை கதாதா அறிவிப்புச் செய்துள்ளார். ஸுலைமானிட மிருந்து பெற்று ஜரீர் அறிவித்த ஹதீஸில் கதாதாவின் மேலதிக வாசகமாவது: (தொழுகையில் குர்ஆன்) ஓதப்படும்போது மௌனம் சாதிப்பீர்களாக; அபூஅவானாவிடமிருந்து அபூ காமில் செய்த அறிவிப்பு தவிர மேல்வரும் வாசகங்கள் வேறு எவராலும் அறிவிக் கப்படவில்லை. அந்த வாசகங்களாவன: நிச்சயமாக அல்லாஹ் மிக்க உறுதியாக தனது தூதரின் நாவினால் கூறுகின்றான். தன்னைப் புகழ்ந்துரைப்பவரை அல்லாஹ் செவிமடுக்கின்றான். (இமாம்

முஸ்லிமின் மாணவரான) அபூ இஸ்ஹாக் கூறினார்: இந்த ஹதீஸை அபூபக்ர் மிகத் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இமாம் முஸ்லிம் கூறினார்: ஆதாரபூர்வமாக ஹதீஸ் அறிவிப்புச் செய்வதில் ஸுலை மானையும் விஞ்சிய வேறு யாரையும் நீர் காணலாமா? இந்நிலை யில் அபூபக்ர் (இமாம் முஸ்லிமுக்குக்) கூறினார்: அப்படியானால் அபூஹுரைரா கூறிய ஹதீஸ் பற்றி, அதாவது (தொழுகையில்) குர்ஆன் ஓதப்படும்போது மௌனமாக இருங்கள் எனும் ஹதீஸ் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? ஏன் நீங்கள் அதனை (உங்கள் தொகுப்பில்) சேர்த்துக் கொள்ளவில்லை? அதற்கு இமாம் முஸ்லிம் கூறினார்: ஆதார பூர்வமானவையென நான் கருதும் எல்லா ஹதீஸ் களையும் இதில் நான் சேர்த்துக் கொள்ளவில்லை. முஹத்திஸீன் களிடையே ஆதாரபூர்வமானவை என ஒத்த கருத்து நிலவும் ஹதீஸ் களை மட்டுமே நான் பதிவு செய்துள்ளேன்."

இந்த ஹதீஸ் அதே அறிவிப்பாளர் வரிசையுடன் கதாதா வினால் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. (அதன் வாசகங்களாவன): "பெருமையும் புகழும் மிக்க அல்லாஹ் தனது தூதரின் நாவினால் கட்டளையிட்டுள்ளான்: அவனைப் புகழ்வோரின் புகழுரையை அவன் செவிமடுக்கின்றான்."

மூன்றாம் முறை

மூலத்தில் உள்ளது போலவே மேற்கோள் காட்டினும் தேவையற்ற விவரங்களைத் தவிர்த்துக் கொள்ளல்.

இவ்வாறான முறைக்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களை ஸஹீஹ் புஹாரியிலிருந்து நாம் காட்டலாம். பூரணமான ஹதீஸ் களை அவர்கள் அறிவிப்புச் செய்திருந்தாலும்கூட, அத்தியாயத்துக் குத் தேவையான பகுதிகளை மட்டும் ஹதீஸிலிருந்து எடுத்துக் காட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் புஹாரி.

புஹாரி ஓர் அத்தியாயத்துக்கு அளித்துள்ள தலைப்பு:

"கணவரைப் பொறுத்து பெண்களின் நன்றியீனமும் விசுவாசமின்மையும் வெவ்வேறு தரத்திலமைந்துள்ளன."

பின்னர் அவர், (இத்தலைப்பின் கீழ்) இப்னு அப்பாஸ் அறிவிப்புச் செய்த ஹதீஸ் ஒன்றினைப் பதிவு செய்கின்றார்: நபிகளார் கூறினார்கள்: நரகம் எனக்கு எடுத்துக் காட்டப்பட்ட வேளையில் அங்கு அதிகமாகப் பெண்களையே கண்டேன். இதனைக் கேட்ட சிலர் 'அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் உண்மையில் நிராகரித்தனரா?' எனக் கேட்க "இறை நிராகரிப்பன்று, மாற்றமாக தமது கணவன்மார்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து, நன்றியுடன் வாழாது புறக்கணிக்கின்ற, அதிகமாகக் குறை கண்டு முறைப்படுகின்ற பெண்களே அவர்கள்." என்று நபியவர்கள் பதிலளித்தார்கள். (புஹாரி:ஈமான்-21. இந்த ஹதீஸ் குறைந்தது ஆறு இடங்களில் இமாம் புஹாரியால் குறிப்பிடப்படுகின்றது. மீளக் கூறப்பட்டுள்ளமைக்கும் மேலதிக விவரங்களைத் தவிர்த்துக் கொண்டுள்ளமைக்கும் பார்க்க: புஹாரி ஹதீஸ் இலக்கங்கள்-431, 748, 1052, 3202, 5197. சந்திர கிரகணத்தின் போதான தொழுகை பற்றிய அத்தியாயத்தில் இது பூரண விவரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் மேலே குறிப்பிட்ட பிரதி அந்த ஹதீஸின் இறுதியில் வருகின்றது.)

இந்த ஹதீஸ் பற்றிய மற்றுமொரு விஷயத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். 'குப்ர்' என்பது இரு கருத்துப்படப் பயன்படுவது. ஒன்று விசுவாசமின்மை; மற்றது நன்றியீனம். நபிகளார் பின்னையதைக் குறித்தார்கள். கேட்டவர்களோ முன்னையதைக் கருதினார்கள்.

நான்காம் முறை

தனது சொந்த வசனங்களிலேயே மேற்கோள் காட்டுதல்.

இது முஹத்திஸீன்களது வார்த்தைப் பிரயோகத்தில் 'ரிவாய-பில்-மஅனா' என வழங்குகின்றது. அதாவது ஒரு ஹதீஸைத் தனது சொந்த சொற்களையும் முறைகளையும் கொண்டு விவரிப்

பது. சில அறிஞர்கள் இம்முறையை ஏற்பதில்லை. ஏராளமான அறிஞர்கள் சில விதிகளுடன் இம்முறையை ஏற்றனர். அவ்விதிகள் வருமாறு:

அறிவிப்பாளர் அறபு மொழியில் நல்ல பாண்டித்யம் பெற்றவராக, ஹதீஸின் சொற்களையும் அவற்றின் தாத்பர்யங்களையும் நன்கறிந்தவராக, வேறொரு முறையில் அறிவிப்புச் செய்வதனால் சொற்கள் மாறுபடினும் கூட, மூல ஹதீஸின் சரியான நோக்கையும் கருத்தையும் வெளிப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் ஆரம்ப காலங்களில் மட்டுமே இம்முறை ஏற்கப் பட்டது. நூல்களாக ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட பின்னர் தனது சொந்த வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் ஹதீஸ் அறிவிப்புச் செய்தல் தடை செய்யப்பட்டது.

ஆரம்பகால ஆசிரியர்கள் தமது சொந்த வார்த்தைப் பிரயோகங்கள் கொண்டு ஹதீஸ் அறிவிப்புச் செய்வதில் விருப்புக் காட்டியவர்களல்லர். தமது ஆசிரியர்களிடமிருந்து தாம் கற்ற ஹதீஸ்களின் அதே சொற்பிரயோகங்களைப் பேணுவதில் அவர்கள் தீவிரமாக இருந்தார்கள். எனினும் நினைவாற்றலின் குறைபாடுகள் காரணமாக அவர்கள் சமானமான ஒரு சொல்லை அல்லது தாம் கேட்டவற்றின் கருத்தை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைப் பிரயோகத்தைக் கையாண்டனர்.

முஸ்லிம் அறிஞர்கள், குறிப்பாக முதலாம் நூற்றாண்டின் முஹத்திஸீன்கள் இலக்கிய நேர்மை வாய்ந்தவர்களாக எவ்வாறு சிறப்பான மேற்கோள் காட்டும் முறைகளை அறிமுகம் செய்தனர் என்பதனை நான் போதியளவு விவரித்துள்ளேன். என்றாலும், அவர்களது முறைக்கும் நவீன கால மேற்கோள் காட்டும் முறைக்கும் இடையில் அடிப்படை வித்தியாசமொன்று காணப்படுகின்றது. முஹத்திஸீன்கள் கையாண்ட முறைகளின் படி, ஹதீஸ் கற்றலுக்கு ஏற்கப்பட்ட முறைகளில் ஒன்றின் மூலம் ஹதீஸ் அறிவிப்புச் செய்வதற்கு உரிய அதிகாரம் படைத்தோரிடமிருந்து அங்கீகாரம் பெற்றி

ருந்தால் ஒழிய, எவரும் வெறும் வாய்மொழி மூலமாக, அல்லது நூலிலிருந்து அறிவிப்புச் செய்ய அனுமதிக்கப்படவில்லை. எனவே தான் இஸ்னாத் வரிசையில், காணப்படும் ஹத்ததனா, அக்பரனா முதலிய சொற்பிரயோகங்கள், ஓர் அறிவிப்பாளர் தான் அதனைப் பெற்றுக்கொண்ட முறை, அதனைப் பிறருக்கு அறிவிக்கத் தனக் குள்ள உரிமை என்பனவற்றை உறுதிப்படுத்தும் ஒரு வகைச் சான்றி தழாகவே அமைந்தன. ஆனால், உரிய அதிகாரம் படைத்தோரிட மிருந்து அங்கீகாரம் பெற்றில்லாது, ஒருவர் ஒரு நூலை விலை கொடுத்து வாங்கி, அல்லது பிரதி செய்து அல்லது அங்கீகாரம் பெற்றிராத ஒருவரிடமிருந்து அன்பளிப் பாகப் பெற்று அதிலிருந்து ஹதீஸ்களை மேற்கோள் காட்டவோ, அறிவிப்புச் செய்யவோ முனைவாராயின் அவர் ஒரு பொய்யர் என வழங்கப்பட்டார். அந்த அறிஞர், தான் இன்னின்ன நூல்களிலிருந்து பெற்றுக்கொண்டன இவை எனக் குறிப்பிட வேண்டுவது அவசியம். என்றாலும் இம் முறையினால் கிட்டக்கூடிய செய்திகளும் பெறுமதி யற்றனவாகவே கொள்ளப்பட்டன. ஏனெனில் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்களது பெயர்களில் தவறான பிரதிகள் அல்லது மேற்கோள்கள் காட்டப் பட்டிருக்கலாம். முஹத்திஸீன்கள் வகுத்திருந்த ஆய்வு முறைகள் பூரணமாகப் பிரயோகிக்கப்படுவதாயின் நவீன காலத்திய ஆவணங் களில் ஏராளமானவை முற்றும் மதிப்பிழந்துவிடும்.

முடிவாக மேலும் ஒரு விஷயம் குறிப்பிடப்பட வேண்டும். சில நிலைமைகளில் சில விதிகளின் கீழ் சொந்த வார்த்தைப் பிரயோ கம் அனுமதி பெற்றிருந்தது. இதனால் அதில் சிறிது மாற்றங்கள் ஏற்படக்கூடிய எல்லா வாய்ப்புகளும் உண்டு. கருத்தும் நோக்கமும் மாற்றமுறாத வகையில் ஹதீஸ்களின் சில பகுதிகளை மட்டும் மேற் கோள் காட்டலும் அனுமதிக்கப் பெற்றிருந்ததனால், மூல ஆவணம் மேலும் சில விவரங்களைக் கொண்டிருக்கும் சாத்தியங்கள் நிச்சயம் உண்டு. இவற்றை உறுதி செய்யும் வகையில் இடையறாத பரிசீலனை கள் நடாத்தப்பட்டன. இம்முறைகள் முதாபிஆத், ஷவாஹித் என வழங்கின. இவ்வாறான ஓர் அறிஞரின் அறிவிப்பில் மேலதிக விவரங்கள் சில கிடைக்கப் பெற்றிருக்க, அவரது சகாக்கள் அது

குறித்து மௌனம் சாதிக்கின்றார்கள் எனக் கொள்வோம். இந்நிலையில் அந்த அறிவிப்பாளர் 'அ' தரத்தவராயிருப்பின் அவர் தந்துள்ள மேலதிக விவரம் ஏற்கப்படும். இல்லையேல் அது கைவிடப்படும். இது ஸியதாத்-அத்-திகாஹ் (நம்பிக்கையான ஓர் அறிவிப்பாளரிடமிருந்து பெற்ற மேலதிக விவரம்) என வழங்கப்பட்டது. இதே ஒப்பீட்டுப் பரிசீலனையின் பின்னர், தன் சொந்த வார்த்தைகளில் ஒருவர் அறிவிப்புச் செய்த ஹதீஸில் பாரிய கருத்து வித்தியாசம் காணப்படின் அந்த அறிவிப்பு நிராகரிக்கப்பட்டது.

நூல்களின் பிரசுரம்

சிற்சிறு மாற்றங்கள், தவிர்ப்புகள், இணைப்புகள் கொண்டு ஒரே நூலின் பல பதிப்புகள் பிரசுரமாவது நவீன காலத்தில் சர்வ சாதாரணம். ஆரம்பகால அறிஞர்களைப் பொறுத்தமட்டிலும்கூட இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. அவர்களது பல்வேறு பதிப்புகள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டிருந்தன. முஹத்திஸீன்களது வாழ்க்கை வரலாறுகளை உள்ளடக்கிய புஹாரியின் அல்-தாரீக்-அல்-கபீர் எனும் தொகுப்பை நாம் எடுத்துக் கொள்வோம். இதில் 20,000 பெயர்களளவு குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெயர் குறித்துச் சிறிது விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது பிரதியை எழுத்தில் பதித்தவர் அல்-பத்ல்-பின் அப்பாஸ்-அல்-ஸாயிக். இரண்டாம் பிரதி முஹம்மத்-பின்-ஸுலைமான்-பின்-பாரிஸ்-அல்-தல்லால் (ம.312) என்பாரால் செய்யப்பட்டது. மூன்றாவதும் இறுதியுமான பிரதியை எழுத்தில் பதித்தவர் முஹம்மத்-பின்-ஸஹ்ல்-அல்-முக்ரி. இயல்பாகவே இம்மூன்று வாசகங்களும் சிற்சில இடங்களில் வித்தியாசப்படுகின்றன. எனினும் இந்த வித்தியாசங்கள் அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தனவல்ல. சில வேளை மாணவர்கள் வேறுபட்ட இந்தப் பிரதிகளைத் தம் ஆசிரியர்க்கு வாசித்துள்ளனர். உதாரணமாக முஹம்மத்-பின்-அஹ்மத்-அல்-லுஃலுஃயீ, அபூ தாவூதின் ஸுனன் கிரந்தத்தின் 911ம் இலக்க ஹதீஸின் பின்னால், ஆசிரியர் எழுத்தில் பதித்திருந்த போதும், நான்காவது வாசிப்பின் போது இந்த ஹதீஸை வாசிக்

காது விட்டார் என ஒரு குறிப்பை எழுதியுள்ளார். அலீ-பின்-ஹஸன் -பின்-அல் அப்த், அபூ தாவூதின் ஸுனனை அவரிடமிருந்து ஆறு முறை கற்றதாகத் தெரிவித்துள்ளார். எனினும் ஆறாம் முறை அவ ரால் பூரணமாக வாசிக்க இயலவில்லை. இவ்வாறாக மாணாக்கர் பலவாறாக வாசித்து அவற்றைக் குறிப்பிட்டும் வைத்துள்ளனர். இதன் விளைவாக ஒரே நூலின் பல பிரதிகளில் வித்தியாசங்கள் தென்படலாயின. வேறு மாணவர் ஒருவரது அறிவிப்புடன் ஒப்பீடு செய்யும்போது இந்த வித்தியாசங்களை இலகுவாக அடையாளம் காணமுடிந்தது. ஆனால், ஒரே ஆசிரியரிடமிருந்து ஒரேயோர் அறிவிப்பாளர் மட்டும் ஹதீஸ்களைப் பெற்றுள்ளார் எனக் கொள் வோம். இந்த ஒரே 'ராவி'யின் அல்லது அறிவிப்பாளரின் பல மாண வர்கள் தமக்குள் பற்பல இடங்களில் வித்தியாசப்பட்டவர்களாக, ஒரு தலைப்பை இடுவது அல்லது விடுவது; ஒரு ஹதீஸைக் கூறுவது அல்லது தவிர்ப்பது முதலிய விஷயங்கள் ஏன், எவ்வாறு நிகழ்ந்தன?

ஷூஃஷூஃயீயைப் பொறுத்தமட்டில், எவ்வளவு தெளிவாக ஆசிரியர் 911-ம் இலக்க ஹதீஸைப் பதிவு செய்திருந்தும், நான்காவது வாசிப்பின்போது வாசிக்காது விட்டார் என்பதைக் குறித்து வைத்துள்ளார். ஆசிரியர் தனது பின்னைய வாசிப்பில் சேர்க்காது விட்டாலும், முன்னைய வாசிப்புகளின் போது அளித்திருந்த அனுமதியின் காரணமாக அதனை அறிவிப்புச் செய்யத் தனக்கு அங்கீகாரம் கிட்டியுள்ளது என அவர் கருதியுள்ளார். எனவே ஆசிரி யரது தொகுப்பிலிருந்தும் வித்தியாசமானதொன்றை ஒரு மாணவர் கொண்டிருந்து, அதனைப் பிரசுரிக்க அனுமதி கிட்டியிருப்பினும் தொகுப்பின் புதிய பிரதியானது, முன்னர் அவருக்குக் கிடைத்த அனுமதியை வலுவிழக்கச் செய்வதில்லை. இந்த 'ராவீ' அல்லது அறிவிப்பாளர் பல்வேறு மாணவர்களுக்கு ஒரே நூலின் பல்வேறு பிரதிகளை அறிவிப்புச் செய்வதன் மூலமே இவ்வாறான வித்தியா சங்கள் தோற்றம் பெறுகின்றன.

சிலவேளை, பிரதி செய்யும்போது விடும் தவறுகள்; ஒரு சொல் அல்லது வார்த்தை விடுபடுதல்; தவறான ஒரு வார்த்தை பயன்

படுத்தப்படுதல் முதலியன இவ்வாறான வித்தியாசங்களை ஏற்படுத்தின. நூல்களை யாக்கும், பிரசுரிக்கும் அனுபவம் கொண்ட எவரும் மிகவும் கவனமாகச் செயல்பட்ட நிலையிலும் எவ்வாறு சில தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன என்பதை நன்கு உணர்வர்.

இனி, சில ஹதீஸ் வல்லுனர்கள் குறித்தும், ஹதீஸ் இலக்கியத் துறையிலான அவர்களது நூல்கள் குறித்தும் சிறிய சில விளக்கங்களைக் காண்போம்.

அத்தியாயம் – 2

இமாம் மாலிக் பின் அனஸ்

மாலிக் பின் அனஸ் பின் மாலிக் பின் அபூ ஆமிர் அல் அஸ்பஹீ மதீனாவில் பிறந்தார். அவர் பிறந்த வருடம் ஹிஜ்ரி 91 முதல் 97 வரை என மதிப்பிடப்படினும் பெரும்பாலும் ஹிஜ்ரி 93-லேயே அவர் பிறந்திருக்க வேண்டும். அவரின் பாட்டனார் தாபியீன்களில் ஒருவராயிருக்க முப்பாட்டனாரோ நபிகளாரின் தோழர்களுள் ஒருவராகவே இருந்தார். யெமன் வாசிகளாயிருந்த அவரது குடும்பத்தவர்கள் நபிகளாரின் காலத்தில் மதீனாவில் வந்து குடியேறினார்கள். அவரது மனைவியார் பாத்திமா. புதல்வர்கள் மூவர்: யஹ்யா, முஹம்மத், ஹம்மாத்.

இவரது தந்தையார் தம் மகன் மீது மிகவும் அவதானமாக இருந்துள்ளமையும் பாடமீட்டல் வேளைகளில் அவருடனேயே இருந்து வந்துள்ளமையும் தெரிய வருகின்றது. ஒரு முறை தன் தந்தையார் விடுத்த ஒரு வினாவுக்கு மாலிக் தவறான பதில் அளித்தார். புறாக்களுடன் விளையாடுவதில் கூடிய கவனத்தையும் நேரத்தையும் செலவிடுவதே இதற்குக் காரணம் என்றார் தந்தையார். இது மாலிக்குக்கு நல்லதொரு படிப்பினையாக அமைந்து அவர் தன் கல்வியில் பூரண கவனத்தைச் செலுத்த உதவியாக அமைந்தது.

கல்வி ஞானத்தைத் தேடி அவர் பிற பிரதேசங்களுக்குப் பயணம் செய்யாதுவிடினும் முஸ்லிம் உலகின் பேரறிஞர்கள் பலரிடமிருந்தும் கல்வி கற்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஏனெனில்

அவர்களுள் பெரும்பாலோர் மதீனாவுக்கு வருகை தருபவர்களாயி ருந்தார்கள். அவரது மாணாக்கரின் தொகை ஆயிரத்திலும் கூடிய தாகவிருந்தது.

மாலிக் பின் அனஸ் விசேட உபகாரங்கள் ஏதும் செய்யாத நிலையிலும் ஆட்சியாளருடனான அவரது உறவுகள் சுமுகமான வையாக இருந்தன. கலீபாக்களுடனும் பிரதேச அதிகாரிகளுடனு மான அவரது உறவு குறித்து விசாரிக்கப்பட்டபோது அவர்கள் நேர்மையான ஆலோசனைகள் தேவைப்பட்டோராய் உள்ளனர் என்றார். அவர்களைச் சந்தித்து, நன்மையின்பால் அவர்களை ஏவி, தீயவற்றினின்றும் தவிர்த்தலை அறிஞர்கள் தம் கடமைகளுள் ஒன்றாகக் கொள்ள வேண்டும் என்பர் மாலிக்.

எளிமையும் தூரதிருஷ்டியும்

சட்டத் தொகுப்பொன்றினை வெளியிட வேண்டும் என காலிப் அபூஜஅபர் இமாம் மாலிகிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். இஸ்லாமிய உலக முழுவதற்குமான சட்டத்தொகுப்பாக விளங்கக்கூடிய அதன் துணைகொண்டே ஆட்சியதிகாரம் செலுத் தப்படுமெனவும் அதற்கு முரணாக நடப்போர் தண்டிக்கப்படுவர் எனவும் கூறினார் கலீபா. இமாம் மாலிக் இதற்கு இணங்கவில்லை. நபிகளாரின் தோழர்கள் முஸ்லிம் உலகின் பல்வேறு பாகங்களிலும் பரந்திருந்தமையையும், மிகவும் சிறப்பாக, கலீபா உமரின் காலத்தில் அவர்கள் ஆசிரியர்களாகப் பல்வேறு பிரதேசங்களுக்கும் அனுப்பப் பட்டமையையும் அவர் சுட்டிக் காட்டினார். தோழர்களிடமிருந்து மக்கள் கற்றார்கள். ஒவ்வொரு தலைமுறையினரும் தம் முன்னைய தலைமுறையினரிடமிருந்து கற்றார்கள். பெரும்பாலான விஷயங் களில் இஸ்லாத்தை அமுல்செய்வதில் பல்வேறு முறைகள் காணப் படுகின்றன. சில அறிஞர்கள் இம்முறைகளில் ஏதேனும் ஒன்றை வற்புறுத்த வேறு அறிஞர்கள் வேறு ஒரு முறையை வற்புறுத்தலா னார்கள். முடிவில் பல்வேறு முறைகள் வழக்கில் வந்து பெரும் பாலானவை ஒன்றையொன்று ஒத்தனவாக விளங்கி வருகின்றன.

எனவே, அறிந்த ஒன்றிலிருந்து அறியாத ஒன்றுக்கு மக்களைத் திருப்பியமைக்க யாரேனும் முனைவாராயின், மக்கள் அவற்றை மதத்திற்கு முரணான ஒன்றெனக் கருதுவார்கள். அதனால் இஸ்லாம் குறித்துப் பல்வேறு நகரங்களும் பெற்றிருக்கக்கூடிய அறிவை அவ்வவ்வாறே விட்டு வைத்தல்தான் நலம் பயக்கும். அபூ ஜஅபர் மாலிக்கின் தூரதிருஷ்டியை மெச்சினார்.

அரச குமாரிக்கு மாலிக் தனது நூலை வாசிக்கவேண்டு மென கலீபா வேண்டிக்கொண்ட வேளை, "அறிவு மக்களை நாடிச் செல்வதில்லை; மக்களே அறிவை நாடிச் செல்வர்" எனப் பதிலளித் தார் மாலிக். அவ்வாறாயின் அரச குமாரியுடன் வேறு மாணாக்கர் அமர அனுமதிக்கக் கூடாது எனக் கலீபா வேண்ட, அதனையும் மறுத்து, எங்கெல்லாம் அமர்ந்து கொள்ள இடம் கிடைக்குமோ அங்கெல்லாம் மாணவர்கள் அமர்வர் என்றார்.

இமாம் மாலிக் அளித்த ஒரு தீர்ப்பு ஆட்சியாளர்களது நடவடிக்கைகட்கு முரணானதெனக் கொண்டு, மதீனாவின் ஆட்சி யாளர் ஜஅபர்-பின்-ஸுலைமானினால் மாலிக் அடித்துத் துன்புறுத் தப்பட்டார். இமாமவர்கள் ஹிஜ்ரி 179-ல் இறையடி சேர்ந்தார்கள்.

நூல்கள்

கீழ்வரும் நூல்கள் இமாம் மாலிக் அவர்களுடையதெனக் கொள்ளப்படுகின்றன.

ரிஸாலா இலா இப்னு வஹ்ப் பில் கத்ர்
கிதாபுன் நுஜூம்
ரிஸாலதுன் பில் அக்தீயா
தப்ஸீர்-லீ-கரீப்-அல்-குர்ஆன்
ரிஸாலா-இலா-அல்-லய்த் பின் ஸஅத்
ரிஸாலா-இலா-அபூ-கஸ்ஸான்
கிதாபுஸ்ஸியார்
கிதாபுல்-மனாஸிக்
கிதாபுல்-முவத்தா.

இவற்றுள் பெரும்பாலான நூல்களுக்கு என்ன நடந்ததென அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும்கூட, இமாம் மாலிக் தனியிடம் பெற்றிலங்க, அவரது சிந்தனை, வாழ்க்கை முறை, அறிவு ஆகியவற்றோடு அவரது நூல் முவத்தாவும் ஒரு காரணமாகின்றது.

முவத்தாவின் அமைப்பும் நோக்கும்

இது நபிகளாரின் ஹதீஸ்களையும் மதீனாவின் ஆரம்ப கால அறிஞர்களது நியாயத் தீர்ப்புகளையும் உள்ளடக்கியது.

பிரசித்திபெற்ற சட்ட வல்லுனரான அப்துல்-அஸீஸ்-பின் அப்துல்லா-அல்-மஜ்ஷூன் (ம.164) நியாயத் தீர்ப்புகளை மட்டும் உள்ளடக்கிய ஒரு நூலைத் தொகுத்தார். இதனைக் கண்டித்துக் கூறிய மாலிக், தான் அந்தத் தொகுப்பைச் செய்திருந்தால், 'அதார்' ரிலிருந்து தொடங்கி, நீதித் தீர்ப்புகளுடன் தொடர்ந்திருப்பார் எனக் கூறினார். பின்னர் மாலிக் தனது தொகுப்பை அதே முறையில் கொண்டு வந்தார். முவத்தா வெறுமனே ஹதீஸ்களை மட்டும் கொண்ட தொகுப்பல்ல. அது நபிகளாரின் ஹதீஸ், தோழர்கள், தொடர்ந்து வந்தோர், பின்னைய காலத்து வந்த சில அறிஞர்கள் ஆகியோரின் சட்டவியாக்கியானங்கள் என்பன ஒன்றிணைக்கப் பட்டதொரு தொகுப்பாக அமைந்தது.

நபிகளாரின் ஹதீஸ்களில் குறிப்பிடப்படாத அம்சங்கள் அல்லது நபிகளாரின் ஹதீஸ்களுக்கான விளக்கங்கள் அளித்தல், ஹதீஸ் பிரயோகம் செய்தல் முதலாய விடயங்களில் மதீனாவின் அறிஞர்களது ஏகமனதான முடிவுகளை அவர் அடிக்கடி காட்டிச் செல்கின்றார்.

இமாம் மாலிக் சேகரித்த ஹதீஸ்களின் பரப்பு

இமாம் மாலிக் மிகப் பெருந்தொகையான ஹதீஸ்களைச் சேகரித்து அவற்றிலிருந்து சில ஆயிரம் ஹதீஸ்களை மட்டும்

தேர்ந்து எடுத்துள்ளார் எனத் தெரிகின்றது. நாற்பது வருட கால மளவு இமாம் மாலிக் கற்றவை முவத்தாவில் கிட்டுகின்றன. பல முறை திறம்பட திருத்தியமைத்தமை கொண்டு இதில் சேகரிக்கப் பட்ட விஷயங்களை இவர் பெருமளவு குறைத்துள்ளார். எனவே முவத்தாவில் 80 வெவ்வேறு வாசகங்கள் உள. அவற்றுள் 15 மிகப் பிரசித்தம் பெற்றன. இப்போதைய நிலையில் யஹ்யா-பின்-யஹ்யா வின் வாசகம் மட்டுமே மூல உருவில் பூரணமானதாக அச்சிடப் பட்டுள்ளது. இந்த வாசகத்தில்,

நபிகளாரின் ஹதீஸ்,
நபித்தோழர்களிடமிருந்து பெற்ற அம்சங்கள்,
தாபியீன்களின் முடிவுகளும், செயற்பாடுகளும்

என்பன உள்ளடங்கியுள்ளன. இந்த நூலை அடியாகக் கொண்டு ஏராளமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகை யில் ஸஹீஹ் புஹாரிக்கு அடுத்தபடியாகக் கொள்ளப்படுவது இது.

முவத்தாவுக்கான விளக்கவுரைகள்

முவத்தாவுக்கான விளக்கவுரைகளில் மிக்க பிரசித்தி பெற் றன இப்னு-அப்துல்-பர்ர் இயற்றிய அத்தம்ஹீத், அல்-இஸ்தித்கார் என்பன.

ஸுலைமான்-பின்-கலாப் அல்பாஜீ (ம.474) இரு விளக்க வுரைகளைத் தொகுத்தார். அல்-இஸ்தீபா ஒன்று. மற்றது ஏழு பாகங் களிலான அல் முன்தகா.

முஹம்மத்-பின்-அப்துல் பாகீ-அஸ் ஸுர்கானீ (ம.1122)யின் நான்கு பாகங்களிலான விளக்கவுரை பல முறை அச்சிடப்பட்டுள் ளது.

முஹம்மத் ஸகரியா அல்-கன்தலாவீ (1315-) யின் அவ்ஜாஸ் அல்மஸாலிக்-ஷர்ஹ்முவத்தா-இந்தியாவிலும் எகிப்திலும் பிரசுர மாகியுள்ளது.

அத்தியாயம் – 3

அஹ்மத் பின் முஹம்மத் பின் ஹன்பல்

அபூ அப்துல்லாஹ் அஹ்மத்-பின்-முஹம்மத்-பின்-ஹன்பல். இவரது தந்தையார் பஸ்ராவில் வாழ்ந்து வந்த ஒரு முஜாஹித். அவர் மார்வ் பிரதேசத்துக்கு காழியாகச் சென்றிருந்தவேளை ஹிஜ்ரி 164- ரபீயுல் அவ்வல் 20-ம் பிறையன்று பிறந்த அஹ்மத் குழந்தையாக இருக்கும்போதே பக்தாதுக்குக் கொண்டு வரப்பட்டார். தந்தையார் தனது 30-வது வயதில் காலமானார். தாயாரின் பெயர் ஸபிய்யா- பின்த்-மைமூனா பின்த் அப்துல் மாலிக் அஷ்ஷைபானீ.

நல்ல உயரம் கொண்ட இவர், தன் தலைமயிர்களை வர்ணமிடும் வழக்கமுடையவராய் இருந்தார். ஹிஜ்ரி 179-ல் தனது 16-வது வயதில் ஹதீஸ் கற்கத் தொடங்கிய அவர் தனது வாழ்நாட்களுள் பத்து லட்சத்துக்கும் மேலான ஹதீஸ்களை மனனம் செய்திருந்தார். ஹதீஸ் பற்றிய அறிவையும் சட்ட விவகாரங்களையும் இணைத்துக் காணும் துறையில் நிபுணத்துவம் பெற்றிருந்த ஒரு சிலருள் இவரும் ஒருவர். இறையுணர்விலும் இஸ்லாத்தைப் பாதுகாப்பதிலும் தீவிர மனப்பாங்கு பூண்டிருந்தமை காரணமாக, கலீபாவுக்கும் அவரது மார்க்க உரிமை கோரல்களுக்கும் இவர் முரண்பட்டு நிற்கவே, நீண்டகால சிறைவாசத்தையும் அதிகாரிகளிடமிருந்து துன்ப துயரங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. என்றாலும் அவர் சரண் அடையவில்லை. அவர் மீதான விசாரணைகள் குறித்துப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

இப்னு ஹன்பலும் மின்ஹாவும்

இஸ்லாத்தில் சுதந்திர சிந்தனையாளர்கள் என உரிமை பாராட்டிக் கொண்ட முஃதஸிலாக்கள், அக்கால ஆட்சியாளர் களாயிருந்த மாமூன், அல்முஃதஸிம், அல்வாதிக் முதலாய கலீபாக்கள் மீது தமது செல்வாக்கை நன்கு பதித்திருந்தமை காரண மாக அவர்களது கருத்துக்களையே ஏற்றோராய், எல்லா முஸ்லிம் களும் அவற்றையே ஏற்று நடக்க வேண்டும் என இராஜாங்க ரீதியா கவே வற்புறுத்தல் செய்யலானார்கள். இப்னு ஹன்பலும் ஏனைய பல முஹத்திஸீன்களும் இதனை ஏற்க மறுத்தனர். விளைவாக பக்தாதிலிருந்து தர்ஸூல் நகருக்கு இப்னு ஹன்பல் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டவராகக் கொண்டு செல்லப்பட்டார்.

முஃதஸிம்மின் கீழ் பல துயரங்களையும் சிறைவாசத்தையும் பொறுமையுடன் அனுபவித்து வந்தார் இப்னு ஹன்பல். கலீபா முஃதஸிம் முஃதஸிலாக்களின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் படி இப்னு ஹன்பலை அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அவ்வாறு அவர் ஏற்பாராயின் இப்னு ஹன்பலின் சங்கிலிகளைத் தானே நின்று கழற்றி, அவரை விடுதலை செய்து, அவரைப் பின்பற்றுவதாக வும் கூறினார். அதனை அவர் மறுக்கவே, மூட்டுகள் சில கழன்று போகுமளவு அவர் முஃதஸிம்மின் சேவகர்களால் மிதிக்கப்பட்டார். பின்னர் கொலைக்களத்தவர் பலரால் கசையடி கொடுக்கப்பட்டு இம்சிக்கப்பட்டார். சுயநினைவு இழந்தவராக வீழ்ந்த அஹ்மத் நினைவு திரும்பியதும் உட்கொள்வதற்கென சிறிது ஆகாரம் அளிக்கப்பெற்றபோது தான் நோன்பை முறிக்கத் தயாரில்லையென மறுத்துரைத்தார். இஸ்லாத்தின் காரணமாக இப்னு ஹன்பல் அனு பவிக்க வேண்டியிருந்த துயர்களையெல்லாம் விவரிக்க இதுவல்ல உரிய சந்தர்ப்பம்.

இமாம் அஹ்மத் மீதான குற்ற விசாரணைகள் பற்றி கலாநிதிப் பட்டத்துக்கான ஆராய்ச்சியொன்றினை பெட்டன் என்பார் செய்துள்ளார். இமாம் அஹ்மதுடைய குணவியல்புகள்

எவ்வாறிருந்தனவென்பதற்கு, பிற்கால நிகழ்வுகள் நல்ல உதாரணம். கலீபா முதவக்கிலின் காலத்தில் அரசின் கொள்கைகள் மாற்றமுற்றன. முஹத்திஸீன்களது கோட்பாடுகளுக்குச் சார்பானதாக கலீபாவின் எண்ணங்களும் அமைந்தவிடத்து, அன்னாரை முன்னர் குற்றஞ்சாட்டித் துயருறுத்தியோர் மீது பழிவாங்கும் படி வேண்டிய போது அதனை மறுத்துரைத்தவராகக் குர்ஆனின் 'ஷூரா' அத்தியாயத்தின் 40-ம் வசனத்தின் மீது தன் கவனம் ஈர்க்கப்பட்டிருப்பதாகக் கூறினார், இமாம் அஹ்மத். அந்த வசனம் குறித்து முதலாம் நூற்றாண்டின் பேரறிஞரான ஹஸன்-அல்-பஸ்ரீ (21-110) அளித்த விளக்கத்தை விவரித்தார் அவர். மறுமையில் உலகத்தார் அனைவரும் முழந்தாளிட்டவர்களாக அல்லாஹ்வின் முன் நிற்பர். அவ்வேளை அல்லாஹ்விடமிருந்து நற்கூலியைப் பெறவிருப்போர் அனைவரும் எழுந்து நிற்கும்படி கூறப்பெறுவர். இந்த உலகில் தவறிழைத்தோரை மன்னித்தோர் தவிர வேறெவரும் எழுந்திருக்க மாட்டார்கள். தன்னைத் துயருறுத்தியோர் அனைவரையும் இந்த விளக்கத்தின் அடிப்படையில் மன்னித்துவிட்டார் இப்னு ஹன்பல். பின்னர் அவர் கூறுவார்: 'தனக்காக வேண்டி, அல்லாஹ் ஒரு மனிதனைத் தண்டிக்காது விடுவதனால் ஒரு மனிதன் அடையும் நஷ்டம் தான் என்ன?'

அரசிடமிருந்து எந்த ஓர் உபகாரத்தையும் அவர் பெற மறுத்தார். பின்னர் அவர் அறியாத வகையில் அவரது விருப்பத்துக்கு மாறாக அவரது மக்களுக்கும் ஒன்றுவிட்ட சோதரர்க்கும் சகாயப் பணம் வழங்க ஏற்பாடு செய்தனர் அரசினர். இது தெரியவந்தபோது தன்னைச் சார்ந்தோரிட மிருந்து தன்னை முற்றாக விலக்கிக் கொண்டார் இப்னு ஹன்பல். ஆரம்ப காலங்களில் அவர்களது வீடுகளிலிருந்து அவர் சிற்சிறு உதவிகளைப் பெற்றுக் கொண்டதுண்டு. பின்னரோ தனது மருந்துகள், உணவுகள் ஆகியனவற்றைச் செய்து எடுக்க அவர்களது அடுப்பங்கரைகளைப் பயன்படுத்துவதைக்கூட அவர் தவிர்த்துக் கொண்டார்.

ஆக்கங்கள்

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் பல தொகுப்புகளை ஆக்கி யுள்ளார். சில பிரசுரமாயுள்ளன; சில காணாமற் போய்விட்டன; சில பதிப்பும் பிரசுரமும் வேண்டி நிற்பன. அவரது ஆக்கங்களில் சில வருமாறு:

அல்-இலால்-வ-மஅரிபத்-அர்ரிஜால்
தாரீக்
அந்நாஸீக் வல் மன்ஸூக்
அத்தப்ஸீர்
அல் மானாஸிக்
அல் அஷ்ரிபா
அஸ்ஸுஹ்த்
அர்ரத் அலா அஸ்ஸனாதிகா வ அல் ஜஹ்மீயா
அல்முஸ்னத்

எல்லா ஆக்கங்களிலும் தனது முஸ்னதினாலேயே பெரும் புகழ் பெற்றவர் இப்னு ஹன்பல்.

முஸ்னத் தொகுப்புகளின் தன்மை

சட்ட விவகாரங்கள் சம்பந்தப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் தொகுக்கப்பட்டனவல்ல முஸ்னத்கள். இதன் ஒரே நியதியாக அமைந்தது, குறிப்பிட்ட ஒரு நபித்தோழரின் ஹதீஸ்கள் அனைத்தை யும் ஒரு தொகுப்பாக அமைப்பதாகும். எவ்வாறாயினும் தோழர் களின் பெயர்களை வரிசைக் கிரமப்படுத்தி அமைப்பதில் பல்வேறு அபிப்பிராயங்கள் உள. சிலர், ஆரம்ப கலீபாக்களான அபூபக்ர், உமர், உத்மான், அலீ ஆகிய நால்வரையும் கொண்டு அவர்களைத் தொடர்ந்து நபிகளாரால் சுவனம் வாக்களிக்கப்பட்ட ஆறு தோழர் களையும் கொள்வர். அவர்களின் பின்னால் இஸ்லாத்தை முதன் முதல் ஏற்றுக்கொண்ட தோழர்கள் வரிசைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறாக அவர்களது தொகுப்புகள் அமைந்தன. சில நூல்கள் அகர வரிசைக் கிரமத்தில் அமைந்தன. சில, பிரதேச அடிப்படையில் அமைக்கப்பட்டன. என்றாலும் முஸ்னத்கள் இலகுவாகப் பயன் படுத்தக் கூடியனவல்ல. ஏனெனில் அவற்றில் பொருள் வாரியான அமைப்பு முறை இல்லை. எனவே குறிப்பிட்ட ஒரு ஹதீஸை அதில் தேடிக் கொள்வது சிரமம்.

ஹிஜ்ரி 1313-ல் ஆறு தொகுதிகளில் இமாம் அஹ்மதின் முஸ்னத் பிரசுரிக்கப்பட்டது. இந்த நூற்றாண்டில் இரண்டு அறிஞர் கள் தமது வாழ்வின் பெரும்பாகத்தை இந்த நூலுக்கெனச் செலவிட் டனர். ஒருவர், பிரசித்தி பெற்ற இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத் தாபகரான ஹஸன் அல்-பன்னாவின் தந்தையார், ஷெய்க் அஹ்மத் அப்துர் ரஹ்மான் அஸ்ஸர்ஆதி. இவர், மூல நூலை சட்ட விவகா ரங்களின் அடிப்படையில் அத்தியாய ஒழுங்குகளின் கீழ் அமைத் தார். நல்லதொரு விரிவுரையுடன் கூடிய இந்நூல் ஏனைய தொகுப்பு களில் தொடர்புபட்ட ஹதீஸ்களையும் கொண்டுள்ளது. 24 பாகங் களில் பிரசுரமாகியுள்ள இது, முஸ்னத் மீதான மிகச் சிறந்ததொரு நூலாக விளங்குகின்றது.

அடுத்த அறிஞர் அஹ்மத் ஷாகிர். மூல நூலைத் திறனாய் வுடனான ஒரு பதிப்பாக வெளிக்கொண்டுவர முனைந்த அவர், தனது மறைவின் முன் சுமார் கால் பகுதியை 15 பாகங்களாகப் பிரசுரித்து அளித்தார். இமாம் அஹ்மதின் முஸ்னதில் அடங்கியுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை இன்னமும் சரிவர கணக்கிடப்பட வில்லை.

அறிஞர்கள் இதில் முப்பது முதல் நாற்பதினாயிரம் ஹதீஸ் கள் வரை இருக்கலாம் என்பர். இதுவே, எம் மத்தியில் இருக்கும் மிகப் பெரிய ஹதீஸ் தொகுப்பாக, அல்லது இரண்டாவது பெரிய தொகுப்பாக விளங்குகின்றது. இமாம் அஹ்மதின் முஸ்னதைவிடப் பெரிய ஹதீஸ் தொகுப்புகள் இருந்துள்ளனவென்றாலும், அவை தற்போது கிட்டுவனவாக இல்லை. எவ்வாறாயினும் கத்தானீ, தனது

அர்ரிஸாலா-அல்-முஸ்தத்பரா எனும் நூலில் 80 முஸ்னத்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றில் சில மிகப் பெரியன. யாகூப்-பின்-ஷைபா ஒரு முஸ்னத் தொகுப்பை உருவாக்கத் திட்டமிட்டார். இதனை இவர் முடித்து வைத்திருப்பாராயின் அது 200 பாகங்களி லும் கூடியதாக இருந்திருக்கும். இம்மாபெரும் கிரந்தத்தின் மிகச் சிறியதொரு பகுதி கண்டு பிடிக்கப்பட்டு அண்மையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

முஸ்னத்கள் தொகுத்த சிலர்:

அப்த்-பின்-ஹுமைத்
அபூ இஸ்ஹாக்
அபூ யாஅலா (ம.307)
அல்-பஸ்ஸார் (ம.292)
ஹஸன்-பின்-ஸுப்யான்
ஹுமைதீ
இஸ்ஹாக்-பின்-ராஹ்வைஹி
தயாலிஸீ
உஸாமா-பின்-ஹாரித்
யாகூப்-பின்-ஷைபா (ம.262)

அத்தியாயம் – 4

இமாம் புஹாரி

அபூ அப்துல்லாஹ் முஹம்மத்-பின்-இஸ்மாயீல் பின்-இப்றா ஹீம்-பின்அல்-முகீரா-அல்-ஜபாஅய் ஹிஜ்ரி 194 ஷவ்வால் மாதம் பிறை பதின்மூன்று வெள்ளிக்கிழமை புஹாராவில் பிறந்தார். ஹதீஸ் அறிஞரான அவரது தந்தை இஸ்மாயீல் அவர்களின் ஆசிரியர்களுள் மாலிக்-பின்-அனஸ், ஹம்மாத்-பின்-ஸைத், இப்னுல் முபாரக் ஆகியோரும் அடங்குவர். புஹாரியின் இளவயதிலேயே தந்தையார் காலஞ் சென்றுவிட்டார். தனது தந்தையாரிடமிருந்து பெருமளவு செல்வங்களை வாரிசுரிமையாகப் பெற்ற புஹாரி, பங்குதாரராக ஒருவரைக் கொண்டு அவருக்கு அவற்றைப் பொறுப் பளித்தார். இவரோடு தொடர்புகொண்ட ஒருவர் 25,000 திர்ஹம் களைக் கடனாகப் பெற்று, அதனைத் திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் இல்லாதவராக இருந்தார். இந்த விவகாரத்தை கவர்னரி டம் கொண்டு செல்வதன் மூலம் அந்தத் தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறப்பெற்றார் புஹாரி. என்றாலும் கவர்னர் பின்னைய காலங்களில் தன்னிடம் சலுகைகளும் ஆதரவும் பெற முனையலாம் எனக்கொண்டு கவர்னரிடமிருந்து எவ்வித உதவியையும் பெற மறுத்தார் இவர். மிக்க அன்பான தாயாரும், அஹ்மத் எனும் மூத்த சகோதரர் ஒருவரும் இவருக்கிருந்தனர்.

பத்து வயதை எட்டமுன்னரே புஹாரி, ஹதீஸ் கல்வி கற்கத் தொடங்கிவிட்டார். 16 வயதினரான போது பிரசித்தி பெற்ற ஆரம்ப கால ஹதீஸ் வல்லுனரான இப்னுல்-முபாரக், வாகிஇ முதலியோ ரின் ஹதீஸ் தொகுப்புகளை இவர் மனனம் செய்திருந்தார். ஹதீஸ்

களையும் ஆரம்ப கால அறிஞர்களின் தொகுப்புகளையும் மனனம் செய்வதுடன் அவர் நின்று விடவில்லை. ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தவர்களின் வரிசையில் இருந்த ஒவ்வொருவரதும் வாழ்க்கை வரலாறு, அவர்கள் பிறந்த இடம், திகதி, அவர்களது மறைவு முதலி யன குறித்த பூரண விவரங்களையும் தெரிந்து வைத்திருந்தார்.

ஹதீஸ் கற்கவென அவர் ஆறு வருடங்கள் ஹிஜாஸில் இருந் தார். பக்தாதுக்கு எட்டு முறை விஜயம் செய்தார். ஆதம்-பின்- அபூ ஆயாஸைச் சந்திக்கவெனச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் அவரது பணம் முழுவதும் செலவழிந்துவிட, செய்வதறியாது காட்டுச் செடி களின் இலைகளைத் தின்று காலங்கழித்தார். அம்பெறிவதில் சிறப்புற்று விளங்கிய இவர் பயிற்சிக்கென இடைக்கிடை வெளிச் செல்வதுண்டு. அதன் மூலம் எந்த ஒரு வேளையிலும் தான் ஜிஹா துக்குத் தயாராயிருக்கலாம் என அவர் கருதினார்.

ஆரம்பகால அறிஞர்களை மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங் களில் அவர்களைக் கண்டனத்துக்குள்ளாக்க வேண்டியேற்படும் போது இமாம் புஹாரி மென்மையான மிதமான மொழியையே பயன்படுத்தினார். என்றாலும்கூட, மென்மையான அவ்வாசகங்கள் எதைக் குறித்தன என்பதை அறிஞர்கள் நன்கறிந்திருந்தனர். தனது மாணவர்களுடன் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டவர் புஹாரி. அவரது எழுதுவினைஞராயிருந்த முஹம்மத்-பின்- அபூஹாதிம் கூறுவார்: “புஹாரி இரவில் பலமுறை நித்திரையி லிருந்து விழித்தெழுவார், மெலிதாக விளக்கை எரிய வைத்து ஏதும் ஒரு ஹதீஸில் ஏதாவது ஒரு குறிப்பினை எழுதிவிட்டு மீண்டும் உறங்குவார். நான் அவரிடம் வினவினேன்: “நீங்கள் ஏன் இவ்வாறு தனியே சிரமப்பட வேண்டும்? என்னை நீங்கள் அழைத்திருக்க லாமே!” அவர் கூறினார்: “நீர் இளைஞர்; உமது உறக்கத்தைக் குழப்ப நான் விரும்பவில்லை.”

புஹாரி பக்தாதை அடைந்ததும், பிரசித்தி பெற்ற அவரது நினைவாற்றலைப் பரீட்சித்துப் பார்க்க முனைந்தனர் அங்கிருந்த

அறிஞர்கள். பத்துப் பேர் பத்து ஹதீஸ்களை புஹாரிக்கு வாசித்துக் காட்டுவதாகவும், அனைவரும் ஹதீஸின் இஸ்னாத்தை மாற்றி யமைத்து வேறொரு 'மத்ன்' னோடு இணைத்து விடுவதாகவும் ஏற்பாடாயிற்று. ஒவ்வொருவரும் தத்தம் ஹதீஸை வாசித்து புஹாரி அதனை அறிவாரா என வினவினர். அவர் அனைவருக்கும் "நான் அறிந்ததொன்றல்ல அது" என்றே பதிலளித்து வந்தார். புஹாரியின் மீது நடாத்தப்படும் பரீட்சையே இது என்பதை அறிந்திருந்தவர்கள் புஹாரி விஷயத்தை விளங்கியுள்ளார் எனக் கொண்டனர். பொதுவான அபிப்பிராயமோ புஹாரி அறிவும் நினைவாற்றலும் குன்றியவர் என்பதாகவே இருந்தது. கேள்விகள் முடிந்ததும், புஹாரி எந்த இஸ்னாத், எந்த ஹதீஸுக்குரியது என்பதனை முறையாக விளக்கம் செய்தார்.

அவர் தனது இறுதிக் காலத்தில் சில பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியேற்பட்டு நாட்டிலிருந்து வெளியேறும்படி கவர்னரால் உத்தரவிடப்பட்டார். நூற்றுக்கணக்கான பேரரசர் களே மறக்கப்பட்டு விட்ட நிலையில் இந்த கவர்னரின் நாமம் இன்னமும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளமைக்குக் காரணம் புஹாரியின் ஆசீர்வாதமோ சாபமோ என நான் அறியேன்.

புஹாரி, ஹிஜ்ரி 256 ஈத் இரவு சனிக்கிழமையன்று கால மானார்.

புஹாரியின் ஆக்கங்கள்

புஹாரி பல தொகுப்புகளை யாத்தார். அவற்றுள் சில அழிந்து விட்டன; சில எமக்குக் கிட்டியுள்ளன.

1. கழாயஸ்ஸஹாபா வத் தாபிஈன்

தனது 18-வது வயதில் இவர் இதனைத் தொகுத்தார். தற்போது அது குறித்து எந்த விவரமும் இல்லை.

2. ரப்-அல்-யாதைன்
3. கிறாஅத்-கல்ப்-அல்-இமாம்
4. ஹல்க்-அப்ஆல்-அல் இபாத்
5. அத் தப்ஸீர்-அல்-கபீர்
6. தாரீக் ஸகீர்
7. தாரீக் அவ்ஸாத்
8. தாரீக் கபீர் (எட்டு பாகங்கள்)
9. அல்-முஸ்னத்-அல்-கபீர்
10. அல்-அதப்-அல்-முப்ரத்
11. பிர்ர்-அல்-வாலிதைன்
12. அத்துஆஅபா
13. அல் ஜாமிஇ அல் கபீர்
14. அல்-அஷ்ரிபா
15. அல்-ஹிபா
16. அஸாமீ-அஸ்-ஸஹாபா
17. அல்-வுஹ்தான்
18. அல்-மப்ஸூத்
19. அல்-இலால்
20. அல்-குனாஅ
21. அல்-பவாயித்
22. ஸஹீஹ்-அல்-புஹாரி.

இவற்றுள் 2, 3, 4, 6, 8, 10, 12, 20-ஆம் இலக்க தொகுப்புகள் பிரசுரமாகியுள்ளன. சில பலமுறை பிரசுரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அவரது மிகப் பிரசித்தி பெற்ற ஆக்கம் ஸஹீஹ் அல் புஹாரியாகும். அதன் பூரணமான பெயர் 'அல்-ஜாமிஉ அல் முஸ்னத் அஸ்ஸஹீஹ் அல் முக்தஸர் மின் உமூர் ரஸூலில்லாஹி வ ஸுனனிஹீ வ அய்யாமிஹீ'. இதைத் தொகுப்பதில் அவர் 16 வருடங்களைச் செலவிட்டார். இத்தொகுப்புக்கான நூலமைப்புத் திட்டத்தை அவர் மக்காவின் மஸ்ஜிதுல் ஹரத்தில் இருக்கும்போது தான் அமைத்தாரெனத் தெரிய வருகின்றது. இதில் இடையறாது

செயலாற்றி வந்த இமாம் புஹாரி இத்தொகுப்பைப் பூரணப்படுத்தி வைத்தது மதீனாவில்-நபிகளாரின் பள்ளிவாசலில்.

தனது ஸஹீஹில் இணைத்துக் கொள்ளவென முடிவு செய்யப் பட்ட ஒரு ஹதீஸை சேர்த்துக்கொள்ளும் முன்னர் புஹாரி குளித்து, இரண்டு ரக்அத் நபில் தொழுது இஸ்திஹாரா செய்து கொள்வார். பின்னர் அவர் திருப்தியுற்ற மனத்தவராக இருப்பின் மட்டுமே அந்த ஹதீஸை தன் ஸஹீஹில் சேர்த்துக் கொள்வார்.

ஸஹீஹ் புஹாரியில் உள்ள ஹதீஸ்களின் தொகை

புஹாரி சாதாரணமாக அத்தியாயத் தலைப்புகளுக்கு ஏதும் ஒரு ஹதீஸின் ஒரு பகுதியைப் பயன்படுத்துவார். அத்தோடு அவர் சட்ட நியதிகளின் தேவைக்கியைந்த வகையில் ஒரு ஹதீஸைப் பல முறை பல இடங்களில் திருப்பித் திருப்பிக் கூறுவார். அவரது தொகுப்பில் உள்ள ஹதீஸ்களின் மொத்தத் தொகை 9082. எனினும் கூறியது கூறல்களை விட்டுப் பார்க்கும்போது அவற்றின் தொகை யாக உள்ளது 2602 மட்டுமே. இதில் ஹதீஸ் மஃகூபாக்களும், தொடர்ந்து வந்தோரின் வாக்குகளும் சேர்க்கப்படவில்லை.

புஹாரியின் மீட்டல் முறை

சாதாரணமாக நூலாசிரியர்கள் தமது ஆக்கங்களைத் திருத்தியமைத்து முன்னைய நூலினும் சிறந்ததாக அடுத்த பதிப்பு களை வெளி யிடுவது வழக்கம். அல் புஹாரியும் அவ்வாறே செய் தார். தனது ஆக்கத்தை மூன்று முறை தொகுத்ததாக அவர் கூறுவார். அவரது தாரீக் கபீர் மூன்று பிரதிகள் வெளிவந்தமையும், ஒவ்வொரு பிரதியும் வித்தியாசப்பட்டமையும், இறுதிப் பிரதியே பூரணமான தென்பதும் நாம் அறிவன. ஸஹீஹைப் பொறுத்தும் இதனையே செய்தார் அவர். தனது இறுதிப் பிரதியை அமைத்த பின்னரும்கூட

அவர் அதில் திருத்தங்கள் செய்த வண்ணமாகவே இருந்தார். புது விஷயங்களைச் சேர்ப்பது, ஏற்கெனவே சேர்த்தவற்றைத் தவிர்ப்பது, தேவையான விவரக் கோவைகளை அளிக்காத நிலையிலும் புதிய தலைப்புகளைச் சேர்ப்பது, இவ்வாறாகப் பலபட அவர் கருமமாற்றி வந்தார்.

ஸஹீஹில் ஹதீஸ்களைச் சேர்த்துக்கொள்ள புஹாரி விதித்த நியதிகள்

தனது ஸஹீஹ் தொகுப்பில் எந்த ஒரு ஹதீஸையும் சேர்த்துக் கொள்வதற்கு இமாம் புஹாரி விதித்த நியதிகள் மிகவும் கடினமானவை.

-அறிவிப்பாளர் தன் சொந்த குணநலன்களில் மிகவும் மேம் பட்டவராக, மிகச் சிறந்த இலக்கியத் தரமும், உயர் கல்வித் திறனும் கொண்டவராக இருக்க வேண்டும்.

-அறிவிப்பாளர் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்ட மைக்கு நேரடியான தெளிவான ஆதாரங்களும், மாணாக்கர் தம் ஆசிரியரிடம் கற்றார் என்பதற்குத் தக்க ஆதாரமும் இருக்க வேண்டும்.

ஒவ்வோர் அறிவிப்பாளர் அல்லது அறிஞர் குறித்துத் தேவையான விவரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்வது மிக்க சிரமம். உண்மையில் எந்த ஓர் அறிஞரதும் மாணவர்கள் குறித்துப் பூரணமான பட்டியல் கிட்டியதில்லை. இந்த விஷயம் சம்பந்தமாக புஹாரிக்கும் முஸ்லிமுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகளும் இருந்தன. முஸ்லிமின் அபிப்பிராயப்படி இரு அறிஞர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்து, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் இருப்பின், அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டமைக்கான தெளிவான ஆதாரங்கள் இல்லாத

நிலையிலும், அவர்கள் தத்லீஸ் முறையைக் கையாளாதவர்களா யிருப்பின் அவர்களது இஸ்னாத்தை முறிவுறாததாகக் கொண்டு அவர்களது ஹதீஸ்களை ஏற்கலாம். இவ்வாறான முடிவை ஏற்க புஹாரி தயாராக இல்லை. அவர், கற்றமைக்கும் கற்பித்தமைக்கும் நேரடியான தெளிவான ஆதாரங்களை வேண்டி நிற்கலானார். இதுகூட அவருக்குப் போதுமானதாக இருக்கவில்லை. ஆதாரபூர்வ நிலையை உறுதிப்படுத்த மேலும் உறுதிகளை நாடினார் அவர்.

ஹதீஸ்களைச் சேகரிப்பதில் கையாண்ட முறைகள்

ஆறு பிரதான ஹதீஸ் தொகுப்புகளின் ஆசிரியர்களில் பலர் தாம் எந்த அடிப்படையில் ஹதீஸ்களைச் சேர்த்துக் கொள்வது என்பதில் எவ்வாறு முடிவெடுத்தனர் என விளங்கவில்லை. என்றா லும், அவர்களது சேகரிப்புகளிலிருந்து சில அம்சங்களைக் கிரகித் துக்கொள்ள முடிகின்றது. ஆறாம் நூற்றாண்டின் அறிஞர்களான ஹாஸிமீ, மக்திஸீ ஆகிய இருவரும் இது குறித்து ஆராய்ந்தார்கள். அவர்களது ஆய்வைக் கவர்ந்தது, இந்த நூல்களில் சேர்க்கப்பட் டுள்ள ஹதீஸ்களை அறிவித்தோர்களின் தகைமைகளாகும்.

ஹாஸிமீயின் கருத்தில், தொகுப்புகளில் சேர்க்கப்பட்ட ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள் குறித்து சில விதிமுறைகள் கையாளப்பட்டு வந்தன. உதாரணமாக, ஆதார பூர்வமான ஹதீஸ் களை மட்டும் தொகுக்க முனைபவர்கள், அறிவிப்பாளர்கள்; அவர் தம் ஆசிரியர்; அவர்களது தகைமைகள் என்பன குறித்து நன்கறிந் திருக்க வேண்டும். சிலபோது, ஓர் அறிவிப்பாளர் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரிடமிருந்து சிறப்பாகவும் தெளிவாகவும் ஹதீஸ் அறிவிப்புச் செய்வார். ஆனால் வேறு ஓர் ஆசிரியரிடமிருந்து அறிவிப்புச் செய்யும்போது தவறுகள் இழைப்பார். இவ்விடத்து அவரது முன்னைய அறிவிப்பு ஏற்கப்படும். பின்னைய அறிவிப்பு நிராகரிக் கப்படும். நாம் சமானமான ஓர் உதாரணமாக மாணவர்களை எடுத்துக் கொள்வோம். சில மாணவர்கள், சில குறிப்பிட்ட

பேராசிரியர்களிடம் கற்கும்போது சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள். இதே மாணவர்கள் வேறு பாடங்களில் அல்லது அதே பாடத்தை வேறு பேராசிரியர்களிடம் கற்கும்போது குறைந்த புள்ளிகளையே பெறுகின்றார்கள். அதே வேளை யாரிடம் கற்றா லும் மிகச் சிறந்த முறையில் சித்திபெறும் மாணவர்களும் உளர். ஆரம்பகால அறிஞர்கள் இவற்றையெல்லாம் நன்கு அவதானித்தார் கள். இதனை மேலும் இலகுவாக விளங்கிக் கொள்வதற்காக, ஹாஸிமீ, ஏராளமான மாணவர்களைக் கொண்டிருந்த ஸுஹ்ரீயை உதாரணமாகக் கொள்கின்றார். ஸுஹ்ரீயின் மாணவர்களை ஹாஸிமீ ஐந்து வகையினராகத் தரப்படுத்துகின்றார்.

I. ஸுஹ்ரீயிடமிருந்து அறிவிப்புச் செய்தோரில் மிக்க கூர்மை (இத்கான்)யும், சிறந்த நினைவாற்றலும் (ஹிப்ஸ்) கொண்டு ஸுஹ்ரீயின் பிரயாணங்களில் அவரோடு இணைந்து அவரு டன் மிக நீண்ட காலத் தோழமை பூண்டிருந்தோர்.

II. இரண்டாம் பிரிவினரும் முதலாம் தரத்தவர் போலவே 'அத்ல்' ஆனாலும் ஸுஹ்ரீயின் ஹதீஸ்களைத் திறம்படவும் கூர்மையாகவும் நினைவில் கொள்ளுமளவு ஸுஹ்ரீயுடன் காலங் கடத்தவில்லை. அதனால் அடுத்த தரத்தில் வைக்கப் பட்டோர்.

III. முதல் தரத்தார் போலவே ஸுஹ்ரீயுடன் நீண்ட காலம் கழித்தாலும் அறிஞர்களின் கண்டனங்களுக்குள்ளானோர்.

IV. அறிஞர்களின் கண்டனங்களுக்குள்ளானதோடு ஸுஹ்ரீயின் வகுப்புகளில் போதிய காலம் கழிக்காதவர்கள்.

V. பலவீனமான அறிவிப்பாளர்களாயிருந்ததோடு ஆரம்ப கால அறிஞர்களால் அறியப்படாதிருந்தவர்கள்.

இமாம் புஹாரி தனது ஸஹீஹில் பெரும்பாலும் முதற் பிரிவினரின் ஹதீஸ்களையே சேர்த்தார். சிலபோது மட்டும் இரண் டாம் பிரிவினரின் ஹதீஸ்களும் சேர்க்கப்பட்டன.

இமாம் முஸ்லிம் சிலபோது மூன்றாம் பிரிவினருள் பிரசித்தி பெற்ற சில அறிஞர்களது ஹதீஸ்களையும் தன் தொகுப்பில் சேர்த்துள்ளார்.

நஸாயீ, அபூதாவூத் ஆகியோர் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவினரிடமிருந்து ஹதீஸ்களைச் சேர்ப்பர். அபூ தாவூத் நான்காம் பிரிவினரிலிருந்தும் ஹதீஸ் அறிவிப்புச் செய்வதனைக் காணலாம்.

திர்மிதி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பிரிவினரிடமிருந்தெல்லாம் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தாலும் பலம் குன்றிய அறிவிப்பாளர்களைச் சுட்டிக் காட்டுவார். இவ்வாறான முறையை நஸாயீ, அபூதாவூத் ஆகியோரிடம் காண முடிவதில்லை.

எவ்வாறாயினும் எல்லா அறிஞர்களுமே ஸுஹ்ரீயைப் போல் புகழ் பெற்றோராக இருக்கவில்லை. அத்துடன் அவரைப் போல் பெருந்தொகையான மாணவர்களைக் கொண்டிருக்கவுமில்லை. எனவே மாணவர்கள் குறித்துள்ள வெவ்வேறு பிரிவுகளைப் பற்றி நான் தற்போது குறிப்பிட்டன அனைத்தும் ஏராளமான மாணவர்களைக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்கே உகந்தன.

ஒரு சில மாணவர்களையே கொண்டிருந்த சில அறிஞர்களைப் பொறுத்தமட்டில் புஹாரியும் முஸ்லிமும் நம்பிக்கையையும் கூர்மையையும் பொறுத்தே அறிவிப்புகளை ஏற்றுக்கொண்டனர். எனவே அவர்கள் சில வேளை, ஒரு குறிப்பிட்ட ஹதீஸை அறிவித்த வேறு ஒருவர் இல்லாத நிலையிலும்கூட சில அறிவிப்புகளை ஏற்றுள்ளனர். இதற்குக் காரணம், வேறும் பல விஷயங்களில் அந்த அறிவிப்பாளர் குறித்துச் செய்த பரிசீலனைகளின் மூலம் அவரது நேர்மை குறித்துக் கொண்ட தெளிவாகும். என்றாலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஏனைய மாணவ சாட்சிகள் உறுதிப்படுத்தக்கூடிய அறிவிப்புகளையே அவர்கள் தம் தொகுப்பில் சேர்த்தனர்.

ஸஹீஹின் மொழிபெயர்ப்புகளும் விரிவுரைகளும்

ஸஹீஹ் புஹாரி முழுவதுமாக அல்லது பாகங்களாகப் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்காக எழுதப் பட்டுள்ள விளக்கவுரைகள் நூற்றுக்கணக்கானவை. சில 25 பாகங் களுக்கும் கூடியன. அவற்றுள் சிறந்தனவாகக் கருதப்படுவன சில வருமாறு:

இப்னு ஹஜர் (ம.852) எழுதிய பத்ஹுல் பாரீ.
அய்னீ (ம.855)யின் உம்ததுல் காரீ.
கஸ்தலானீ (ம.923) யின் இர்ஷாதுஸ்ஸாயிர்.

புஹாரியின் மீதான கண்டனம்

புஹாரியின் ஸஹீஹினைப் பல அறிஞர்கள் கண்டனம் செய்துள்ளனர். இக்கண்டனங்கள் 80 அறிவிப்பாளர்களும் 110 ஹதீஸ்களும் சம்பந்தப்பட்டன. கண்டனங்களின் அடிப்படையாக அமைந்தது, அவற்றில் தவறுகளோ, பிழைகளோ ஏற்பட்டுள்ளமை அல்ல. புஹாரி குறிப்பிட்ட நியதிகளுக்கு அமைய அவை அமையா மையேயாகும்.

இதற்கு சமமான ஓர் உதாரணத்தை நாம் பார்ப்போம். சில கல்லூரிகள் 'அ' தரத்திற்குக் குறைந்த எந்த ஒரு மாணவரையும் சேர்த்துக் கொள்வதில்லையென நியமம் செய்துள்ளன. என்றாலும் மிகத் தீவிரமான பரிசோதனையின் பின்னர், அக்கல்லூரி குறைந்த தரத்தோரான, அதாவது 'இ' தரத்தோரான சில மாணவர்களைச் சேர்த்துக் கொண்டுள்ளமையையும் கண்டு கொள்ள முடிகின்றது. புஹாரியின் மீதான கண்டனத்திலிருந்து தெரிய வரும் ஒரு விஷயம் என்னவென்றால், மிகவும் கடினமான பரீட்சையின் பின்னர், புஹாரி மிகவும் உயர்ந்த தரம் அளிக்கப் பெற்றுள்ளார் என்பதாகும். என்றாலும் குறைந்த தரத்தோரின் அறிவிப்புகளை ஏற்குமிடத்து, குறிப்பிட்ட அந்த ஹதீஸை அவர் ஏற்பதற்கு வேறு காரணங்களும்

கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது. இப்னு-அபீ-லய்லா குறித்துப் பேசும்போது திர்மிதி கூறுவார்: "முஹம்மத்-பின்-இஸ்மாயீல் (அல்-புஹாரி) கூறினார்: இப்னு-அபீ-லய்லா உண்மையானவர். எனினும் அவரிடமிருந்து நான் எந்த ஒரு ஹதீஸையும் அறிவிப்புச் செய்வதில்லை. ஏனெனில் அவரது ஹதீஸ் களில் சரியானவை எவை, தவறானவை எவை எனப் பிரித்து அறியப் படவில்லை. இந்த வகையினரான எவரிடமிருந்தும் நான் ஹதீஸ் அறிவிப்புச் செய்வதில்லை" இதிலிருந்து, அவ்வாறான உயர் தரத்தினரிடமிருந்தும்கூட, ஹதீஸ்களின் மெய்ம்மையை உறுதிப் படுத்த வேறும் காரணங்களிருந்தாலன்றி அவற்றை ஏற்பதில் புஹாரி தயக்கம் காட்டியமை புலனாகின்றது. உதாரணமாக அபீ-லய்லாவின் ஆசிரியர்களது மூலப்பிரதிகள் அல்லது பழம் பிரதிகள் காணப்பட்டு அவற்றிலிருந்தும் அபீ-லய்லா அறிவிப்புச் செய்துள் ளார் எனக் கண்டு கொண்டால் அவற்றை புஹாரி ஏற்பார். ஏனெ னில் இந்த ஹதீஸை அறிவிப்புச் செய்வதில் அபீ லய்லா தவறி ழைக்க வில்லையென்பதை உறுதிகொள்ளச் சான்று கிட்டுகின்றது.

அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் எமக்கும் நல்லருள் பாலிப்பானாக.

ஸஹீஹ் என வழங்கும் பிற நூல்கள்

ஸஹீஹ் என வழங்கும் பிற நூல்களும் உள. அவற்றை இயற்றியோரின் பெயரால் வழங்குவன அவை.

இப்னு ஹுஸைமா
இப்னு ஹிப்பான்
இப்னுஸ்-ஸகன் (ம.353)
இமாம் முஸ்லிமின் மாணவர் அ -ஷர்கீ (ம.325)
ஆகியோர் ஸஹீஹ் இயற்றிய சிலர்.

எவ்வாறாயினும் புஹாரியின் பின்னர் மிக்க பிரசித்தம் பெற்றது இமாம் முஸ்லிமின் ஸஹீஹ் ஆகும். அது குறித்து நாம் சற்று விளக்கமாகப் பார்க்க வேண்டும்.

அத்தியாயம் – 5

அபுல் ஹுஸைன் முஸ்லிம்-பின்-அல் ஹஜ்ஜாஜ் அல் நைஸாபூரீ

இமாம் முஸ்லிம் அவர்களது பிறப்பு நிகழ்ந்தது ஹிஜ்ரி 204-இல். கிடைத்துள்ள ஆவணங்கள் அவரது முன்னோர், குடும்பம், குழந்தைப் பருவம் என்பன குறித்துப் போதிய விவரங்களைத் தரவில்லை. அக்காலத்திய வழக்கங்களின்படி ஹதீஸ் கற்றலைத் தொடங்கும் முன்னர் அவர் குர்ஆன், அறபு இலக்கியம், இலக்கணம் முதலியவற்றைக் கற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. 15 வயதின ராயிருந்த போது ஹிஜ்ரி 218-ல் ஹதீஸ் கல்வியைத் தொடங்கினார் முஸ்லிம்.

ஹதீஸ் கற்றலுக்கு ரிஹ்லா (பிரயாணம்) ஒரு முக்கிய அம்சம் என்பதனால் இமாம் முஸ்லிம் கல்வி நிலையங்கள் பலவற்றுக்கும் பல முறை விஜயம் செய்தார். அவரது முதலாவது பிரயாணம் எனக் கொள்ளக் கூடியது 220-ல் அவர் மேற்கொண்ட ஹஜ் யாத்திரை யாகும். இப் பிரயாணத்தின் போது கஅனபீ முதலியோரிடமிருந்து கற்றாலும் குறுகிய காலத்திலேயே நாடு திரும்பினார். சரியான ரிஹ்லா (கல்விப் பயணம்) தொடங்கியது, 230-ல் என்றே தெரிகின் றது. ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து ஆகிய பிரதேசங்களுக்கெல் லாம் ஹதீஸ் கல்விக்காகச் சென்ற அவர் கடைசியாக பக்தாதுக்குச் சென்றது ஹிஜ்ரி 259-லாகும்.

நற்பெயர் பெற்ற சிறந்ததொரு வர்த்தகரான இவரைப் புகழ்ந் துரைப்பார் தஹபீ.

இமாம் முஸ்லிமின் ஆசிரியர்களும் மாணாக்கரும்

அவரது சரித்திர நூல்கள் அன்னாரின் ஆசிரியர்கள் குறித்துப் பல்வேறு விவரங்களைத் தருகின்றன. ஒரு சிலரது பெயர் களை மட்டும் நாம் கவனிப்போம். ஸுஹைர்-பின்-ஹர்ப்; ஸஈத்-பின்-மன்ஸூர்; அப்த்-பின்-ஹுமைத்; துஹலீ; அல்புஹாரீ; இப்னு மாஇன்; இப்னு-அபீ-ஷைபா முதலியோர் சிலர். உண்மையில் முஸ்லிமின் ஆசிரியர்கள் நூற்றுக் கணக்கானோர்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரது நூல்களை அவருக்கு வாசித்தனர். திர்மிதி, இப்னு-அபீ-ஹாதிம் ராஸீ, இப்னு குஸைமா ஆகியோர் சிலர்.

முஸ்லிமும் புஹாரியும்

புஹாரியின் ஸஹீஹினால் பெரிதும் பயன் அடைந்து, பின்னரே தனது சொந்த நூலைத் தொகுத்தார் முஸ்லிம். புஹாரி கையாண்ட முறைகளின் செல்வாக்கு இவரது தொகுப்பிலும் பதிந்திருந்தது. புஹாரி நைஷாபூருக்கு வந்தவேளை முஸ்லிம் அவரை அடிக்கடி சென்று கண்டார். முஸ்லிமும் புஹாரியும் சந்தித்துக்கொண்ட ஒரு சம்பவத்தை விவரிப்பார் அஹ்மத்-இப்னு-அப்துஹ்: "புஹாரியிடம் வந்த முஸ்லிம், அன்னவரின் நெற்றியில் முத்தமிட்டுக் கூறினார்: முஹத்திஸீன்களின் ஆசிரியரே! ஹதீஸ் வல்லுனரே! உங்களது பாதங்களை முத்தமிட எனக்கு அனுமதி தாருங்கள்."

மறையியல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் புஹாரியும் துஹலீயும் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தனர். இதனால்

துஹலீ, தன் மாணவர்களை புஹாரியின் விரிவுரைகளில் கலந்து கொள்ள வேண்டாமெனப் பணித்தார். ஏராளமான மாணவர்கள் அதனை ஏற்றனர். முஸ்லிம் இந்த அறிவுறுத்தலின் பின்னரும்கூட புஹாரியிடம் செல்வதாக துஹலீ அறியப் பெற்றார். பின்னர் புஹாரியின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போர் எவரும் தனது விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கக் கூடாதெனப் பணித்தார் துஹலீ. பெயர் சுட்டிக் கூறாவிடினும்கூட, இப்பணிப்புரையின் கருத்தை உணர்ந்து கொண்ட முஸ்லிம், வீடு சென்றதும் துஹலீயின் விரிவுரைகளில் கலந்து கொண்டு தான் எழுதிய நூல்கள் அனைத்தையும் ஒரு வேலையாள் மூலமாக துஹலீக்கே அனுப்பி வைத்தார்.

இமாம் முஸ்லிமின் நூல்கள்

ஏராளமான நூல்களைத் தொகுத்தவர் இமாம் முஸ்லிம். அவற்றுள் சில வருமாறு:

1. அல் அஸ்மா அ் வஅல்குனா
2. இப்ராத்-அ் -ஷாமியீன்
3. அல்-அக்ரான்
4. அல்-இன்திபாஅ்-பி-ஜுலூத்-அஸ்ஸிபா
5. அவ்லாத்-அஸ்-ஸஹாபா
6. அவ்ஹாம்-அல்-முஹத்திஸீன்
7. அல்-தாரீக்
8. அல்-தம்யீஸ்
9. அல்-ஜாமிஇ
10. ஹதீஸ்-அம்ர்- பின் ஷுஐப்
11. ரிஜால் உர்வா
12. ஸவாலாது அஹ்மத்-பின்-ஹன்பல்
13. தபகாத்
14. அல்-இலால்
15. அல்-முகத்ரமீன்
16. அல் முஸ்னத்-அல்-கபீர்
17. மஷாயிக்-அத்-தவ்ரீ

18. மஷாயிக் ஷுஅபா
19. மஷாயிக் மாலிக்
20. அல்-வுஹ்தான்
21. அஸ்-ஸஹீஹ்-அல்-மஸ்னத்

இப்றாஹீம்-பின்-முஹம்மத்-பின்-ஸுப்யான் செய்துள்ள அறிவிப்பின்படி இமாம் முஸ்லிம் மூன்று முஸ்னத் நூல்களைத் தொகுத்துள்ளார்.

1. அவர் மக்களுக்கு வாசித்தது-ஸஹீஹ்.
2. சில பலவீனமான அறிவிப்பாளர்களது ஹதீஸ்களையும் உள்ளடக்கியது.
3. பலவீனமான அறிவிப்பாளர்களையும் உள்ளடக்கியது.

எவ்வாறாயினும் அவரது முக்கிய தொகுப்பாயிருந்தது ஸஹீஹ் ஆகும். இது நூற்பெயரின் சுருக்கமே. நூலின் முழுப் பெயர்: 'அல்-முஸ்னத் அஸ் ஸஹீஹ் அல் முக்தஸர் மின் அஸ் ஸுனன் பி நக்ல் அல் அத்ல் அன் அல் அத்ன் அன் ரஸுலுல்லாஹ்.'

நூலின் தன்மை

சட்ட நியதிகளின் தொகுப்பாக இது அமைக்கப்படுவதில் அவர் எவ்விதக் கவனமும் செலுத்தவில்லை. பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட அதிகாரங்களைக்கூட அவர் குறித்துக் காட்டவில்லை.

முதாபஆத்துக்கும், ஷவாஹித்துக்கும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

புஹாரியின் ஸஹீஹுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுவது இது. இது சம்பந்தமாக ஏராளமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. முஸ்லிம் தனது ஸஹீஹை ஹதீஸ் வல்லுனரான

அபூ ஸுர்ஆஹ்விடம் சமர்ப்பித்து அவர் எங்கேனும் ஒரு தவறைச் சுட்டிக் காட்டியவிடத்து எவ்வித விவாதமுமின்றி உடனேயே குறிப்பிட்ட ஹதீஸைத் தவிர்த்துக் கொண்டார். ஹதீஸ்களைத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளும்போது, தனது சொந்த அபிப்பிராயத்துக்கு மட்டும் இடமளிக்காமல் அறிஞர்களது ஏற்புக்குள்ளானவற்றை மட்டுமே இணைத்துக் கொண்டார். ஆதாரபூர்வமானவையென ஏகமனதாக ஏற்கப்பட்ட ஹதீஸ்களை மட்டுமே தான் தொகுப்பில் இணைத்துள்ளதாக இமாம் முஸ்லிம் கூறியிருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது.

ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஹதீஸ்களின் தொகை

முஹம்மத் புவாத் அல்-பாகீ அவர்கள் செய்துள்ள கணிப்பின் படி ஸஹீஹ் முஸ்லிமில் மொத்தம் 3033 ஹதீஸ்கள் உள. அவரது கணிப்பு முறை இஸ்னாத்களை அடிப்படையாகக் கொண்டதல்ல. உள்ளடக்கத்தின் அடிப்படையிலேயே இக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது. சாதாரணமாக முஹத்திஸீன்கள் இஸ்னாத்கள் கொண்டே எண்ணிக்கை செய்தனர். அவ்வாறான முறையே இதிலும் பிரயோகிக்கப்பட்டால் ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஹதீஸ்களின் தொகை இலகுவாக இரு மடங்காகி விடும்.

ஸஹீஹ் முஸ்லிமுக்கு ஏராளமான விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் மிக்க பிரசித்தி பெற்று, பரவலாக வழங்கி வருவது, இமாம் நவவி (ம.676) எழுதிய 'அல்-மின்ஹாஜ்-பீ-ஷர்ஹ் ஸஹீஹ் முஸ்லிம்-பின்-அல் ஹஜ்ஜாஜ்' ஆகும். இது பல முறை பிரசுரமாகியுள்ளது.

அத்தியாயம் – 6

அபூ அப்துர் ரஹ்மான் அஹ்மத் பின் ஷுஐப் பின்-அலீ-பின்-ஸினான்-பின்-பஹ்ர் அல்குராஸானீ-அன்நஸயீ

இவர் ஹிஜ்ரி 215-இல் பிறந்தார். நபிகளாரின் ஹதீஸ்களைத் தேடிக் கற்கவென பல பிரயாணங்களை மேற்கொண்டார். 'ரிஹ்லா' ஆரம்பமான போது அவரது வயது 15. குராஸான், ஈராக், அறேபியா, ஸிரியா, எகிப்து, அல்-ஜஸீரா ஆகியனவெல்லாம் அவர் ஹதீஸ் கற்ற இடங்கள். பேரறிஞரும் திறனாய்வாளருமான இவரை, ஹதீஸ் அறிவில் இமாம் முஸ்லிமிலும் மேலாக மதித்தனர், பின்னைய கால அறிஞர்கள் சிலர். வீர உணர்வும் மிக்க இவர் எகிப்திய கவர்னரோடு இணைந்து ஜிஹாதுக்குச் சென்றார். யுத்தப் பாசறைகளில் இருக்கும் போது கவர்னரையும் வீரர்களையும் நபிகளாரின் ஸுன்னாவின் பால் இழுத்து அவற்றைப் பின்பற்றும்படி வற்புறுத்தினார். எவ்வாறாயினும் இவர் கவர்னருடன் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. நீண்ட காலம் எகிப்திலேயே வாழ்ந்து வந்த இவரது மகன் குறித்தும் குறிப்புகள் உள. அப்துல் கரீம் என்ற பெயர் தாங்கிய அவரும் ஒரு முஹத்திஸாக, ஸுனன் முஜ்தபாவின் ஓர் அறிவிப்பாளராக விளங்கினார்.

தான் தெரிந்து கொள்ளும் அறிவிப்புகளில் மிகக் கவனமாக இருந்த இவர், சில முக்கியமான விஷயங்களை ஏற்காது விட்ட

மைக்கு, இப்னு லஹீயா எனும் அறிவிப்பாளர் மிக்க பலவீனமான வர் எனக் கருதப்பட்டிருந்தமை காரணமாக இருந்தது. இப்னு லஹீயாவின் நூல்கள் தீயிலிடப்பட்டதன் காரணமாக, ஏனையோரி டமிருந்த அதே நூல்களின் பிரதிகளிலேயே நஸயீ தங்க வேண்டி யிருந்தது. அந்நூல்களை வாசிக்கும் அங்கீகாரம் பெற்றவராக அந்நூல்களில் இப்னு லஹீயா குறிப்பிடப்படவில்லை.

நஸயீ அறிவிப்புகளைப் பதிவு செய்வதில் சீரிய தன்மை கொண்டவராயிருந்தார். அவருக்கும் அவரது ஆசிரியரான அல்-ஹாரித் பின்-மிஸ்கீனுக்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. எனவே அல்-ஹாரிதின் விரிவுரைச் சபைகளில் அவர் அமராது, அவரது பார்வையை விட்டும் தூரப்பட்டு வசதியான தூரத்தில் அமர்ந்திருந்து, பாடங்களைச் செவிமடுத்து வந்தார். இவ்வாறான ஹதீஸ்களைப் பதிவு செய்யும்போது நஸயீ பின்வரு மாறு எழுதுவார்: 'அல் ஹாரித்-பின் மிஸ்கீனுக்கு இந்த ஹதீஸ் வாசிக்கப்பட்டபோது நான் இதனைச் செவியுற்றேன்.'

நஸயீயின் ஆக்கங்கள் சில:

அஸ்ஸுனன்-அல்-குப்ரா
அஸ்ஸுனன்-அல்-முஜ்தபா
கிதாப்-அல்-தம்யீஸ்
கிதாப்-அல்-லுஅபா
கஸாயிஸ் அலீ
முஸ்னத் அலீ.
முஸ்னத் மாலிக்
மனாஸிக்-அல்-ஹஜ்
தப்ஸீர்

மேற்கண்டவற்றுள் சில நூல்கள் அஸ்-ஸுனன்-அல்-குப்ரா வின் சில பாகங்களாகவும் இருக்கலாம்.

நஸயீயின் ஸுனன்

நஸயீயின் மிகப் பிரசித்திபெற்ற ஆக்கம், அஸ்ஸுனன்-அல் முஜ்தபாவாகும். உண்மையில் இது அஸ்ஸுனன் அல்-குப்ராவிலிருந்து தேர்ந்து பதிப்பிக்கப்பட்ட ஒரு தொகுப்பாகும். நஸயீ தனது அஸ்ஸுனன் அல்-குப்ராவைத் தொகுத்து ரம்லாவின் கவர்னருக்கு அளித்தபோது, கவர்னர், அத்தொகுப்பில் உள்ள ஹதீஸ்கள் அனைத்துமே ஆதாரபூர்வமானவைதானா என வினவினார். நஸயீ அவ்வாறல்ல என்றார். ஆதாரபூர்வமானவற்றை மட்டும் தொகுக்கும்படி கவர்னர் விடுத்த வேண்டுகோளின் நிறைவேற்றுதலாகவே முஜ்தபா தொகுக்கப்பட்டது. எவ்வாறாயினும் நஸயீ இந்தத் தொகுப்பிலும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மட்டும்தான் சேர்த்துக் கொண்டார் என்பதற்கில்லை. பலவீனமான ஹதீஸ்களையும் அவர் சேர்த்துள்ளார். எனவே கவர்னர் தலையீடு பற்றிய கதை எத்துணை உண்மையானது என்பது ஐயம்.

உண்மையில் அவர் கையாண்ட சில வழிமுறைகளின் ஒரு கட்டமே இது. ஹதீஸின் பல்வேறு இஸ்னாத்களையும் தொகுத்து அறிவிப்பாளர்களால் தவறுகள் இழைக்கப்பட்ட இஸ்னாத்களைத் தனியே எடுத்துப் பின்னர் சரியானவை எவை எனக் காட்டுகின்றார். இதன் காரணமாக அவர் பலவீனமான ஹதீஸ்களையும் பதிவு செய்ய நேர்ந்தது. என்றாலும் இதன் அடிப்படை நோக்கம் எவ்வாறான தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதே.

அஸ்ஸுனன் அல்குப்ரா அழிந்து அல்லது காணாமற்போய் விட்டது என்றே நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனாலும் அல்ஹம்துலில்லாஹ் அது அண்மையில் துருக்கியில் கிடைக்கப் பெற்றுள்ளது. அதில் பாதியளவு இந்தியாவில் எனது ஊரான 'மௌ' நகரில் கிட்டியுள்ளது.

ஸுனன் அன்நஸயீ மீதான விளக்கவுரைகள்

நஸயீயின் நூல் ஆரம்பகால அறிஞர்களது கவனத்தைப் பெரிதும் ஈர்த்ததாகத் தெரியவில்லை. நீண்ட காலத்தின் பின் ஸுயூதி இதற்கு சிறிய உரையொன்றினை எழுதினார். 'ஸஹ்ருர் ரபா அலா அல் முஜ்தபா' என்ற பெயருடைய அவ்விளக்கவுரை பல முறை பிரசுரமாகியுள்ளது.

இமாமவர்கள் ஹிஜ்ரி 303-ல் காலமானார். அவரது மறைவு குறித்த காரணமும் இடமும் பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் உள.

அத்தியாயம் – 7

அபூதாவூத் சுலைமான்-பின்-அல்-அஷ்அத் அல்-அஸ்தி அஸ்ஸிஜிஸ்தானீ

ஹிஜ்ரி 202-ல் பிறந்த இவர் ஹதீஸ் கல்வியை ஆரம்பிக்கு முன்னரே அக்காலத்திய வழக்கங்களுக்கொப்ப குர்ஆன், அறபு இலக்கியம் முதலிய ஏனைய துறைகளையும் பயின்றிருக்கக் கூடும். ஹதீஸ் கல்விக்காக அவர் குராஸான், ராய், ஹராத், கூபா, பக்தாத், தர்ஸூஸ், டமாஸ்கஸ், எகிப்து, பஸ்ரா ஆகிய நகரங்களுக்குப் பிரயாணம் செய்ததாகத் தெரிய வருகின்றது. ஹிஜ்ரி 222-ல் அவரை நாம் பக்தாதில் காண்கின்றோம். அவ்வாறாயின் அவர் 20-க்கும் குறைந்த வயதினராக இருக்கும்போதே ஹதீஸ் கல்விக்கான பிரயாணத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டார் எனத் தெரிகின்றது. 20 வருடங்களை தர்ஸூஸ் நகரில் கழித்துள்ளார் அவர்.

தனது வாழ்நாளிலேயே பெரும் புகழ் பெற்றுக்கொண்டவர் இவர். ஹிஜ்ரி 257-ன் ஸஞ்ச் கலவரங்கள் காரணமாக பஸ்ரா நகரம் வெறுமையாக்கப்பட்டது. கவர்னராயிருந்த அபூ அஹ்மத், பக்தாதில் அபூதாவூதைச் சந்தித்து அவர் பஸ்ராவுக்கு வரவேண்டுமென அழைப்பு விடுத்தார். அதன் மூலம் அறிஞர்கள், மாணாக்கர் வருகை காரணமாகவும் அவர்களது கூட்டங்கள் காரணமாகவும் பஸ்ரா மீண்டும் பொலிவு பெறும் என அவர் நம்பினார்.

அபூதாவூதின் திறமை, நம்பிக்கை, நேர்மை என்பன குறித்து அறிஞர்கள் ஒத்த கருத்தினராக உள்ளனர். அவர் ஹதீஸ்களின் சேக

ரிப்பாளராகவும், தொகுப்பாளராகவும், திறம்படக் கற்பிப்பவராக வும் மட்டும் விளங்கவில்லை. சிறந்ததொரு சட்ட வல்லுனராகவும் திறனாய்வாளராகவும்கூட விளங்கினார். ஹதீஸ்களைத் திறனாய்வு செய்யும்போது அபூ தாவூத் எழுதப்பட்ட விடயம், பயன்பட்ட தாள், மை என்பனவற்றையும் பரீட்சைக்குள்ளாக்கி அவற்றின் வயதினைக் கணிக்கவும் முனைந்தார் என்பதை அறிய வியப்பே ஏற்படுகின்றது. தனது மகன் அப்துல்லாஹ்வையே ஒரு பொய்ய னெனக் கண்டனம் செய்துள்ளார் அபூ தாவூத்.

பல மக்களைக் கொண்டிருந்த இவருடன் வாலிப வயதின ரான ஒரு மகனும் ஹதீஸ் கல்விக்காகச் செல்வதுண்டு.

ஹிஜ்ரி 275 ஷவ்வால் 15 வெள்ளிக்கிழமை பஸ்ராவில் கால மானார் அபூ தாவூத்.

அபூதாவூதின் ஆக்கங்கள்

அபூதாவூதின் ஆக்கங்கள் என அறியக் கிட்டியிருப்பவை வருமாறு:

அல் மராஸீல்
மஸாயில்-அல்- இமாம் அஹ்மத்
அன் நாஸிக் வல் மன்ஸூக்
ரிஸாலா-பீ-வஸ்ப்-கிதாப் அஸ்ஸுனன்
அஸ்-ஸுஹ்த்
இஜாபாத் அன் ஸவாலாத் அல் ஆஜுர்ரீ
அஸ் இலாஹன் அஹ்மத்-பின்-ஹன்பல்
தஸ்மியாத்-அல்-அக்வான்
களா அல் கத்ர்
அல்-பஅத்-வன் நுஷூர்
அல் மஸாயில் அல்லதி ஹலப அலைஹா அல் இமாம் அஹ்மத்

தலாயில் அன் நுபூவாத்
பளாயில் அல் அன்சார்
முஸ்னத் மாலிக்
அத் துஆ
இப்திதா அல் வஹீ
அத்தருர்ருத் பிஸ்ஸுனன்
அக்பார்-அல்-கவாரிஜ்
அஃலாம் அன் நுபுவ்வாத்
ஸுனன்

ஸுனன் நூல்களின் தன்மை

நாங்கள் முன்னர் ஸுன்னா (பன்மை: ஸுனன்)வின் கருத்தைக் கண்டுள்ளோம். ஆனாலும் ஹதீஸ் தொகுப்புகளின் ஆசிரியர்கள் தம் ஆக்கங்களை ஸுனன் எனப் பெயரிட்டபோது அவர்கள் கருதியது என்ன வென்றால், அந்த நூல் சட்டவொழுங்கு களின் கீழ் தஹாரா, ஸலாத், ஸகாத் முதலிய அடிப்படையில் அத்தி யாயங்களாக அமைந்துள்ளமையாகும். அவையும் நபிகளாரிடமி ருந்து நேரடியாகப் பெற்ற ஆதாரபூர்வமானவையாக அமைந்தன. தோழர்களது அபிப்பிராயங்கள் பொதுப்பட இவற்றில் சேர்க்கப் படவில்லை.

எனவே இந்த ஸுனன் தொகுப்புகள் ஒழுக்கம், வரலாறு, ஸுஹ்த் முதலிய அம்சங்களைப் பொதுப்பட அடக்கியிருப்ப தில்லை.

அபூதாவூதின் ஸுனன்

இருபது வருடங்களாக தர்ஸூஸில் தங்கியிருந்தபோது தான் அபூதாவூத் தனது ஸுனன் நூலைத் தொகுத்தார் எனத் தெரி கின்றது. இதற்கென சுமார் 5 லட்சம் ஹதீஸிலிருந்து சுமார் 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்த இவர், ஒவ்வோர் அத்தியாயத்திலும்

ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுடன் திருப்திப்பட்டார். இதனை விளக்கும் வகையில் அவர் மக்காவிலிருந்த அறிஞர்களுக்கு எழுதினார்: "நான் ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுக்கு மேல் இணைக்கவில்லை- அதே அத்தி யாயத்தனவான வேறு பல ஹதீஸ்கள் இருந்தும்கூட. இலகுவாகப் பயன்படுத்தக் கூடியதாக நான் ஒன்றைக் குறிப்பிட்டுள்ள வேளை மேலதிகமாகக் கொடுப்பது தேவைக்கு மிஞ்சியதாயிருக்கும்."

ஒரு மனிதன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்புற, அவற்றுள் நான்கு ஹதீஸ்கள்கூட போதுமானவையாயிருக்கும் என்பார் அவர்.

ஆசிரியரின் வாழ்நாளிலேயே இந்த நூல் மிகப் பரவலாக பிரபல்யம் பெற்றுப் பயன்படுத்தப்பட்டது. அலீ-பின்-ஹஸன் இந்த நூலைத் தான் அபூதாவூதிடமிருந்து ஆறு முறை கற்றதாகக் குறிப் பிடுவார். இந்த நூல் சட்டக் கோட்பாடுகளுடனான ஹதீஸ்களைப் பொறுத்து ஏனைய பல நூல்களை விட மிகச் சிறப்பானதும் தெளி வானதும் ஆகும்.

அபூதாவூத் இத்தொகுப்பில் சேர்த்துக் கொண்ட எல்லா ஹதீஸ்களுமே ஆதாரபூர்வமானவை எனக் கூறிவிட முடியாது. அவர், தானே பல பலவீனமான ஹதீஸ்களைக் குறித்துக் காட்டி யுள்ளார். அதே வேளை அவர் பலவீனமானவை எனக் குறிக்காத பல ஹதீஸ்களை அறிஞர்கள் பலவீனமானவை எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். அவர் ஏன் தனது ஸுனன் தொகுப்பில் பலவீன மான ஹதீஸ்களைச் சேர்த்துக் கொண்டார்?

அபூதாவூதின் கருத்தில், பலவீனமான ஒரு ஹதீஸ் மிகப் பலவீனமானதாக இல்லாவிடின் (அதாவது ஒரு மாணவன் 50% ஆன புள்ளிகளைப் பெற்றிருப்பது போல) அது, அறிஞர்களின் தனிப்பட்ட அபிப்பிராயத்தை விடச் சிறந்ததாகும். எனவேதான் அவர், ஆரம்ப கால அறிஞர்களது சட்ட ரீதியான அபிப்பிராயங்

களை விட பலவீனமான ஹதீஸ்களைத் தொகுப்பது நல்லதெனக் கொண்டுள்ளார்.

அபூதாவூதின் ஸுனன் தொடர்பான விளக்கவுரைகள்

இதன் மீது ஏராளமான விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சிறந்தது ஷம்ஸுல் ஹக் அஸீமாபாதீயின் 'அவ்ன்-அல்-மஅபூத்-ஷர்ஹ் ஸுனன் அபீதாவூத்' என்பது. அதைப் போலவே சிறப்புற்ற மற்றொன்று- 'பத்லுல் மஜ்ஹூத்-பீ-ஹல் அபீ தாவூத்' என்பது. இதனை எழுதியவர் கலீல் அஹ்மத் அன்ஸாரீ (ம.1346). அஹ்மத் ஷாகிருடன் இணைந்து சிலர் எட்டுப் பாகங்களில் வெளியிட்ட 'தஹ்தீப் ஸுனன் அபிதாவூத்' எனும் விளக்கவுரையும் சிறப்பானது. கெய்ரோவில் (1367-69) வெளியிடப்பட்ட இந்நூலில் ஹிஜ்ரி ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளின் தலைசிறந்த அறிஞர்களான முன்திரீ, இப்னுல் கையிம் ஆகிய இருவரது நூல்களும் இணைந்துள்ளன. அபூதாவூத் குறித்தும் அவரது ஆக்கங்கள் குறித்தும் மிகச் சிறந்ததோர் ஆய்வை அண்மையில் செய்துள்ளார் முஹம்மத் ஸப்பாக்.

ஸுனன் முறையின் கீழ் பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றில் சில வருமாறு:

ஸுனன்-அபூதாவூத்
ஸுனன்-திர்மிதி
ஸுனன்-நஸாயீ (குப்ரா-முஜ்தபா)
ஸுனன்-இப்னு மாஜா
ஸுனன்-அஹ்மத்-பின்-உபைத்
ஸுனன்-இஸ்மாயீல் அல்காதீ
ஸுனன்-பைஹகீ
ஸுனன்-இப்னு ஜுரைஜ்

ஸுனன்-கல்லால்

ஸுனன்-தாரகுத்னீ

ஸுனன்-தாரிமீ

ஸுனன்-ஸஈத்-பின்-மன்ஸூர்

ஸுனன்-ஸஹ்ல்-பின்-அபூ ஸஹ்ல்

ஸுனன்-ஷாபிஈ

ஸுனன்-மூஸா-பின்-தாரிக்

அத்தியாயம் – 8

முஹம்மத்-பின்-இஸா-பின்-ஸவ்ரா-பின் மூஸா-பின் அல் தஹ்ஹாக்-அத் திர்மிதி

ஹிஜ்ரி 209-ல் பிறந்த இவர் ஹதீஸ் கற்றலுக்கான தனது பயணத்தை சுமார் 235-ல் ஆரம்பித்துத் தனது சொந்தப் பிரதேச மான குராஸானை 250-க்கு முன்னர் வந்து சேர்ந்தார். இதன் பின்னரே அவர் தனது ஆக்கத்தைத் தொகுக்கலானார். புஹாரியின் செல்வாக்குக்குப் பெரிதும் உட்பட்டிருந்த திர்மிதி தனது நூல் 'இலல்'லில் புஹாரியைப் போன்ற ஒருவரை இராக்கிலோ குரா ஸானிலோ தான் காணவில்லையெனத் தெளிவுறக் கூறியுள்ளார்.

279-ரஜப் 13-ல் மரணமானார் திர்மிதி.

திர்மிதியின் ஆக்கங்கள்

அல்ஜாமி அல் முக்தஸர் மின் அன்ஸுனன் அன் ரஸூலில் லாஹ்

தவாரிக்

அல்-இலல்

அல்-இலலுல் கபீர்

ஷமாயில்

அஸ்மாஉஸ் ஸஹாபா
அல் அஸ்மாவல் கூனா
ஆல் ஆஸார் அல் மவ்கூபா

அவரது மிகப் பிரசித்தி பெற்ற நூல் 'அல் ஜாமிஇ' அல்லது 'அஸ் ஸுனன் அத் திர்மிதி.' இதில் ஆசிரியரின் நோக்கங்களை மூன்றாகத் தொகுத்துக் காணலாம்.

1. *நபிகளாரின் ஹதீஸ்களை ஓர் ஒழுங்குமுறையின் கீழ் தொகுத்தல்.*

2. *ஒவ்வொரு விடயம் குறித்தும் ஆரம்ப கால இமாம்களின் சட்ட ரீதியான கருத்துக்களைத் தொகுத்தல். எனவே ஆரம்ப கால இமாம்கள் தமது மார்க்கத் தீர்ப்புகளுக்குப் பயன்படுத்திய ஹதீஸ்களையே இவர் குறிப்பிட்டார். சில (மூன்று அல்லது நான்கு) ஹதீஸ்கள் இந்நியதிக்கு உட்படா மலும் உள்ளன.*

3. *ஹதீஸ்களின் தரம் குறித்து விளக்கமளித்தல். அவற்றில் ஏதும் 'இல்லா'க்கள் (பலவீனம் அல்லது சுகயீனம்) இருப்பின் அவற்றை திர்மிதி விவரிப்பார்.*

நூல், 50 உப பிரிவு (கிதாப்)களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 3956 ஹதீஸ்களை இது உள்ளடக்கியிருக்கின்றது.

ஹதீஸ் தொகுப்புகளில் அல் ஜாமிஇ நூலின் இயல்பு

எல்லா வகையான ஹதீஸ்களையும் கொண்டுள்ள நூல் ஜாமிஇ என அழைக்கப்பட்டது. அதாவது அது, ஸியார் (சர்வதேச சட்ட விதிகள்) அதப் (சமூக ஒழுக்க முறைகள்) தப்ஸிர் (குர்ஆன்

விளக்கவுரைகள்) அகீதா (நம்பிக்கைகள்) பித்ன், அஹ்காம் (எல்லா வகையினவுமான சட்டங்கள்) அல்-அஷ்ராத், மனாகிப் (நபிகளாரதும் சில தோழர்களதும் வரலாற்றுக் குறிப்புகள்) முதலியவற்றை உள்ளடக்கியிருந்தது. திர்மிதியின் ஸுனன் இவ்வாறான எல்லா அம்சங்களையும் கொண்டிருப்பதால் அதுவும் ஜாமிஇ என வழங்கியது. இது ஹிஜ்ரி 270-துல்ஹஜ் 10-ல் தொகுக்கப்பட்ட ஒன்றாகும்.

திர்மிதி ஹதீஸ்களை ஒழுங்கமைத்த முறை

திர்மிதி முதலில் தலைப்பை அளித்து, பின்னர் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களைக் குறிப்பார். இவற்றிலிருந்தும் தலைப்பினைப் பெற்றுக்கொள்ள இயலும். பின்னர் ஹதீஸ்களின் தரம் குறித்த (ஆதார பூர்வமானதா, நல்லதா, பலவீனமானதா என) தனது அபிப்பிராயங்களை வெளியிடுவார். இதற்கென அவர், முன்னைய அறிஞர்களால் பயன்படுத்தப்படாத சில குறியீட்டுப் பிரயோகங்களைப் பயன்படுத்தியுள்ளார். அத்தோடு, அவர் ஆரம்ப கால நீதிமான்கள், சட்ட வல்லுனர்கள், இமாம்கள் ஆகியோர், குறித்த பொருள் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களையும் அளிப்பார். இதற்கும் மேலாக அதே பொருள் குறித்து வேறு தோழர்கள் ஏதும் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்திருப்பின் அவற்றையும் அறிவிக்கின்றார் திர்மிதி.

திர்மிதியின் ஸுனனுக்குப் பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. தற்போது கிட்டக்கூடிய மிகச் சிறந்த ஆக்கம் அப்துர் ரஹ்மான் முபாரக் பூரி எழுதிய 'துஹ்பத்-அல்-அஹ்வதீ.' நான்கு பாகங்களிலான இந்நூல் பலமுறை பிரசுரமாகியுள்ளது.

அத்தியாயம் – 9

அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் யஸீத் அர்ரபீஇ (இப்னு மாஜா)

இப்னு மாஜா அல் கஸ்வீனீ என அழைக்கப்பட்ட இவர் ஹிஜ்ரி 209ல் பிறந்தார்.

எந்த வயதில் இவர் ஹதீஸ் கல்வியைத் தொடங்கினார் என்பது தெரியவில்லை. அவரது ஆரம்ப ஆசிரியர்களுள் முதல்வர் அலீ-பின்-முஹம்மத்-அல்-தனாபஸீ (ம.233). இதிலிருந்து இப்னு மாஜா ஹிஜ்ரி 233க்கு முன்னர் சுமார் 15 அல்லது 20 வயதளவில் அக்கால வழக்கத்துக்கொப்பத் தனது ஹதீஸ் கல்வியைத் தொடங்கி யுள்ளார் எனக் கொள்ளலாம். ஹிஜ்ரி 230-ன் பின்னர் ஆரம்பமான 'ரிஹ்லா' வில் (கல்விப் பயணம்) குராஸான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த இப்னு மாஜா 273 ரமழான் 21 திங்கட்கிழமை மரணமானார். அவரது மகன் அப்துல்லாஹ் தனது இரு மாமன்மார் துணையுடன் இவரை நல்லடக்கம் செய்ததாகத் தெரிய வருகின்றது. இப்னு மாஜாவின் அறிவு, ஞானம், நம்பிக்கை ஆகியவற்றின் உயர்நிலை குறித்து அறிஞர்கள் அனைவரும் ஒத்த கருத்தினராயுள்ளனர்.

தப்ஸீர், அத்தாரீக், ஸுனன் என்பன அவரது ஆக்கங்க ளாகத் தெரிய வந்துள்ளன. என்றாலும் தப்ஸீர், தாரீக் என்பன குறித்து தற்போதைக்கு எம்மிடம் எவ்வித விவரமும் இல்லை. ஸுனன்-இப்னு மாஜா மிகப் பிரசித்தமானது. இதன் கையெழுத்துப்

பிரதிகள் நூற்றுக் கணக்கான நூல் நிலையங்களில் காணப்படு கின்றன. பலமுறை அது பிரசுரமாகியுள்ளது. பின்னைய காலங் களில் 'ஸிஹாஹுஸ் ஸித்தா' என வழங்கிய ஆதாரபூர்வமான ஆறு ஹதீஸ் கிரந்தங்களுள் ஒன்றாக இதுவும் கொள்ளப்பட்டது. அதனால் இந்த தொகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் அனைத்துமே ஆதாரபூர்வமானவை என்பதல்ல. ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் என்பன தவிர்ந்த ஏனைய தொகுப்புகளைப் பொறுத்தமட்டில் அவற்றில் பதியப்பட்ட ஹதீஸ்களில் பெரும் பாலன ஆதாரபூர்வமானவை என்பதே கருத்தாகும்.

ஹதீஸ்களைத் தெரிவு செய்வதில் இப்னு மாஜா கையாண்ட முறைமை

தான் விஷயங்களைச் சேகரித்தது எவ்வாறு என அவர் குறிப்பிடவில்லை. இந்தத் தொகுப்பை மேற்கொள்ளத் தனக்கிருந்த காரணம் குறித்து அவர் எதுவும் சொல்லவுமில்லை. ஸிஹாஹ் ஸித்தா எனக் கொள்ளப்பட்ட ஆறு கிரந்தங்களிலும் மிகவும் குறைந்த நிலையிலேயே இது வைக்கப்பட்டுள்ளது. இவரது தொகுப்புகள் 4341 ஹதீஸ்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் 3002 ஹதீஸ்களை ஏனைய ஐந்து ஸஹீஹ் தொகுப்புகளிலும் கண்டு கொள்ளலாம். அந்த ஹதீஸ்களை ஏனைய ஐவருமே பதிவு செய் துள்ளனர்; அல்லது ஒருவராவது பதிவு செய்துள்ளார். ஆக இப்னு மாஜா மட்டுமே ஏனைய ஐவருள் எவரும் இணைத்துக் கொள்ளாத 1339 ஹதீஸ்களை சேர்த்துள்ளார். இந்த 1339 ஹதீஸ்களுள்

428 - ஆதார பூர்வமானவை
199 - நல்லன
613 - பலவீனமான இஸ்னாத்களைக் கொண்டன
99 - முன்கர் அல்லது மக்தூ.

அபூதாவூத், திர்மிதி முதலாய ஏனைய அறிஞர்கள்கூட பலவீனமான ஹதீஸ்களை உள்ளடக்கியுள்ளனர். எனினும்

அவற்றை அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுக் காட்டினர். ஆனால் இப்னு மாஜாவோ, பிழையான ஒரு ஹதீஸை இணைத்த போதும் கூட அமைதியாக இருந்து விடுகின்றார். எனவே இந்த நூல் குறித்து அறிஞர்களிடையே பெரும் வாக்கு வாதங்கள் நிகழ்ந்தன. இப்னு மாஜாவின் நூலன்றி வேறு பல நூல்கள் ஸிஹாஹ் ஸித்தாவில் இணைந்து கொள்ளும் தகுதியுடையன என்றும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இப்னுல்-அதீர் (ம.606) முக்லதாஈ (ம.762) இப்னு ஹஜர் (ம.852) குவஸ்தல்லானீ (ம.923) முதலிய அறிஞர்கள் ஏனைய ஐந்து நூல்களுடன் இதனை வைப்பதனைக் கண்டனம் செய்துள்ளனர். உண்மையில் இதனை ஆறு சிறப்பு வாய்ந்த தொகுப்புகளுள் ஒன்றாகக் கொள்வதோ, அல்லது அத்தொகுப்பு களிலிருந்து தவிர்த்து விடுவதோ நூலில் எவ்விதத்தும் பாதிப்பினை ஏற்படுத்தப்போவதில்லை. ஏனெனில், இந்த ஆறு தொகுப்புகளிலும் உள்ள ஹதீஸ்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே எடுக்கப்பட்டு தர மதிப்பீடு செய்யப்படுகின்றனவேயொழிய, இந்த ஆறு தொகுப்பு களில் ஒன்றிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டதனால் உயரிடம் பெறுவதாகக் கொள்ளப்படுவதில்லை.

ஆறு சிறப்புற்ற தொகுப்புகளில் ஒன்றாக இப்னு மாஜாவின் ஸுனன் வந்த முறை

ஆரம்ப காலத்திலிருந்து ஹதீஸ் தொகுப்புகளைப் பொறுத்தமட்டில், ஆறு பிரதான தொகுப்புகள் இருக்கின்றன என்றோ, இருக்க வேண்டும் என்றோ ஏதும் நியதிகள் இருந்த தில்லை. கால ஓட்டத்தில் ஹதீஸ் கலை வளர்ச்சியின் போக்கில் சடுதியாக ஏற்பட்ட ஒன்றே இது. மூன்றாம், நான்காம் நூற்றாண்டு களில் நூற்றுக்கணக்கான நூல்கள் தொகுக்கப்பட்டன. சில ஏனை யவற்றிலும் பார்க்க பிரசித்தி பெற்றன. எனவே தொகுப்புகளில் இணைக்கப்பட்ட ஹதீஸ்களை அறிவித்தவர்களின் வரலாறுகளை எழுதத் தொடங்கினர். இதன் மூலம் ஏனைய அறிஞர்கள் ஒவ்வொரு ஹதீஸினதும் சரியான தரத்தை விளங்கிக் கொள்ள முடிந்தது.

உதாரணமாக இப்னு அதீ (ம.365) தாரகுத்னீ (ம.385) அல்-கலா பாதீ (ம.398) முதலிய பல அறிஞர்கள், புஹாரி தனது ஸஹீஹில் குறிப்பிட்டுள்ள அறிவிப்பாளர்கள் பற்றிய நூல்களைத் தொகுக்க லாயினர். முஸ்லிம், அபூ தாவூத் ஆகியோரது நூல்கள் குறித்தும் இவ்வாறே நிகழ்ந்தது.

பின்னைய காலங்களில் இரண்டு நூல்களை அல்லது அதற்கும் மேற்பட்ட நூல்களை ஒன்றாக இணைத்து ஒரே நூலாக அமைக்கலாயினர். ஹுமைதீ, ஸகானீ ஆகியோர் புஹாரியினதும் முஸ்லிமினதும் ஆக்கங்களிலிருந்து பெற்ற விஷயங்களை ஒரே தொகுப்பாக அமைத்த மையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். அவ்வாறே புஹாரி, முஸ்லிம் ஆகிய ஸஹீஹ்களின் அறிவிப்பாளர் கள் பற்றிய வாழ்க்கை வரலாறுகளை ஒன்றிணைத்தும் சிலர் வாழ்க்கை வரலாறுகளை இயற்றலாயினர்.

அப்துல் கனீ-பின்-அப்துல் வாஹித் அல் மக்திஸீ (ம.600) 'அல் கமால்' என்ற பெயரில் ஒரு தொகுப்பினை அமைத்தார். ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், நஸயீயின் ஸுனன், அபூ தாவூதின் ஸுனன், திர்மிதியின் ஸுனன், இப்னு மாஜாவின் ஸுனன் ஆகிய ஆறு நூல்களிலும் குறிக்கப்பட்ட அறிவிப்பாளர்கள் அனை வரதும் விவரங்களின் தொகுப்பாக அமைந்தது இது. பின்னைய காலங்களில் மிஸ்ஸி, தஹபீ, இப்னு கதீர், முக்லதாயீஇ, கஸ்ரஜீ, இப்னு ஹஜர் முதலியோர் உருவாக்கித் தந்த, அறிவிப்பாளர்கள் பற்றிய அகராதிகளுக்கெல்லாம் மக்திஸீயின் நூல் அடிப்படையாக அமைந்தது.

இவ்வாறாக, இப்னு மாஜாவின் ஆக்கம் ஆறு பிரதான நூல் களுள் ஒன்றாக அமையக் காரணமாயிருந்தது மக்திஸீயின் நூலே. பின் வந்த அறிஞர்கள், மக்திஸீயை முன்னோடியாகக் கொண்டு இந்த ஆறு நூல்களையும் ஒன்றுபடக் குறித்தனர். இந்த ஆறு நூல் களதும் அறிவிப்பாளர் கள் ஒன்றாகக் குறிக்கப்பட்டதனால் இந்த

ஆறு நூல்களுமே ஒரு தொகுப்பினதாகக் குறிக்கப்பட்டன. என்றாலும் இவ்வாறான ஒரு குறிப்பிட்ட தொகுப்பினுள் ஒரு நூலைச் சேர்த்துக் கொள்வதாலோ, அல்லது சேர்க்காது விட்டு விடுவதாலோ நூலின் அல்லது நூலில் சேர்க்கப்பட்ட பொருட்களின் தரம் எவ்வித மாறுதலுக்கும் அல்லது தாக்கத்துக்கும் உட்படுவதில்லை. நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியது போல, ஒவ்வொரு ஹதீஸும் அதன் தனிப்பட்ட தரத்தைக் கொண்டே மதிக்கப்பட்டது. அதனைப் பதிவு செய்தவரின் மதிப்பீட்டைக் கொண்டல்ல.

ஸுனன் இப்னு மாஜாவின் சிறப்பியல்புகளும் அதனோடு தொடர்புற்றமைந்த விளக்கவுரைகளும்

இந்த நூல் மிகக் குறைந்த அளவாகவே ஹதீஸ்களை மீட்டுக் கூறுகின்றது. அத்தியாயங்கள், துணை அத்தியாயங்கள் என்பனவற்றைப் பொறுத்தமட்டில் மிகவும் சிறந்ததோர் ஒழுங்குமுறையைக் கையாண்டு தொகுக்கப்பட்டது இது என்பதை ஏராளமான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். முஹம்மத் புவாத் அப்துல் பாகீயின் பதிப்பின்படி இது 37 அத்தியாயங்களை (கிதாப்)யும் 4341 ஹதீஸ்களையும் கொண்டுள்ளது.

ஸுனன்-இப்னு-மாஜா மீதான விளக்கவுரைகள் மிகச் சிலவே. அவற்றுள் சிறந்ததெனக் கொள்ளக்கூடியது, முற்றுப் பெறாததும் இன்னமும் பிரசுரமாகாததுமான, "அல்-இஃலாம்-பீ-ஸுனனிஹீ அலை ஹிஸ்ஸலாம்". இதனை எழுதியவர் முக்லதாயிஇ (ம.762).

அத்தியாயம் – 10

அபுல் காஸிம் ஸுலைமான்-பின்-அஹ்மத்-பின் அய்யூப்-அத்தபரானீ-அல்-லகமீ

யெமன் தேசத்து லக்ம் கோத்திரத்தைச் சேர்ந்த இவரது குடும்பத்தவர்கள் குத்ஸ் பிரதேசத்துக்குச் சென்று அங்கேயே வாழலாயினர். அக்காஹ் பிரதேசத்தவர் தபரானீயின் தாயார். ஹிஜ்ரி 260-ஸபர் மாதம் அக்காஹ்வில் பிறந்த தபரானீ சிறு வயதிலேயே ஹதீஸ் கற்பதற்குத் தந்தையாரால் ஊக்குவிக்கப்பட்டார். தந்தையார் கல்வி மீது கொண்டிருந்த ஆர்வம் அதற்கொரு காரணம். தபரீயாவில் ஹிஜ்ரி 273-ல் தபரானீ ஹதீஸ் கற்கத் தொடங்கினார் என்பர் தஹபீ. அவ்வாறாயின் அவ்வேளை அவர் 13 வயதினராக இருந்திருக்க வேண்டும். ஹதீஸ் தேட்டத்துக்காக 274ல் குத்ஸ் சென்ற இவரை, அதே காரணத்துக்காக 275-ல் கைஸரியாவில் காண முடிந்தது. ஸிரியா, எகிப்து, யெமன், அரேபியத் தீபகற்பம், தற்கால ஈரான், ஆப்கானிஸ்தான் முதலிய பிரதேசங்களில் மிகவும் பரந்த முறையில் பிரயாணங்களை மேற்கொண்ட இவரது பயணம் 30 வருடங்களளவு நீண்டது. தபரானீயின் ஆசிரியர்களது தொகை ஆயிரத்தையும் விஞ்சியது. 290-ல் அஸ்பஹான் சென்று கற்றுப் பின்னர் பல பிரதேசங்களுக்கும் சென்று மீண்டும் அஸ்பஹானுக்கே திரும்பி வந்து அதனையே தனது நிரந்தர வசிப்பிடமாக்கி அரை நூற்றாண்டு காலமாக அங்கேயே வாழ்ந்த தபரானீ 360-ல் காலமானார்.

அஸ்பஹானின் கவர்னர் இப்னு ருஸ்தம் இவருக்கென மாதாந்த சகாயப்பணமாக ஒரு தொகையை நிர்ணயம் செய்து வழங்கினார். அவரது ஆக்கங்கள் பற்றிய ஒரு பட்டியல் கீழே தரப் படுகின்றது. ஸெஸ்கின் தனது தொகுப்பில் தபரானீயின் பெயரின் கீழ் 13 நூல்களைத் தந்துள்ளார். அனைத்தும் தபரானீயுடையன வல்ல. உண்மையில் தபரானீயின் நூல்களில் பத்து மட்டுமே இப்போதைக்குக் கிட்டுகின்றன.

தபரானீயின் ஆக்கங்கள்

முஸ்னத்-அல்-அஷரா
முஸ்னத் அ ஷாமியீன்
அன் நவாதிர்
பவாயித்
முஸ்னத் அபீ ஹுரைரா
முஸ்னத் ஆயிஷா
தப்ஸீர்-அல்-குர்ஆன்
துஆ
தலாயில்-அன்-நுபூவா
அஹாதீஸ்-அத்-திவால்
ஹதீஸ் ஷுஅபா
ஹதீஸ் அமா
ஹதீஸ் அவ்ஸாயீ
ஹதீஸ் ஷைபான்
ஹதீஸ் ஐயூப்
இஷ்ரத் அந்நிஸாஅ
முஸ்னத் அபூதர்ர்
அர்ருஃயாஅ
அல்ஜூத்
பத்ல் ரமழான்
அல்பராஅத்

அர்ரத்த்-அலா-அல்-முஃஃதஸிலா
அஸ்ஸலாத் அலா அர்ரஸூல்
அஹாதீஸ் ஸுஹ்ரீ
அஹாதீஸ் இப்ன் அல் முன்கதிர்
ஹதீஸ் மன் கதாப்
அக்பார் உமர்பின் அப்துல் அஸீஸ்
அல்முஃஃஜம் அஸ்ஸகீர்

தபரானீயின் மிகப் பிரசித்தி பெற்ற ஆக்கம் 'அல்முஃஃஜம் அல் கபீர்.' இது பன்னிரண்டு பாகங்களைக் கொண்டது. ஹதீஸ்களின் கலைக்களஞ்சியமாக அமைந்துள்ள இது, நபிகளாரின் ஹதீஸ்களை மட்டுமன்றி ஏராளமான வரலாற்று விவரங்களையும் கொண்டுள்ளது. இந்த நூல் நூற்றுக்கணக்கான பழைய நூல்களை முழுவதுமாக அல்லது சிறு பகுதிகளாகத் தன்னுள் கொண்டுள்ளது. இது நன்கு பதிப்பிக்கப்பட வேண்டியது அவசியம். ஏராளமான நூல் நிலையங்கள் இந்த நூலின் பல்வேறு பிரதிகளைக் கொண்டுள்ளன. தபரானீயை மிகவும் ஈர்த்திருந்த இரண்டாவது ஆக்கம் 'அல்முஃஃஜம்-அல்-அவ்ஸத்' இதில் அவர் ஹதீஸ் குறித்த அரிய பல விவரங்களைச் சேர்த்துள்ளார். அல்ஹம்துலில்லாஹ், இது பூரணமாக, இரண்டு பாகங்களில், இஸ்தான்பூலில், கிட்டியுள்ளது. இதுவும் பிரசுரமாதல் அவசியம்.

அவரது ஆக்கங்களில் மிகச் சிறியது 'அல் முஃஃஜம் அஸ்-ஸகீர்.' இது இரு முறை பிரசுரமாகியுள்ளது. இதில் தனது ஆசிரியர் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு ஹதீஸை மட்டும் இவர் தொகுத்துள்ளார். இவ்வகையில் காணும்போது அவரது ஆசிரியர்களின் தொகை ஆயிரத்துக்கும் கூடியது.

நூறு வருடங்களும் பத்து மாதங்களும் வாழ்ந்த தபரானீ ஹிஜ்ரி 360 துல்கஃஃதா 28-ம் நாள் அஸ்பஹானில் மரணமானார்.

முஃஜம் தொகுப்புகளின் இயல்பு

வெவ்வேறு ஆசிரியர்களால் இது வெவ்வேறு முறைகளில் கையாளப்பட்டுள்ளது. சில வேளை தோழர்களின் பெயர்களை அகர வரிசையில் அமைத்தும், சிலபோது பிரதேசங்களின் அடிப் படையிலும், சிலபோது தொகுப்பாசிரியரின் ஆசிரியர்களது நாமங் களை அகர வரிசையில் கொண்டும் முஃஜம் தொகுப்புகள் அமைக் கப்பட்டன. இறுதி முறையையே தபரானீ தனது, முஃஜம் அஸ்ஸகீ ரில் கையாண்டுள்ளார்.

சில பிரசித்திபெற்ற முஃஜம்கள் வருமாறு:

ஸிலாபீயீன் முஃஜம் ஸபர்
ஸல்மானியின் முஃஜம் ஸபர்
இஸ்மாயீலின் முஃஜம்
இப்னுல் அரபீயின் முஃஜம்
இப்னு ஷாஹீனின் முஃஜம்
தஹபீயின் முஃஜம் அல் கபீர்
இப்னு அஸாகீரின் முஃஜம் நிஸ்வான்
ஹகீம் மின் முஃஜம் ஷுயூக்
திம்யாதீயின் முஃஜம் ஷுயூக்
இப்னுல் முக்ரீயின் முஃஜம் ஷுயூக்.

அத்தியாயம் – 11

அபூ அஸ்ஸஆதாத் அல்முபாரக்-பின்-முஹம்மத்-பின்- அப்துல் கரீம்-அல் ஜஸரீ (இப்னுல் அஸீர்-அல்-ஜஸரீ)

பிரசித்திபெற்ற, இலக்கிய ஈடுபாடுகள் கொண்ட ஒரு குடும்பத்தின் மூன்று சகோதரர்களில் ஒருவர் இவர். முபாரக்-பின் முஹம்மத் ஒரு முஹத்திஸ்; 'அல்-காமில்-பித்தாரிக்' நூலின் ஆசிரியரான அலீ-பின் முஹம்மத் ஒரு வரலாற்றாசிரியர்; நஸ்ருல்லா-பின்-முஹம்மத் பல இலக்கிய ஆக்கங்களை அளித்த ஓர் இலக்கிய கர்த்தா. இவர்கள் அனைவருமே இப்னுல்-அஸீர் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளமை வியப்பூட்டுவது.

மௌஸில் நகருக்கு வடக்கே ஜஸீரா எனும் பட்டணத்தில் ஹிஜ்ரி 554-ல் பிறந்த இவர் 565-ல் மௌஸில் வந்து அதனையே தனது நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டார். பெரும் பக்திமானும் பேரறிஞருமான இப்னுல் அஸீர் அறபு மொழி, குர்ஆன் விளக்கவுரை, இலக்கணம், மொழியியல், ஹதீஸ், பிக்ஹ் ஆகிய பல துறைகளிலும் விற்பன்னராயிருந்தார்.

அரச விவகாரங்களில் தொடர்பறாது ஆலோசகர் பதவி வகித்து வந்தார் இவர். ஆட்சியாளர்கள் பலர் மாறினர். அரசாங்கங்களும் மாறின. எனினும் அனைவரும் இவரது சேவையையும் ஆலோசனையையும் நாடியவர்களாகவே இருந்தனர். ஓர் அமைச்சர்

பதவி அளிக்கப்பட்டு அதனை ஏற்க இவர் மறுத்தமை உயர் மட்டத்தாரின் மனதை நோகச் செய்தது. எனினும் தனது நிலையை விளக்கி அவர்களைத் திருப்திப்படுத்தினார் இப்னுல் அஸீர்.

பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட நூல்களை அவர் தொகுத்துள்ளார். அவற்றில் சில வருமாறு:

அன்-நிஹாயா-பீ-கஹ்ரீப் அல்-ஹதீஸ்
அஷ்ஷாபீ-பீ-ஷர்ஹ் முஸ்னத் அஷ்ஷாபிஈ
அல்-இன்ஸாப்-பைனல் கஷ்ப் வ அல் கஷ்ஷாப்
ஜாமிஉல் உஸூல்-பீ-அஹாதீஸ் அர் ரஸூல்

தனது இறுதிக் காலங்களில் மூட்டுப் பிடிப்புகளினால் அவதிப்பட்ட அவர் தனது கால்களை நீட்டவோ, நடக்கவோ முடியாத நிலையில் இருந்தார். அரசரும் அமைச்சர்களும் இவரது ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்கவென அடிக்கடி அவரைக் காணச்செல்வார்கள். சிறிது காலம் செல்ல, மஃரிபிலிருந்து வந்த ஒரு மருத்துவரின் வைத்திய முறைகளினால் இவரது நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. என்றாலும் இப்னுல் அஸீர் தன் சகோதரரிடம், அம்மருத்துவருக்கான கொடுப்பனவுகளை அளித்து அவரை அனுப்பி விடுமாறு கூறினார். உடல் நிலை தேறிவரும் நிலையிலும் அவர் இவ்வாறான ஒரு முடிவை எடுக்கத் தீர்மானித்துள்ளதையிட்டு சகோதரர் ஆச்சரியப்படலானார். அவ்வேளை இப்னுல் அஸீர் கூறினார்: "நீர் நினைப்பது சரியே! என்றாலும் நான் இப்போது அரசாங்கத்தாரிடமிருந்து நிம்மதியாக வாழ்கின்றேன். அவர்களது வாசலுக்குச் செல்வதை நான் வெறுக்கின்றேன். சுகதேகியாக இருந்த போது அவர்களை நாடி நான் சென்றேன். இப்போதோ அவர்கள் முக்கியமான விஷயங்களுக்காக மட்டும் என்னை நாடி வருகின்றார்கள். எஞ்சியுள்ள காலப்பகுதியையும் நான் அவர்களது தொல்லையின்றி சுதந்திரமாகக் கழிக்க விரும்புகின்றேன்." அவரது சகோதரர் இதனை ஏற்றுக்கொண்டார். சுகயீனத்தின் வேதனையுடன் வாழ்வதிலேயே திருப்தி கண்டவர் இப்னுல் அஸீர்.

அவர் சுகயீனமுற்றிருக்கும் போதுதான் தனது ஆக்கங்கள் அனைத்தையும் உருவாக்கினார் என்பர். அவர் சொல்ல, மாணவர் கள் எழுதுவதன் மூலமே இந்நூல்கள் உருவாகின.

ஹிஜ்ரி 606-ல் மௌஸிலில் மரணமானார் இப்னுல் அஸீர்.

ஜாமிஉல் உஸூலின் முக்கியாம்சங்கள்

இப்னுல் அஸீர் பின்வரும் தொகுப்புகளில் காணப்படும் நபிகளாரின் ஹதீஸ்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்தார்.

இமாம் மாலிக்கின் முவத்தா
புஹாரீயின் ஸஹீஹ்
திர்மிதியின் ஜாமிஇ
நஸாயீயின் ஸுனன்
அபூதாவூதின் ஸுனன்

அறிவிப்பாளர் வரிசைகள் அனைத்தையும் ஒதுக்கித் தன் அத்தியாயங்களை அகர வரிசைக் கிரமத்தில் ஒழுங்குபடுத்தினார். உதாரணமாக, ஸுனன் தொகுப்பில் முதல் அத்தியாயம் தஹாரா (சுத்திகரிப்பு) என்பதில் ஆரம்பமாகின்றது. இதில் வரும் 'த' அறபு லிபி வரிசையில் 16-வது எழுத்தாக வருகின்றது. இவரது நூலில் முதல் அத்தியாயம் ஈமானும் இஸ்லாமும் என்பதுடன் ஆரம்பமா கின்றது. இவை அறபு லிபியின் ஆரம்ப எழுத்தான 'அலிப்' உடன் எழுதப்படுவன. இவர் ஒரு ஹதீஸைக் குறிக்கும்போது, அதனை இந்த ஆறு தொகுப்பாசிரியர்களுள் யார் யாரெல்லாம் தமது நூலில் சேர்த்துக் கொண்டனர் எனக் குறிக்கின்றார். பொதுவாக புஹாரி யினதும் முஸ்லிமினதும் வாசகங்கள் அவ்வவ்வாறே வைக்கப்பட் டுள்ளன. சொற்பிரயோகங்களில், அல்லது விவரணங்களில் வித்தி யாசங்கள் காணப்பட்டால் அவற்றைத் தெரிவிக்கின்றார் இப்னுல் அஸீர். அதன் பின்னர் சிக்கலான வார்த்தைகளுக்கான விளக்கங் களை அளிக்கின்றார்.

எவ்வாறாயினும் இந்த நூலினைக் கையாளும்போது அல்லது, மேற்கோள் காட்டும்போது புஹாரி முதலிய மூல நூல்களை நேரடி ஆதாரமாகக் கூறிவிடக்கூடாது. மூல நூலாசிரியரின் அதே சொற் பிரயோகங்களைப் பிரயோகிக்க விரும்பும் ஒருவர் மூல நூல்களையே பார்க்க வேண்டும்.

பொதுப்பட இப்னுல் அஸீரின் நூல் ஹதீஸ் அறிஞர்களுக்கு நன்கு பயன்படுவது. பலமுறை பிரசுரமாகியுள்ள இந்த நூலின் சிறந்த பதிப்பை வெளியிட்டவர் டமஸ்கஸின் அப்துல் காதிர் அல்-அர்னாவுத்.

அத்தியாயம் – 12

அலீ பின் அபூபக்ர் பின் ஸுலைமான் அல்ஹைதமீ

ஹிஜ்ரி 735-ல் பிறந்தவர் அல் ஹைதமீ. குர்ஆனைக் கற்றுத் தேறிய பின், வாலிபப் பிராயத்தை அடைந்த இவர் தன் காலத்து பிரசித்தி பெற்ற ஹதீஸ் அறிஞரான ஸைனுத்தீன்-அல்-ஈராக்கீயின் மாணவராகச் சேர்ந்தார். ஹஜ்ஜுக்காக அல்லது ஹதீஸ் தேட்டத் துக்காக ஸைனுத்தீன் மேற்கொண்ட பல்வேறு பிரயாணங்களில் இவரும் கலந்து கொண்டார். இவ்வாறாக ஸைனுத்தீன் இவரது ஆசிரியராகவும் சகாவாகவும் இருந்து வந்தார். இருவரும் ஒன்றாகப் பல்வேறு புகழ்பெற்ற அறிஞர்களிடம் கற்றுள்ளார்கள்.

ஸைனுத்தீன் தன் புதல்வியை அல்-ஹைதமீக்கு மணஞ் செய்து கொடுத்தார். மேலாக ஹதீஸ் கலையையும் கற்பித்தார். அவரது வழிகாட்டலின் பேரில் ஹைதமீ ஸவாயித் முறைமையினைக் கற்றார். அதாவது சில குறிப்பிட்ட ஆசிரியர்களால் பதிவு செய்யப்படாத ஹதீஸ்களை மட்டும் தனியே தெரிந்தெடுக்கும் கலையாகும். இத்துறையில் ஹைதமீ இயற்றி யுள்ள நூல்கள் அவரது நிபுணத்துவத்தைக் காட்டுகின்றன. அதாவது ஸவாயித் முறையில், குறிப்பிட்ட ஒரு நூலில் உள்ளதும் ஏனைய நூல்களில் இல்லாதது மான ஹதீஸ்களை மட்டும் தனியே தொகுத்தெடுக்கும் திறன்.

முஸ்னத் அஹ்மத்திலிருந்து இவர் தொகுத்த ஸவாயித்துக்கு 'கயாதுல்-மக்ஸத்-பீ-ஸவாயித்-அஹ்மத்' எனப் பெயரிட்டார்.

அல்-வஸ்ஸாவின் முஸ்னத்திலிருந்து செய்த ஸவாயித் தொகுப்புக்கு 'அல்-பஹ்ர்-அஸ்ஸக்கார்-பீ-ஸவாயித் அல்-பஸ் ஸார்' என்றும்,

அபூ-யஅலாவின் 'முஸ்னத்', தபரானீயின் 'அல்-முஃஜம்-அல்-கபீர்' ஆகியவற்றிலிருந்து பெற்ற ஸவாயித்துக்கு 'அல்-பதிர்-அல்-முனீர்-பீ-ஸவாயித்-அல்-முஃஜம்-அல்-கபீர்' என்றும்,

'அல்முஃஜம்-அஸ்ஸகீர்', 'அல்-அவ்ஸாத்' என்பனவற்றிலிருந்து பெற்ற ஸவாயித்துக்கு 'மஜ்மாஅ' அல்-பஹ்ரைன்-பீ-ஸவாயித்-அல்-முஃஜமைன்' என்றும் பெயரிட்டார் ஹைதமீ.

இவற்றுக்கும் மேலாக மேலும் பல நூல்களையும் அவர் வெளியிட்டார். என்றாலும் கூட, நான் மேலே குறிப்பிட்ட எல்லா நூல்களையும் ஒன்று சேர்த்து 'மஜிமாஅ-அஸ்-ஸவாயித்-வ-மன்பஅ-அல்பவாயித்' என்ற பெயரில் அவர் அமைத்த நூல் மிக்க பிரசித்தம் வாய்ந்தது. இஸ்னாத்களை முற்றாகத் தவிர்த்து, ஜாமிஇ, ஸுனன் முதலியவற்றின் அமைப்பில் நூலை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு ஹதீஸினதும் தரத்தைக் குறிப்பிட்டு, தவறிழைத்த அறிவிப்பாளர்களையும் குறித்துக் காட்டினார். பின்னைய கால அறிஞர்கள் அனைவருமே இவரது தரப்படுத்தலை ஏற்றனர் என்பதற்கில்லை. இந்த நூல் 10 பாகங்களாக ஹிஜ்ரி 1352-ல் குத்ஸீயினால் கெய்ரோவில் பிரசுரிக்கப்பட்டது.

சுருக்கமான முறையில் விஷயங்களைக் கூறவந்த இவர், அதன் காரணமாகவே இஸ்னாத்களை விட்டும் ஹதீஸ்களைப் பிரித்தெடுத்தார். ஆனால் இம்முறையானது, இவரது ஆக்கத்தில் ஒருவகை குறைபாட்டினை ஏற்படுத்தி விட்டது. எவ்வாறாயினும் இது ஹதீஸ் கலையில் ஒரு பெருங் கலைக்களஞ்சியமாகும். தன் சமகாலத்தவர்களாலும் பின்னைய கால அறிஞர்களாலும் பெரிதும் புகழப்பட்ட ஹைதமீ ஹிஜ்ரி 807, ரமழான் 19-ல் மரணமானார்.

அத்தியாயம் – 13

ஜலாலுத்தீன் அப்துர் ரஹ்மான்-பின் கமாலுத்தீன் அஸ்ஸுயூதி

ஹிஜ்ரி 849, ரஜப் முதலாம் நாள் பிறந்தார் ஸுயூதி. இவர் ஆறு வயதினராக இருக்கும்போதே தந்தையார் காலமாகி விட்டார். அவரது பாதுகாவலராக இருந்தவர் அஷ்ஷிஹாப்-பின்-அத்தப்பாக். கல்வி கற்க நல்ல வசதியும் அவகாசமும் கிட்டப்பெற்ற அவரது ஆசிரியர்களது பட்டியலில் சமகாலத்தின் சிறந்த ஆசிரியர்கள் அனைவரதும் நாமங்களைக் காணலாம். அவர்களது எண்ணிக்கை நூற்றைம்பதுக்கும் கூடியதாயுள்ளது.

அவர் தொகுத்த ஆக்கங்கள் சுமார் 600 ஆகும். அவற்றில் சில ஓரிரு பக்கங்களை மட்டும் கொண்டன. சில பல பாகங்களில் அமைந்தன. அவரது முக்கிய நடவடிக்கையாக அமைந்தது, முன்னைய அறிஞர்களது ஆக்கங்களைச் சுருக்கியமைப்பதாகும். இதனால் ஏனைய பல அறிஞர்களது கண்டனங்களுக்கு இவர் உள்ளாக வேண்டியேற்பட்டது. ஆரம்ப கால அறிஞர்களது ஆக்கங் களை இவர் திருடுகின்றார் என அவர்கள் குற்றஞ் சாட்டலாயினர்.

பல கல்வி நிறுவனங்களது அதிபராக இவர் கடமையாற்றி யுள்ளார். சிலரின் சதிகள் காரணமாக அவர் அப்பதவியினின்றும் விலக்கப்பட்டார். பின்னைய காலங்களில் அதே பதவி அவருக்கு மீண்டும் வழங்கப்பட்டபோது அதனை ஏற்க மறுத்துவிட்டார். நன்கு மதிக்கப்பட்ட அவரை உயர் அதிகாரிகள் பலர் சென்று கண்டு வந்தனர்.

ஸுயூதியின் ஆக்கங்கள்

நான் முன்னர் கூறியதுபோல அவரது ஆக்கங்கள் பெருந் தொகையின. சுமார் 600. எமது கவனத்தை இங்கு ஈர்த்து நிற்பது நபிகளாரின் ஹதீஸ்களை ஒன்று திரட்டும் பணியில் அவர் அமைத்த தொகுப்பாகும்.

இப்னுல் அஸீர், ஹைதமீ ஆகியோர் பல நூல்களிலிருந்து ஹதீஸ்களைத் தொகுத்து ஒரு நூலாகக் கொண்டு வந்தனர் எனக் கண்டோம். எவ்வாறாயினும் இப்னு ஹஜர் (ம.852) ஹதீஸ்கள் அனைத்தையுமே ஒரு நூலாகத் தொகுக்கும் முயற்சியில் முனைந்து பின்னர் அதனைக் கைவிட்டார். பின்னர் அதே வழியில் சிந்தித்த அவரது மாணவர் ஸுயூதி பின்வரும் தொகுப்புகளை மேற்கொண் டார்.

அல்ஜாமிஉல் கபீர் அல்லது ஜம்உல் ஜவாமிஇ

நபிகளாரின் ஹதீஸ்கள் அனைத்தையுமே ஒரே தொகுப்பி னுள் கொண்டுவர முனைந்த ஸுயூதி, தனது ஆக்கத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்தார்.

I. *நபிகளாரின் வாக்குகள்*
II. *நபிகளாரின் செயல்கள்*

முதல் பகுதியில் அவர் நபிகளாரின் வாக்குகள் அனைத்தை யும் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தியமைத்தார். என்றாலும், நபி களாரின் செயல்களைக் கொண்ட இரண்டாம் பகுதியில் அவர் அவற்றை நபிகளாரின் தோழர்களது அடிப்படையில் தொகுக்கலா னார். இஸ்னாத்தை முற்றாக ஒதுக்கி விட்டுத் தனது நூலில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு ஹதீஸை அங்கீகாரம் செய்தோரை மட்டும் குறிப்பிட்டார்.

ஹதீஸ் சம்பந்தமாகத் தான் சேகரித்த அனைத்து ஆக்கங் களையும் உட்படுத்திய பட்டியல் ஒன்றினையும் அளித்தார் ஸுயூதி. அவர் மரணமான பின்னர் வேறு யாரும் அந்த வேலையைத் தொடர்ந்து செய்யலாம் என்பதே அதற்குக் காரணமாயமைந்தது.

தொகுப்பு முற்றுப்பெறு முன்னமேயே ஸுயூதி மரணித்து விட் டார். இக்காலப் பகுதியிலேயே தனது 'அல்ஜாமிஉல்-கபீர்' தொகுப்பின் பொருளிலிருந்து பெறப்பட்ட வேறும் இரு சிறு தொகுப்புகளை வெளியிட்டார். அவை வருமாறு:

I. அல்-ஜாமிஇ-அஸ்-ஸகீர். இது 10,010 ஹதீஸ்களைக் கொண் டது. நபிகளாரின் வாக்குகள் அகர வரிசையில் அமைக்கப் பட்டுள்ள இதனை ஹிஜ்ரி 907-ல் பூரணப்படுத்தினார்.

II. ஸியாதத்-அலா-அல்-ஜாமிஇ அஸ்ஸகீர்- முன்னைய நூலான அல்ஜாமிஇ-அஸ்ஸகீரை முடித்ததும், மேலும் விவரங்களைச் சேகரித்து அதே நூலின் முறையில் ஓர் அனுபந்தமாக அமைக்கப்பட்டது இது.

இவ்விரண்டு நூல்களது விஷயங்களையும் ஒன்றிணைத்து ஸுயூதியின் ஒழுங்குமுறையையே பின்பற்றித் தனியொரு நூலாக 'அல்-பத்ஹுல்-கபீர்-பீ-தம்மாஸ்-ஸியாதாத்-இலா அல்-ஜாமிஇ அஸ்ஸகீர்' என்ற பெயரில் உருவாக்கினார் யூஸுப்-அந்நபஹானீ. ஹிஜ்ரி 1351-ல் எகிப்தில் மூன்று பாகங்களாக இது வெளியிடப்பட் டது. மூலநூல் அமைந்துள்ள முறை யிலன்றி அகர வரிசைக் கிரமத் திலேயே அமைக்கப்பட்டதால் இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் சிரமமாகும்.

இந்திய அறிஞர்களுள் ஒருவரான அலீ-பின்-ஹிஸாமுத்தீன் (ம975 மக்காவில்) இம்மூன்று நூல்களதும் விஷயங்களைச் சட்ட வொழுங்கின்படி அத்தியாயங்களாகத் தொகுத்து அமைத்தார். 'அல்-முத்தகீ-அல்-ஹிந்தி' என வழங்கப்பட்ட அன்னாரின், அந்த

நூல் 'கன்ஸுல் உம்மால்-பீ-ஸுனன்-அல்-அக்வால்-வல்-அப்ஆல்' என்ற பெயருடையது. இந்த நூல் ஹைதராபாத்தில் இரண்டு முறை பிரசுரமாகியுள்ளது.

எல்லா வகையான ஹதீஸ்களையும் உள்ளடக்கியிருப்பதனாலும், ஹதீஸ்களின் ஆதாரங்கள் குறித்து ஸுயூதியின் தீர்மானங்கள் தீர்க்கமானவையாக இல்லாமையாலும் சாதாரண வாசிப்புக்கு இந்நூல் உகந்ததல்ல. என்றாலும் இதனைச் சரிவர திரட்டியமைக்க வேண்டியது அவசியம். இந்தப் பணியை நிறைவேற்ற அல்லாஹ் எனக்குப் போதிய தைரியத்தை அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஸுயூதி, ஹிஜ்ரி 911-ல் கெய்ரோவில் காலமானார்.

அத்தியாயம் – 14

ஹதீஸ் சம்பந்தமான விஷயங்கள் பற்றிய நூல்கள்

தனியே ஹதீஸ்களை மட்டும் கொண்ட பல நூற்றுக்கணக்கான நூல்களில் சிலவற்றை மட்டுமே நான் இதுவரை குறிப்பிட்டுள்ளேன். என்றாலும் ஹதீஸ் கலையோடு சம்பந்தப்பட்ட வேறும் பல விஷயங்களும், துறைகளும் காணப்படுகின்றன. அவற்றில் ஒவ்வொன்று குறித்தும் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறு ஹதீஸ் துறையோடு சம்பந்தப்பட்ட சில நூல்கள் குறித்த விவரங்களைச் சிறிது காண்போம்.

கற்றல், கற்பித்தல் ஆகியவற்றுக்கான பொது நியதிகள் குறித்த நூல்கள் பற்றி முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. *ஓர் ஆசிரியர் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள், ஒழுங்கு விதிகள், வேறும் நியதிகள் குறித்த நூல்கள் பல உள. இதில் சிறந்ததெனக் கொள்ளக்கூடியது, கதீப்-அல்-பக்தாதீயின் 'அல் ஜாமி லீ அக்லாக் அர்ராவீ வ ஆதப் அஸ்ஸாமிஇ'*

2. *சொல்வதெழுதும்போது ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் பற்றிய நூல்களில் சிறந்தது ஸம்ஆனி எழுதிய 'அதப்-அல்-இம்லா-வ-அல்-இஸ்திம்லாஅ்'*

3. மாணவர்கள், ஹதீஸ் கல்விக்கான பிரயாணங்கள் என்பன குறித்து கதீப் எழுதிய 'அர்-ரிஹ்லா'.

4. ஹதீஸ்களை எழுத்தில் பதிக்கின்றமை குறித்து கதீப் பக்தாதீ எழுதிய 'தக்யீத்-அல்-இல்ம்'.

5. ஹதீஸ்கள் எழுதிய பின்னர், மீட்டல், திருத்தல் என்பன குறித்து காதீ-அயாத் எழுதிய 'அல்-இல்மாஅ'.

6. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளித்த சான்றிதழ்களைப் பரீட்சிக்கும் ஒழுங்கு முறைகள் பற்றி முஅம்மரீ எழுதிய, 'அல்-வஜாஸா-பீ-தஜ்வீஸ்-அல்-இஜாஸா.'

ஹதீஸ்கள் வெவ்வேறு வகையினவாக வகைப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். தனியொரு வகையினவான ஹதீஸ்கள் குறித்த நூல்கள் தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளன. உதாரணங்களுக்கு அவற்றில் சில வருமாறு:

7. முதவாதிரான ஹதீஸ்களை மட்டும் கொண்டது ஸுயூதி யின் 'அல்-அஸ்ஹார்-அல்-முதவாதிரா.'

8. ஹதீஸ் குத்ஸீகளை மட்டும் கொண்டது மனாவீ எழுதிய 'அல்-இதாபாத்-அஸ்-ஸனீயா.'

9. மறைமுகமான பலவீனங்களான 'இல்லா'க்களைக் கொண்ட ஹதீஸ்களை மட்டும் உள்ளடக்கியது தாரகுத்னீ யின் 'அல்-இலால்.'

10. நபிகளாரின் ஆணைகள் சில பின்னைய காலங்களில் அன்னாராலேயே மாற்றியமைக்கப்பட்டன. இவ்வாறான ஹதீஸ்களின் தொகுப்பாக அமைந்தது ஹாஸிமியின் 'அல்-லிதிபார்-பீ-அந் நாஸிக் வ அல்-மன்ஸூக் மினல்-ஆதர்.'

11. நபிகளாரின் சில வாக்குகள் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்க ளோடு இயைந்தன. இவ்வாறான ஹதீஸ்களின் தொகுப்பு ஹுஸைனீயின் 'அஸ்பாப் வருத் அல்-அஹாதீஸ்.'

12. சிலபோது இரு ஹதீஸ்கள் மேலோட்டமாகப் பார்க்கை யில் முரண்பட்டன போல் தோற்றுகின்றன. அவற்றின் கருத்துக் களை விளக்கவும் முரண்பாடற்ற தன்மையை நிறுவவும் வந்த நூல்களுள் குறிப்பிடத்தக்கன: I. ஷாபியீயின் இக்திலாப்-அல்-ஹதீஸ். II. இப்னு குதைபாவின் தஃவீல் முக்தலப் அல்-ஹதீஸ்.

13. பல்வேறு விஷயங்கள் குறித்தும் அகராதிகள் வெளியிடப்பட் டுள்ளன. ஹதீஸ் குறித்தும் ஏராளமான அகராதிகள் வெளி வந்துள்ளன. அறிஞர்களால் பொதுவாகப் பயன் படுத்தப் படுவது, நான்கு பாகங்களில் வெளியாகியுள்ள, இப்னுல் அஸீரின் நிஹாயா.

14. விளக்கவுரைகளைப் பொறுத்தமட்டில், ஹதீஸ் விளக்கவு ரைகளாக நூற்றுக்கணக்கான நூல்கள் காணப்படுகின் றன. ஸஹீஹ் புஹாரி குறித்து மட்டும் 56 விளக்கவுரைகளை வரிசைப்படுத்துவார் ஸெஸ்கின். ஸஹீஹ் புஹாரியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடுவதான விளக்கவுரைகளை யும் சேர்த்தால் இது நூற்றுக்கணக்காக அமையும்.

தொகுப்பாசிரியர்களது ஒழுங்கமைப்பு முறைகளின் அடிப் படையில் ஹதீஸ் தொகுப்புகள், பல்வேறு கிளைத் தொகுப்புகளின் கீழ் வகைப் படுத்தப்பட்டுள்ளன. நான் ஏற்கனவே, 1. முஸ்னத், 2. ஸஹீஹ், 3. ஜாமிஇ, 4. ஸுனன், 5. முஃஜம், 6. ஸவாயித் என்ற பிரிவுகள் குறித்து விளக்கியுள்ளேன்.

மேலும் பல கிளைப்பிரிவுகளும் உள. முஸ்தக்ரஜ், ஜுஸஉ, பவாயித், மஷாயிக் முதலியன அவை. முஸ்தக்ரஜ் என்பதற்குப் பின்னைய கால அறிஞர்களுள் ஒருவர் புஹாரியின் ஸஹீஹ்

நூலைத் தேர்ந்து இஸ்னாத்தில் புஹாரியைத் தவிர்த்து, புஹாரி கொடுத்துள்ள இஸ்னாத்தை அவரது ஆசிரியர் வரையும் சேர்த்து அமைத்ததனை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த முறையில் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஜுஸ்உ என்பது ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்த ஹதீஸ்களின் தொகுப்பாக (உ-ம்: புஹாரியின் ஜுஸ்உ-அல்-கிறாஅத்) அல்லது குறிப்பிட்ட ஓர் அறிவிப்பாளரின் அறிவிப்புகளது தொகுப்பாக (உ-ம்: இப்னு அரபாவின் ஜுஸ்உ) அமைவது. இந்த முறையின் கீழ் பல ஆயிரக் கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன.

மவ்துாஆத்

போலியான ஹதீஸ்கள் குறித்து பல நூல்கள் வெளி வந்துள் ளன. இப்னுல் ஜவ்ஸீ, ஸுயூதீ, முல்லா-அலீ-காரீ, ஷவ்கானீ ஆகி யோரின் நூல்களை உதாரணங்களாகக் கொள்ளலாம். சாதாரண வாசகர்களுக்கு முல்லா அலீ காரீயின் 'மவ்துாஆத் கபீர்' ஷவ்கானீ யின் 'அல்-பவாயித்-அல்-மஜ்மூஆ' என்பன பயனளிப்பன.

அன்றைய கால கட்டங்களில் அச்சுவாகன வசதிகள் இல்லா திருந்தமை தெளிவு. எனவே இப்போது நடப்பதைப்போல் பொரு ளட்டவணை, பெயரட்டவணை முதலிய நிரல்கள் அமைக்கப்பட வில்லை. என்றாலும் முதலாம் நூற்றாண்டு முதற்கொண்டு முஹத் திஸீன்கள் 'அத்ராப்' எனும் ஒரு முறையை வழக்கில் கொண்டு வந்தார்கள். அதில் ஹதீஸ்களின் ஆரம்ப அடிகளைக் கண்டு கொள்ள முடிந்தது. இந்த முறையை அடிப்படையாகக் கொண்டு ஹதீஸ்களின் அகர வரிசை நிரல் நூல்கள் பல உருவாகின. இவற் றுள் சிறந்தது மிஸ்ஸீயின் துஹ்பதுல் அஷ்ராப்.

அறிவிப்பாளர்களது வாழ்க்கை வரலாறு பற்றிய ஆக்கங் களைப் பல்வேறு பிரிவினவாக வகைப்படுத்திக் காணலாம்.

I. ஒரு குறிப்பிட்ட நகரின் வரலாறு. அக்கால முஸ்லிம் அறிஞர் கள், நகரங்களின் வரலாறுகளை எழுதுவதைச் சர்வ சாதார

ணமாகக் கொண்டிருந்தார்கள். உண்மையில் நகரங்களின் வரலாறுகளில் குறிப்பிடப்பட்டவை அந்நகரில் வாழ்ந்து வந்த அறிஞர் பற்றிய விவரங்களே. அதிலும் முஹத்திஸீன்கள் பற்றிய வரலாறுகளே இவற்றில் பெரும் பங்கினைக் கொண்டிருந்தன. ஆரம்ப சில நூற்றாண்டுகளில் முஸ்லிம் உலகின் ஒவ்வொரு நகரமும் ஒரு வரலாற்று நூலை மட்டுமன்றிப் பல வரலாற்று நூல்களைக் கொண்டிருந்தன. மேலாக அவற்றுக்கான பல அனுபந்தங்களையும் கொண்டிருந்தன. உதாரணமாக கதீப் (ம.463) எழுதிய பக்தாதின் வரலாற்றை எடுத்துக் கொள்வோம். அது 14 பாகங்களில் பிரசுரமாகியுள்ளது. இதற்கு ஸம்ஆனீ எழுதிய அனுபந்தம் 15 பாகங்களிலும், துபைதீயின் அனுபந்தம் 3 பாகங்களிலும், நஜ்ஜாரின் அனுபந்தம் 30 பாகங்களிலும் வெளியாகியுள்ளன.

இப்னு அஸாகீர் (ம.571) எழுதிய டமஸ்கஸின் வரலாறு 80 பாகங்களில் ஆனது. இப்பெரும் நூலுக்கும் பல அனுபந்தங்கள் எழுதப்பட்டுள்ளன.

II. சில நூல்களில் குறிக்கப்பட்டுள்ள அறிவிப்பாளர்களது வரலாறுகளைத் தொகுத்தல். உதாரணமாக புஹாரியின் ஸஹீஹில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பாளர்களது வரலாறுகளை இப்னு அபூ அதீ (ம.365) தாரகுத்னீ (ம.385) கலாபாதீ (ம.398) அல்பாஜீ (ம.474) ஆகியோர் தொகுத்துள்ளார்கள். இது ஸஹீஹ் புஹாரிக்கு மட்டும் மட்டுப்படுத்தப் படவில்லை. ஹதீஸ் துறையின் பிரசித்தி வாய்ந்த நூல்கள் அனைத்துக்கும் இவ்வாறான நூல்கள் எழுதப்பட்டன.

III. அறிவிப்பாளர்களது சரிதைகளைத் தொகுக்கும் அடுத்த முறை குறிப்பிட்ட ஒரு வகையினரான அறிவிப்பாளர்கள் பற்றி மட்டுமான தொகுப்புக்களை ஆக்குவதாகும். உதாரணமாக நம்பிக்கையானவர்கள் (திகாத்) என வழங்கியோர் மட்டும் பற்றியது. இப்னு ஹிப்பான், இஜ்லீ, இப்னு ஷாஹின் ஆகியோர் திகாத் நூல்களை எழுதியுள்ளனர்.

பலவீனமான அறிவிப்பாளர்கள் பற்றிய சரித்திர நூல்களும் உருவாயின. பலவீனம் பல காரணங்களினால் உருவாகும் ஒன்று. வயது முதிர்ச்சியினால் ஏற்படும் மறதியினூடாக உருவாகும் பலவீனம் ஒரு வகை.

இவ்வகையில் இப்னுல் அஜமீயின் 'கஷ்புல்-இல்திபாஸ்-பி-மன்ருமியா-பில்-இக்திலாத்' குறிப்பிடத்தக்கது. தத்லீஸ் காரணமாக அறிவிப்பாளர் காட்டும் பலவீனம் சம்பந்தமாகச் சிறந்த நூல் அல்-அலாயீயின் 'ஜாமிஉத்-தஹ்ஸீல்.'

பொதுப்படவே பலவீனமான அறிவிப்பாளர்கள் குறித்துப் பல நூல்கள் ஆக்கப்பட்டன. இவ்வகையில் இப்னு அதீ (ம.365)யின் 'அல்-காமில்' சிறப்பு வாய்ந்தது. இது இன்னும் பிரசுரமாகவில்லை. பிரசுரமாகி யுள்ள நூல்களில் இத்துறையில் குறிப்பிடத்தக்கது, தஹபீயின் 'மீஸானுல் இஃதிதால்'.

IV. அறிவிப்பாளர்கள் சரிதை தொகுக்கப்படும் அடுத்த முறை, எந்த ஒரு வகைப்படுத்தலோ, பாகுபாடோ இன்றி அனைவரது வாழ்க்கைக் குறிப்புகளையும் தொகுப்பதாகும். அவர்கள் நம்பிக்கையானவர்களோ பலவீனமானவர்களோ; குறிப்பிட்ட ஒரு நகரில் வாழ்ந்தனரோ, இல்லையோ; குறிப் பிட்ட ஒரு நூலில், அவர்களது அறிவிப்புகள் உள்ளனவோ, இல்லையோ; எல்லா அறிவிப்பாளர்களதும் விவரங்களைத் தொகுத்தல். இவ்வகையில் இப்னு மாயின், அல்-பஸவீ, இப்னு அபூ கைதமா, இப்னுல் அபூ ஹாதிம் அர்ராஸீ ஆகியோரின் 'தாரீக்' தொகுப்புகளைக் குறிப்பிடலாம். கடைசி இரு நூல் களும் ஹைதராபாத்தில் பிரசுரமாகியுள்ளன. புஹாரியின் 'அத்தாரீக்-அல்-கபீர்' நூலும் குறிப்பிடத் தக்கது.

V. அறிவிப்பாளர்கள் வரிசையில் நபிகளாரின் தோழர்கள் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளமையால் அவர் களைப் பற்றிய தொகுப்புக்கள் தனியே வெளிவந்தன. சிறப்

பானதொன்று, இப்னு ஹஜரின் 'அல்-இஸாபா-பீ-தம்யீஸ்-அஸ்-ஸஹாபா.'

VI. சிலர் தமது பட்டப் பெயர்களால் புகழ்பெறுவதுண்டு. அவர்கள் பற்றிய ஒரு தொகுப்பு 50 பாகங்களுக்கும் கூடியதாக தொகுக்கப்பட்டது. இது, இப்னுல் பூதியின் 'மஜ்முல்-அல்-அல்காப்.'

VII. சிலர் தமது குன்யாவினாலேயே குறிப்பிடப்படுவதுண்டு. அபுல் காஸிம் (காஸிமின் தந்தை), அபூ அஹ்மத் (அஹ்மத் தின் தந்தை) என்றவாறாக. அறபு மரபுகளின்படி நேரடியாகப் பெயர் சுட்டி அழைக்கப்படுவதைவிட, இன்னாருடைய தந்தை எனச் சுட்டியழைப்பது கௌரவமான ஒரு முறையாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறாகக் குன்யா குறித்து பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஏனெனில் அறிவிப் பாளர்கள் அதிகமான சந்தர்ப்பங்களில் குன்யா நாமம் கொண்டே குறிக்கப்பட்டனர். ஆரம்ப அறிவிப்பாளர்கள் குறித்த சிறந்த நூல், துலாபீ (ம.310)யின் 'அல்-குன்யா'. இந்த நூலும் ஹைத ராபாத்தில் இரு பாகங்களாகப் பிரசுரமாகியுள்ளது.

ஹதீஸுடன் இணைந்த விஷயங்கள் ஏராளம். அவை ஒவ் வொன்றும் பற்றிய நூல்களும் ஏராளம். இது குறித்துத் தனியொரு நூலே எழுதலாம். எவ்வாறாயினும் அறபு வாசிக்கக் கூடியவர்கள் கத்தானீயின் 'அர்-ரிஸாலா அல்-முஸ்தத்ராபா' எனும் நூலை வாசிப்பது நல்லது. இதுவே ஹதீஸ் குறித்த அட்டவணைகள், அதனோடு இணைந்த விவரங்கள் ஆகியனவற்றைக் கொண்ட சிறந்த நூல்.

வஸ்ஸலாம்

இன்று எம்மிடையே வாழ்ந்து வரும் ஹதீஸ் துறை அறிஞர் களுள் தலைசிறந்த ஒருவராக விளங்கும் பேராசிரியர் அஸமி, தெளிவான தமது சிந்தையுடன் கல்லூரித் தரத்தவர்களான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆங்கிலத்தில் எழுதிய 'Studies in Hadith Methodology and Literature' எனும் நூலின் தமிழ் வடிவமாக அமைந்தது "ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்."

இந்நூல் இரண்டு பாகங்களாக அமைந்துள்ளது. முதல் பாகத்தில் ஹதீஸ் என்றால் என்ன ? அவை பதியப்பட்ட முறைகள், பாதுகாக்கப்பட்ட விதம், புனைந்துரைகள் புகுந்தமை என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஹதீஸ் கற்கும்போது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள், அவற்றிற்கான தீர்வுகள், மாணாக்கர்—ஆசிரியர் தம் தகைமைகள், ஸுன்னா, ஸுன்னாவின் பரம்பல், ஹதீஸ் அறிவிப்பாளர்களது தரங்கள் முதலியன தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.

நூலின் இரண்டாம் பாகம் ஹதீஸ் தொகுப்புகள் தந்த பெரி யார்கள் பன்னிருவர் பற்றிய விளக்கங்களை அளிக்கின் றது. இப்பாகத்தில் காணப் படும் ஆரம்ப கால ஹதீஸ் நூல் களுக்கு நிகழ்ந்ததென்ன ? என்ற அத்தியாயம் சாதாரண மாக எவரது உள்ளத்தும் எழக்கூடிய ஐயங்கள் பலவற்றைத் தெளிவுறத் தீர்த்து வைக்கின்றது.

தமிழ்மொழி மூலம் இஸ்லாமிய அறிவுத் தேட்டம் நிகழ்த்தி வருவோர்க்குப் பேராசிரியர் அஸமியின் இந்த நூல் பெரும் பயன் அளிப்பது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஹதீஸ் கல்வி நெறி களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஆங்கில மூலநூல் துருக்கிய, மலே மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள் ளது. மலேஷியாவின் கல்லூரித் தரத்தில் ஒரு பாடநூலாக இது பயன்படுத்தப்படுகின்றது.

ISBN 955-8202-00-2